சுவடிகள் பாதுகாப்பு மய்யம் அரியநூல்
தமிழ்த் தாய் 67 - வெளியீடு

நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் இயற்றிய

# சைவ பூஷண சந்திரிகை



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies



"அறிவுச் செல்வங்கள் அனைத்தையும்
தமிழுக்குக் கொண்டுவர வேண்டும்.
இனிவரும் நூற்றாண்டுகளுக்கும்
அருந்தமிழை ஆற்றல் படுத்த வேண்டும்"

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
புரட்சித் தலைவி
**அம்மா** அவர்கள்

நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள்

இயற்றிய

# சைவ பூஷண சந்திரிகை

சுவடிகள் பாதுகாப்பு மய்யம் அரியநூல்
தமிழ்த் தாய் 67 - வெளியீடு


பதிப்பாசிரியர்

முனைவர் **கோ.விசயராகவன்**

எம்.ஏ., எம்.ஃபில்.,எம்.பி.ஏ.,பி.எட்.,பிஎச்.டி

இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.



**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

தரமணி, சென்னை - 600 113

## நூல் விவரக் குறிப்பு


| | |
|---|---|
| நூல் தலைப்பு | : சைவ பூஷண சந்திரிகை |
| நூல் ஆசிரியர் | : நா. கதிரைவேற்பிள்ளை |
| வெளியீட்டாளரும் பதிப்புரிமையும் | : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்<br>தரமணி, சென்னை - 600 113. |
| தொலைபேசி எண் | : 044 - 22542992 |
| வெளியீட்டு எண் | : 839 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : 2015 : முதற்பதிப்பு : |
| பயன்படுத்திய தாள் | : 16 கிகி டி.என்.பி.எல்.வெள்ளை |
| நூலின் அளவு | : 1/8 டெம்மி |
| எழுத்தின் அளவு | : 11 புள்ளி |
| பக்க எண்ணிக்கை | : 224 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : 1200 |
| விலை | : ரூ.140 (ரூபாய் நூற்று நாற்பது மட்டும்) |
| ISBN | : 978-93-85165-50-4 |
| அச்சகம் | : ராஜ் எண்டர்பிரைஸஸ்<br>திருவல்லிக்கேணி<br>சென்னை - 600 005. |

முனைவர் **கோ.விசயராகவன்** எம்.ஏ., எம்.ஃபில்.,எம்.பி.ஏ.,பி.எட்.,பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

# அணிந்துரை

*பழங்கால அரியநூல்களையும் சுவடிகளையும் பாதுகாக்கும் வகையில் 2014ஆம் ஆண்டு நிறுவனத்தில் 34* ***இலட்சம் மதிப்பீட்டில் சுவடிகள் பாதுகாப்பு மய்யம் மாண்புமிகு மக்கள் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்டது.*** *அவ்வகையில் நாடெங்கினும் உள்ள அரிய நூல்களை, சுவடிகளைத் திரட்டும் பணி தொடங்கப்பட்டு, கண்டறியப்பட்டுள்ள நூல்களைத் தமிழ்த்தாய் 67 - பெருவிழா, பிப்ரவரி 2015இல் வெளியிடும் திட்டத்தின் கீழ், 1902 ஆம் ஆண்டு வெளிவந்துள்ள இந்நூல் இப்பொழுது மீட்டுருவாக்கம் செய்யப்பெற்று வெளியிடப்படுகிறது.*

*உலக மக்கள் வாழ்வாங்கு வாழும் வகையில் வழிகாட்டுவதற்காக உருவாக்கம் பெற்றவை சமயங்கள். அவ்வகையில் உலகப் பழைமையும் பெருமையும் வாய்ந்ததாகக் கருதப்படுவது சைவ சமயம். சைவ சமயத்தின் சின்னங்களாகக் கருதப்படும் திருநீறு, உருத்திராக்கம் அணிதல், நித்திய சிவ வழிபாடுகள் குறித்து பலபடப் பேசும் கருத்துகளைத் தொகுத்துக் கூறும் நூலே* ***சைவ பூஷண சந்திரிகை.*** *சைவ சமயத்தினுடைய ஒழுகலாறுகள், சிவனுடைய பெருமைகள் போன்றவை சிறப்பாக வெளிப்படுத்தப் பெற்றுள்ளன.*

*இந்நூலை யாழ்ப்பாணத்துப் புலவரான நா.கதிரைவேற் பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார். சைவ பூஷணம் என்பது சிவ சம்பந்தமுள்ள ஆபரணங்கள் எனப்படும். அவை*

விபூதியும், உருத்திராக்கமும் ஆகும். அவற்றின் சிறப்புகளைத் தொகுத்து வழங்கியுள்ளார். சைவ ஆகமங்கள், புராணங்கள், சாத்திரங்கள், தோத்திரங்கள், உபநிடதங்கள் என சைவ சம்பந்தமுள்ள நூல்களிலிருந்து சான்றுகள் காட்டி நிறுவியுள்ளார். இது அவருடைய சாத்திரப் புலமைக்குச் சான்றாக உள்ளது. கிடைத்தற்கரிய சிறந்த நூல்.

தமிழறிஞர்களின் தமிழ்த் தொண்டினை எப்போதும் பாராட்டுவதில் முதன்மையானவர் **மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் ஆவார். மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ் மீதும் தமிழர் மீதும் தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கொண்டுள்ள அன்பும் கருணையும் அளப்பரியன. தமிழின் மேம்பாட்டுக்கெனப் பல திட்டங்களை மேற்கொண்டு செயலாற்றி வருகின்றார்கள். ஒல்லும்வகையெல்லாம் தமிழ் வளர்த்துவரும் **மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைப் பதிவு செய்கின்றோம்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் **பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவருமாகிய மாண்புமிகு கே.சி. வீரமணி** அவர்களுக்கு நன்றி.

தமிழ் வளர்ச்சிப் பணிகளில் ஆர்வத்தோடு நாட்டம் செலுத்தித் தமிழ்த் தொண்டாற்றிவரும் **தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம்** இ.ஆ.ப. அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் சிறப்பான முறையில் மறு அச்சுப் பெற 'முனைந்து உழைத்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அனைத்துப் பணியாளர்களுக்கும் அச்சகத்தார்க்கும் என் நன்றி.

**இயக்குநர்**

உ

சிவமயம்.

கந்தநாதன் றுணை.

# சைவபூஷண சந்திரிகை.

இஃது,

ஆரணி நகர சமஸ்தான வித்துவானும்,

அத்துவித சித்தாந்த மதோத்தாரணரும்

மாயாவாத தும்சகோளரியும் ஆகிய

யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி

**நா - கதிரைவேற்பிள்ளை அவர்கள்**

இயற்றியது.

---

இரண்டாவது பதிப்பு.

சென்னை:

சி. நா - அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

---

சுபகிருது௵ கார்த்திகைமீ.

1902.

*Registered Copy Right.*

விலை அணா. எட்டு.

உ

குகாயநம:

திருச்சிற்றம்பலம்.

# இந்நூல்,

கி-பி-௧௮௨௨௵ டிசம்பர் மாதத்திற்குச் சமமான சாலிவாகன சகாத்தம் ௧௭௪௫-ஆகிய சித்திரபானு௵ மார்கழி௴ ௫௳ புதவாரம் இவ்வுலக முய்யும்படி சுபவேளையி லவதரித்து, வயது 56. ௴ 11 ஆகிய கி-பி- ௧௮௭௯௵ டிசம்பர்௴ ஆன பிரமாதி௵ கார்த்திகை௴ ௨௧௳ சுக்கிர வாரம், மக நக்ஷத்திரம், சத்தமி திதி, இரவு பத்து நாழிகையில் சிவசாயுச்சிய மடைந்த, யாழ்ப்பாணத்து நல்லூர்ச்

சைவசித்தாந்த மெய்ஞ்ஞான ஆசாரிய பானு

## ஸ்ரீலஸ்ரீ, ஆறுமுகநாவலர் அவர்கள்,

செந்தமிழ் மொழியையுஞ் சைவசித்தாந்தத்தையும் வளர்த்துப் பரிபாலித்த அத்தியற்புத வருஞ்செயல்களின் ஞாபக சின்னமாக, இந்நூலாசிரியரால் அர்ப்பணஞ் செய்தமைக்கப்பட்டது.

---

## உரிமையுரை.

### இன்னிசை வெண்பா.

செந்தமிழ்நன் மாதே சிவவொளிருஞ் சித்தாந்த
வந்தமிலா மெய்ந்நிலையே வாறுமுக நாவலரு
மெந்தைநுமைப் போற்றுசெயற் கேற்பவே யிந்நூலைத்
தந்தனன்கொண் டுய்த்திரவன் சார்.

---



உ

சிவமயம்.

# இந்நூலிலே காணப்படும்

# பொருள்களின் அட்டவணை.


| இலக்கம். | விஷயங்கள் | பக்கம். |
|---|---|---|
| க | சிறப்புப்பாயிரம். | |
| உ | பதிப்புரை. | |
| ௩ | கடவுள்வணக்கம். | க |
| ௪ | சைவபூஷணம் விபூதியுருத்திராக்கங்களே. | ௩ |
| ௫ | விபூதி யுருத்திராக்கப் பிரபாவ நூல்கள். | ௪ |
| ௬ | விபூதி யுருத்திராக்கங்களே வைதிகம். | ௭ |
| ௭ | விபூதி உருத்திராக்க விசேடம். | க0 |
| ௮ | விபூதி யுருத்திராக்கம் நித்தியாங்கமே. | கக |
| ௯ | விபூதி உருத்திராக்கஞ் சிவவடிவமே. | கஉ |
| ௪0 | ,, ,, ரூபம். | க௪ |
| கக | தேவாதியருஞ் சிவசின்ன தாரணரே. | ,, |
| கஉ | விஷ்ணுவும் விபூதிருத்திராக்க தாரணரே. | க௫ |
| க௩ | பிரமரும் சிவசின்ன தாரணரே. | க௭ |
| க௪ | திருமண்குறி இடையில் வந்ததென்பது. | ,, |
| க௫ | விபூதி ருத்திராக்கத்தாற் கோளறுதல். | க௮ |
| க௬ | விபூதி ருத்திராக்க விரதம். | க௯ |
| க௭ | பஸ்மருத்திராக்ஷத்தாற் பாலாரிட்ட நிவிர்த்தி. | உ0 |
| க௮ | சிவசின்ன நிந்தனை அதிபாதகம். | உக |
| க௯ | ,, தூஷண காரணம். | உஉ |
| உ0 | சைவபூஷண மந்திர வகைகள். | உ௩ |
| உக | மந்திரப் பிரயோகம். | உ௪ |
| உஉ | மந்திர சம்ஸ்கார விதி. } | உ௫ |
| உ௩ | விபூதி விசேட மந்திரம். } | |
| உ௪ | திருநீறே நல்வழி. | உ௬ |
| உ௫ | விபூதி ஸ்நானம். | உ௭ |
| உ௬ | திருநீற்றுப் பதிகம். | உ௮ |
| உ௭ | விபூதி யுபநிடதம். | ௩0 |
| உ௮ | விபூதி உட்கொள்ளும் மருந்துமே. | ௩க |

| இலக்கம். | விஷயங்கள். | பக்கம். |
|---|---|---|
| ௨௯ | விட்டுணு விபூதி யுண்டது. | ௩௪ |
| ௩௦ | விபூதி இலக்கணம். | ௩௫ |
| ௩௧ | சிவாக்கினி விபூதி. | ௩௫ |
| ௩௨ | விபூதி வரலாறு. | ௩௬ |
| ௩௩ | விபூதி வகை. | ௩௭ |
| ௩௪ | விபூதியின் பெயருங் காரணமும். | ௩௮ |
| ௩௫ | திருநீறு கோமயத்தா லுண்டாக்கப் படுவதற்குக் காரணம். | ௩௯ |
| ௩௬ | பசுக்களின் மகிமை. | ௪௨ |
| ௩௭ | கோமயப் பசு. | ௪௪ |
| ௩௮ | கோமய விசேடம். | ௪௪ |
| ௩௯ | கோமயங் கொள்ளுங் காலமும் மந்திரமும். | ௪௫ |
| ௪௦ | கோமயங் கொள்ளும் முறை. | ௪௬ |
| ௪௧ | கற்ப விபூதி. | ௪௬ |
| ௪௨ | அநுகற்ப விபூதி. | ௪௭ |
| ௪௩ | உபகற்ப விபூதி. | ௪௮ |
| ௪௪ | அகற்ப விபூதி. | ௪௮ |
| ௪௫ | விபூதிப் பையின் இலக்கணம். | ௪௮ |
| ௪௬ | விபூதி வாங்கும் விதி. | ௪௮ |
| ௪௭ | தரிக்கக் கூடாத விபூதிகள். | ௫௦ |
| ௪௮ | தரிக்கும் இடங்களும் அளவும். | ௫௦ |
| ௪௯ | இவ்வருணத்தார்க்கு இவ்விபூதி யாமெனல். | ௫௧ |
| ௫௦ | தரிக்க லாகாத இடங்கள். | ,, |
| ௫௧ | அவசியந் தரிக்குங் காலங்கள். | ,, |
| ௫௨ | விபூதி தாரண வகை. | ௫௨ |
| ௫௩ | புண்டர வகை. | ௫௩ |
| ௫௪ | திரிபுண்டர திருட்டாந்தம். | ௫௪ |
| ௫௫ | நாமம் நவீனமென்பதற்குத் திருட்டாந்தம். | ,, |
| ௫௬ | திரிபுண்டர அளவு. | ௫௫ |
| ௫௭ | உத்தூளன விதி. | ,, |
| ௫௮ | சந்திக் கிரியைகள். | ௫௭ |
| ௫௯ | கிரியா முத்திரைகள். | ௫௮ |

| இலக்கம். | விஷயங்கள். | பக்கம். |
|---|---|---|
| ௬௦ | தரிக்கும் நியமம். | ௫௮ |
| ௬௧ | சந்தியாவந்தன சங்கற்பம். | ௬௦ |
| ௬௨ | பூமி சுத்தி. | ,, |
| ௬௩ | சலசுத்தி முதலியன. | ௬௧ |
| ௬௪ | அஸ்திர சந்தியோபாசனம். | ,, |
| ௬௫ | ஆசமனம். | ௬௨ |
| ௬௬ | மார்ச்சனம். | ,, |
| ௬௭ | திருநீற்றின் அளவு. | ௬௪ |
| ௬௮ | விபூதிசுத்தி. | ,, |
| ௬௯ | திரிபுண்டர தாரணம். | ௬௫ |
| | அநுலோம விலோம தாரணம். | ௬௬ |
| ௭௦ ௭௧ | திரிசூல இடப முத்திரைகள், அல்லது திருவிலச்சினை. | ௬௭ |
| | பன்னிரு மண்குறிப் பரிபவம். | ௭௦ |
| ௭௨ ௭௩ | நாராயணர் திருநீற்றால் மாயை நீங்கிப் பிள்ளை பெற்றது. | ௭௧ |
| ௭௪ | விபூதியாற் பிரமர் மயக்கம் அகன்றது. | ௭௩ |
| ௭௫ | விபூதியின் அற்புதச் செய்கை. | ௭௪ |
| ௭௬ | விபூதி தூஷண மறுப்பு. | ௭௬ |
| ௭௭ | விபூதி விளையுந் திருத்தலங்கள். | ௭௭ |
| ௭௮ | விபூதி யபிஷேகம். | ௮௩ |
| ௭௯ | விபூதி நமஸ்கார மந்திரம். | ௮௪ |
| ௮௦ | நியாச வகை | ௮௫ |
| ௮௧ | கரநியாச மந்திரம். | ,, |
| ௮௨ | இருதய நியாச மந்திரம். | ௮௬ |
| ௮௩ | புருட சூக்த நியாசம். | ,, |
| ௮௪ | கலா நியாச மந்திரம். | ௮௭ |
| ௮௫ | அங்கநியாச மந்திரம். | ,, |
| ௮௬ | பஞ்சப்பிரம நியாசம். | ,, |
| ௮௭ | பஞ்சாக்கர நியாச மந்திரம். | ௮௮ |
| ௮௮ | அக்கிநிரிதி மந்திரம். | ,, |
| ௮௯ | மாநஸ்தோக மந்திரம். | ,, |

| இலக்கம். | விஷயங்கள். | பக்கம். |
|---|---|---|
| ௯௦ | திரியம்பக மந்திரம். | ௮௯ |
| ௯௧ | திரியாயுஷ மந்திரம். | ,, |
| ௯௨ | காயத்திரி மந்திரம். | ,, |
| ௯௩ | ஷடங்க மந்திரம். | ௯௦ |
| ௯௪ | சிவாங்க மந்திரம். | ,, |
| ௯௫ | பஞ்சப் பிராசாத மந்திரம். | ,, |
| ௯௬ | மூல பஞ்சாக்ஷர மந்திரம். | ,, |
| ௯௭ | தூல பஞ்சாக்ஷர மந்திரம். | ,, |
| ௯௮ | சூக்கும பஞ்சாக்ஷர மந்திரம். | ௯௦ |
| ௯௯ | மாயாக்கிய பஞ்சாக்ஷர மந்திரம். | ,, |
| ௧௦௦ | பிராசாத பஞ்சாக்ஷர மந்திரம். | ,, |
| ௧௦௧ | பஞ்ச கலா மந்திரம். | ,, |
| ௧௦௨ | பஞ்சப் பிரம மந்திரம். | ௯௧ |
| ௧௦௩ | ஏகாதச சங்கிதா மந்திரம். | ,, |
| ௧௦௪ | அத்திர மந்திரங்கள். | ,, |
| ௧௦௫ | பதினாறு உறுப்பிற் றரிப்பதற்குக் காரணம். | ௯௨ |
| ௧௦௬ | முக்குறிகளின் சொரூப லக்கணம். | ௯௩ |
| ௧௦௭ | விபூதி தத்துவம். | ௯௫ |
| ௧௦௮ | உருத்திராக்க விளக்கம். | ௯௮ |
| ௧௦௯ | உருத்திராக்க விசிட்டம். | ௧௦௦ |
| ௧௧௦ | உருத்திராக்க வரலாறு. | ௧௦௧ |
| ௧௧௧ | உருத்திராக்க உபநிடதங்கள். | ௧௦௨ |
| ௧௧௨ | உருத்திராக்க சாபால உபநிடதம். | ௧௦௩ |
| ௧௧௩ | அக்ஷமாலிகா உபநிடதம். | ,, |
| ௧௧௪ | உருத்திராக்க மகிமை. | ௧௦௪ |
| ௧௧௫ | கண்டிகைமணி விழுங்குதல். | ௧௦௫ |
| ௧௧௬ | உருத்திராக்கந் தோன்றிய காலம். | ௧௦௬ |
| ௧௧௭ | உருத்திராக்க தானம். | ௧௦௭ |
| ௧௧௮ | உருத்திராக்க சோதனை | ௧௦௮ |
| ௧௧௯ | உருத்திராக்கத்தின் பெயர்களுங் காரணமும். | ௧௦௯ |
| ௧௨௦ | உருத்திராக்க வருணம். | ௧௧௦ |
| ௧௨௧ | நான்கு வருணத்தாருக்கு முரியமணி. | ௧௧௧ |

| இலக்கம். | விஷயங்கள். | பக்கம். |
|---|---|---|
| ௧௨௨ | உருத்திராக்கப் பதிகம். | ௧௧௧ |
| ௧௨௩ | ஸ்ரீருத்திராக்க கவசம். | ௧௧௨ |
| ௧௨௪ | உருத்திராக்க வகை. | ௧௧௩ |
| ௧௨௫ | உருத்திராக்க அளவு. | ௧௧௪ |
| ௧௨௬ | உருத்திராக்க சொரூப லக்கணம். | |
| ௧௨௭ | பார்த்திவ ருத்திராக்க மணி. | ௧௧௫ |
| ௧௨௮ | ஆக்கினேயமணி அல்லது பொற்கண்டிகை. | ௧௧௬ |
| ௧௨௯ | தரிக்கும் உறுப்புக்களும் முக எண்களும். | ௧௧௭ |
| ௧௩0 | சந்தி தாரணம். | ,, |
| ௧௩௧ | உருத்திராக்க உபவீதம். | ௧௧௮ |
| ௧௩௨ | ஆயிர மணிந்தவர் அரனெனப்படுவர். | ,, |
| ௧௩௩ | தரியாமையால் வருங்குற்றம். | ,, |
| ௧௩௪ | தரிக்குங் காலங்கள். | ௧௧௯ |
| ௧௩௫ | தரிக்கலாகாத காலங்கள். | ,, |
| ௧௩௬ | உருத்திராக்க தாரணமுறை. | ,, |
| ௧௩௭ | தரிக்குந் தானங்கள். | ௧௨0 |
| ௧௩௮ | உருத்திராக்க பூசை. | ,, |
| ௧௩௯ | உருத்திராக்க தாரண மந்திரம். | ௧௨௧ |
| ௧௪0 | தரிக்கும் நியமமும் மந்திரமும். | ,, |
| ௧௪௧ | உருத்திராக்க தாரணப் பிரீதி. | ௧௨௨ |
| ௧௪௨ | உருத்திராக்க அதிதேவதைகள். | ௧௨௩ |
| ௧௪௩ | அவற்றின் பலன். | ௧௨௫ |
| ௧௪௪ | செபமாலை யிலக்கணம். | ௧௨௬ |
| ௧௪௫ | செபமணி அளவு. | ௧௨௭ |
| ௧௪௬ | செபநாடி. | ,, |
| ௧௪௭ | திக்கின் பலன். | ,, |
| ௧௪௮ | செப ஆசனங்களும் பலமும். | ௧௨௯ |
| ௧௪௯ | செபமாலைப் பிரதிட்டை. | ,, |
| ௧௫0 | செபமாலை வகையும் பலமும். | ௧௩0 |
| ௧௫௧ | விரலிறைகளாற் செபிக்குமுறை. | ௧௩௧ |
| ௧௫௨ | உருத்திராக்க மாலையின் பயன். | ,, |
| ௧௫௩ | செபிக்கும் வகையால் வரும் பலம். | ௧௩௨ |

| இலக்கம். | விஷயங்கள். | பக்கம். |
| --- | --- | --- |
| கருச | செபிக்குந் தானங்கள். | கஙங |
| கருரு | செபிக்கக்கூடாத தானங்கள். | ,, |
| கருசா | உருத்திராக்கங்களுட் பூசைக்குச் சிறந்தன. | கஙச |
| கருஎ | உருத்திராக்க முண்டாகுந் தானங்கள். | ,, |
| கருஅ | கண்டிகைச் சுத்தி. | |
| கருகூ | செபஞ்செய்யும் மந்திரமுறை. | கஙரு |
| கசா0 | அசபாமந்திர செபம். | கஙசா |
| கசாக | நிர்மல பஞ்சாக்ஷர செபம். | கஙஎ |
| கசாஉ | உருத்திராக்கத்தாற் பயனடைந்தவர். | கஙஅ |
| கசாங | இலிங்க தாரணம். (கசாச) பரமத மறுப்பு. | கச0 |
| கசாரு | அரி, அரனதுதேவியென்பது. | கசஎ |
| கசாசா | பிறர் தம்மத மேற்கொண்டு களைவு. | கருக |
| கசாஎ | விபூதி ருத்திராக்க விவாதம். | கசாக |
| கசாஅ | விபூதி பஞ்சகம். | கசாங |
| கசாகூ | விபூதி யுறுப்புக்களிற் றரிக்குங் காரணம். | கசாச |
| கஎ0 | உருத்திராக்க பஞ்சகம். | கசாரு |
| கஎக<br>கஎஉ | விட்டுணுவுக்கு வித்தியா கர்த்தரும் விபூதி<br>கண்டிகை யிட்டார். | கசாரு |
| கஎங | மாணிக்கப் பண்டாரம் வாசுதேவரே. | கசாஎ |
| கஎச | வைணவர் தோல்வி யடைந்தமை. | கஎ0 |
| கஎரு | நாராயண வல்லியும் விபூதி நவின்றது. | கஎங |
| கஎசா | உருத்திராக்க சம்ஸ்காரம். | கஎரு |
| கஎஎ | அதனைக் குருவினிடம் பெறும் விதி. | ,, |
| கஎஅ | உருத்திராக்க மாலா தாரணம். | கஎஎ |
| கஎகூ | நாயகமணி யிலக்கணம். | ,, |
| கஅ0 | உருத்திராக்க தாரண வுண்மை. | கஎஅ |
| கஅக | பஞ்சாங்க பூஷணத்துட் சிறந்தன சிவசின்னமே | ,, |
| கஅஉ | தீக்ஷாங்கம் சிவசின்னங்களே. | கஎகூ |
| கஅங | விபூதியின்பெயர் விசேடம்.!! | ,, |
| கஅச | விபூதிசம்ஸ்காரவிதி. | கஅ0 |
| கஅரு | விபூதி விசேடார்த்தம் | கஅக |
| கஅசா | திரிபுண்டர அதிதேவதைகள். | ,, |
| கஅஎ | முடிப்புனை. | கஅஉ |

# இந்நூலிலே பிரமாணமாகக் காட்டப்பட்ட

## நூல்களாவன.

---

இருக்குவேதம்.
தேவாரம். } தமிழ்வேதம்.
திருவாசகம். }
திருப்பல்லாண்டு.
காமிகாகமம்.
சிந்தியாகமம்.
விம்பாகமம்.
வீராகமம்.
அஞ்சுமானாகமம்.
வாதுளாகமம்.
பஸ்மசாபால உபநிடதம்.
காலாக்கினி ருத்திர உபநிடதம்.
அதர்வசிரோப நிடதம்.
உருத்திராக்க சாபால உபநிடதம்
வாசுதேவோபநிடதம்.
சரப உபநிடதம்.
சாபாலி யுபநிடதம்.
சாண்டில்லியோப நிடதம்.
இராமரகசிய உபநிடதம்.
பிருகச்சாபால உபநிடதம்
சுவேதாச்சுவதர உபநிடதம்.
திரிபுரதாபினி உபநிடதம்.
அக்ஷமாலிகா உபநிடதம்.
யோககுண்டலி யுபநிடதம்.
முக்திகோப நிடதம்.
தைத்திரீயோப நிடதம்.
பாசுபதப் பிரமோப நிடதம்.
ஸ்கந்தோப நிடதம்.

அதர்வண சாரம்.
கிரியா விவரணம்.
மத்தியந்தன குகியம்.
சாங்கியாயன குகியம்.
சாரதா திலகம்.
மந்திர தேவதாப் பிரகாசிகை.
பிரபஞ்ச மந்திரசாரம்.
மந்திரசக கிரோத்தம்.
ஞானோத்தரம்.
திருமந்திரம்.
சிவஞானபோதம்.
சிவதருமோத்தரம்.
பெரிய புராணம்.
பவிடிய புராணம்.
இலிங்க புராணம்.
கந்த புராணம்.
கூர்ம புராணம்.
பிரமாண்ட புராணம்.
மற்ச புராணம்.
ஆதித்திய புராணம்.
ஆக்கினேய புராணம்.
பதும புராணம்.
விஷ்ணு புராணம்.
கருட புராணம்.
வாசிட்டலைங்க புராணம்.
பராசர புராணம்.
மானவ புராணம்.
காஞ்சிப் புராணம்.

தணிகைப் புராணம்.
பேரூர்ப் புராணம்.
திருமுறைகண்ட புராணம்.
திருவிரிஞ்சைப் புராணம்.
பட்டினத்துப்பிள்ளையார் புராணம்.
வசவ புராணம்.
சூர சங்கிதை.
சூத சங்கிதை.
வாயு சங்கிதை.
சங்கர சங்கிதை.
மானவ சங்கிதை.
விஷ்ணு சங்கிதை.
காளிகா கண்டம்.
உபதேச காண்டம்.
பிரமோத்தர காண்டம்.
மனுஸ் மிருதி.
பராசரஸ் மிருதி.
உலோகாக்ஷி ஸ்மிருதி.
சாதாதபஸ் மிருதி
காத்தியாயன ஸ்மிருதி.
போதாயன கற்பம்.
தொல் காப்பியம்.
அகத்திய பக்த விலாசம்.
பட்டினத்தார் திருப்பாடல்.
சித்தாந்த சிகாமணி.
திருப்போரூர்ச் சந்நிதிமுறை.
அக்க தீபிகை.
ஆகமத் திரட்டு.
பெருந் திரட்டு.
சைவ சமயநெறி.
தேவி காலோத்தரம்.

உருத்திராக்க விசிட்டம்.
அபிடேக மாலை.
சிலப்பதிகாரம்.
பதார்த்த குண நூல்.
சகலாகம சங்கிரகம்.
ஏகமத நிராகரணம்.
புதுச்சந்நிதிக் கந்தர் சதகம்.
இராமாயணம்.
அத்தியாத்ம ராமாயணம்.
வியாச பாரதம்.
சம்பு பாரதம்.
வில்லி புத்தூரர் பாரதம்.
நல்வழி.
சூடாமணி நிகண்டு.
வேளாண்வேதம்.
நியாய சாரேயம்.
வாதராச்சியம்.
நீலகண்டீயம்.
அன்னம் பட்டீயம்.
குருபரம்பரை.
வைணவ வாயாப்பு.
உடையவர் ஸ்ரீ சூர்ணவிளக்கம்.
இருசமய விளக்கச் சூறாவளி.
கேசவாதிநாம சிவபரத்துவ நிரூபணம்.
அரிவம்சம்.

வியாக்கியானம்:
ஆறாயிரப்படி
பன்னீராயிரப்படி
இருபத்து நாலாயிரப்படி
ஈடு முப்பத்தாறாயிரப்படி
ஒன்பதினாயிரப்படி
ஜீயர் அரும்பதவுரை.

அஷ்டசுலோகி.
பிரணவ விவரணம்.
கிரியா தீபம்.
குணரத்தின கோசம்.
தத்துவத்திரயம்.
சப்தகாதை.
சித்தாந்த சாதனம்.
நம்மாழ்வார் திருவாய்மொழி.
பெரிய திருமொழி.
முதல் திருவந்தாதி.
திருமங்கையாழ்வார் நெடுந்தாண்டகம்.
இந்திய சரித்திரம்.
(Hindian History)
ஆரும்வாசக புத்தகம்.
அதர்வசிகா விலாசம்.
அதர்வசிகா விலாச நிரசனம்.
சகலவேத சிகாமணி.
சிவதத்துவ விவேகம்.
வைதிகாசார நிர்ணயம்.
பரமத திமிரபானு.
சிவகர்ணா மிர்தம்.
தப்த முத்திராவித்ராவணம்.
மிர்த்து தாரண விப்பிரலம்பம்.
சிவசின்னோத் கர்ஷம்.
வனமாலிகா தண்டனம்.
பாஷண்டமத சபேடிகை.
பிரமதருக்கஸ்தவம்.
சிவபுராண தாமசத்வ நிராகரணம்.
சர்வார்த்த சார சங்கிரகம்.
பரிபாஷா மஞ்சரி.
அரதத்த மான்மியம்.
அரதத்த சகச்சிரம்.
சதுர்வேத சாரம்.
ஆபத்தம்ப சூத்திர பாடியம்.
சைவாகம தூஷணம்.
ஞானரத்தினாகரம்.
சிவாதிக்கிய சிகாமணி.
அரியரதார தம்மியம்.
நீலகண்ட பாஷிய சமர்த்தனம்.
நாராயணவல்லி.

முற்றிற்று.

# சிறப்புப் பாயிரம்.

இஃது,

வடமொழி தென்மொழிகளில் மகாபாண்டித்தியம் வாய்ந்த
அத்தியாச்சிரம பாலசரஸ்வதி

## ஸ்ரீலஸ்ரீ, ஞானாநந்த சுவாமிகள் அவர்கள்

அருளிச்செய்தது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சீர்செறிமுற் றிருக்கோணங் கேதீசங் கதிரைநகர்த் தெரிமுக் கண்ணே, டேர்செறிநல் லாறுமுகப் பெருந்தகைதோன் றிட்டருளு மியலிற் கங்கை, யார்செறிசெஞ் சடைத்தேவப் பெருமானென் றுலகுதொழ வவிரு மீழத், தார்செறியெவ் வளத்தியாழ்ப் பாணத்தோர் புலோலியெனு மாரூர் தன்னில். (க)

கங்கைகுல வேளாளக் கதிமரபிற் சந்ததிவேட் கருதி நோற்குந், துங்கமுறு நாகப்ப வண்ணலான் பெருந்தவத்துத் தோன்ற லீரா, றங்கையுறக் காங்கேய னடிப்போது மலருளத்த னீறுருடக்கச், செங்கையின னூலெல்லையும் புலவருழை முறைப்படியே திருந்தக் கற்றோன்.

மெய்கண்ட சித்தாந்த மினிர்விப்போன் போதனையின் மிக்கோ னூல்கள், பொய்யின்றிப் பலசெய்தோ னுரைகள்பல தந்திட்டோன் புறத்தர் வாதி, லெயமயக் கொடுவேறு மகலவிடை யளித்தவர்வா யடங்க வென்றோன், வையகமீப் புகழ்வந்தோ னங்கதிரை வேலநா வலன்றான் மன்னே. (உ)

அங்கவனற் றிருநீறுருடக்கமாஞ் சாதனங்க ளணிந்துய் வோர்க்குப், பங்கமிலாக் கருவூல மெனப்பெரிய பயனளித்துப் பதிய வென்று, மிங்கொர்சைவ பூடணசந் திரிகையென வவற்றியல்க ளேலப் பக்கச், சங்கையறத் தெவருமுய வருமறையா கமமுதல தனிநூல் காட்டி. (௩)

தருக்கரியா யஞ்செறியத் தருநூலைச் சகக்கறிவைத் தந்த பெம்மா, னிருத்துமொரு புகழுடம்பிற் கணியாகச் செய்திட்டா னிவன்றா னின்னுந், திருக்குலவக் குருபத்தி சிறந்திலகிப் புவனியெலாஞ் சிறந்த சைவத், தருக்குறத்திக் கதிரைநகர்ப் பெருமான்ற னல்லருளிற் சார்க மாதோ. (௪)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் மாணாக்கரும்,
இந்நூலாசிரியரின் ஆசிரியருளொருவரும்,
நாவலப்பெருந்தகையாரது தருமபரிபாலனத்தலைவரும் ஆகிய,
யாழ்ப்பாணத்து நல்லூர்
மகாவித்வ சிரோமணி

## ஸ்ரீலஸ்ரீ க. சதாசிவப் பிள்ளை அவர்கள்

உரைத்தது.

இலக்கிய இலக்கண தருக்க சித்தாந்த நூல்களை, எம்மிடத்தும் பன்னாட் கோடன் மரபிற் பயின்ற பிரதம மாணவரான யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி, மாயாவாத தும்சகோளரி, நா. கதிரைவேற் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட சைவபூஷண சந்திரிகை என்னும் சிறந்த நூல்கண்டு அகமிக மகிழ்ந்தேம். அது பரம ஐசுவரியங்களாய விபூதி ருத்திராக்கங்களின் இலக்கணங்களை யெல்லாம் இனிது விளங்கத் தெரித்தலின், சைவர்களாயுள்ளார் யாவருக்கும் இன்றியமையாத பூஷணமாய், அவர்களாற் போற்றப்படும் புத்தமிர்தொத்தது. அதிற் கூறப்பட்ட விடயங்கள் யாவும் பிரத்தியக்க அநுமான ஆகமங்கள் என்னும் அளவைகளா னிறுவப் பட்டுள்ளன. விபூதி ருத்திராக்கங்களைத் தரித்துப் பெரும்பேறடைய விரும்பும் ஒவ்வொரு அன்பர்களுக்கும் இந்நூல் நல்லாசிரியர்போனின்று நனியுதவும். பரபக்க மறுப்பி யாவும் நியாய தருக்க சகிதம் நிலவலாற் புலவர் யாவரும் போற்றி மகிழ்வர். விஷ்ணுவும் விபூதி ருத்திராக்க தாரணரோ என்ற பிரதிஞ்ஞை, சர்வ வேதாகம சம்மதமாய், மறுக்கப் படாதது. இந்நூலை எமது ஆசிரியப் பெருந்தகை வள்ளலாரான ஸ்ரீலஸ்ரீ, நாவலப்பெருமான் அவர்கள் ஞாபகார்த்தமாக அர்ப்பணம் செய்தமையின் உலகின்கணுள்ள சைவத்திருக்கூட்டத்தினர் யாவர்க்குஞ் சமைத்த தொருவரு விருந்தாமென்பதிற் சந்தேகமின்று. இதனானும் இவரது கல்வி கேள்வி யறிவும், சைவ சித்தாந்தப்பற்றும், குருபத்தியும் நன்கு வெளியாம். இன்னும் மிந்நூலாசிரியர் இதுபோன் றிலகும் நூல்களை யியற்றி வாழ முழுமுதற் பொருளாய நடராச பரசிவப் பிரபுவை யெம்முளத் தென்றும் இருத்தி வேண்டுகின்றாம்.

ஙீ. க. ச.

ஸ்ரீ (ல) ஸ்ரீ,

ஆறுமுகநாவலர் அவர்களின் மாணாக்கரும்,

இந்நூலாசிரியரின்

## ஆசிரியர்களுள் ஒருவருமாகிய

யாழ்ப்பாணத்து நல்லூர்

**மகாவித்துவசிரோமணி,**

## கா. தியாகராசபிள்ளை அவர்கள்

இயற்றியன.

**அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.**

பொன்பணியும் பொறிப்பணியு மணிப்பணியு மிரும்பணியிற் பொறுத்த மாயன், வன்பணியு மறைப்பணியு மறைபணியு முணராத மதியத் தேவ, னென்பணியு மிரும்பணியும் பெரும்பணியிற் கொளு முதல்வ னெந்தையேழை, யென்பணியு மிடத்தணியுங் கரும்பணி யின் மொழிபணியு மேன்ற நாதன். (க)

வருமீற்றி னொருநுதலி னெரிநீற்றி னுளதாகி வைப்பார் வைகுங், கருநீற்றவ் வருளூற்ற விழியூற்றின் வயிற்றோன்றிக் கருணை மேனி, யுருவேற்று வினைநீற்றுந் திருநீற்றின் விழிமணியி னுண்மை யோர்ந்து, வுருவேற்றி மலம்பாற்றித் திருவேற்கும் பெருங்கருணை யுலகத்தாக. (உ)

விண்மணியிற் புகழணிமன் னரசணியிற் சிறக்குமணி மெய்ம்மை சான்ற, கண்மணியிற் றிருநீற்றிற் களிக்குமணி குவளையணி களம ராமெங், கண்மணிவேற் பிள்ளைதவத் தனுமாசி லாமணியுங் கருதிக் கேட்ப, வண்மணிசை வப்பெரியோ ரணியுமணி நிலவவுஞற் றிட் டான் மாதோ. (௩)

அன்னவன்யா ரெனினம்மாட் டடைந்துபெருங் கலைபலவு மறிந் தோன் மெய்கண், டன்னவனெம் மவர்க்கருளுஞ் சிவஞான போத முத லறிவு நூல்கண், முன்னவன்பிற் றெரிந்துபோ திப்பவனஞ் சிவகுகனை முன்னுகேயன், நன்னமா யாவாத கோளரிநங் கதிரைவே ளுவல்லோனே. (௪)

சிவமயம்.

# பதிப்புரை.

(:*:)

சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமெஞ் சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர்த் தேசிகனு—முற்கோவி
லந்திலரோ னீறெங்கே மாமறைநூ ரூனெங்கே
யெந்தைபிரா னைந்தெழுத் தெங் கே.

அத்துவித மெய்கண்டா னந்நந்தி சம்பந்தன்
முத்தியளி கொற்றவனு முந்திலரோ—லித்தலத்தி
லத்துவித மெங்கேநல் லாகமமெங் கேமதப்பொய்
கொத்துவித முத்தியெங் கோ.

எண்ணரிய பிறவிகளுட் கிடைத்தற் கரிதினு மரிதாய மானுடப் பிறவியை யெடுத்து நிற்கும் புண்ணியர்காள்!

உலகத்திலே யுள்ளார் இம்மை மறுமைப் பயன்களைக் கருதிப் பொன், வெள்ளி, இரத்தினம் என்பவற்றாலும், பிறவற்றாலும் செய்யப்பட்ட பூஷணங்களைத் தரித்து வருதல்பிரத்தியக்ஷமே. அவைகள் காலதேசவேறுபாடுகளாலே வேறுபட்டனவாய், அணியப்படுவன, சூடப்படுவன, கட்டப்படுவன, தொடுக்கப்படுவன, முடிக்கப்படுவன, கவிக்கப்படுவன எனப் பலவகையனவாகத் தோன்றும். அவ்வாறாப பூஷணங்கள் பலவும் இலௌகிக பூஷணமெனப்படும். அவற்றை யணிதலால் வரும்பலம் மிகவும் அற்பமாகும். தீமையோ அளவிறந்தன.

முற்றறிவும் முற்றுத் தொழிலு முடைய பரமாப்த பதியாகிய சிவபெருமானாலே திருவாய்மலர்ந் தருளப்பட்ட வேதாகம சம்பந்தமுள்ள வைதிகபூஷணமாய், தன்னை யணிக்

தார்க்கு எஞ்ஞான்றும் நன்மையினையே பயந்து தீமையை யொழிப்பதாய், இம்மைப்பயனுடன் யாவரானும்அடைதற் கரிய மறுமைப் பயனாகிய அத்துவித முத்திப் பெரும்பேற் றையு மளிப்பதாய் விளங்கும் ஓர்பூஷணமுண்டு. அது சைவ பூஷணமே.

* சைவம்=சிவசம்பந்தமுள்ளது. பூஷணம்=ஆபரணம். எனவே, சிவசம்பந்தமுள்ள ஆபரணமே சைவபூஷணம் என ப்படும். அது விபூதி உருத்திராக்கம் என இருவகைப்படும். அவ்விரண்டும் இறைவனிடத்தினின்றுந் தோன்றினமை யாலும், இறைவனது அருட்சத்தி பதிதலாலும் சிவசம்பந்த முள்ள பூஷணம் (சைவபூஷணம்) எனப்பட்டன. ஆன்மா வின் உணர்ச்சி விபுத்துவமாயினும் ஒவ்வோர் இந்திரியத் தும் விளங்கித் தோன்றுதல்போலவும், தயிரினிடத்து நெய் விளங்கித் தோன்றுதல் போலவும், விறகினிடத்து நெருப்பு விளங்கித் தோன்றுதல் போலவும் இப்பூஷணங்களி னிடத் துஞ் சிவம் விளங்க நிற்றலின் அச்சிறப்புப் பெயருற்றன. அத்துணை விசேடம்வாய்ந்த சிவசத்தி ரூபங்களாய விபூதி ருத்திராக்கங்களும் அணிய வேண்டிய முறைப்படி. யணிந் தாற்றான் மிக்கபயன் விளையும். எத்துணைச் சிறந்த மருந்தா யினும் காலம், இடம், பிணி, சரீரம் முதலியன நோக்கி உண்ணவேண்டிய அநுபானம், பத்தியம், என்பவற்றோடு உண்டாற்றான் பயன்விளையும். அதுபோல விபூதிருத்திராக் கங்களும் அணிய வேண்டிய விதிகளை யெல்லாம் அறிந்து தரித்தாற்றான் அத்துவித வின்பமடைதல் சாத்தியமாகும். அமிர்தம் அறிந்துண்ணினும் அறியாதுண்ணினும் தன்பய னளிக்கும். நெருப்பு எவ்வாறு தொடினும் சுட்டே தீரும். அவைபோல, இவைகளும் எவ்வாறு காணினும்,தொடினும்

அணியினும் பயன்விளைத்த கதை பல்லோர் வாய்க்கண்டே மாக, விதிவிலக்கு வேண்டப்படா வென்பீராயின், அற்றன்று. அமுதத்தி னுண்மை தெரியான் அமிர்தத்தையும், தீயின்றன்மை தெரியான் அதனையும் உண்ணுதலும், தொடுதலும் இல்லை, அமிர்தம் தெரியான் நஞ்சினை யதுவென்றும், நெருப்பின் றன்மை சாணுன் நீரை யதுவென்றும் கொண்டு தான் கருதியவற்றிற்கு மாருய பலனையடைவன். ஆகலானும், இவை யவைபோலிலவாயினும் விதிவிலக்கறியாது அணிவதினும், அவற்றை யறிந்து அணிவதனாலுண்டாகும் பலமே விசேடமுடைத்து. இதுபற்றியன்றோ, வேளாள குலதிலக சாமுசித்தரான பட்டினத்து அடிகளாரும்,

"நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன" என்றருளினர். ஆதலால் அவற்றின் இலக்கணங்கள், மகிமைகள், பலங்கள் யாவும் அறிய வேண்டுதல் மக்கட்கூட்டத்திற்கு இன்றியமையாதாயிற்று. இலௌகிக பூஷணங்களாலுண்டாகும் பயனோடு மறுமைப் பயனையும் அளிக்கவல்ல இவற்றின் இலக்கணங்கள், மான்மியங்கள், பயன்கள் எல்லாம் வேதம், தமிழ் வேதம், சிவாகமம், உபாகமங்கள், வேதாந்த உபநிடதங்கள், சிவஞானபோத முதலிய சித்தாந்த உபநிடதங்கள், மகா புராணம், உபபுராணம், ஸ்மிருதி, முதலிய சுத்தவித்தைகளினும், அவற்றின் வழி நூல், பக்கநூல் என்பவற்றினும் ஆங்காங்குப் பேசப்பட்டுள்ளன.

அவைகளெல்லாவற்றையும் ஒருசேர அறிந்து ஒழுகல்யாவர்க்கும் அரியதாகலானும், சிற்சில நூல்களேற்படினும் அவை யெல்லாஞ் சுருங்கியன வாகவும், பத்திய ரூபத்தனவாகவும், பரபக்க மில்லாதன வாகவும், சுபக்கமுந் தொகுதியனவாகவுங் காணப்படலால், பற்பல நூல்களினின்

றும் எடுத்து அவசியம் வேண்டற் பாலனவற்றைத் தொகுத்து, ஆரணிநகர வரச சமஸ்தான வித்துவானும், சைவசித்தாந்த சஞ்சீவினி சபை, வேதாந்தப் பிரசங்கசபை என்பவற்றின் கௌரவ உபந்நியாசகரும், 1897 ௵ ஆகஸ்டு ௴ 12௳ மாயாவாதிகளை வென்று, பிரபல வித்வசிகாமணியும் சித்தாந்த பானுவும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ, காசிவாசி - செந்திநாதையர் அவர்களால் பற்பல வித்வசனர்கள் மத்தியில் அளிக்கப்பட்ட மாயாவாத தும்ச கோளரி என்ற பட்டம் உடையவரும் ஆன யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி ஸ்ரீமந் நா-கதிரைவேற்பிள்ளை அவர்களாற் சைவபூஷணசந்திரிகை,என்னும்பெயருடன் ஓர்நூல் முன்னர்ச்செய்யபபட்டது. அது, சென்னை (முனிசிப்பல் கம்மிஷனர்.) சுகாதாரசங்க அங்கத்தவருளொருவரும், ஹைகோர்ட்டு நியாயதுரந்தரரும் ஆகிய ஸ்ரீ. வே-மாசிலாமணிப்பிள்ளை பி-ஏ. பி-எல் அவர்களாற் பதிப்பிக்கப்பட்டு வெளிப் போந்தது.

பரதகண்டத்துள்ள மகமதியர், கிறித்தவர், சமணர் முதலிய ஏனைய வேற்று மதத்தாராலும் கொள்ளப்பட்டு வரும் விபூதி ருத்திராக்கங்களை, தங்கடவுளுக்கும் அடியார்க்கும் தமக்கும் தாரணமாக வேத முதலிய வித்தைகளிற் சொல்லப்பட்டுள்ளன வென்னும் உண்மை தெரியாத சில போலி வைணவர்கள், அவற்றை அவைதிக மெனவும், பிணச்சாம்பல், இலந்தைக்கொட்டை எனவும், பிராயச்சித்தாங்கங்களெனவும் வாயில் வந்தவாறு தூஷித்து எரிவாய் நரகிற்கு இரையாகும் மாபாதகத்தைத் தமக்கும் அடுத்தார்க்குஞ் சம்பாதித்து வருதல் கண்டு, அவற்றை நிராகரித்தொழிக்கு நண்பு காரணமாக நூலாசிரியர் அவர்கள் அந்நூலின் கண்,

"விஷ்ணுவும் விபூதி ருத்திராக்க தாரணரே"

என்று மகுடமிட்டு, வேதாகமோப நிடதபுராண இதிகாச மிருதியாதி பொதுப் பிரமாணங்களாலும், அவர்க்குச் சிறப்பு நூல் ஆகிய நாலாயிரப் பிரபந்தத்துள்ள "கரிய மேனிமிசை வெளிய நீறு" "தவளப் பொடிகொண்டு, தமரணி நீறுகொண்டு" நீறு செவ்வேயிடக்காணில் "காப்பிடவாராய்" "உடையார்ந்த வாடையன் கண்டிகையன்" என்பன முதலாய செய்யுள்களையுங் காட்டி, நாராயண மூர்த்திக்கும் அவரது அவதார தெய்வங்களுக்கும், ஆழ்வாராதி யடியார்க்கும் தாரணம் சிவசின்னங்களே என்றும் வலியுறுத்தினர்.

அது கண்ட சென்னைக்கணுள்ள போலி வைணவக்கூட்டங்கள் யாவும் உருத்தெழுந்து, 1901ஆம் ஜுலை 7உக்குச் சரியான பிலவஆ ஆனிமீ உகூஉ புரசைக்கணுள்ள சீநிவாசப்பெருமாள் கோயிலில், தங்கள் கூட்டங்களுக்குத் தலைமை ஆசாரியர் என்றிருக்கும் ஸ்ரீஅழகிய மணவாள இராமாநுஜ ஏகாங்கியார் அவர்களை முதன்மையாக வைத்து, வாதிக்குமாறு அறைகூவினர். இந்நூலாசிரியர் அவர்கள், தமது பிரதிஞ்ஞையை நிலை நிறுத்துமாறு சைவசிந்தாந்த சஞ்சீவினிசபை, வேதாந்தப்பிரசங்கசபை முதலாய பற்பல சபைகளும் ஏனைச் சிவனடியார்களும் பொலிவுற்றுச் சூழ வாதிப்பான் போந்தகாலை; வைணவர் பயந்து அந்தகர் ஒருவரோடு வாதிக்கக் காட்டினர். ஆசிரியர் அவர்கள், அந்தகரோடு வாதித்தல் தருக்கநூலுக்கு விரோதம். அவரை வெல்லினும் பெருமை கிடையாது. ஏகாங்கியார் அவர்களே யெம்முடன் வாதிக்கக்கடவர் என்ன, அவர் அதற்கு அஞ்சி யொப்பிலர். அதனால் வெளிப்போந்து அடுத்தவாரம் மு

தல் வித்தியாவிலாச மண்டபம், பக்தி மந்திர நிலயம், ஸ்ரீக ங்காதரேசுரர் தேவஸ்தானம், சைவசித்தாந்த சஞ்சீவினி சபை, சிந்தாதிரிப்பேட்டை வேதாந்தசபை ஸ்தானம், கல்விமடம், தொண்டைமண்டலக் கலாசாலை முதலிய பற் பல இடங்களினும், 1902ஆ ஜனவரி மாதம் இறுதியாக ஏழுமாதங் காறும் "விபூதி ருத்திராக்க விவாத சபை, எம் சபையாராற் கூட்டப்பட்டது. ஒவ்வோர் விளம்பரங்கடோ றும் "விஷ்ணுவும் விபூதி ருத்திராக்க தாரணரோ" என்ற மேற்கோளைக் காட்டி, இதனை நிலை நிறுத்த ஆசிரியர் சித் தமாயிருப்பதனால் ஏகாங்கியார் அவர்களாவது, வேறெ ந்த வைணவ ஸ்தாபகர்களாவது வந்து சித்த சமாதானத்து டன் வாதிக்கக்கடவர் என்று அழைக்கப்பட்டனர். ஒருவ ராவது வந்து வாதித்தாரல்லர். வந்திருந்த வைணவர் தா மும் மௌன விரதம் உற்றுச் சென்றார்.

அங்ஙனம் வாராது நாணமுற்ற வைணவர், சிலமாயா வாதிகளைத் தமக்குத் துணையாகக்கொண்டு சிவசமய, சிவ சின்ன, சிவாகம, சிவனடியார் தூஷணங்களையும், நூலாசிரி ரியரையும், சபைகளையும், அடுத்தாரையும் குறித்து வாயில் வந்த வந்தபடி பொய்யும் புளுகும் அறியாமையுமான தூஷ ணங்களை நிறைத்துத் துண்டுப் பத்திரிகைகள் விட்டனர். அவைகளெல்லாம் அவ்வக்காலத்திற் சபைகடோறும் ஆசி ரியராலும், ஆங்கு விஜயஞ் செய்திருந்த வித்வஜனர்களா லுங் கண்டிக்கப்பட்டன. இன்னும் அவரது தூஷணபத்திரி கைகள் காரணமாக எமது சபையார்களால்,

க. விஷ்ணுவும் விபூதி ருத்திராக்க தாரணரோ.
உ. சீதர தியான நிரூபணம்.
ங. தசாவதார சிக்ஷா ரக்ஷணியம்.

ச. திராவிடவேத விபரீதார்த்த திரஸ்கார கண்டனம்.
ரு. அரங்கேற் றுபாசம்.
சு. சைவபூஷண சந்திரிகைச் சயச்சிறப்பு.
எ. சிவசின்ன விஜயம். [விடை.
அ. விவாதமத்தியஸ்த பத்திரம் வெளிப்படுத்தினார்க்கு ஓர் நல்
கூ. ஆழ்வாரருளிச் செயலபார்த்த விசார தண்டனம்.
கo. சென்னை மகா வித்வஜனசபை.
கக. வைணவ விப்பிரலம்பம்.
கஉ. போலிவைணவர்க்குப் புத்தி புகட்டல்.
கஙு. ஜயத்துவச கண்டன கண்டனம்.
கச. அரக்கசைவாகம குதர்க்க நிர்த்தூளி.
கரு. பாஷண்ட பிடாலம்ப தூஷண குஞ்சர பஞ்சானனம்.
கசு. வைணவப் போலியர் வாய்மத மடக்கல்.
கஎ. சிவோபாலம்பன திமிர பாஸ்கரம்.
கஅ. வாதத்திற்குப் பயந்தொளித்த வைணவர்க்கறிக்கை.
ககூ. நீறு என்னுஞ் சொல்லுக்கிட்ட வைரக்குப்பாயம்.
உo. கண்டிகை யகர்த்த கானனகுடாரி.
உக. ஆழ்வார் சரித்திரா ரணிய மகாபரசு.
உஉ. சைவபூஷண ஜயத்துவம்.

என்பன முதலாய பற்பல பத்திரிகைகள் வெளிப்படுத்தப்பட்டன. அவற்றைக் கண்டு வைணவர் அஞ்சியும், சென்னை நகர சபாமண்டபத்திற் சபை கூட்டின் வருவேம் என்றபடி, 1902ஞு பிப்ரவரிமீ 16வ க்குச்சரியான பிலவஞு மாசிமீ ருவ ஞாயிற்றுக்கிழமை வைணவருடைய சென்னை மத்திய நகர சபாமண்டபம் ஆகிய ஸ்ரீ வேணுகோபால சுவாமி அரங்கத்தில் ஓர் மகாவிவாத சபை - சைவ சித்தாந்த சஞ்சீவினி சபை, வேதாந்தப் பிரசங்க சபை, நடராஜ பக்தஜன சபை, சுத்தாத்துவித சைவசித்தா

ந்த சபை, வாதபுரீச பாதசேகர பக்தஜன சபை, வேதாகமோக்த சைவசித்தாந்த சபை என்னுஞ் சபையார்களாற் கூட்டப்பட்டது. அதன் பெயர்" விஷ்ணு தாரண விபூதி ருத்திராக்க விவாத நிகமன சபையாகும். அச்சபைக்குச் சமஸ்தானபதிகள், கௌரவபட்ட தாரணர்கள், பலபாஷா விற்பனர், ஆரிய திராவிட வித்துவ சிகாமணிகள், பண்டிதர்கள் முதலாய கனவான்கள் கூட்டம் பல ஆயிரமாகத் தேங்கின. வைணவர்களும் பலர் வந்தனர்.

அம்மகாசபையார் பிரேரேபித்தபடி, வடமொழி தென்மொழிகளை நிலைகண்டு நன்குணர்ந்தவரும், சரஸ்வதி தேவியே யோருருவெடுத்து வந்தாலன்ன ஞானமிர்த மகாசாகரமும், சுத்தாத்துவித சைவசித்தாந்த பால பாஸ்கரரும் ஆகிய அத்தியாச்சிரம பாலசரஸ்வதி ஸ்ரீலஸ்ரீ ஞானானந்த சுவாமிகள் அவர்கள் அக்கிராசனாதிபதியாய் வீற்றிருந்தனர். உப அருணகிரிநாத சுவாமிகளின் அவதார மென்றறிஞராற் கூறப்படும் மேன்மை தங்கிய அத்தியாசிரம சிவயோகானந்த குகதாச ஸ்ரீலஸ்ரீ பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அவர்களும் ஏனைய பற்பல வித்வ ஜனர்களுஞ் சூழ்ந்திருந்தனர். அத்துவித சித்தாந்த மகோத்தாரணராகிய இந்நூலாசிரியர் அவர்கள் " "விஷ்ணுவும் விபூதி ருத்திராக்க தாரணரே" என்பதைப் பிரதிஞ்ஞையாகக் கொண்டு, சகல வேதாகம உபநிடத புராணேதிகாசாதி பிரமாணங்களால் நிரூபித்து, வைணவர்க்குச் சிறப்பு நூலெனப்படும், நாலாயிரப் பிரபந்தங்களில் வரூஉம் நீறு, சாந்து, பொடி, காப்பு, கண்டிகை, அக்கவடம் முதலிய சொற்களுக்குப் பொருள் விபூதிருத்திராக்கங்களே யென்று, விசேடணமுடைமை, விசேடிய முடைமை, பாலுடைமை முதலிய இயல்கள் ஐந்து மினிதுரைத்து,

பொருள் கொள்ளும் ஆற்றல் வகையவாய வியாகரணம், உவமானம், கோசம், ஆத்த வாக்கியம் முதலிய எட்டானும் ஐவகை யுறுப்பானும் நிறுத்தித், தாமேற்கொண்ட பிரதிஞ்ஞையைச், சித்தாந்தஞ் செய்தனர். பின்னர்க் குமரகுரு தாச சுவாமிகளும், பண்டித சிரோமணி பிரமஸ்ரீமத் ஆ-கிருஷ்ணையர் அவர்களும் ஏனைய புலவர்களும் அநுவதித்து முடிக்க, அக்கிராசனாதிபதிஅவர்களும்வழிமொழிந்து, ஆக்ஷேபமுள்ளவைணவர் வாதிக்கலாம் என்றார். வைணவர் மௌனமுற்றிருந்தாராக, நூலாசிரியர் கூறியவற்றை யெல்லாம, நிகமனஞ் செய்தனர். வைணவர் அத்துடன் அடங்கினர். இதன் விடயங்களை யெல்லாம் "சைவபூஷண சயத்துவசம்" என்ற பத்திரிகையிற் பரக்கக் கண்டு தெளிக.

இவ்விவாதத்தின் பின்னர்ச் சைவபூஷணங்களாகிய விபூதி ருத்திராக்கங்களின் அருமை பெருமைகளை யுணர்ந்த சிவநேயச் செல்வர்கள் பலர் அளவிலா ஆனந்தமுற்று யாவர்க்கும் பயனுறும்படி, முதற்பதித்த நூலை விரித்து இன்றியமையா விடயங்களையுஞ் சேர்த்தளிக்க வென்று வேண்டியபடி, நூலாசிரியர் இவ்விரண்டாம் பதிப்பில் அருமையானவிடயங்கள் நூற்றறுபத்தெட்டு அமைத்துளர். பிரமாணமாகக் காட்டிய நூல்கள் பற்பல. அவையிற்றை யெல்லாம் அட்டவணையிற் காண்க.

விபூதி ருத்திராக்கங்களாகிய சைவ பூஷணங்களின் உயர்வைக் கூறவந்தவர், மண்குறி, சிலுவைக்குறி யென்னும் பரபக்கங்களைப் பேசிய தென்னெனில், சுவபக்கம் பேசுங்கால் பரபக்கமறுப்புக் கூறல் ஆன்றோர் ஆசாரமும் நூற்றுணிபு மாகலி னென்க. பரபக்க மறுப்புரைக்குங்கால் பரபக்கத்தார்க்குந் தமக்கும் பொதுவான பிரமாணங்கள்

காட்டி மறுப்பதினும், அவர்க்குரிய சிறப்பு நூல்களைக் காட்டிக் கண்டிப்பதே விசேடமாகும். அதனை யிலக்கண நூலார் பிறர் தம்மதமேற்கொண்டு களைவென்று விதந்து பேசா நிற்பர். அற்றாகவி னன்றே யிந்நூலாசிரியர் அவர்களும் கிறிஸ்துமத மறுப்புரைத்தபோது அவரது சிறப்பு நூலாகிய பைபிள் என்னும் புத்தகப் பிரமாணங் காட்டியும், வைணவரது தூஷணங்களையும் நவீன அவைதிகங்களாகிய குறிகளையும நிராகரிக்கும்போது, அவர்க்கும் தமக்கும் பொதுவாகவுள்ள வேதங்கள் உபநிடதங்கள் ஆகிய பிரமாணங்களைக் கொண்டும், வைணவரது சிறப்பு நூல்களாகிய இராமாயணம், மகாபாரதம், நாலாயிரப்பிரபந்தம், அரிவம்சம், குருபரம்பரை, சப்தகாதை, பட்டர் சுலோகம், ஆறாயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்து நாலாயிரப்படி, ஈடு முப்பத்தாறாயிரப்படி, ஜீயர் அரும்பதவுரை என்னும் நூலுரைகளைக் கொண்டும், "பிறர் தம்மமேற்கொண்டு களைவு" என மகுடமிட்டுச் செவ்வனே தருக்க நியாயரீதியாக மறுத்துச் சித்தாந்த நிகமனஞ் செய்துளார். அவை யெல்லாம் பரபக்கத்தார்க் கோர் வாய்ப்பூட்டும் உறுதி பயப்பனவு மாகவே விளங்கா நிற்கும். இவ்வுண்மையை யறியாதார் பரபக்க நூற்பிரமாணமுங் கோடல் ஆவசிய மன்றென்று தம்மூட மதியானிகழ்ந்து நகையாடுவர். அவர் ஆன்றோர் வழக்கும் நூல் வரன்முறையும் ஒரு சிறிது முணராப் புல்லறி வாளரென விடுக்க. புறமதங்களை நிராகரித்தற்கு அவ்வம்மதக் கொள்கைகளை யாராய்ந்தா லன்றிக் கண்டித்தல் கூடாது. ஆகவே நூலாசிரியர் அவர்கள் போலிவேதாந்தமாகிய மாயாவாதத்தை நிராகரித்தாற்போல, பாஞ்சராத்திராதிமத நூல்களையும் ஆராய்ந்து, தைக்கும் முள்ளை முள்ளாலேயே வாங்கு

வதுபோல அவர் மத நூல்கள் கொண்டே உபந்நியாச வாயில்களானும், தருக்க விவாதங்களானும், நூல்கள் வாயிலானும் அவற்றைக் கண்டித்து அடக்கி, எதிரொருவருமின்றி, சுவமத தாபனமாகிய வைதிக சைவ சுத்தாத்துவித மெய்கண்ட சித்தாந்தத்தை நிறுவிவரல் கண்கூடே.

ஆசிரியர் அவர்கள் அருமையாகச் செய்த இந்நூலை, திருஞானசம்பந்தப் பெருமானே முத்தமிழையும் சைவ சித்தாந்தத்தையும் வளர்த்து நிறுவற்குப் பின்னரும் ஓருருவெடுத்து வந்தாலென, யாழ்ப்பாணத்து நல்லூரி லவதரித்து, பற்பல இலக்கிய இலக்கண தருக்க நீதி நூல்களையும், சைவசித்தாந்த நூல்களையும் வெளிப்படுத்திச் செந்தமிழையும் சைவசித்தாந்தத்தையும் வளர்த்து, பரமத கண்டன சுவமத ஸ்தாபனஞ் செய்து, சிவபத்தி சிவனடியார் பத்தி சிவாகம பத்திகளின் முதிர்ந்து, மெய்ஞ்ஞானப் பிரசங்க மாரி பொழிந்து, ஒப்பாரு மிக்காரு மின்றி, மகாவித்துவ சிரோமணியாய், சைவசித்தாந்த பானுவாய், திக்கெலாம் மெய்ப்புகழ் விளங்கப் பெற்ற மகா சைவ ஞானாசாரிய ஸ்ரீலஸ்ரீ, ஆறுமுகநாவலப் பெருமான் அவர்கள் செய்த அத்தியற்புத பரமோபகார வருஞ் செயலகளின் ஞாபகார்த்தமாகச் சமர்ப்பித்தனர்.

அவர்க்கு உரிமை செய்தமையால் உலகத்துள்ள சைவ சித்தாந்த மெய்யன்பர்கள் யாவர்க்கும் உரிமை செய்தவாறாயிற்று.

இந்நூலைப் பதிப்பிக்குங்கால் சிரமம் பாராது, மிக்க விரைவில் இந்நூலை முடித்து வெளியிடச்செய்த, சைவசித்தாந்த பரிபாலனரும, டிஸ்திறிக் நீதிபதியும், சித்தாந்த தீபிகைப் பத்திராதிபரும் ஆகிய ஸ்ரீமாந், நல்லசாமிப்பிள்ளை அவர்கள் பி - எ, பி - எல் அவர்களின் உற்ற சகோதரர்களும்,

(C. N. Press) சி - நா. அச்சியந்திரசாலைச் சொந்தக்காரர் களும் ஆகிய ம-ா-ா-ஸ்ரீ, ஜா - மா. துரைசாமிப்பிள்ளை அவர்க ளதும், ஜா-மா. நாகரத்தினம்பிள்ளை அவர்களதும் சைவசித்தாந் தப் பற்றுப் பாராட்டத் தக்கதேயாம். இதற்காகப் பொரு ளுபகரித்த சிவபுண்ணிய சீலர்களாய், சைவசித்தாந்த சஞ் சீவினி சபையின் அங்கத்தவர்களாய் விளங்கும், பூலோக நண்பன் என்னுந் தண்டமிழ்ப் பத்திரிகையின் மானேஜர் ம-ா-ா-ஸ்ரீ, புரசை - ப. சுப்பிரமணியமுதலியார் அவர்களுக் கும், பெருமாள்பேட்டை ம-ா-ா-ஸ்ரீ, ஈ. இரத்தினசாரியார் அவர்களுக்கும் மிக்க நன்றி கூறுகின்றேம்.

இந்நூல், விபூதி ருத்திராக்க வுண்மைகளை யறிந்து அநுட்டிக்கும் ஒவ்வோர் சைவசமயிகள் இடத்தும் இருத் தற்குரிய தொன்று. நூலாசிரியர் அவர்கள் இன்னும் இது போன்ற நன்னூல்களை யியற்றி நீடாயுள் பெற்று வாழும் ஆறு, தணிகைநாயகன்றன் பேரருள் சார்கவெனப் பிரார்த் திக்கின்றேம்.

இங்ஙனம்.

சைவ சித்தாந்த சஞ்சீவினி சபையாருள் ஒருவரும்

அஷ்டாவதானம் - சபாபதிமுதலியார் அவர்கள் மாணாக்கரும்

ஆ கி ய,

கு. தங்கவேற் செட்டியார்.

வேதாந்தப் பிரசங்க] சபையாருள்,

மா - நமசிவாயம்பிள்ளை.



உ

சிவமயம்.

# சைவபூஷணசந்திரிகை.

## காப்பு.

இன்னிசை வெண்பா.

வேத சிவாகமத்தான் மெய்ச்சமய மென்றுதெளி
போதமுள சித்தாந்த பூடணவொண் மைக்கருளு
மீரா யிரமருப்பி யேறிவிளை யாட்டருளு
மோரா யிரமருப்பி யோர்.

## கடவுள் வணக்கம்.

### பரமசிவன்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிவஞானத் தவர்க்கருளும் பதியாகமத்துச்
செல்வன் யாவன்
றவஞால முதலுலகை மூவினையிற் கொண்டவன்யார்
தானு வாகி
யவஞானத் தவர்க்கறியா வண்ணலெவன் றிருநீறு
மக்கந் தானுந்
தவஞானக் கொருகுறியாத் தந்தவன்யா ரவன்சரணந்
தலைமேற் கொள்வாம்.

## வழிபடு கடவுள்.

ஒருமானை வலத்தானை யொருவானை யிடத்தானை
யுலகம் போற்ற
வருமானை முகத்தானைத் துணையானை யயில்பிடித்த
வலத்தான் றன்னைப்
பெருமானை யெனதுளக்காட் டமர்வானை யெமக்கருளைப்
பெருக்கு வானைத்
தருவானைப் பெரும்புதுச்சந் நிதியானைச் சரவணனைச்
சார்ந்து வாழ்வாம். (௨)

## வி பூ தி.

சித்தாந்த மெய்ச்சமயச் சிவநெறிக்கு வித்தாகித்
திருமா லாதி
பெத்தாந்தக் கணத்தவர்க்கு மெவ்வெவர்க்கும் பெருவாழ்வு
பெருக்கி மும்மைக்
கொத்தாந்த மல்முருக்குங் குறிகாட்டி நித்தியமாய்க்
கொண்டார்க் குற்ற
பித்தாந்த மதப்பிணியைத் தபுமருந்தாந் திருநீற்றைப்
பேணி யுய்வாம். (௩)

## உருத்திராக்கம்.

நிலைகலங்கா தெங்குநிறை யருட்கடலின் வயிற்றோன்றி
நிகரின் ஞானத்
தலையொளிகான் றியாம்பிரம மெனத்தடுமா றும்மிருள்க
டங்கா தோட்டி
விலைமதித்தற் கரியதுவாய் வேண்டுவார் வேண்டியன
விழைவி னீந்து
மலைமகளு யகன்றிருக்க ணருட்பேற்றைக் குறிக்கவரு
மணியைத் தாழ்வாம்.

# நூல்

## சைவபூஷணம் விபூதி யுருத்திராக்கங்களே.

*பரம சிவனமலன் பத்தர்க்குச் சின்ன*
*முருவுடலிற் கண்டியு நீறும்.*

*சிவபெருமான் பிறப்பு இறப்பு இன்றி என்றும் உள்ளவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் செய்யவல்லவர்; இயல்பாகவே யெல்லாம் அறிபவர்; தமது அநுபவத்தின்பொருட்டுப் பிறிதொன்றையும் வேண்டாதவர்; தம்வயமுடையவர்; ஆன்மாக்களிடத்துள்ள இரக்கமே திருமேனியாக வுடையவர்; இவ்விலக்கணங்களை யுடையவர் அவர் ஒருவரேயன்றி வேறில்லை. ஆதலால் அவரே பசுபதி என்று மெய்யன்புடன் வழிபடுகின்றவர் சைவர், அல்லது சிவனடியார் என்றுகூறப்படுவர். ஒருவனையே தனக்கு நாயகனுகக் கொண்ட பதிவிரதையானவள் தன்னுயகனுற் கொடுக்கப்பட்ட திருமங்கிலியம் மோதிரம் முதலியவற்றைத் தன் கற்புநிலைக்குச் சாதனமாகத் தரித்தொழுகுவள். அதுபோலச் சிவபெருமானையே பரமபதியெனக்கொண்டு வழிபடு மொவ்வொருவருக்குந் தத்தம் அன்பினிலைக்கு அடையாளமாகத் தரிக்கத் தக்கன, சிவசின்னங்களாகிய விபூதி உருத்திராக்ஷம் என்னும் இரண்டுமேயாம். எவள் திருமங்கிலிய முதலிய அடையாளங்களைத் தரித்தற்குக் கூசுகின்றனளோ அவள் குலமகளெனப்படாள். அதுபோல விபூதி உருத்திராக்கங்களாகிய சிவசின்னங்களை எவன்றரிக்கக் கூசுகின்ருனே அவன் சைவனெனப்படான். மற்றைய ஆபரணங்களெல்லாவற்றையுந் துறந்திருந்தாலும் திருமங்கிலியத்தைக் குலமகளிர் துறந்திருக்கார். அதுபோல எவ்வணிகளையுந் தரியா

மலிருந்தாலுஞ் சிவசின்னங்களைச் சிவனடியவர் (சைவ சித்தாந்திகள்) என்றுள்ளார் தரியாதிருத்தலாகாவாம். ஆதலால் யாவர்க்கும் விபூதி யுருத்திராக்க தாரணம் இன்றியமையாததேயாம்.

# விபூதிருத்திராக்கப்

## பிரபாவ நூல்கள்.

விபூதி உருத்திராக்கம் என்னுஞ் சிவசின்னங்களின் பெருமைகளை யெடுத்துப் பொதுவாகவுஞ் சிறப்பாகவும் விதந்துபேசும் நூல்கள் இவையெனக் கணிக்கப் புகுதல், உலகத்தில் இதுகாறும் பிறந்து இறந்தவர்கள் இவ்வளவினரொன்று ஒருவன் கணக்கு எடுக்கப் புகுதல் போலாகும். அவற்றின் பெருமைகளை யெடுத்துரைக்காத தொன்னூல்கள் கிடையா. தமிழ்நூல்க ளெவற்றினும் அப்பெருமை புலப்படும். புறச்சமயிகளாகிய சமணரும் "இடு நீற்ருற் பையவிந்த நாகம்போற்றத்தங் - குடிமையான் வாதிக்கப் பட்டு" எனத் தமது வேளாண்வேத மென்னு நூலினும், ஆங்காங்கும் அவற்றின் பெருமையைப் புகழ்ந்துள்ளார். அவ்வாறே சூடாமணி நிகண்டார் ஆகிய மண்டல புருடரும், தாஞ் சமணமதத்தரா யிருந்தும், விபூதியையே சிறப்பித்து "திருநீறே பற்பம் - பொடியெர்டு விபூதி காப்பாம் புண்ணிய சாந்தஞ் சாணி" எனக் கூறியுள்ளார். அன்றி மண்ணையுங் குங்குமத்தையும் பொடி, விபூதி, காப்பு என்ருவது, புண்ணியசாந்தம் என்ருவது கூறினரல்லர். வைணவரைப் போலச் சமணரும் மட்குறி தரிப்

பது வழக்கமாயிருப்பவும், அவரதைச் சிறப்பித்துக்கூறுது விபூதியையும் அதற்குக் காரணமாயுள்ள சாணத்தையும் விசேடித்துக் கூறிய உண்மையை அறிவுடையோர் உணராதுவிடார். நிற்க, வடமொழியிலோ இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னு நான்கு வேதங்களிலும், அவற்றின் பாகங்களாகிய இராம ரகசியோப நிடதம், காலாக்கினி ருத்திரோப நிடதம், அதர்வசிரோப நிடதம், சாண்டில்லியோப நிடதம், சாபால உபநிடதம், பிருகச் சாபால உபநிடதம், தைத்திரியோப நிடதம், சுவேதாச் சுவதர உபநிடதம், சாபாலியுபநிடதம், வாசுதேவோபநிடதம் என்பவற்றினும் ஆங்காங்கு எடுத்துச் சிறப்பித்ததன்றி, விபூதியின் பெருமையையே எடுத்துக்கூறும் பஸ்மசாபால உபநிடதமும், உருத்திராக்கத்தின் பெருமையையே உரைக்கும் உருத்திராக்க சாபால உபநிடதமும் இருக்கின்றன. வைணவரால் தரிக்கப்படும் பஞ்சட்பொடி, சிவப்புப்பொடி வெள்ளைமண், வடகலை, தென்கலைக் குறிகள் ஆகிய இவை, ஒருபநிடதத்திலாவது சொல்லப்பட்டில. வேதத்தில் விபூதி ருத்திராக்கங்களுக்குத் தனித்தனியுபநிடதங்கள் இருத்தல்போலக் கோபிசந்தனத்திற்காவது, வைணவர் கொள்ளும் மண்ணுக்காவது, துளசிமணிக்காவது கிடையாது. அது பற்றியன்றோ, பரமாசாரியர்களுள் ஒருவராகிய திருஞானசம்பந்த மூர்த்திநாயனாரும் தமிழ்வேதத்திலே திருநீற்றுப்பதிகம் என்று ஓர் திருப்பதிகஞ்செய்து, செய்கையினாலும், அதன் மகிமையைத் தெரித்தருளினர். உருத்திராக்கப்பதிகம் இக்காலத்துக்கின்றாய் மறைக்கப்பட்ட தென்க. நாலாயிரப்பிரபந்தத்தில் திருமண் பதிகமும் துளசிமணிப் பதிக

முஞ் செய்யப்படாமையும் அவற்றின் பாஷண்டத்துவத்தை விளக்குமென்க.

உபநிடதங்களுள் * சைவபஞ்சதபனம், வைணவபஞ்சதபனம் எனப் பிரிக்கப்பட்ட ஐவைவந்து உபநிடத முள்ளன. அவற்றுட் சைவபஞ்சதபனத்துள் விபூதியைப் பிரதிபாதிக்கும் உபநிடதங்கள் பலவாம். அவ்வாறு வைணவபஞ்சதபனத்துள் திருமண்ணைக் கூறுவது ஒன்றுமில்லை. இதனானும் திருமண் வேதத்தில் விதிக்கப்படாததென்பது வெள்ளிடை மலைபோற் றெள்ளிதி னுணரக்கிடக்கின்றது. இன்னும் காமிகாதி வாதுளாந்தமான சிவாகமங்கள் இருபத்தெட்டினும், அவற்றின் பிரிவுகளாகிய சாரோத்தரம், சாலபேதம், சசிமண்டலம், மகாவித்தயம், துலாவிருத்தம், காலதகனம், குமாரதந்திரம், மகுடோத்தரம், இருத்தகாசம், நீலபத்திரம், கலாபேதம், சிமுகம், சிவசாசனம், விலேகனதந்திரம், நந்திகேசுரம், மகாந்த சங்கிதை, மகாகாளம், பிரபுத்தாகமம், வீணாசிகோத்தரம், தாரதந்திரம், பரோற்பூதம், பதுமசங்கிதை, பாவநாசகம், வீமதந்திரம், சுபோதம், பாவனம், பார்வதீதந்திரம், பிரகரணாகமம், காசியபம், வாமதந்திரம், காருடம், நைருதம், சிவதருமோத்தரம், மதங்கம், விசுவான்மகம் முதலிய உபாகமங்களினும், சாங்கியாயன சூகியம், மத்தியந்தன சூகியம், போதாயன சூகியம் என்னும் வேதசாரங்களினும், பரத்துவாச-சாதாதப-பராசர-கௌதம-மநுவாதி ஸ்மிருதிகளினும், இலிங்க-சைவ-காந்த-

* இவைகளைச் சங்கராசாரியரும், இராமாநுசரும் தாமே வகுத்துக்கொண்டனர். சைவபஞ்சதபனமாவன - காலாக்கினிருத்திரம், சுவேதாச்சுவதாம், கைவல்லியம், அதர்வசிகை, அதர்வசிரசு என்பன.

வைணவபஞ்சதபனமாவன - இராமதாபினி, கோபாலதாபினி, நாசிம்மதாபினி மகாநாராயணம், அயக்கிரீவம் என்பன.

காருட-மற்ச-ஆதித்த-பிரமாண்ட-பதும-கூர்ம முதலிய **மகாபுராணங்களினும்,** பாரதம், இராமாயணம் என்னும் **இதி காசங்களினும்,** சிவரகசியம் என்னும் **பரம இதிகாசத்தும்** ஏனைய பற்பல நூல்களினும் கூறப்பட்டுள்ளன.

## விபூதி ருத்திராக்கங்களே வைதிகம்.

மேற்போந்த நியாயங்களால் விபூதிருத்திராக்கங்களே போகம், முத்தி என்பவற்றை விரும்பினோர் அணியும் வைதிக சாதன மெனப்பட்டன. திருமண்குறி வேதமுதலிய சுத்த வித்தைகளிற் கூறப்படாமையான் அவைதிகமாய் இடையில் இராமநுசரால் இற்றைக்குச் சுமார் அகூரு வருஷ க்கு முன் உண்டாக்கப்பட்ட நவீனக்குறியாய் முடிந்தது. யாரேனு மொருவன் ஒருவனை வஞ்சித்தகாலை, உலகர் "அவன் உனக்கு மண்போட்டானு, நாமம் போட்டானு" என்று இன்றுங் கூறும் வழக்குண்மையானு மறிக.

அன்றியும் வைணவருட் சிலர் மஞ்சட் பொடியே யணியத் தக்கதென்றும், சிலர் குங்குமச் சூரணமே தரிக் கத்தக்கதென்றும், தங்களுட் பிணங்கித் தங்களுமத்தையே குறைத்து அவைதிகமென்று இகழ்ந்தமையானும், அதுகாரணமா மஞ்சணுமத்தைத் திட்டி அவைதிக மென்று சிவப்பு நாமக்காரர் "உடையவர்ஸ்ரீ சூர்ணவிளக்கம்" எனப் பெயர்வைத்து குழறுபடைச்சுவடி யொன்று எழுதினமையானும், அதன் இருபத்தாறுவது பக்கத்தில் உகூ-வது வரி தொடங்கி "ஸ்ரீபெரும்பூதூரில் இவ்வருஷத்திற்கு (அஎ0) வருஷமான கலி நாலாயிரத்து நூற்றெட்டுக்குமேல் பிங்கள வருஷ சித்திரைமீ கஉஉ வெள்ளிக்கிழமை திருவாதிரை சுடகலக்கினத்தில். திருவவதரித்தருளிய ஸ்ரீபாஷ்யகாரர் கா

லத்திற்கு முன்பு, இப்போதுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் பஸ்மாதி தாரணராய், க்ஷுத்ர தேவதாந்த்ரபரராய், மந்த்ராந்தரபரராய் இருந்தார்கள். பின்னூதனமாக வெளியிட்டு அவைகளைத் திக்விஜயஞ்செய்து தாபித்தார்கிடாய்" என்று வைணவரோ வழிமொழியா எடுத்துக் காட்டினமையானும் அது நன்குவிளங்கும். காத்தியாயன உபநிடதத்தும், வராக உபநிடதத்தும் விதிக்கப்பட்டிருக்கிறதென்று கற்பனைச் சுலோகமுங் கதையுங்கட்டி அவற்றைக் காட்டவியலாது விழித்துப் பொய்ப்பட்டாரும், பிரமாண்டத்தும், பாத்மோத்தரத்தும், பாஞ்சராத்திரத்துந் தான் கூறப்பட்டது; வேத உபநிடதங்களிற் சொல்லப்படவில்லையென்று அங்ஙனமாயினுரு முண்டாகலின் விதியில்லையென்றறிக. நாலாயிரப்பிரபந்தத்துள் பெரியாழ்வார் "காப்பிடவாராய்" காப்பிடவாராய்" என்று கூறிய பதிகம் நாமப்பதிகமெனின், அது நாமமாகிய மண்ணன்று. மண்ணுக்குக் காப்பு என்னும் பெயரின்மையாலும், விபூதிக்கே காப்பு என்று பெயரிருத்தலினாலும், காப்பு என்னுந் தமிழ்மொழிக்கு ஏற்ப வேதாகமங்களாதி வித்தைகளும் "ரக்ஷை" என்று விபூதியை விளித்தலானும், மண்ணையங்ஙனம் அழைக்காமையாலும், காப்பு என்றது விபூதியேயாம். கண்ணனுக்குப் பூத பிரேத இராக்கதர்களால் பயம் நேரிடாதபடி காப்பதற்கு, அசோதாதேவி விபூதியையணிதற்காக அந்திக்காலம் வந்தபோது அழைத்து அணிந்தாள் என்பதே அப்பதிகத்தின் கருத்து. அங்ஙனமே வைணவர்க்குச் சிறப்புநூலாயுள்ள விஷ்ணுபுராணத்தும் "அப்பேயின் மடியிற் குழந்தையிருப்பதையும், அவள் செத்துக்கிடப்பதையுங் கண்டார்கள். யசோதையும் பரபரப்போடு ஓடிவந்து அக்குழந்தையை யெடுத்துப் பசுவின் வாலைச்

சுற்றி யப்பேயினாலுண்டான பாலதோஷத்தைப் போக்கினாள். உடனே நந்தகோபரும் வந்து அக்குழந்தையை யெடுத்துக்கொண்டு கோமய பஸ்மத்தை அதன் சிரத்தில் (கண்ணன்தலையில்) காப்பாகவைத்து இவ்வாறுதுதித்தார்" என ஐந்தாவது அம்சத்தில், ஐந்தாவது அத்தியாயத்திற் கூறப்பட்டிருக்கிறது.

அக்கருத்தையே பெரியாழ்வாரும் எடுத்துத் தாஞ்செய்த முதலாயிரத்துட் கூறினர். இதனானும் பெரியாழ்வார் கூறிய காப்புத் திருமண்ணாகாது திருநீறாயதும், 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌧𑌾𑌰𑌣𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌭𑍂𑌤𑌪𑍍𑌰𑍇𑌤𑌪𑍁𑌰𑌸𑍍𑌸𑌰𑌾𑌃 । 𑌭𑍀𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑌮𑍍𑌪𑌿𑌤𑌾𑌶𑍍𑌶𑍀𑌘𑍍𑌰𑌂 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌵 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥ (திரிபுண்டரதாரணம் த்ருஷ்ட்வாபூதப்ரேத புரஸ்ஸரா: பீதா: ப்ரகம்பிதாச்சீக்ரம் கச்சந்த்யே வனஸம்சய: (விபூதி முக்குறியாகத் தரித்த மகாபுண்ணியரைக்கண்ட பூதபிரேத முதலியன அஞ்சி நடுங்கியலறியோடுமென்பதற்கு ஐயமில்லை." என்று மானவ புராணமும், அவ்வாறே காத்தியாயனஸ்மிருதியும், அவ்வாறே "பயங்கரமான இராக்கதர்கள், நாகங்கள் பிரேதக்குழாங்கள், குத்திர உயிர்கள் ஆன பிரமராக்கதர்கள், யமதூதர்கள், சாகினி, இடாகினி முதலானவைகள் விபூதிதரித்தவனைக்கண்டமாத்திரையே அதிதூரமோடிப்போகும்" என்று "யோகோரராக்ஷசா" என்ற சுலோகத்தால் மனுஸ்மிருதியும் கூறுவதனாலுந் திருநீறே காப்பாயதுமுணர்க. காப்பு என்றால் காவல். அன்றியும் விபூதி யுருத்திராக்கங்களைச் சாம்பரென்றுங் கொட்டையென்றுந் தூஷிக்கும்போலிவைணவர் பலர் பசாசு முதலியன பிடித்த காலத்தில் தமது மண்ணை மந்திரித்து அணியாது விபூதியையே மந்தி

ரிப்பித்து அணிவதும், பகல்முழுதும் பட்டைநாமந் தீட்டி ஞர் இரவில் விபூதிதரிப்பதும், பசாசையோட்டும் மகம தியர் தாமும் இதுகொண்டு மந்திரித்து ஒட்டுவதும் இக் காலத்துங் காணப்படுகின்றனவே. இதனால் எமது தமிழ் வேதமாகிய தேவாரத்தில் திருநீற்றுப்பதிகம் என்று சிறப் பித்துச் சொல்லப்பட்டபடி, நாலாயிரப் பிரபந்தத்தும் **காப்புப்பதிகம்** என்று கழறப்பட்டமையால் திருநீறும் உரு த்திராக்கமுமே வைதிக சாதனமாம். ஆதலால் அவற்றை யணிதல் வேண்டும்.

## விபூதி ருத்திராக்க விசேடம்.

விபூதி யுருத்திராக்கங்கள் பிராமணன் முதலிய யாவர் க்கும் நித்தியாங்கமாக வேதத்தில் விதிக்கப்பட்ட தென்று **கந்தபுராணங்** கூறுகின்றது. "அக்கிரிதிபஸ்ம" என்பது முத லாகச் **சாபாலகருதியிற்** சொல்லப்பட்ட எழுமந்திரங்களை யும் உன்னி அவற்றைத்தரிப்பதே அத்தியாச்சிரம நிலையெ ன வேதங்கள் விதித்த வென்றுசூதசங்கிதை கூறுகின்றது. ஞானி யாயினும், பிராமண ஞயினும், ஏனைய ராயினும், இவற்றைத் தரித்துக் கொண்டுதான் தங்கள் கருமங்களிற் பிரவேசிக்க வேண்டும். மோக்ஷத்தை விரும்புவோர் முக் கியமாய் இடைவிடா தணிதல்வேண்டும். இவற்றைத் தரிப் பவரைச் சிவபெருமானென்றே நினைக்கக்கடவர். சிவபெ ருமானுடைய மகிமையை யெவ்வாறு அளவிடக்கூடாதோ, அதுபோல இச்சிவசின்னங்களின் பெருமையும் அளவிடக் கூடாதென்றறிக. சகல பாவங்களுந் துன்பங்களும் பயங் களும் இவையிற்றைக் கண்டாலும, அணிந்தாலும், தீண்டி ஞலும், அணிந்தாரைத் தரிசித்தாலும் அதிவிரைவி லகலு

மென்று வேதங்கள் முழங்குகின்றன. இவற்றைத் தரிப்பின் விட்டுணு, இலக்குமி முதலிய தேவர்களுக்கும் பிரீதியுண்டாகுமென்று பராசரஸ்மிருதி பகர்கின்றது. இவற்றைத் தரிப்பவர் பிரமசாரி, கிருகத்தன் வானப்பிரத்தன், சந்நியாசி என்னும் ஆச்சிரமிகளாயினுஞ் சரி, வேறெவராயினு மென் அவர் மகாபாதக உபபாதகங்களி னின்றும் விலகிப் பரிசுத்தராவர். தமதுவழிபடு கடவுளைப் பூசித்தவராவர். சகல புண்ணிய தீர்த்தங்களினும் மூழ்கினவராவர். எல்லா மந்திரங்களையும் விதிப்படி செபித்த பலத்தை யடைவர். அறமுதலிய உறுதிப்பயன்களை யடைந்தவராவர். அன்றியும், இம்மை மறுமைப் போகங்களை யெல்லா மநுபவித்து, பிரதம மகாப்பிரளய காலத்திலே அத்துவித முத்தியாகிய சிவசாயுச்சிய முத்தியை யடைவர். மீண்டும் பிறவார் என்று [illegible] ॥ என்றற்றொடக்கத்தவாகக் காலாக்கினி ருத்திரோபநிடதஞ் சொல்லிற்று. வேதங்களாலே விதிக்கப்பட்ட விபூதி யுருத்திராக்க தாரணத்தை ஞானமுடைய பிராமணனும் மனத்தினாலும் விடுத லொல்லாது. விடிற் பதிதனாவான் என்று உபப்பிருங்கண சுருதி யுரைக்கின்றது.

## விபூதி ருத்திராக்ஷம் நித்தியாங்கமே.

விபூதிதாரண மில்லாமல் நீரையாவது, அன்னத்தையாவது வேறொன்றையாவது தீண்டலாகாது. வேறெந்தக் கருமமுஞ் செய்தல் கூடாது. பிராமணன் தானும் சோர்வு காரணமாக இவற்றைத் தரியாது காயத்திரி மந்திரஞ் செபித்தல் ஆகாது. அங்ஙனஞ் சம்பவித்தால் நீர் நடுவே யிருந்து நூற்றெட்டுத்தரங் காயத்திரி மந்திரஞ் செபித்து ஒரு நா ளுபவாச மிருப்பிற் சுத்தனாவான். சந்நியாசி ஒருகாலத்

திற்றரிப்பதினின்றுந் தவறுவானாயின் உபவாசமுற்றுப் பிரணவமந்திரத்தைப் பன்னீராயிரந்தரம் உச்சரிப்பானாயின் அக்குற்றத்தினின்றும் நீங்குவான் என்று பஸ்மசாபால உபநிடதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால் விபூதி ருத்திராக்க தாரணம் நைமித்திகம், காமியம், பிராயச்சித்தம் என்னும் அங்கங்களாவதன்றி நித்தியாங்கமுமாக யாவரானுங் கொள்ளத்தக்கதென்பது உண்மை! உண்மை!! முக்காலுமுண்மையே. "உண்மையிலுள்ளது நீறு, பயிலப்படுவது நீறு" என்று திராவிட சூக்தமிருத்தலு முணர்க. உருத்திராக்ஷமும் நித்தியாங்கம் என்பதனை உபதேசகாண்டம், சித்தாந்தசிகாமணி முதலியவற்றிற் காண்க.

## விபூதி ருத்திராக்கஞ் சிவவடிவமே.

விபூதி உதித்திராக்கங்கள் சிவசின்னமெனவும், திருவேடம் எனவும்படும். "செம்மலர் நோன்றாள் சேர லொட்டா-வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ-மாலற நேய மலிந்தவர் வேடமு-மாலயந் தானு மரனெனத் தொழுமே" எனச் சிவஞானபோதஞ் செப்புதலால், அவை இரண்டுஞ்சிவபெருமானென்றே கொள்ளற் குரியனவாம். காமக் கிழத்தியரது வடிவிலே காணப்படும் ஆடை, சாந்து, அணிகலன் முதலாயின காமுகரை வசீகரித்து இன்பஞ் செய்யுமாறு போல மெய்யுணர் வுறுவாரைக் காட்சிமாத்திரையானே வசீகரித்து இன்பஞ் செய்தல் பற்றிச் சிவபத்தி யுடையார்க்கு இவை திருவேடமாகக் கொள்ளப்பட்டனவாம்.

### திருப்பல்லாண்டு.

சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணா ரிளங்கொங்கையிற் செங்குங்குமம், போலும் பொடியணி மார்பிலங்குமென்று புண்ணியர் போற்றிசைப்ப.

* அக்கினி சிவபெருமானது வடிவமாகும். சந்திரன் யாகவடிவாய் விளங்குவன். ஆதலால் அவனை அமிர்தமென்று கூறுவர் பெரியர். இவ்வுலகங்கள் யாவும் அக்கினியாற் சுடப்பட்டு வெந்து சாம்பரானமையாற்றான் பரிசுத்தமடைந்தது. அக்கினியிடத்து அவிபெய்து உயர்வையடைந்தவர்கள் விபூதி தரித்தலாகிய பாசுபத விரதத்தை யநுட்டித்தனர். இதுபற்றியன்றோ தென்புலத்தாரும் அக்கினியை யுண்பார்கள். தேவர்கள் சந்திரகலையை யமிர்தமாகப் பானம் பண்ணிவருகின்றனர். ஆதலால் உலகம் அக்கினி சொரூபமே. அவ்வக்கினி சிவரூபமான திவ்வியவடிவேயாம். சந்திரன் சிவசத்தி வடிவாகும். இதனாற்றான் பரிசுத்தம் வாய்ந்த சிவாக்கினியி னிடத்தினின்றுந் தோன்றிய விபூதியைச் சிவபெருமான் றமது திருமேனிக்கண் தரித்துளார். ஆதலின் அது பரிசுத்தமுள்ளதும், அகனைச்செய்வதும், அமிர்தம்போ லெவரானுங் கைக்கொள்ளப்படுவதும் புத்தி முத்திகளைக் கொடுப்பதுமாகும்.

' உத்திராக்கத்துட் கௌரிசங்கமென்பதனால் அது அர்த்த நாரீசுர வடிவம் என்பது நன்கு புலப்படுகின்றது. சிவஞ் சத்தியென்னும் இரண்டும் அபேதமாக இருக்கின்றனவென்பதை யதுகொண்டுணரலாம். கௌரிசங்கர மென்னும் பெயரானுந் தெரிக.

இலிங்கபுராணம்.

* ஆதலாலுலகமழலினல்வடிவேயவ்வழலெமதருவாமாற், சோதறுசோமன்றேவிகல்வடிவாங் கொழுஞ்சுடரழலிடைப்பட்ட, வேதமினீற்றையெமதுமெய்யணிவோ மெறிதிரைக்கருங் கடலுடுத்த, தீதிலாவுலகநீற்றினையணிந்தே தீர்த்திடுந்தீவினைச்சிமிழ்ப்பே.

## விபூதி ருத்திராக்க ரூபம்.

முன்னர்க் கூறியபடி விபூதிருத்திராக்கங்கள் சிவவடிவ மென்று அறியப்படுவதன்றி, வேறுவிதமாகவுந் தணியப்படும். விபூதி வெண்ணிறமாகவும், உருத்திராக்கம் கருமை முதலிய பல நிறங்களாகவுங் காணப்படலால், விபூதி வெண்ணிற முடைய சிவரூபமாகவும், உருத்திராக்கம் கருமைமுதலிய நிறங்களையுடைய சத்திவடிவமாகவும் எண்ணப்படுகின்றது. இதனல் சிவமுஞ் சத்தியுங் கூடியவழி எல்லாமாகு மென்பது பெறப்படும். சிவஞ் சத்தி என்னும் இரண்டானுமே முத்தி கைகூடுமென்பது இவற்றின் தாரணத்தாற் றெரிகின்றது.

## தேவாதியருஞ் சிவசின்ன தாரணரே.

விட்டுணுவும், அவர் அம்சமென்று வைணவராற் கொள்ளப்படும் வியவஸ்தையரான சங்கரிடணர், பிரத்தியும்நர், அநிருத்தர், வாசுதேவர் எனப்படுவோரும், கூர்மர், வராகர், நாரசிங்கர், வாமனர், பரசுராமர், மற்சர், தசரத இராமர், பலராமர், கிருட்டிணர் என்னு மூர்த்தங்களும், இனிமேல் சம்பளம் என்னுங் கிராமத்திற் சிவபத்தரான விட்டுணுயசசு என்பவரது கிருகத்தில் உற்பவஞ்செய்யும் கற்கியும், பிரமன், இந்திரன், தேவர், முனிவர், கின்னரர், கிம்புருடர், வித்தியாதரர், கருடர், பூதர், இயக்கர், அசுரர், உரகர், சாரணர், சித்தர், கந்தருவர், பைசாசர், இராக்கதர், போகபூமியர், ஆகாயவாசிகள் முதலிய மேலுலகரும், அரிச்சந்திரன், நளன், புருகுச்சன், புரூரவன், முசுகுந்தன், கார்த்தவீரியன் என்னும் அறுவர் சக்கிரவர்த்திகளும், கயன்,

அம்பரீடன், சசிபிந்து, சிபி, பிருது, மருத்துவான், பரதன், சுகோத்திரன், திலீபன், இரகு, அந்திதேவன், யயாதி, மாந்தாதா, பகீரதன், அனங்கன் என்னும் பதினைவர் மகா மன்னர்களும், ஏனைய சூரிய சந்திரகுல அரசர்களும் விபூதி ருத்திராக்க தாரணமுடையவர் என்பது வேதாகம உபநிடத மிருதி புராணேதிகாச முதலியவற்றாற் குன்றின்மேலிட்ட தீபம்போற் காணப்படுகின்றது. அவற்றையெல்லாம் பிரமாணங்களால் நிறுவ எம்மனம் பிடர் பிடித்து உந்துமாயினும் விரிவஞ்சி விடுத்தாம். அன்றியும் அதுபற்பல விவாத சபைகளினும் பூர்வபக்கத்தார் முன்னிலையிற் பிரமாண சகிதம் நன்கு நிறுவப்பட்டதொன்றாகலானும் அஃதொரீஇ மேற்செல்லுதும்.

**சூதசங்கிதை.**

மாலயனிந் திரன்மற்றை யமரர்மலர் மகளிர்சசி மற்றைவானக்
கோலமட வாரியக்கர் கந்தருவ ரரக்கர்குல வசுரர்வேதச்
சீலமுனி வார்மற்றோ ரிவருளருந் தவமுடையீர் திருவெண்ணீறு
சாலவுமுத் தூளனமுப்புண்டரநா டொறும்போற்றித் தரியார்யாரே.

## விஷ்ணுவும் விபூதி ருத்திராக்க தாரணரே.

சிலர் ஆசாரியருட் சிறந்தவராய், சிவசத்திகளுளொருவராய், சிவபத்தருட் சிறந்தவராய், காத்தற் கடவுளராய் விளங்கும் எம்பெருமாளுக்கும் அவரை வழிபடுவார்க்கும் விபூதி ருத்திராக்கதாரணம் தக்கதன்று என்கின்றனர். "பஸ்மதிக் தாங்கா ருத்திராக்ஷாபரணு:—தக்ஷிணுயாம் திசிவிஷ்ணு" எனவரும் (அதர்வணவேதம்) பஸ்மஜாபால உபநிடத சுலோகத்தானே திருமால் ஸ்ரீகாசி க்ஷேத்திரத்திலே தென்றிசைக்கணிருந்து விபூதிருத்திராக்க தாரணமுடைய

ராய் உபாசிக்கின்றனர் என்பது பெறப்படலானும், நாரா யணஸ்து பகவான் ஜடாமண்டலமண்டித:| பஸ்மோத்தூலித ஸர்வாங்கஸ் த்ரிபுண்ட்ராங்கிதமஸ்தக: || ருத்ராக்ஷமாலாபரணோ ருத்ரஜாப்யபராயண:|| என்ற காளிகாகண்டச்சுலோகத்தானும், விஷ்ணு சிவசின்னதாரணரென்பது வெளி. “சிவோ விஷ்ணுநா சைவ” எனவரும் சூதசங்கிதைச் சுலோகத்தானே திருமாலுக்கும் அவரது தேவியார்க்குஞ் சைவ தருமமும், விபூதி தாரணமுங் கூறப்பட்டமையானும், இன்னும் இராமாவதாரமெடுத்தகாலத்து “த்யாத்வா ரகுபதிம் க்ருத்தம் காலாநல மிவாபரம்-பீத க்ருஷ்ண ஜிநதரம் பஸ்மோத்தூளன விக்ரஹம்” என்னும் இராமாயண சுலோகத்தானும், “ஸ்வர்ண வர்ணஜடாபாரம் ஸாக்ஷாத் ருத்ர மிவாபரணம்-பஸ்மோத் தூளிதஸர்வாங்கம் த்ருஷ்டவா காமவசங்கதா” என்னும் அத்தியாத்மராமாயண சுலோகத்தானும், விபூதி தரித்திருந்தனர் என்பது வெளியாகலானும், “ கண்ணன் வெண் பூதிபூசிக் கண்டிகை மாலை சாத்திப்-புண்ணியத்திங்கள் வேணியரனிரு பாதம்போற்றி” எனக் கண்ண அவதாரத்திலுங்கண்டிகையு நீறுமணிந்தனர் என்று கூர்ம புராணங்கூறுவதனாலும், “சிவஸ்ய விஷ்ணோர் தேவாநாம்” எனவரும் பாராசரஸ்மிருதி சுலோகத்தானே விபூதியைத் திரிபுண்டரமாகத்தரிப்பின் கேசவ மூர்த்திக்கும் இலக்குமி தேவியார்க்குந் திருப்தியுண்டாகிறது எனத் தெரிதலானும், விட்டுணுவின் அவதாரமென்னும் தத்தாத்திரேயரும், விபூதி தரித்தார் என்று சாண்டில்லியோபநிஷத்தாற் றெரியப்படலானும், க்ருஷ்ணாஜிநோத்தரீயாம் ஸோத்யச் ச ருத்ராக்ஷமாலிகாம்| தண்டவாநுஜபிமோ வேதாந் த்ரிபுண்ட்ரகுண்டித: || என்ற பிரமாண்டபுராண சுலோகத்தானே வாமனமூர்த்தியும் விபூதி

உருத்திராக்கங்களை யணிந்தன ரென்பது அங்கைநெல்லிக் கனிபோலாயிற்று. ஏனையபிரமாண நியாயங்களானும், விஷ்ணுவும் அவர் அம்ச மூர்த்திகளுஞ் சிவசின்னதாரணரும், சிவசின்னதாரணப் பிரியருமாகலின், அவர்க்கும் அவரை வழிபடு மடியார்க்குஞ் சிவசின்னங்க ளுரியனவா மென்று தெளியப்பட்டது. மேலிதனை விரித்து நிறுத்துவாம்.

## பிரமரும் சிவசின்னதாரணரே.

நாராயணர்க்கு நாம முண்டெனில் அவருந்திக் கமலத்தினின்றும் பிறந்த பிரமதேவராகிய புத்திரரும் மண்புண்டரமுந் துழாய்மணியுந் தரித்திருப்ப ரன்றோ? அவ்வாறின்றி விபூதி ருத்திராக்கங்களை யணிந்துளார் என்று "ஸ்ரீபூதித்ரிபுண்ட்ர ருத்ராக்ஷ ஜடாமண்டல மண்டித: அக்ஷமாலார்ப்பிதகர: சுசுபேசப் பிதாமக:" (பூதித்ரிபுண்ட்ர ருத்திராக்ஷ ஜடாமண்டல மண்டித: அக்ஷமாலார்ப்பிதகர: சுசுபேசப் பிதாமக:) என்னுஞ் சுலோகத்தாற் கந்தபுராணம் உரைத்தலால் இனிது தெளியப்படும். தந்தை யெவ்வழி மகனுமவ்வழி" என்றபடி திருமால் விபூதி ருத்திராக்ஷதாரணரா யிருந்தமையாற்றான் பிரமராகிய புத்திரரும் அவற்றைத் தரித்தனர் என்க.

## திருமண்குறி இடையில் வந்ததென்பது.

திருமண் தாரணமாகிய ஊர்த்துவபுண்டரம், இடையில் உண்டாக்கப் பட்டதேயன்றித் தொன்று தொட்டு வந்ததன்று. இளையாழ்வார், உடையவர், பாடியக்காரர் என்று வைணவர்கள் புகழும் இராமாநுஜர் என்பவரால் இற்றைக்குச் சுமார் அகூரு வருடத்திற்கு (அதாவது கி-பி 1038வரு ஜனவரிமீ-க்குச் சரியான கலியுக சகாத்தம் ௪௧௩௦வருமான வெகுதானியவருஷம் தைமாதத்தின்)பின்னர்க்

தான் ஏற்படுத்தப் பட்டதென்று அறிக. சென்னைக்கண் நடந்த வைணவ சைவ சம்வாதத்தில் எம்மால் இது நன்கு காட்டப்பட்டபோது, வைணவர் ஒருவராவது அதனை மறுத்துரைத்தார் அல்லர். அன்றியும் "போலி வைணவர்க்குப் புத்திபுகட்டல்" என்ற பத்திரத்தும் இவ்வாறு வரைந்து விடுத்தேம். அதற்கும் இதுகாறும் பதில் எழுதினாரல்லர். அன்றியும் உடையவர் என்னும் இராமாநுஜாது குருவாகிய யாதவப்பிரகாசர் சிவசின்ன தாரணர் என்பது குருபரம்பரையாற் றெரியவரலானும், உடையவர் சகபாடியும் சகோதரருமாகிய பெரியபிராட்டி புத்திரர் கோவிந்தபட்டர் என்பவர், காசியிற் கங்கையாடும் போது ஓர் சிவலிங்கம் அவர்கையில் வந்ததென்றும், அதனால் அவர்க்கு உள்ளங்கைக்கொணர்ந்த நயினர் எனப் பெயர் வந்ததென்றும், அவரச்சிவலிங்கத்தை உடையவராசிரியர் ஆஞ்ஞைப்படி மழலைமங்கலம் என்னும் ஊரிற் பிரதிட்டை செய்தார் என்றும் வைணவரது குருபரம்பரையே கூறலானும், ஆழ்வார்களும் பிரபந்தத்தில் "வெந்தாரென்புஞ் சுடுநீறு மெய்யிற்பூசி" கூத்தன் பொடியாடி, நீற்ற ணிழன்மணி வண்ணத்தான்" என்பன முதலிய செய்யுள்களால் சிவபெருமானுக்கு விபூதி கூறியதன்றி மட்குறி சொல்லாமையானும், அவ்வாறே நாராயணர்க்கும் அவனடியார்க்கும் விபூதி ருத்திராக்க தாரணம் விதித்தமையானும், மண்புண்டரமாகிய நாமம் இடையிற்றோன்றிய தென்றறிக.

## விபூதி ருத்திராக்கத்தாற் கோளறுதல்.

விபூதி உருத்திராக்கங்களை யணிந்தவர் எவ்விடத்திற் போசனஞ் செய்கின்றாரோ அவ்விடத்திற் பார்வதி சமேதராகிய ப்ரமசிவனும் உண்கின்றனர். உடம்பு முழுதுஞ் சிவ

சின்னங்களை யணிந்தவரை யெவர் பின்செல்கின்றனரோ அவர்கள் மகாபாதகராயினும் பரிசுத்தராகின்றனர் எனச் சூதசங்கிதை கூறுகின்றது. காலை, உச்சி, மாலையென்னு முக் காலங்களிலுந் தரிக்கின்ற மெய்யன்பர் எக்குலத்தவராயினும் அவரைச் சிவபெருமான் என்றே பாவிக்கக்கடவர்; என மானவ சங்கிதையிற் சொல்லப்பட்டிருக்கின்றது. மெய்யன்புடன் மந்திரத்தாற் றரிப்பவரைச் சிவபெருமான் நீங்காது நிற்பர். அவற்றாற் சர்ப்பம், சூரியன் முதலிய கிரகங்கள், நட்சத்திரங்கள், திசைத்தெய்வம், யமன், காலன், யமதூதர், அக்கினி, கொடுநோய்கள், அவுணர், இடி, பூதங்கள், சிங்கம், புலி, கரடி முதலிய கொடிய வுயிர்களால் வருந்துன்பங்கள் அவரை யணுகமாட்டாவாம். அவர் இருவினைகளையும் வென்று சிவஞானம் பெற்று முத்தியடைவார் என்பது சத்தியம்! சத்தியம்!! முக்காலுஞ் சத்தியமேயாம்.

தணிகைப் புராணம்.

பகைபிணி மண்ணைபன் மந்தி ரத்திறை
மிகையறன் கடையுள வெருட்சி பித்திடர்
வகையெனைத் தையுமற மாற்றி யாவர்க்குந்
தகைநல மளிப்பது தவள நீறரோ.

## விபூதி ருத்திராக்க விரதம்.

நல்லியலமைந்த ஆசாரியரிடத்திற் சிவதீக்ஷை பெற்று விபூதி ருத்திராக்கங்களை யிடைவிடாது அணிவதே விபூதி ருத்திராக்க விரதமாகும். இது பாசுபத விரதம் எனவும், சிரோவிரதம் எனவும் பெயர் பெறும். பசுபதி வடிவாகிய விபூதி ருத்திராக்கங்களைத் தரிக்கும் விரதமாகலின் பாசுபத விரதம் எனவும், மேலாய சிவவிரதங்கள் எல்லாவற்றினும் உயர் வுடைத்தாய், அவற்றிற்குஞ் சாதனமாய் நிற்றலின்

சிரோ விரதம் எனவுஞ் சொல்லப்படும். இவ்விரதம் பாவம் நோய், பயம், துக்கவிருத்தி என்பவற்றை நீக்கும். இவ்விரதத்தைக் கொண்டவர் பாசுபதர், மாவிரதர் என்றழைக்கப்படுவர். இதனைக் கண்ணபிரான் அனுட்டித்துப் பெரும் பேறுற்றார் எனக் கூர்மபுராணம், வாயுசங்கிதை, சம்புபாரதம், காளிகண்டம் என்பவற்றிற் சொல்லப்பட்டிருக்கின்றது. எங்ஙனெனில:—

கண்ணமூர்த்தி ஆனவர் உருக்குமிணி, சத்தியபாமை காளி, மித்திரவிந்தை, சத்தியை, பத்திரை, சாம்பவதி இலக்கணை, நப்பின்னை என்னும் ஒன்பது பெண்களையும் பதினாறாயிரத்து ஒருநூறு இடைச்சிகளையும் மணந்து, சாம்பவதி தவிர மற்றையோர் யாவரிடத்தும் பலபுத்திரர்களைப் பெற்றனர். சாம்பவதி யென்பவள் தனக்குப் புத்திரரில்லாமையாற் பெரிதும் வருந்தியழ, கண்ணன் அவளைத் தேற்றி, உபமன்னிய முனிவரிடஞ் சென்று உபாயங்கேட்க, அவர் சிவதீக்கை செய்து பாசுபத விரதியாக்கித் தவஞ் செய்ய விதித்தனர். அங்ஙனஞ் செய்து சாம்பவதியிடத்தில் சாம்பவான் முதலிய பத்துக் குமாரர்கள் தோன்றப் பெற்று, சிவோகம் பாவனை யடைந்து, அருச்சுனற்குக் கீதை கூறி வைகுண்ட மடைந்தார் என்க. இன்னும் அளவில்லாதவர் இவ்விரதத்தைக் கைக்கொண்டு எண்ணிய வெண்ணியாங் கடைந்தார்.

## பஸ்ம ருத்திராக்ஷத்தாற் பாலாரிட்ட நிவிர்த்தி.

குழந்தைகள், பிறந்த பத்தாநாள் தொடங்கிப் பதினாறு வயது வரையும், ஒவ்வோர் தேவதைகளாற் பீடிக்கப் படுமென்று நூல்கள் கூறுகின்றன. அத்தேவதைகளாற் குழந்தைகட்குப் பலவகைத் துன்பங்களும் நோய்களும், விகா

ரங்களும் வருத லநுபவமே. அவற்றி னிமித்தம், காப்புக் கட்டலும், பஞ்சாயுத மணி தரிப்பதும் வழக்கம், அவை களாற் சிறந்த பயன் கிடையா. விபூதி ருத்திராக்கங்க ளைத் தரிப்பின், இடாகினி, சன்மினி, பேய், பூதம், பிரம ராக்கதம் என்பன வகலுமன்றி, பால அரிட்ட தேவதைக ளாகிய தந்தை, பீடணி, காளிகை, வீமரூபி, அங்குசினி, பூதினி, முத்தகேசி, ஆகாயினி, அரிகோரதினி, சகுனி, பூமாயி, உத்தமி, பிங்கலை, கோகர்ணி, பங்கயை, சீமுகி, சேனி, கும்பகர்ணி, தாபதை, காலார்க்கி, நந்தினி, குரோதனி, தாணுநி, சாகினி, பஞ்சாலை, காமினி, மேதினி, நளினி, மகாகும்பினி, அரனி, ஆகாசகர்ணி, வாயுவிசிக்கினி, சுகந்தினி, வனதேவி, குண்டலி யென்னும் அணங்குகளின் பீடைகள் யாவும் சூரியன் முற்பட்ட பனிபோல் ஒழியும் என்க.

## சிவசின்ன நிந்தனை யதிபாதகம்.

சிவசின்னங்கள் சிவமென்று துணியப்பட்டமையால் அவற்றை நிந்திப்பவர் சிவபெருமானை நிந்தித்தவராவர். பிரமகத்தி, சோகத்தி, சிசுகத்தி, ஸ்திரிகத்தி முதலிய மாபாதகங்களை யெல்லாம் போக்கவல்ல சிவசின்னங்களை நிந்திப்பவர்க்குப் பிராயச்சித்த மில்லை. எவருக்குச் சிவசின்னங்களில் நம்பிக்கை யுண்டாக வில்லையோ அவர்க்குக் கருப்பாதான முதலிய வைதிகக் கிரியைகள் இல்லை யென்று சாபால உபநிடத முறைக்கின்றது. எஞ்ஞான்றும் அவற்றைத் தரித்த பெரியோர்களை எந்தக் கீழ்மக்கள் நிந்திக்கின்றனரோ அவர்களை அரசன் ஆராய்ச்சி யின்றித் தண்டிக்கக் கடவன் என்று "பஸ்மச்சந்ந சர்வாங்கம்" எனவரூஉஞ் சுலோகத்தாற் பராசரஸ்மிருதி தெரிக்கின்றது. வேதத்தால் விதிக்கப்

பட்ட திருநீற்றையும் கண்டிலகையையும் பிராமணன் ஆயினும் அத்தியாச்சிரமி ஆயினும் அணியாது விடுவரேல் பதிதராவார் என்று கந்தபுராணம் உரைக்குமேல், அவற்றை நிந்திப்பார்க்கு உய்தி யென்னோ? எவனுக்குச் சிவசின்னங்களில் வெறுப்புண்டாகுமோ அவனது பிறப்பிற் சாங்கரிய முண்டு என்று பண்டிதர் ஊகிக்க வேண்டும் என்பது பராசரவாக்கியம். சிவசின்னங்களை யாவது அவற்றைத் தரித்தவரை யாவது நிந்திப்பவர் யாவரோ அவருடைய வமிசபரம்பரை சங்கீரணமாய்விடும் என்று "யோ ஸ்மதாரிணந் த்ருஷ்ட்வா" எனவரூஉஞ் சுலோகத்தால் வாசிட்டலிங்கபுராணம் உணர்த்திற்று. ஆதலாற் சிவசின்னங்களை நிந்திப்பவர் அதிபாதகராய், எரிவாய் நரகிற்கு இரையாகி, புழு, பன்றி முதலிய புன்பிறப்பு எடுத்தெடுத் துழல்வர் என்பது சத்தியமே.

## சிவசின்ன தூஷண காரணம்.

சில பாஞ்சராத்திரிகளும், பிறசமயிகளும், திருநீற்றைப் பிணச்சாம்பல் என்றும், மாட்டுச்சாம்பல் என்றும், உருத்திராக்கத்தை இலந்தைக் கொட்டை என்றும், அவை பிரமகத்தி முதலிய பாதகஞ் செய்தவர் அணிவது என்றும், கொடிய அசுரர் பொருட்டு விதிக்கப்பட்டன வென்றும், இன்னுஞ் சிலர் அவற்றை யணிவதால் யாதோர் பயனுமின்றென்றும் வாயில் வந்தவாறு நிந்திக்கின்றனர். நிந்திக்கும் அவர்கள் தத்தங் குறிகளும் அவ்வாறு பிறரால் நிந்திக்கப்படு மென்பதனை யறியாமை யென்னோ? பிருந்தை யிறந்தெரிந்த பிணச்சாம்பலிற் புரண்ட நாராயணனைத் தெய்வமாக்கொண்ட விவர்க்குப் பிணச்சாம்பல் அருவருப்பாயது கலிகால விந்தையே. சிவசின்னங்கள் பிரமகத்தி முதலிய

பாதகங்களை நீக்குமேல், மற்றைய பாவங்களையும் நீக்குமென்பது வெள்ளிடைமலையே. பாவநிவாரண மெனவே ஞானமும், அதனால் முத்தியும் சித்தித்தலினாலும், உலகத்துள்ளார் யாவரும் பாவமுள்ளாராகலானும், யாவரும் அணியவேண்டுமென்பது அவரது வாய்ச்சொல்லானே போதரும். கண்மணி கொட்டையெனில் துழாய்மணியும் ஓர்கொட்டையென்றன்றோ முடியும். விட்டுணு விக்கிரகங்களும் கல், மண் என்றன்றோ கூறித் தமக்குத் தாமே குற்றம் ஏற்றுகின்றனராவர். இவ்வாறு நிந்தித்தல் அன்றி அவைதிகமாய மண், சாந்து, குங்குமம், மஞ்சள் முதலிய குறிகளை யிடுவது முற்செய்த தீவினைகளாலே யாம். திருநந்திதேவர், ததீசிமுனிவர், கௌதம விருடியனார், பிருகு முனிவர், கண்ணுவ மாதவர், வாமதேவ தாபதர், அகத்தியனார் முதலிய பெரியோரா லடைந்த சாபமே இப்பாதகங்கட்கு ஏதுவாக்கியது. அதனை "விப்ராணாம்ஹாக்ஷிணாத்யாநாம் ஸாவொவஹதவெதஸாம் ; ஸிவெஹஷு நிரஜேெகஷுஸூஜா கிம்ஷி நஜாயதெ ॥" என்ற பவிடிய புராணச்சுலோகத்தானும் பிறவாற்றானுந் தெளிக.

## சைவபூஷண மந்திரவகைகள்.

சிவபூஷணங்களாகிய விபூதி ருத்திராக்கங்களை யணிவோர் மேற்காட்டப்படும் மந்திரங்களைக் குருமுகமாக அறிந்து தரிக்க வேண்டும். அவையாவன :—சுத்தப் பிராசாதம், மூலப்பிராசாதம், தத்துவப் பிராசாதம், ஆதிப்பிராசாதம், ஆன்மப்பிராசாதம் என்னும ஐவகைச் சிருட்டிரூப சிவமந்திரங்களும், மோக்கதம், அபிவிர்த்தி, காமியம், சாந்திகம், பௌட்டிகம் என்னும் ஐவகைத் திதிரூப சதாசிவ மந்திரங்களும், மூவகைச் சங்காரரூப மகேசுர மந்திரங்களும், சாகல்

லியப் பிரணவம், சௌக்கியப் பிரணவம், சாம்பவப் பிரணவம், சருவவசிப் பிரணவம், சாயுச்சியப் பிரணவம் என்னும் ஐவகைப் பிரணவ மந்திரங்களும், மூல பஞ்சாக்கரம், தூல பஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம், காரண பஞ்சாக்கரம், மிசிர பஞ்சாக்கரம், தார பஞ்சாககரம், முத்தி பஞ்சாக்கரம், மாயாக்கிய பஞ்சாக்கரம், பிராசாத பஞ்சாக்கரம், நின்மல சாக்கிர பஞ்சாக்கரம், நின்மல சொப்பன பஞ்சாக்கரம், நின்மல சுழுத்தி பஞ்சாக்கரம், நின்மல துரிய பஞ்சாக்கரம், நின்மல துரியாதீத பஞ்சாக்கரம் என்னும் பதினுன்குவகைப் பஞ்சாக்கர மந்திரங்களும், சடக்கரம், அட்டாக்கரம், நவாக்கரி, தசாக்ஷரி, பஞ்ச தசாக்கரம் என்னுந் தேவமூல மந்திரங்களும், சிவாஸ்திரம், க்ஷுரிகாஸ்திரம், பாசுபதாஸ்திரம், வியோமாஸ்திரம், அகோராஸ்திரம், என்னும் ஐவகை அத்திர மந்திரங்களும், ஈசானுதி பஞ்சப்பிரம மந்திரங்களும், காயத்திரி, மிர்த்யுஞ்சயம், தக்கிணுமூர்த்தி மந்திரம், சரப - விக்கினேசுர - வைரவ-வீரபத்திர-சுபபிரமணிய - வித்தியேசுர - துவாரபாலக - பிரம - விட்டுணு - சூரிய - தேவாதி மந்திரங்களும், துர்க்கை, இலக்குமி, சரசுவதி, புவனேசுவரி, அசுவாரூடி, திரிபுராம்பிகை முதலிய மகாசத்தி மந்திரங்களும், சித்தசாவரர், சத்திசாவரர், மேருதந்திரர், சாகினி தந்திரர், இடாகினி தந்திரர், கூர்மாண்டர், சல்லியர் முதலாய சித்த மந்திரங்களும், ஏனைய கிரியா மந்திரங்களும் ஆம். இவை உபதேசக் கிரமமாக அறியவேண்டும் அருமைபற்றி விரிக்காது விட்டாம்.

## *மந்திரப் பிரயோகம்.

மேற்கூறப்பட்ட மந்திரங்களை யறிந்து அவற்றுடன், காலம், தேசம், காரியம் என்பவற்றிற் கேற்ற மந்திரங் கொ

ண்டும், அவ்வம் மந்திரங்களின் வாசகம், வாச்சியம், பாவகம், இலக்கியம், இலக்கணம், தியானம், நிறம், சந்தசு, அதிதேவதை, நியாசம், பீசம், வியாகிருதி, எண் என்பவற்றையறிந்தும், ஆறங்க மந்திரங்களின் கிரமத்திற் கேற்ப நமஸ், ஷட், ஹர, வஷட், ஹூம், வௌஷடு, பட் என்னும் ஆறுபல்லவங்களை யொட்டியும், பஞ்ச அங்க மந்திரங்களுக்கே நேத்திர பல்லவம் விட்டும், அங்கமிலா மந்திரங்களுக்கு அங்கம் கற்பித்தும், இருதய பல்லவம், சிரபல்லவம், சிகாபல்லவம், கவச பல்லவம், நேத்திர பல்லவம், அத்திர பல்லவம் என்பவற்றை யெவ்வெக் காரியங்களுக்கு எங்ஙன முச்சரிக்க வேண்டுமோ அங்ஙனஞ் சேர்த்தும், மானசிகம், வாசிகம், உபாஞ்சு என்னுங் கிரமம் அறிந்தும் பிரயோகிக்க வேண்டும்.

## மந்திர சமஸ்கார விதி.

இவ்விதி வாதுளாகமம், சாரதா திலகம், மந்திர தேவதாப் பிரகாசிகை, பிரபஞ்ச மந்திரசாரம், மந்திர சகசிரோத்தம் என்னு நூல்களிலும, அதர்வண வேதத்தும், தனுர் வேதம் ஆகிய உபவேதத்தும், சந்தசு என்னும் வேதாங்கத்தும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அது ஜெனம், சீவனம், புடேவதானம், போதனம், அபிடேகம், விமலீகரணம், ஆப்பியாயனம், தர்ப்பணம், தீபனம், குத்தம் எனப் பத்துவகைப்படும். இவற்றை வடநூலார் தச சமஸ்காரம் என்பர். இவையிற்றை விரிப்பிற் பெருகும். ஆசவின் விடுத்தாம்.

## விபூதி விசேட மந்திரம்.

முன்னர்க் கூறப்பட்ட மந்திரங்களுரிய வாயினும், அவற்றுள் வேதாகம உபநிடத மிருதி புராணங்களில் விதந்து சொல்லப்பட்ட மந்திரங்கள் ஐந்து வகையுள. அவ்வை பஞ்

சப்பிரமம், திரியம்பகம், திரியாயுஷம்மாநஸ்தோகம், அக்நிரிரிதி என்பனவாம். பஞ்சப் பிரமத்தைப் பஸ்மசாபால உபநிடதமும், திரியம்பக முதலியனவற்றைச் சித்தம் காரணம் முதலிய சிவாகமங்களும், திரியாயுஷாதி மந்திரங்களைச் சாங்கியாயன சூகியம், மாத்யந்தின சூகியம், பிருகச்சாபால உபநிடதம் என்பவும் மாநஸ்தோகேஎன்னு மந்திரத்தைச் சுவேதாச்சுவதர உபநிடதமும் விசேடித்தன வென்று கூறுகின்றன. அவற்றினும் அக்நிரிதி என்பது முதலாயசத்தமந்திரங்களே விசிட்டமென்று சாபால உபநிடதமும் [illegible] என்று அதர்வசிரோபநிடதமும், [illegible] என மற்சபுராணமும், அவ்வாறே சூதசங்கிதையும் முழங்குகின்றன.

## திருநீறே நல்வழி.

நல்வழி கூறவந்த தெய்வப்புலமை ஒளவைப்பிராட்டியாரும் "நீறிலா நெற்றிபாழ்" என்றார். அன்றி மண்ணில்லா நெற்றிபாழ் என்றாவது, சந்தன மில்லாத நெற்றிபாழ் என்றாவது அருளினாரலலர். அதனால் அவை அவைதிக மென்றாவது, சிறந்த பயனுடையன அல்ல வென்றாவது, அக்காலத்து நவீன மண்புண்டரம் இல்லை யென்றாவது கொள்ளற் பாற்று. திருநீறு நல்வழியிற் சேர்ந்தமையா லன்றோ கூறினர். "திருவெண்ணீ றணியாத திருவிலூரும் - அவை யெல்லா மூரல்ல வடவிகாடே" என்றார் தமிழ்வேதத்தாரும். திருநீறணியாத நெற்றியைக் கொளுத்துக; சிவாலய மில்லாத கிராமத்தைச் சுடுக. என்று [illegible] எனவருஉஞ் சுலோகத்தாற் கூர்மபுராணந் தெரித்ததுங் காண்க. இதனானும் திருநீறே நல்வழி யென்பது தெளியப்பட்டது.

## விபூதி ஸ்நானம்.

விபூதிஸ்நானம் ஆக்கினேயஸ்நானம் எனவுஞ் சொல்லப்படும். "ஆக்கினேயம் பஸ்மஸ்நானம்" என்று வேதமுழங்குகின்றது. ஆக்கினேய ஸ்நானம் என்றால், அக்கினிசம்பந்தமான நீற்றிற் குளித்தல் என்பது பொருள். முக்கியமா நீரின் மூழ்குதற்கு வாய்க்காதகாலத்தும், நீரினுலுமொழியாக் குற்றநேர்ந்தகாலத்தும் இந்த ஸ்நானங்கொள்ளப்படும். இந்த ஸ்நானம் கங்கை முதலாய புண்ணிய நதிகளிற்றோய்வதைப் பார்க்கினும் கோடிமடங்கு பலம் அதிகம் என்றுணர்க. அது "பஸ்மஸ்நாநம் ஜலஸ்நாநாத் கோடி புண்ய குணம் பவேத்" என்ற காமிகாகமசுலோகத்தாலுணர்ந்தாம். விபூதி ஸ்நானஞ் செய்வோன் உடம்பினைச் சுத்தி செய்து "உத்திஷ்டந்து பூதபிசாச்சா ஏதேஷாம விரோதே நப்ரம்மகம்ம சர்மாரபே" என்று நீரினை யெடுத்து நிலத்திற் புரோக்ஷித்துப் பூமி சுத்தஞ் செய்து, வடக்கு முகமாகப் பதுமாசனத்தி லுட்கார்ந்து, மும்முறை ஆசமன பிராணயாமங்கள் இயற்றிச் சங்கற்பித்து, குரங்க முத்திரையினால் நீற்றைப் பஞ்சப்பிரம மந்திரஞ் சொல்லி யெடுத்து வலகையினுன் மூடி, வலத்தொடைமீது வைத்து "அக்நிரிதி" முதலான ஏழு மந்திரங்களையும் எழுதர முச்சரித்து, "மாநஸ்தோகதே," என்ற மந்திரத்தாற் சர்வாங்கமும் புரோக்ஷிக்கக் கடவன். அதன் பின்னர்,

"பிராணயாம பூர்வோக்த சிவப்பிரீதி யர்த்தம் (காலை உச்சி-மாலை) சந்தியா சந்தியாங்கம் யதாசக்தி காயத்ரீ செபம் கர்ஷயே" என்று சங்கற்பஞ் செய்துகொண்டு "ஓம் பூர்புவ: சுவ: தத்ஸவி துர்வரேண்யம் பர்க்கோ தேவஸ்யதீமஹி தியோயோந ப்ரசோதயாத்" என்ற காயத்

திரி மந்திரம் இயன்றவரை செபித்து, விபூதிக்குள் மூழ்கின தாகப் பாவித்துப் பஞ்சாக்கரத்துள் பதி, அருள், ஆன்மா என்னும் மூன்றெழுத்துச் சேர்ந்த மந்திரத்தைச் செபிப்ப தேயாம். அது “[illegible] ॥ என்றற் ஸ்றொடக்கத்தவாகப் **பிருகச்சாபால உப நிடதத்தில்** ஆறுவது பிராம்மணத்துக் கூறப்பட்டிருக்கின் றது.

விபூதி தரிக்குங் காலங்களில் ஓதவேண்டிய **திருநீற்றுப் பதிகத்தைக்** காட்டுதும். அஃது திருவருண்ஞானச் செல்வராய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாராற் கூன்பாண்டிய னுடைய வெப்பு நோயைத் தீர்த்தற்காகவும், எம்மனோரது பிறவித் துன்பங்களை வேரறக் களைதற்காகவும் ஓதியருளப் பட்டது. ஆரிய வேதத்திற் பஸ்மசாபால உபநிடதம் போலத் தமிழ்வேதமாகிய தேவாரத்தும் இது பெருமை வாய்ந்தது. ஆதலால் தரிக்குங் காலத்து ஒவ்வொருவரும் அதனை மெய்யன்புடன் ஓதக்கடவர்.

# திருநீற்றுப் பதிகம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்றிரு வாலவாயான்றிருநீறே. (க)
வேதத்திலுள்ளதுநீறு வெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறு புன்மைதவிர்ப்பதுநீறு

(க) மந்திரம்—மந - நினைப்பவனை, திர - காப்பது. நீறு - பாவங்களை யெல்லாம் நீறாக்குவது. தந்திரம - சிவாகமம். செந்துவர் - செந்நிறமுடையபவளம்

வோதத்தகுவதுநீறு வுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்ததிரு வாலவாயான்றிருநீறே. (௨)

முத்திதருவதுநீறு முனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறு தக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறு பரவவினியதுநீறு
சித்திதருவதுநீறுதிரு வாலவாயான்றிருநீறே. (௩)

காணவினியதுநீறு கவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம் பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறு மதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறுதிரு வாலவாயான்றிருநீறே. (௪)

பூசவினியதுநீறு புண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறு பெருந்தவத்தோர்களுக்கெல்லா
மாசைகெடுப்பதுநீறு வந்தமதாவதுநீறு
தேசம்புகழ்வதுநீறுதிரு வாலவாயான்றிருநீறே. (௫)

அருத்தமதாவதுநீறு வவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறு வானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறு புண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்ததிரு வாலவாயான்றிருநீறே. (௬)

எயிலதுவட்டதுநீறு விருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறு பாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறு சுத்தமதாவதுநீறு
வயிலைப்பொலிதருசூலத் தாலவாயான்றிருநீறே (௭)

இராவணன்மேலதுநீறு வெண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறு பாவமறுப்பதுநீறு

(உ) போதம்-ஞானதெளிவு. (ங) சித்தி-அணிமா முதலிய அட்டமாசித்திகள். அன்றிச் சாத்துவிககுண சித்தி முதலியவும், யோகசித்திகளுமாம். (*) அருத்தம் - மெய்ப்பொருள். (எ) எயிலது—எயில் - மும்மதில். அது - பகுதிப் பொருள் விகுதி. அட்டது-அழித்தது. அயில் - கூர்மை. (அ) இராவணன் - அழுதலைச் செய்தவன்; இலங்கையரசன். பரா-பரையின், வணம்-வடிவம்.

தராவணமாவதுநீறு தத்துவமாவதுநீறு
வராவணங்குந்திருமேனி யாலவாயான்றிருநீறே. (அ)

மாலொடயனறியாத வண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கண் மெய்யதுவெண்பொடிநீறு
வேலவுடம்பிடர்தீர்க்கு மின்பந்தருவதுநீறு
வாலமதுண்டமிடற்றெம் மாலவாயான்றிருநீறே. (௯)

குண்டிகைக்கையர்களோடு சாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பதுநீறு கருதவினியதுநீறு
வெண்டிசைப்பட்டபொருளா ரேத்துந்தகையதுநீறு
வண்டத்தவர்பணிந்தேத்து மாலவாயான்றிருநீறே. (௧0)

ஆற்றலடல்விடையேறு மால்வாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும் பூசுரன்ஞானசம்பந்தன்
றேற்றித்தென்னனுடலுற்ற தீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும் வல்லவர்நல்லவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## விபூதி யுபநிடதம்.

விபூதியின் மகிமைகளை யெல்லாம் எடுத்துரைப்பது விபூதியுபநிடதமாம். இது பஸ்மசாபால உபநிடதம் என்று அழைக்கப்படும். இவ்வுபநிடதம் நூற்றெட்டு உபநிடதங்களுள் எண்பத்தேழாவது உபநிடதம். நான்காம் வேதமாகிய அதர்வண வேத பாகமாயுள்ளது. இதனை யோகதுண்டலீ யுபநிடதத்திற்கு முன்னர் வைத்து, முத்திகோபநிடதம் பிரதிபாதித்தமையால் யோகிகளாலும் தள்ளத் தகாதது திருநீறென்பது பெறப்படும். விபூதியின் பெருமைகளைமுன்னர்க்கூறிய உபநிடதங்களுரைத்தாலும் இது அவைபோலின்றிச் சிறப்பாக எடுத்துப் பேசும். இது புசுண்டமகாரிஷியா

(௧0) குண்டிகைக்கையர் - சமணர். சாக்கியர் - புத்தர். கண் திகைப்பிப்பது என்க. (௧௧) அடல் - வெற்றி. புகலி - சீகாழி. தென்னன் - கூன்பாண்டியன்.

னவர், வேருெரு சமயமின்றிக் காரணென்றே கொள்ள, முத்தியைக்கொடுக்கும்பொருளெதுவென்று வினவ, "கைலாச சிகராவாசமோங்கார ஸ்வரூபிணம் மஹாதேவம்" என்று சிறப்பிக்கப்பட்டு இரணிய நிறமுடைய காலாக்கினி ருத்திரராலே விபூதியே அவ்வாருகிய முத்தியை யளிப்பதொன்று. வேருேர் சாதனமும் அத்தன்மையதன்று; என்று அதன் மகிமைகளையும் விதிகளையும் மந்திரங்களையும் பலன்களையும் எடுத்தோதின விடயங்களைச் சொல்வது. "அத்வைதம் சதுர்த்தம் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ராதீத மேகமாசாக்யம் பகவந்தம் சிவம்" என்று சிவபெருமானே அத்வைதமாகிப் பிரம விட்டுணு ருத்திரர்களுக்கு மெட்டப்படாத பகவராய், ஏகராய், நான்காவது பொருளாயிருப்பவரொன்றும் எடுத்து முழங்கும், ஏனைய சித்திர புண்டாங்களை யாவது ஊர்த்துவ புண்டரங்களை யாவது எடுத்து விதந்திலது. இதுவன்றி எழுபத்தேழாவது உபநிடதமாகிய பாசுபதப்பிரமோபநிடதமும் ஆங்காங்கு இவ்விபூதி மகிமையைக் கூறு நிற்கும்.

## விபூதியுட்கொள்ளும் மருந்துமே.

விபூதி மேனிமே லணியப்படு மொருபொருளாக இருக்கின்றதன்றி, மருந்தாகவும் உட்கொள்ளும் மேன்மையுடைத்து. அதனை யுட்கொள்ளின் தேக அசுத்தங்களைப் போக்கி, எழுபத்திராயிரம் நாடிகளுக்கும் வலிமையை உண்டாக்கும். வாதத்தா லுண்டாகும் எண்பத்தொரு வியாதிகளையும், பித்தத்தா லுண்டாகும் அறுபத்துநான்கு வியாதிகளையும், கபத்தா லுண்டாகும் இருநூற்றுப் பதினைந்து வியாதிகளையும் நீக்குமென்பது அநுபவத்தி லுள்ளதேயாம். இது பற்றியே உபவேதத்து ளொன்ருய், எல்லாவற்றையும்

அநுட்டித்தற்குச் சாதனமாகிய உடம்பை நிலைபெறச்செய்தற்கு வேண்டப்படு மவைகளைக் கூறுகின்ற ஆயுள்வேதமும் திருநீற்றைப் பூசும் மருந்தாகவும், புசிக்கும் மருந்தாகவும் வியந்து கூறிற்று. மண்ணையாவது கோபி சந்தனத்தையாவது கூறவில்லை. அகாரியர் முதலிய பிறசமயிகளும் நீராடியவுடன் சிலர் இதனையும், வேறு சிலர் இதுபோன்ற ஓர் மாவினையும் இட்டுவருதல் பிரத்தியக்ஷமே. பிணச்சாம்பல் என்று தூஷிக்குங் குரூர வைணவர் தாமும், வைசூரி, விடபேதி காலங்களில், வேப்பிலையுடன் விபூதியையும் வைத்து ஆதரித்து வருகின்றமை யாவரு மறிந்த விடயமே. இங்ஙனமே.

தயாவஸ்மாரகுஷ்டாத்யாநஶ்யந்திவ்யாதய꞉க்ஷணாத் ।

(ததாபஸ்மாரகுஷ்டாத்யாநச்யந்திவ்யாதய: க்ஷணாத்) என்றதனாலே, திருநீற்றினால் அபஸ்மாரம், குஷ்ட முதலிய நோய்கள் யாவும் ஒருகண காலத்துள் நீங்கும் என்று கந்தபுராணம் உரைக்கின்றது. "பஜநாத் சர்வபாபக்நம் ஸ்மரணச்ச சிவசங்கரம்" என்ற சங்காசங்கிதைச் சுலோகத்தானே விபூதியை யுண்ணுவதனால் எல்லாப் பாவங்களும் தொலையும் என்று அறியக் கிடக்கின்றது. இதனாலன்றோ திராவிடவேதமும் "வருத்தந் தணிப்பது நீறு, ஏலவுடம்பிடர்தீர்க்கு மின்பந்தருவதுநீறு, கவினைத் தருவது நீறு, மதியைத் தருவது நீறு" என்று முழங்காநிற்கும்.

அன்றியும் ஆயுள்வேதமும், தன்வந்திரி நூலும், சித்தர் நூல்களும் வியாதிகட்குப் பரிகாரமாக "மணிமந்திர ஔடதம்" என மூன்று கூறின. இம்மூன்றனையும் எவ்வித நோயாளியாவது கொள்வானாயின், அவனுக்கு அந்நோய் நீங்கும் என்பது சத்தியம் என்று ஆணைகூறினர் பெரியோர்

அவை யென்னவென்று ஆராயுங் காலத்து, மணி என்பது பொருள் எனவும் இரசமணி எனவும், மந்திரம் என்பது சுளுக்குமந்திரம், விட நிவாரணஞ் செய்யுங் கருடமந்திரம் முதலியன எனவும், ஔடதம் என்பது கலிகம், கியாழம், குளிகை, பற்பம், சிந்தூரம், சூரணம், இலேகியம், தைலம் முதலாயின வெனவுங் கூறுகிற்பர். இம்மூன்றும் ஒருவாறு பரிகாரமாகச் சொல்லப்படினும், அவையெல்லாம் துன்பத்திற்குக் காரணமாய தீவினைக்கு மூலமான ஆணவம் அறுவிடத்துப் பயன்படா வாகலின் அதனையும், பிறவிப்பிணியையும், தேகப்பிணியையும் ஒருங்கே யறுப்பன மூன்றேயதனாற் கூறப்பட்டபொருளாம். எங்ஙன் எனில், மணி என்பது உருத்திராக்க மணியாம். மந்திர மென்பது திருவைந்தெழுத்தாம். ஔடதம் என்பது விபூதியேயாம். இவைகளே பிணிகளை வேரோடு களைவனவாம். மருந்து ஆவன-பலபிணிகட்கும் ஏற்றனவாயும், சுவை வீரியம் விளைவாற்றல்களான் மேம்பட்டனவாயும், எளிதி னெய்தப் படுவனவாயும், பகுதியோடு பொருந்துத லுடையனவாயும், விளங்கும் நால்வகைத் திறத்தன. இவ்விலக்கணம் நிரம்பப் பெற்ற மருந்து, முற் சொல்லப்பட்ட கலிக முதலாயின வாகா. அவ்விலக்கண முடைய மருந்து எதுவெனத் தீர்மானிக்கின், சொல்லப்பட்ட தன்மைகளை யுடைய விபூதியேயாம். இவ்விபூதியை மெய்யன்புடன் உட்கொண்டக்கால் சர்வ பிணிகளும் நீங்கு மென்பதற்கு ஐயமின்று. மேற்கூறிய மூன்றுங் கொண்டே நாயன்மார்கள் பிறவிப்பிணி முதலிய எல்லாவற்றையும் நீக்கிச் சிவசாயுச்சியத்தை யடைந்தனர்.

**காஞ்சிப் புராணம்.**

பேயன்னபுறச்சமயப் பிணக்குநூல்வழியனைத்தும்
பிழையே யன்றி
வாயன்மைதெளிந்துசைவ சித்தாந்தவழிதேறி
யதீத வாழ்விற்

*போயண்மியஞ்செழுத்துந் திருநீறுங்கண்டிகையும்*
*பொருளாக்கொண்ட*
*நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும் பெருவாழ்வு*
*நான்பெற்றேனல்.*

இதனாலும் விபூதி முதலிய மூன்றுமே பொருளாகக் கொண்டாரென்பது தெற்றெனவிளங்குகின்றது. இன்னன நியாயங்களான் விபூதி தரிக்கத்தக்க மருந்தாவதன்றி யுட்கொள்ளற்கு முரியபெரிய அருமருந் தென்பது சித்தாந்த மாயிற்று. மற்றைய திருமண்ணாவது கோபிசந்தனமாவது அங்ஙனமே இரண்டற்குஞ் சிறப்பாகாமை யறிக.

## விட்டுணு விபூதியுண்டது.

ஸ்ரீமந்நாராயண மூர்த்தியானவர் விபூதி ருத்திராக்கங்களைத் தமது திருமேனியில் அணிந்தனர் என்று வித்தைகள் கூறுமன்றி, திருநீற்றை மாசு நீங்கும் பொருட்டு உண்டனர் என்றும் வேதம் முழங்காநிற்கின்றது. கௌதமர்க்கும் அகலிகைக்கும் நடந்த விவாகத்திலே போயிருந்த முனிவர் தேவர் யாவரும் அகலிகையின் அழகினாலே மோகமீறித் தாது கலிதப்பட்டனர். அவ்வாறு சிதரர்க்கு மாயது. அதனால் மனத்துக்கமுற்று, அந்தப் பாவத்திற்குப் பிராயச்சித்தமெதுவென்று கேட்ப, தத்தாத்திரேயர், துருவாசர் முதலிய இருடியர் திருநீறே அதனையும், அதுபோன்றபாவங்களையும் மாற்றுவது என்றுகூற, அவ்வாறே மற்றையோரும் நாராயண மூர்த்தியும் விபூதியைத் தாரணஞ் செய்ததன்றி மருந்து போல உண்டனர் என்றும் இருபத்தாறுவது உபநிடதமாகிய பிருகச்சாபால உபநிடத முரைக்கின்றது. அதனை

ஸ்ரீமௌதமவிவாஹகாலெதாமஹைஷ்ர ॥ என்று தொடங்கிச் செல்லும் அவ் உபநிடதத்து ஆறவது பிராஷ்மண சுருதி வசனங்களால் உணர்க.

## விபூதி யிலக்கணம்.

விபூதியாவது சிவாக்கினியினாலாவது யாக அக்கினிகளாலாவது நல்லிலக்கண முடைய பசுவின் சாணத்தைக் கொள்ள வேண்டிய முறைப்படி கொண்டு, மந்திரங்களாலுருட்டி தகிப்பித்த திருநீறும்.

## சிவாக்கினி விபூதி.

அஃதாவது சிவமாகிய அக்கினியினின்றும் பூத்த திருநீறும். இதனையே குருபற்பம், மகாபற்பம் என்பர். "ஆதி பசவன் ஞானவடி வழலிற் பூத்து நித்தியமாய்" என்றார் திருப்போரூர்ப் பிள்ளைத்தமிழாதும். "நீறுபூத்த நெருப்பு" என்ற வழக்கு முணர்க. சிவபெருமான் அக்கினி வடிவரும், அக்கினிக் கண்ணரும், அக்கினிதாரணரும், அக்கினி பூதேசரும் ஆகலின் அக்கினியென வேதங்கள் முழங்கும். அதனாற்றான் புதுச் சந்நிதிக் கோயிற்கணெழுந்தருளு நங்குல தெய்வச் சிரோமணியாம் முருகவேளையும் அக்கினிபூ என்று நூல்கள் கூவா நிற்கும். சிவாக்கினி மூர்த்தி யானவர் ஆகவனீய முதலிய மூன்றக்கினிக்குங் காரணராகி, தூம்பிரம், அர்ச்சிடம், ஊடம், மச்சுவலினி, சுவாலினி, விஸ்புலிங்கினி, சுசரிச்சுவரூபம், கபிலம், அவ்வியம், கௌவியம், வகா என்னும் பத்துவகைக் கால அக்கினி மண்டல நடுவில் இருக்கின்றவராய், இருதலை, சிருங்கம், கபர்த்தம், சந்திரகலை, முக்கண், உபவீதம், திரிமேகலை, மூன்று பாதம், என்பவற்றுடன், சுவாகா சத்தி, சத்தியக்கினி, சுருக்கு, சுருவை என்பன தரித்த வலக்கரங்கள் நான்கும், தோமரம், தாலவிருத்தம் (விசிறி) நெய்ப்பாத்திரம் தரித்த இடக்கரங்கள் மூன்றும், இரத்த நிறமும், இரத்த வத்திரமுமுடைய, இரத்த கந்தாதிகளால் அலங்கரிக்கப் பட்ட அக்கினி மூர்த்தியாம்.

இவ்வக்கினியி னின்றுந் தோன்றிய திருநீறே எல்லாவற்றினும் விசேடித்ததென்ப. அதுவே சிவாக்கினி விபூதியாகும்.

## விபூதி வரலாறு.

திருவருளுருவாகிய உமாதேவியார் தமக்குப் பத்தினியாகத் தோன்ற, ஆணவ மலத்தை நீக்கி யருளும் வேதியராகிய சிவபெருமான் பிரளய வெள்ளமே நீராகவும், அளவில்லாத அண்டங்களே மண்டபங்களாகவும், சமுத்திரத்தாற் சூழப்பட்ட பூவுலகமே வேதிகையாகவும், அரி, பிரமன், இந்திரன்முதலிய தேவர்கள் யாவரும் அவியாகவும், ஏனைய உயிர்களே பசுக்களாகவுங் கொண்டருளித் தமது நெற்றியாகிய குண்டக்கணுள்ள அக்கினிக் கண்ணினின்றும் அக்கினியை மூட்டி யாகஞ் செய்தருளினர். அந்த யாகத்தினின்றுந் தோன்றிய வெண்டிருநீற்றை அகங்கார மமகாரமாகிய அகப்புறப் பற்றுக்களழியுமாறு விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை யான்மாக்களுஞ் சரீரத்திற் றரிக்கும்படி அமைத்தனர் என நூல்கள் கூறுநிற்கும்.

### தணிகைப் புராணம்.

பூதியா முறைமையும் புகலக் கேட்டியாற்
கோதிலா மனுமுறைக் கொற்ற வேந்தனே
பாதியாள் சத்திபத் தினியின் வைகுற
வேதிலா னவந்தபு மிணையில் வேதியன்.

ஊழியே பாணிக ளுலப்பி லண்டமே
கேழிலா மண்டபங் கேழ்த்த வேதிகை
யாழிசூழ் புவியவி யரிமெய் யாதியா
வாழிமா மெய்ம்மைவண் பசுக்க ளாவியா.

நெற்றியங் குண்டத்து நெடித டங்கிய
பொற்றநீள் விழியெரி புணர்த்து வேள்விசெய்
தற்றமில் வேள்வியி ல்விர்வெண் பூதியைப்
பற்றற வுயிர்க்கெலாம் படிவத் தாக்கினான்.

## விபூதி வகை.

விபூதி பற்பம், மகாபற்பம் எனஇருவகைப்படும். அவற்றுள் மகாபற்ப மென்பது அத்துவித ஞானத்தைக் கொடுத்துச் சிவசாயுச்சிய முத்தியைக் கொடுத்தலால் அஃது சிவபெருமானேயாம். அந்த மகாபற்பம் விளங்கப் பெற்றவருஞ் சிவபெருமானேயாவர். அதன் வரலாற்றைச் சிவாக்கினி விபூதி என்றதிற் காண்க. மற்றைய பற்பம் என்பது திருநீறாகும். அது சிரௌதம், சமார்த்தம், இலௌகிகம் என மூன்று பகுப்பினை யுடைத்து. இவற்றுள் முன்னைய விரண்டும் பிராமணர்க்கும், பின்னையது மற்றையோர்க்கும் ஆகும் என நூல்கள் கூறும். சிரௌதமாவது - வைதிகமா யுள்ளது. சமார்த்தம் ஆவது - மிருதி சம்பந்தமா யுள்ளது. இலௌகிகம் ஆவது - உலக சம்பந்தமா யுள்ளது.

**சூதசங்கிதை - எக்கியவைபவ காண்டம்.**

*முழுஞான மினிதளித்து மகாபாவ முருக்குதலான்*
*மழுமானங் கைப்பரனே மகாபற்ப மெனப்படுவான்.*
*தரிசறுநன் மகாபற்ப சொரூபம்விளங் குறப்பெற்றோ*
*னரியசிவ னெனயாரு மறைவர்மறை முதலான*
*பெரியநூ லோதுபயன் பிறங்குறும காபற்ப*
*முரியதிரு ஞானமடை குதலாகு முனாவுடையீர்.*

*சீர்மருவு பற்பந்தான் சிரௌதமே சமார்த்தமே-யோர்மருவி லவுகிகமே யெனமூன்று வகையிவற்றுட், பார்மருவு முன்னிரண்டும் பார்ப்பார்க்கும் பின்னொன்று, பேர்மருவு மறையர்க்கு மாகுமெனப் பேசுவரால்.*

இவையன்றி வைதிக விபூதி, சைவவிபூதி எனத் திருநீறு இருவகைப்படும். அவற்றுள் வைதிக விபூதியாவது வேதவிதிப்படி செய்யப்பட்ட யாகங்களிற் பொடிபட்டநீறாகும். அது புராதனி, சத்திபோசாதை என இருவகைப்

படும். அவற்றுள் புராதனியாவது பிரமதேவாது ஓமகுண்டத்தில் விளைந்தது. சத்தியோசாதையாவது வேதியர்கள் வளர்க்கும் யாகங்களி லுண்டாயதாம். இவை புத்தியை மாத்திரம் அளிக்கும். மற்றைய சைவ விபூதியாவது இருவினையொப்பு மலபரி பாகமுற்ற சிவசத்தி நிபாதர்க்கு உரியதாய்ச் சிவாகம விதிப்படி சிவதீக்ஷை செய்யப்பட்ட அக்கினியிற் பொடிபட்ட நீறும். இது புத்தியை யல்லாமல் முத்தியையுங் கொடுக்கும். இவ்விபூதி கற்பம், அநுகற்பம், உபகற்பம், அகற்பம் என நான்கு வகைப்படும். அவற்றை மேற்கூறுதும்.

**தணிகைப் புராணம்.**

உலகருக் குரிய மறைவழிவேட்கு மோங்கிய விரசையிற் பொடித்த, விலகுவெண் ணீறு வைதிக பூதி யின்னது புத்தியேயளிக்கு, மலமறு சத்தி பதிந்தவர்க் குரித்தாய் வயங்குமா கமவழித் தீக்கை, நிலவுசெங் கனலிற் பொடித்தவெண் பூதி நிகரிலாச் சைவவெண்ணீறு.

முத்தியே யன்றிப் புத்தியும் வெஃகின் முகிழ்க்குமாற் சைவவான்பூதி, யத்தகு சைவ மூன்றதாங் கற்ப மநுகற்ப முபகற்பமென்ன.

## விபூதியின் பெயரும் காரணமும்.

விபூதி, நீறு, பசுமம் (பற்பம்) பசிதம், சாரம், இரக்ஷை எனப் பெயர்பெறும். வி=மேலான பூதி=ஐசுவரியம். எனவே, தன்னைத் தரித்தவர்களுக்கு அழிவில்லாத மேலாய ஐசுவரியத்தைக் கொடுத்தலால் விபூதியெனப் பெயர் பெற்றது. ஈண்டு ஐசுவரிய மென்பது முத்திப் பேற்றினையேயாம். அதுவே மேலான ஐசுவரிய மெனப்படும். இங்ஙனமாகவும் இராமாநுஜர் முதலிய பாஞ்சராத்திர மதத்தர்கள் செல்வமெனப் பொருள் கொண்டு நிந்தித்து அதிபா

தகத்துக்காளாயினர். பாவங்களை யெல்லாம் நீறுக்கலால் நீறெனவும், பசுமம், பற்பம் எனவுஞ் சொல்லப்படும். அறியாமை யழியும்படி சிவஞானமாகிய சிவத்துவத்தை விளக்கலாற் பசிதமெனப்படும். உயிர்களது மலத்தைக் கழுவுதலாற் சாரம் எனப்படும். ஆன்மாக்களைத் துன்பத்தினின்றும் நீக்கி இரக்ஷித்தலால் இரக்ஷை (இரக்கை) எனப்படும். காப்பு என்பது தமிழ் மொழியாம்.

### சித்தாந்த சிகாமணி.

பூதியெனப்படுஞ்செல்வவேதவிஞற்சிவமார்கும்பொருடிகழ்த்து
மேதவினிற்பசிதமிகுபாவங்கடம்மையச்சத்திசைத்தலாலே
யோதலுறும்பற்பமெனவிடரிடைநின்றகற்றுதலாலொன்றுஞ்சாரந்
திதகலவனைவரையுமளிப்பதனுலிரக்கையெனச்செப்புநூலே.

### பெரிய்ப்புராணம்.

நீடலுறுந்தீவினையனைத்துநீற்றிவிடலானீறென்றும்
வீடில்வெறுக்கைதருதலினுல்விபூதியென்றுமுயிர்தோறுங்
கூடுமலமாசினைக்கழுவுங்குணத்தாற்சாரமென்றுமட
மோடவளர்சோதியைத்தரலாற்பசிதமென்றுமுரைப்பாரால்.

## திருநீறு

### கோமயத்தாலுண்டாக்கப்படுவதற்குக்காரணம்.

விபூதியை, மிருகங்களுட் சிறந்த யானையின் இலண்டத்தைக் கொண்டும், குதிரை, ஆடு, எருமை, மான் இவற்றின் காரியங்களைக் கொண்டும், வேறு பொருள்களைக் கொண்டும் ஆக்காது, பசுவின் சாணத்தையே கொண்டு ஆக்குங் காரணத்தைப் பகர்வாம்.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளாகிய பரசிவக்கடவுள், பிரமதேவர், விஷ்ணு, உருத்திரநாயனர், அனந்தேசுரர், சதாசிவபரமாப்தர் என்னும் பஞ்சமூர்த்திகளானும் முறையே சங்கரிப்படுகின்ற கிவிர்த்தி

கலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியதீத கலை என்னும் பஞ்சகலைகளுக்கு முட்பட்ட தத்துவ புவனங்களின் சங்காரங்களாகிய பிரமாண்டப்பிரளயம், பிராகிருதப்பிரளயம், மத்திமப்பிரளயம், மகாப்பிரளயம், பிரதம மகாப்பிரளயம் என்கிற ஐவகைச் சங்காரத்துள், சுத்தமாயா புவன முடிவு வரைக்குஞ் சங்கரிக்கப் படுகின்ற அக்காலத்திலே, அணுசாதாக்கிய ரிறுதியாகவுள்ள தேவர்களது உடலங்களை யெல்லாம் தாம் தமது நெற்றிக்கண்ணி னின்றுந் தோன்றும் ஒரு தீப்பொறியினாற் சுட்டுச் சாம்பராக்கி, அவற்றைத் தமது திருமேனிக்கண் பரவப்பூசி விளங்குதலால், அந்தத் தேவர்கள் யாவரும் ஒவ்வோருறுப்புக்களினும் வசிக்கப்பெற்ற பசுக்களின் சாணத்தைப் பொடித்த திருநீற்றை யதற்கு அறிகுறியாக ஆன்மாக்களும் பூசும்படி விதித்தருளினர். அன்றியும் மும்மலங்களாலுங் கட்டப்பட்ட ஆன்மாக்களுக்கும் பசுவென்னும் பெயரிருத்தல் போல, கோக்களும் ஆயராற் கட்டப்பட்டுப் பசுவென்னும் பெயரைக் கொண்டிருக்கு முண்மையினாலும், பசுக்களின் மலம் நீறாக்கப் படுதல்போல, ஆன்மாக்களாகிய பசுக்களின் மலங்களுஞ் சிவஞான அக்கினியாற் றகிக்கப்படல் வேண்டும் என்னும் ஒப்புமைக் காரணத்தினாலுமாம். பசுக்களின் உறுப்புக்களுள் பிரமவிட்டுணுக்கள் கொம்புகளினடியினும், கோதாவரி முதலிய புண்ணிய தீர்த்தங்களும், சராசர வுயிர்வர்க்கங்களுங் கொம்புகளின் நுனியினும், மேலான சிரசிலே சிவபெருமானும், நெற்றிநடுவிலே சிவசத்தியும், மூக்கு நுனியில் எம்பெருமானாராய சிவகுகக்கடவுளும், மூக்கினுள்ளே வித்தியாதரரும், இரண்டு கன்னங்களி னடுவிலே அசுவினிதேவரும், இருகண்களினுஞ் சூரிய சந்திரர்

களும், பற்களிலே வாயுதேவனும், ஒளியுள்ள நாவிலே வருணதேவனும், ஊங்கார முடைய நெஞ்சிலே கலைமகளும், மணித்தலத்திலே இயமனும், இயக்கர்களும், உதட்டிலே உதயாத்தமன சந்திதேவதைகளும், கழுத்திலே இந்திரனும், முரிப்பிலே துவாதசாதித்தர்களும், மார்பிலே சாத்தியதேவர்களும், நான்கு கால்களினும் அநிலன் என்னும் வாயுவும், முழந்தாள்களிலே மருத்துவரும், குளம்பு நுனியிலே சர்ப்பர்களும், அதனடுவிலே கந்தருவர்களும், அதன்மேலிடத்திலே அரம்பை மாதரும், முதுகிலே உருத்திரரும், சந்துகடோறும் அட்டவசுக்களும், அரைப்பரப்பிலே பிதிர்தேவதைகளும், யோனியிலே சத்தமாதர்களும், குதத்திலே இலக்குமி தேவியும், வாலிலே சர்ப்பராசர்களும், வாலின் மயிரிலே ஆத்திகனும், மூத்திரத்திலே ஆகாய கங்கையும், சாணத்திலே யமுனை நதியும், உரோமங்களிலே மகாமுனிவர்களும், வயிற்றிலே பூமிதேவியும், முலையிலே சகல சமுத்திரங்களும், சடராக்கினியிலே காருகபத்தியமும், இதயத்திலே ஆகவனீயமும், முகத்திலே தக்கிணாக்கினியமும், எலும்பினுஞ் சுக்கிலத்தும் யாகதொழில் முழுவதும், எல்லா வங்கங்கள்தோறும் கலங்கா நிலையுள்ள கற்புடை மடவாரும் பொருந்தி யிருப்பார்கள். இப்பசுக்கள் சிவபெருமானது சந்நிதிக்கணுள்ள இடபதேவரின் பக்கத்திலிருந்தனவாம். இவற்றைச் சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டுப் பூமியிற் பிறக்கச் செய்தலால், ஆதியிலே அவை பாற்கடலின் வழியாய்த் தோன்றிப் பூமியில் விளங்கின வென்க.

சிவதருமோத்தரம்.

வேதாவுங் கரியவனு மாவினது கோட்டடியின் விளங்கி வாழ்வர்
கோதாவி முதற்றீர்த்தங் கோட்டினுனிச் சராசரமுங் கூடி நிற்கு

*மீதான சிரத்தமலன் விமலையத னடுநெற்றி விசாக ஞாசி
மீதானந் தனிலதனுஞ் ஞாசிதனி ஞாகேசர் விளங்குவாரே.*

என்றது முதலாய ஆறு திருவிருத்தங்களானும், ஆகமங்களானும், பிறவாற்றானும் இஃது அறியப்பட்டது.

## பசுக்களின் மகிமை.

பசுக்கள் முற்சொல்லப்பட்ட காரணத்தானன்றி யின்னும் அநேக ஏதுக்களால் விசேடமுடையன. சிவபெருமான் சந்நிதியிலிருப்பன வென்னலானும், தருமதேவதை சொரூபமென்னலானும், வைணவருஞ் சைவர்களுந் தானஞ் செய்யப்படும் பொருளாயிருத்தலானும் விசேடமுடையன. தேவர்க்கும் முனிவர்க்கும் உண்டி யுதவுவது காமதேனு என்னும் பசுவேயாம். வைதரணி நதியைக் கடப்பிப்பதும் பசுவே. ஆதலால் அதனை யொவ்வொரு சீவரும் தானஞ் செய்க என்று சிதாமூர்த்தியே கருடர்க்குக் கூறினர் என்று காருடபுராணங் கழறுகின்றது. யாகம் எந்தச்சீவனால் நடத்தப்படுகின்றது. ஆசிரியர் தொல்காப்பியனாரும், ஏனைய இலக்கணத்தாரும், அறுவகை வாழ்த்துப் பொருளிற் பசுவை யொன்றாகவைத்தனரன்றி, வேறு மிருகங்களொன்றனையும் வகுத்தோதினாரல்லர். சாதுவொருவனை நோக்கி உலகர், "இவன் பசுப்போ லிருக்கின்றான்" என்று வழங்குவதனாலும் அவைகளின் சத்துவம் புலப்படுகின்றது. அவற்றைக் கொன்றால் மாபாதகம் என்றும், கோகத்தியென்றுந் தருமநூல்களுங் கதறுகின்றன. விசாரசருமர், ஆனாயநாயனார் என்னுமிவர் முதலாயினோர் மேலாய பதவி யடைந்ததும் அவற்றாலேயாம். பிராமணர் மேலாய் விளங்குவதும் அவற்றானேயாம். உலகம், அரசு, குடிகள், அறம் முதலிய எல்லாம் நிலைபெறுவது மவற்றானன்றோ? கண்ணபிரான்

இடைக்குலத்திற் சேர்ந்ததும், அவற்றின் பின்னர்த்திரிந்து மேய்த்ததும் யாது கருதி? அவற்றின் மகிமை கண்டேயாம். கண்ணபிரான் எந்தப்பொருளைத் திருடி யுரலிற் கட்டப் பட்டு அடிபட்டனர்? பசுக்களின் பரிசுத்தமாகிய தயிர் பால், வெண்ணெயை யன்றோ? எங்கே படுத்துக் கொண் டார் பாற்கடலிலன்றோ? கோவிந்தன் என்ற நாமம் கண்ண மூர்த்திக்கு எதனாற் கிடைத்தது. அப்பசுக்களாலேயே. வைணவர் சுபாசுபங்களில் எந்த நாமத்தைக் கூவுகின்றார். கோவிந்தநாம சங்கீர்த்தன மல்லவா? வைணவர் சைவர் என்னும் இருபகுதியாரும் பிதிர்காரியம், தருப்பணம், தீ க்ஷை, யாகம், விவாகம், விரதம், அதிதிபூசை, முதலிய சடங்குகள் எந்த மிருகத்தின் பொருளைக்கொண்டு நடத்து கின்றனர். இப்பசுக்களின் பொருள்களாலன்றோ? கண்ண மூர்த்திக்கு அபிடேகங் கருடனது பால், தயிர், நெய், மலம், மூத்திரம் என்பவற்றைக் கொண்டா செய்து மகிழ்கின்ற னர். இல்லை! இல்லை!! பசுவின் ஐந்துங் கொண்டே யியற்றி உவக்கின்றார். ததியாராதனை யென்று வயிறுவீங்க விலாப் புடைக்க வைணவர் கொண்டாடுவதற்குக் காரணமெது? பசுக்களின் தயிரே. கருடன், சிங்கம், பன்றி முதலியவை போல் அசுத்த பதார்த்தங்களை யுண்ணுமற் சுத்தமாகிய தாவர பதார்த்தங்களை யுண்ணும் பெரும்புண்ணிய முள்ளன வும் பசுக்களே. மருந்துகளா யிருப்பன எவை? எவ்வெவ் விடங்களினுமுள்ள எவ்வெச் சமயத்தாரானுஞ் சாதியாரா னும் நீக்கப்படாது சுகாதாரத்திற்கு ஏற்றனவென்று உண் ணப்படும் பிராணியின் பொருள்களெவை? மிலேச்சர்கள் பசுவினிறைச்சி உடம்பிற்கு மிக்க சுகத்தை யளிக்குமெ ன்று உண்பார்கள். இத்துணைப் பெருமைவாய்ந்த பசுக்களை

த்தூஷிப்பதும், அதன் சாணத்தைத் தூஷிப்பதும், சாணத் தாற் றோன்றிய விபூதியை நிந்திப்பதும், விட்டுணு உண்டு உமிழ்ந்த மண்ணையிடும் வைணவர்க்கு அடாதடாது.

## கோமயப் பசு.

விபூதி யுண்டாக்குதற்குக் கோமயம் (சாணம்) கொள் ளுமிடத்து, கன்று பிரசவித்துப் பத்துநாட் சூதகமுடைய பசு, கன்று பிரசவியாத கிடாரி, வியாதியுடைய பசு, தன் கன்று சாவப்பெற்ற பசு, கிழப்பசு, மலட்டுப்பசு, மலத் தைத் தின்னும் பசு ஆகிய இப்பசுக்களல்லாத மற்றைய பசுக்களே நல்லனவாம். அவைகளினும் பிராமணர்க்கு வெ ள்ளைநிறப் பசுவும், க்ஷத்திரியர்க்குச் சிவப்புநிறப் பசுவும், வைசியர்க்குப் பொன்மைநிறப்பசுவும், சூத்திரர்க்குக் கருநி றப்பசுவும் உத்தமமாம். அகப்படாதேல் இவ்வரையறை யின்றிக் கொள்ளலுமாம்

## கோமயவிசேடம்.

பசுவின் சாணமே விபூதி யுண்டாக்குதற்காக விதிக்கப் பட்டது. அதன் குறிப்புப்பொருளை முன்னர் ஒருவாறு காட்டினும். இன்னுங் கோமயத்தின் விசேடத்தைக் கூறு வாம். பசுவின் சாணத்தைப் போலப் பயிரை விளைக்கும் வஸ்து வேறொன்றில்லை. அதனாற் பயிர்களுக்கு நேரிடும் உரோகங்கள் மாறுகின்றன. இந்தியா இலங்கை முதலிய தேசக்களிலுள்ள உழவர்கள் இதனையே தேடியிட்டுப் பயிர் செய்வார்கள். எவ்வித துர்க்கந்தங்களும் இச்சாணத்தால் நீங்கும். எவ்வித அசுசிகளும் இதனால் நீங்குகின்றன. உண்ட எச்சிலும் இதனால் மாற்றப்படுகின்றது. இராமா நுசாது மனைவியும் ஒரு வைணவர்க்கு அன்னமிட்டுச் சாணத்தால் உச்சிட்டமகற்றிய சரிதமும் வைணவர் எழுதி

வைத்த குருபரம்பரையிற் காணலாம். இற்றைத் தினத்தும் ஸைவர், சமார்த்தர் முதலிஞேரன்றி வைணவர்களும், பிற சமயிகளும், இச்சாணத்தைக் கொண்டு மெழுகியும், உச்சிட்ட மகற்றியும், இன்னும் அவை போன்றன செய்தும் சுத்தமுடைப் பொருளாகவும், பிறவற்றைச் சுத்தமாக்கும் பொருளாகவும் மதித்து வருகின்றனர். ஆயுள்வேதக்காரரும் பற்பல மருந்துகளை இச்சாண வரட்டி கொண்டு புடமிடுகின்றனர். சந்தான முதலிய சிவாகமங்கள் இதனிடத்தில் யமுனைநதி யிருக்கிறதென்று கோஷிக்கின்றன. புண்ணியசாந்தம் என்ருர் சமண மதத்தார் ஆகிய வீரமண்டலவரும். இதனுற் பிள்ளையார் முதலிய தேவர்களைச் செய்து க்ஷணிகமாகப் பூசிப்பது முண்டு. இதனுற் செய்யப்பட்ட வரட்டி கொண்டு சமைத்த உணவு மகாபுனிதமாயும், நோய் தீர்க்கு மருந்தாகவும் இருக்கும் என்பர் பதார்த்தகுண நூலார். அநேக தத்துவ சாத்திரிகள் இதனிடத்துப் பெரிய சக்தி யொன்று உண்டென்று கூறுகின்றனர். இன்னனவிசேட மமைந்த சாணம் மந்திரபலத்தால் யாகாக்கினியிற் பட்டு நீருகிச் சுத்த நீருடன் தரிக்கப்படுமேல் எத்துணைக் குணங்களைத் தானியற்ருது. இஃதறிந்தே யிறைவன் சாணங்கொண்டு விபூதி செய்ய விதித்தனன். இவற்றையெல்லாமுணராது மாட்டுச் சாணியின் சாம்பல் என்று நிந்தித்தல் அறியாமையும் பாவமுமே.

## கோமயங்கொள்ளுங் காலமும் மந்திரமும்.

பங்குனி மாதத்திலே பசான மென்னும் நெல்லினது தாளைமேய்ந்த பசுக்களி னிடத்திலே அட்டமி, பௌர்ணிமை, சதுர்த்தசி என்னுந் திதிகளிலே கோமயங் கொள்ளவேண்டும். கொள்ளுதற்கு முன்னர் **ஓம் கபிலே நந்தே நம:,**

ஓம் கபிலே பத்ரேநம:, ஓம் கபிலே சுசீலேநம:, ஓம் கபிலே சுரபேநம:, ஓம் கபிலே சுமநேநம: என்னு மந்திரத்துள்ஏற்ற மந்திரத்தைக் கூறி வணங்கி, "பாற்கடற்கண்தோன்றி, ஆன்மாக்களின் துக்கத்தைப் போக்கும் பயோதாத்தையுடைய மாதாவே! இதனை யேற்க" என்று ஒருபிடி புல்லுக் கொடுத்து, கோசாவித்திரி தோத்திரமுஞ் செய்து கொள்ளக் கடவர். தாம் ஏற்கச்சென்றபசு கருமைசேர்ந்த பொன்னிற முடைத்தாயின் முதலாம் மந்திரத்தையும், கருநிறமுடைத்தாயின் இரண்டாம் மந்திரத்தையும், புகைநிறமுடைத்தாயின் மூன்றாவதையும், வெள்ளைநிற முடையதாயின் நான்கா மந்திரத்தையும், தாமிர நிறத்ததானால் இறுதிக்கணுள்ள மந்திரத்தையுஞ் சொல்லக் கடவர்.

## கோமயங் கொள்ளும் முறை.

பசுவின் சாணத்தைக் கொள்ளுமுறை சாந்திகம், பௌட்டிகம், காமதம் என மூவகைப்படும். அவற்றுள் சாந்திகமாவது கோமய மிடும்போது பசுவின் பிற்றட்டிலே கைவைத்தேற்பது. பௌட்டிகமாவது சாணம் பூமியில் விழுமுன் தாமரையிலையி லேற்பது. காமதமாவது பூமியில் விழுந்தபின் மேல் கீழ் தள்ளி யெடுப்பது. இவற்றுள் பௌட்டிகம் உத்தமம். சாந்திகம் மத்திமம். காமதம் அதமம் எனவறிக.

## கற்பவிபூதி,

முன்னர்க் கூறிய மூவகை விபூதிகளுள் கற்பவிபூதியைக் கூறுவாம். சொல்லப் பட்டபடி பசுக்களொன்றனிட்டுப் பூமியில் விழுமுன் ஓம் சத்தியோசாதாயநம: என்னு மந்திரத்தை யுச்சரித்துத் தாமரை யிலையிலேற்ற கோமயத்திலே பால் ஐந்து பலமும், தயிர் மூன்று பலமும், நெய்

இரண்டு பலமும், கோசலம் ஒரு பலமுஞ் சேர்த்த கவ்வியத்தை ஓம் வாமதேவாயநம: என்று வார்த்து, ஓம் அகோரா யநம: என்றுச்சரித்து, மெல்லப் பிசைந்து உண்டைபண்ணி, சம்பாநெற்பதரை விரித்து, அதன்மேல் ஓம் தற்புருடாயநம: என்று உச்சரித்து வைத்து, ஓமாக்கினியினாலேனும் நித்தியாக்கினியினாலேனுந் தகனஞ் செய்யவேண்டும். அன்றைக்கே யெடுத்து, அன்றைக்கே உருண்டை செய்து, அற்றைத் தினத்திற்றானே தகனஞ் செய்தல் உத்தமோத்தமமாகும். அவ்வாறன்றி யுலர்த்திச் செய்தலு மாகும். அவ்விபூதி நன்றாய் விளைந்ததை யறிந்து கருகல் முதலியவற்றைத் தள்ளி, நல்லனவற்றைப் பார்த்து, ஓம் ஈசாநாயநம: என்று உச்சரித்து எடுக்கக்கடவர். கருநிற விபூதி வியாதியை யுண்டாக்கு மாகலானும், செந்நிற விபூதி கீர்த்தியைப் போக்கு மாகலானும், புகைநிற விபூதி ஆயுளைக் குறைக்கு மாகலானும், பொன்னிற விபூதி சம்பத்தைக் கெடுக்கு மாகலானும் அவற்றை யெல்லாம் நீக்கி வெண்ணிற விபூதியே யெடுக்கக்கடவர். இதுதான் கற்ப விபூதியாகும்.

தணிகைப் புராணம்.

மந்திரங்கேட்டியரசனேசாதமயத்தினையேற்றல்வாமத்தா
னந்தினைவாக்கலகோரத்தாற்பிசைதலழலிடையுருட்டிவைத்திடன்
சிந்துதற்புருடத்தாற்புகைபீதஞ்சிவப்பறுகருமையுந்தீர [மால்
விந்துநேர்பூதியெடுத்தலீசம்பெய்திருத்தல்காயத்திரிமனுவால்.

## அநுகற்ப விபூதி.

அஃதாவது சித்திரை மாதத்திலே பசுக்கள் நிற்கு மந்தையிற் சென்று உலர்ந்து கிடந்த கோமயங்களை யெடுத்து ஓரிடத்திலே குவித்து, உரலிலிட்டு இடித்துத் தூளாக்கி, அதிலே கோசலத்தை ஓம் வமதேவாயநம: என்றுச்சரித்து வார்த்துக் கையினாலே கலந்து, ஓம் அகோராயநம:

என்று நன்றாகப் பிசைந்து உண்டை செய்து, பதரை விரித்து, ஓம் தற்புருடாயநம: என்று அதன்மேல் வைத்து, ஓமாக்கினியினால் தகனம்பண்ணி, ஓம் ஈசானாயநம: என்று எடுத்த திருநீறாம்.

## உபகற்ப விபூதி.

உபகற்ப விபூதியாவது கோமயங்கிடைக்கா விடத்துக் காட்டின்கண் மரத்தோடு மரம் இணைந்து தானேயுண்டாகிய அக்கினியினாலே வெந்து விளைந்த சாம்பரையாதல், அல்லது செயற்கையாயுள்ள செங்கற்சூளை முதலியவற்றில் விளைந்த சாம்பரையாதல் எடுத்து, பஞ்சகவ்வியத்தை வாமதேவ மந்திரத்தினாலே வார்த்துப் பாகமறிந்து கலந்து, அகோர மந்திரத்தினாலே யள்ளிப் பிசைந்து உண்டை செய்து பதரைப்பரப்பி, அதன்மேலே தற்புருட மந்திரத்தினாலே வைத்துச் சிவாக்கினியினாலே தகனம்பண்ணி, ஈசான மந்திரத்தினாலே யெடுப்பதாகும்.

## அகற்ப விபூதி.

மேற்சொல்லிய விபூதிகள் கிடைக்காவிடத்து இடிவிழுந்த விடத்தில் உண்டாகிய திருநீறும், மலையினுச்சியிலும் பூமியிலும் யாதொரு காரணத்தினால் விளைந்த திருநீறுந் தரிக்கலாம். அது அகற்ப மெனப்படும் அவைகளை யெடுத்து ஓம்நிவிர்த்தி கலாயைநம:, ஓம் பிரதிஷ்டாகலாயைநம:, ஓம் வித்தியாகலாயைநம:, ஓம் சாந்திகலாயைநம:, ஓம்சாந்தியாதீதகலாயைநம: என்னுங் கலா மந்திரங்களானும், ஓம சிவாயநம என்னும் சிவமூல மந்திரத்தானுஞ் சுத்திசெய்தே தரிக்க வேண்டும்.

## விபூதிப் பையினிலக்கணம்.

அங்ஙனம் எடுத்த விபூதிகளைப் பரிசுத்தமாகிய புதுவஸ்திரத்தினாலே வடித்துப் புதுப்பாண்டத்திற் பெய்து,

விபூதி காயத்திரி மந்திரத்தை உச்சரித்துச் சுத்த பாத்திரத்து வைத்திடுக. அதனுள் மல்லிகை, முல்லை, பாதிரி, சிறு சண்பக முதலிய வாசனை மலர்களைச் சத்தியோசாத மந்திரத்தினால் இட்டுப் புதிய வஸ்திரத்தினால் அதன் வாயைக்கட்டி, இதுவே நம்முடைய பெருந்திரவியமென்று வைக்கக் கடவர். அதனுள் அணிந்து கொள்வதற்காகச் சிறிதுபாகம் எடுத்து, அவ்விபூதியைப் பையிலிட்டு வைத்துத் தரிக்கவேண்டும். பட்டுப்பையி னல்லாமற் சம்புடத்திலேனும், வில்வக் குடுக்கையிலாயினும், சுரைக் குடுக்கையிலேனும், மான்றோல், புலித்தோல் என்னு மிவைகளாற் செய்யப்பட்ட பையிலேனும் வைத்துத் தரிக்கவேண்டும். அவற்றுள் தோலினாற் செய்யப்பட்ட பைகள் நைட்டிகப் பிரமசாரிக்குஞ் சந்நியாசிக்குமே யுரியனவாம். பைசெய்யுமிடத்து அகலம் எட்டங்குலமும், உயரம் பன்னிரண்டங்குலமும் உடைத்தாய், வாய்வட்ட முடைத்தாகச் செய்தல்வேண்டும். குடுக்கைகளினன்றிப் பிறவற்றினுமுள்ள விபூதியைக் கவிழ்க்கலாகாது. கவிழ்க்கின் மகாரௌரவம் முதலிய கொடிய நரகங்களில் வீழ்ந்து வருந்துவர்.

## விபூதி வாங்கும் விதி.

ஆசாரியர் ஆயினும், சிவனடியார் ஆயினும் விபூதி கொடுப்பின், அவர்களை மூன்று தரமாயினும், அல்லது ஐந்து தரமாயினும் விழுந்து வணங்கி, எழுந்து கைகூப்பி, இரண்டு கைகளானும் வாங்கி, முகத்தை மாறி யிட்டுத் தரித்தல் வேண்டும். அதன் பின்னர் முன்போல மீட்டும் வணங்கல் முறையாம். குதிரை, சிவிகை, ஆசனம், அம்பலம், திண்ணையென்பவற்றி லிருந்து கொண்டு வாங்குதல் ஆகாது. விபூதி கொடுப்போர் கீழ் நிற்க, தான் மேலிருந்து

வாங்குவதும் ஆகா. சிவபத்தியில்லார் ஈவதும், பொருட்குக் கொடுப்பதும், மதுமாமிச பக்ஷண முதலிய ஆசாரமில்லாதவர் செய்ததும் ஆகிய விபூதிகள் வாங்குதல் முறைபன்றாகும்.

## தரிக்கக் கூடாத விபூதிகள்.

ஒருகையால் வாங்கிய விபூதியும், விலைக்குக் கொண்ட விபூதியும், சிவதீக்ஷை யில்லாதவர் கொடுத்த விபூதியும், கருநிற விபூதியும், செந்நிற விபூதியும், பொன்னிற விபூதியும், புகைநிற விபூதியுந் தரிக்கலாகாது. சிவதீக்ஷை யில்லார் கொண்டுவந்த விபூதிப் பிரசாதத்தை யொருபாத்திரத்தில் வைப்பித்து, அதனைப் பத்திர புட்பங்களால் அருச்சித்து நமஸ்காரஞ் செய்து எடுத்துத் தரித்தல் வேண்டும். தீக்ஷை முதலியவற்றால் தம்மினின்றும் உயர்ந்தவரா யிருப்பின் அவரை நமஸ்கரித்து வாங்கித் தரித்தல் வேண்டும். ஆசாரியராயின் மூன்று அல்லது ஐந்துதரம் நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டு வாங்கித் தரித்து, பின்னரும் நமஸ்கரிக்க வேண்டும்.

## தரிக்கு மிடங்களும் அளவும்.

உச்சி, நெற்றி, கழுத்து, மார்பு, நாபி, முழந்தாள்களிரண்டு, தோள்களிரண்டு, முழங்கைகளிரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு என்னுமிடங்களிற் றரிக்கவேண்டும். இவற்றுள் விலாப்புற மிரண்டனையும் நீக்கிச் செவிகள் இரண்டனையுங் கொள்வதும், முழங்கைகளையும் மணிக்கட்டுகளையு நீக்கிப் பன்னிரண்டு தானங்கொள்வதுமுண்டு. நெற்றியில் இரண்டு கடைப்புருவ வெல்லை நீளமும், மார்பினுந் தோளிரண்டினும் அவ்வாறங்குல நீளமும், மற்றைத் தானங்களில் ஒவ்வோரங்குல நீளமும்

பொருந்த அணிதல் முறையாகும். இவ்வளவினின்று கூடி னுங் குறையினுங் குற்றமாம்.

## இவ்வருணத்தார்க்கு இவ்விபூதி யாமெனல்.

சிவபெருமான், உமை, விநாயகர், கந்தர், வைரவர், வீரபத்திரர் என்னுங் கடவுளரது யாகசாலையிலே, உற்சவ முதலிய காலங்களில் வெந்து விளங்கிய திருவெண்ணீறு பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் என்னு மூவர்க்கு முரி யது. திருக்கோயிலின் கண்ணும், திருமடங்களிலு முள்ள திருமடைப்பள்ளியிற் பாகஞ் செய்ததனு லுண்டாகிய திரு நீறு சூத்திரருக்கு மாகும். காட்டுத் தீயிலே இயல்பா விளை ந்த திருநீறு இவரல்லாத பஞ்சம சாதியார்க்கு உரியதாம்.

## தரிக்கலாகாத இடங்கள்.

சிவபெருமான் முன்னும், சிவாக்கினி முன்னும், ஆசா ரியர் முன்னும் விபூதி தரியாதொழிக. தரிக்க வேண்டுமா யின் முகத்தை மாறியிட்டுக் கொள்க. இங்ஙனமன்றிச் சண் டாளர் முன்னும், பாவிகள் முன்னும், அசுத்த நிலத்தும், வழிநடக்கும் போதுந் தரிக்கலாகா.

## அவசியந் தரிக்குங் காலங்கள்.

காலை, உச்சி, மாலை யென்னுஞ் சந்தியாகால மூன்றி னும், சூரிய உதயாஸ்தமயன காலங்களினும், ஸ்நானஞ் செ ய்தவுடனும், மலசல மோசனஞ் செய்து சௌசம்பண்ணி யாசமனஞ் செய்த பின்னும், பூசைக்கு முன்னும் பின்னும், தீக்ஷையில்லாதவர் தீண்டிய போதும், போசனத்துக்கு மு ன்னும் பின்னும், நித்திரைக்கு முன்னும் பின்னும், பூனை, கொக்கு, எலி, நாய், காகம், பன்றி முதலியன தீண்டிய போதும், பிக்ஷைக்கு முன்னும் பின்னும், பிதுர்க்கிரியையி

னும், யாகத்திலும், செபத்திலும், ஓமத்திலும், வைசுவதேவமென்னும் நித்திய கர்மத்தினும், சிவபூசையினும் அவசியம் விபூதி யணிய வேண்டும். எவர் விபூதி தரியாதிருக்கின்றனரோ அவர் செய்யும் நற்கர்மங்கள் நிஷ்பலமாகும். அவரது அறிவு, ஆசாரம், சத்தியம், தவம் முதலியனவுங் குன்றும். அவர் முகம் சுடுகாட்டிற்குச் சமமாகும். ஆகவின் அவரைக் காணின் அஞ்சி யகல்க! அகல்க!!. இதற்குப் பிரமாணம் வருமாறு:—

**திருவாசகம்.**

பிணியெலாம் வரினு மஞ்சேன் பிறப்பினோ டிறப்பு மஞ்சேன்
றுணிநிலா வணியி னான்றன் றொழும்பரோ டழுந்தி யம்மா
றிணிநிலம் பிளந்துங் காணாச் சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே.

## விபூதி தாரண வகை.

ஸ்நானம், திரிபுண்டரம், உத்தூளனம் என மூவகைப்படும். ஸ்நானம் முற்கூறி யுள்ளாம். உத்தூளனமாவது பரவப் பூசுதல். திரிபுண்டரமாவது முக்குறியாகத் தரித்தல். திரி = மூன்று, புண்டரம் = குறி. சிவதீக்ஷையில்லாத ஆடவர்களும், பெண்களும், வைதிகவழி யொழுகுஞ் சந்நியாசிகளும், பிரமசாரியும், வானப் பிரத்தனும், கன்னிகையும் உச்சிக் காலத்திற்குப் பின் சலங்கூட்டாமல் உத்தூளனமாகத் தரிக்கக்கடவர். தீக்ஷை பெற்றவர்களும் காலை, உச்சி, மாலை யென்னு மூன்று காலங்களில் மாத்திரம் நீருடனே கூட்டித் தரிக்கக் கடவர். மற்றைக் காலங்களில் நீர் சேர்க்காது உத்தூளனமாகத் தரிக்கக் கடவர். விலக்கிய காலங்களில் நீர்சேர்த்துத் தரிப்பாராயின், அந்த நீர் பனிநீரை (மதுவை) யொக்குமென்று சிவாகமங்கள் செப்புகின்றன.

## புண்டரவகை.

புண்டரம் ஊர்த்துவ புண்டரம், திரியக்குபுண்டரம் என இருவகைப்படும். அவற்றுள் ஊர்த்துவ புண்டரம் மேனோக்கி யிடப்படுங் குறியாம். திரியக்குபுண்டரம் ஆவது குறுக்காக இடப்படுங் குறியாம். திரியக்கு=விலங்கு. விலங்கு குறுக்கு வடிவினதாகலின், அதுபோன்ற அடையாளத்தையுந் திரியக்கு புண்டரம் என்ப. திரியக்கு புண்டரம் திரிபுண்டரம் எனவும் படும். ஊர்த்துவபுண்டரம வாசுதேவோப நிடதத்திற் கூறப்படினும் மண், குங்குமம், மஞ்சள் என்னு மிவைகளால் இடும்படி சொல்லப்படவில்லை. கோபி சந்தனத்தாலிட்டு அதற்குமேல் திருநீறு தரித்தல் வேண்டுமென்று வாசுதேவரே நாரதமுனிவர்க்குச் சொல்லி யிருக்கின்றார். ஆகலாற் சுவேதமிருத்து, ஸ்ரீசூர்ணம், அரித்திரா சூர்ணம் என்ற வெள்ளைநாமம, சிவப்புநாமம், மஞ்சள் நாமங்கள் யாவும் நவீனபுண்டரம் என்று நன்கு வெளிப்பட்டன. சுவேதமிருத்து தாரணம் முதலியன வராகோபநிடதம், காத்தியாயனம், பிரமாண்டபுராணம், பாத்மோத்தரம், வைகானசம் முதலியவற்றிற் கூறப்பட்டுள்ளனவென்று வைணவர் கொண்டானடிப்பது கற்பிதமேயன்றி யுண்மையன்று. அங்ஙனமாயின் விஷ்ணுவினாற் சொல்லப்பட்ட கருடபுராணத்தில் "பஸ்மனைவ ப்ரகுர்வீத நகுர்யாங் ம்ருத்திகாதிபி:" என்ற சுலோகப்படி, "திருநீற்றாலேயே புண்டரந் தரிக்கவேண்டும். மண்ணினால் தரிக்கலாகாது" என்று விஷ்ணு சொல்லியதென்னோ? பராசர புராணமும் ஊர்த்துவ மண்புண்டரம் வேதத்திற் சொல்லப்படவில்லையென்றுரைத்ததே. ஆதலால் திரிபுண்டரமே சிறந்ததும் வேதவிதிப்பட்டதும் என்றறிக.

## திரிபுண்டர திருட்டாந்தம்.

திரிபுண்டர தாரணமே வேதத்திற் சொல்லப்பட்டதுஞ் சிறந்தது மென்பதற்கு உதாரணமாக மானுடர் யாவருந் தத்த நெற்றியைப் பார்த்துணரக் கடவர். நாராயண புத்திரரான பிரமர் நெற்றியும், அவராற் படைக்கப்பட்ட மானுடர் நெற்றியுந் திரிபுண்டரத்திற் கியையக் குறுக்காகப் படைக்கப்பட் டிருக்கின்றனவன்றி, ஊர்த்துவ புண்டரத்திற்கிணங்க நெடுமையாகப் படைக்கப்பட விலலை. திருமால் நெற்றியும் ஊர்த்துவமாகவும், விருத்தமாகவும் இருக்குமென்று சிற்பவித்யும் புகல வில்லையே. இத்திருட்டாந்தம் "ஸ்ரஷ்டாஸ்ருஷ்டிச் சலோகாஹ த்ரிபுண்டரஸ்யப்ரஶஸ்ததாம்" என்ற சுலோகத்தாற் கூர்மபுராணம் கூறியதே. புதிதாக எமது யுக்தியாற் கூறியதன்று. இங்ஙனம் எவ்வித்தைகளாவது திரிபுண்டரங் கூடாதென்று திருட்டாந்தங் காட்டி மறுத்ததில்லை. இதனானுந் திரிபுண்டரமே வேதாகம விதியென்றும், ஏனைய புண்டரங்கள் விலக்கென்றுந் தெரிக.

## நாமம் நவீனமென்பதற்குத் திருட்டாந்தம்.

நாமம் வேதத்திற் கூறப்படாமையானும், "நாமம்போட்டானா மண்போட்டானா? என்று உலகர் கூறிவரும் பழமொழிகளானும், இராவணனைக் கொல்லவந்த இராமர் இலங்கையிற் பாடிவீடாக்கொண்ட விட்டுணு தலத்திலும் பிறதலங்களினும் விபூதி யபிடேகம் பெருமாளுக்கு நடத்தப்படலானும், சிவசின்ன தாரணரான அந்தணரே யாங்குப் பூசை செய்தலானும், இராமேச்சுரம், திருமாற்பேறு, திருவண்ணாமலை, விண்டுபுரம் முதலிய விட்டுணுபூசித்த சிவஸ்தலங்கள் இன்று மிருத்தலானும், சிவாலயங்களில் விட்டுணு ஆவரண தேவதையாப் பூசிக்கப்படலானும், நாமத்துள்

சிவப்பு நாமம், மஞ்சள் நாமம், வடகலை நாமம், தென்கலை நாமம் என்ற பேதங்கள் இருத்தலானும், அவைகள் அவை திகமென்றும், தாழ்ந்தன வென்றும் ஒவ்வோர் பகுதி வை ணவர்களே சண்டையிட்டுத் தூஷித்துப் புத்தகவாயிலாக வெளியிட்டமையானும், விபூதிக்கு அவ்வித பேதங்களில் லாமையானும், நாமம் நாராயணர் திருவடியெனின் அவர் தக்நெற்றியிற் றங்காலை வைக்கார் ஆகலானும் இடைப்பட்டு வந்த நவீனக்குறியே.

## திரிபுண்டர அளவு.

பிராமணர் எல்லா விடங்களினும் ஆறங்குலப் பிரமா ணமும், அரசர் நான்கு அங்குல அளவும், வைசியர் இர ண்டங்குலப் பிரமாணமும், வேளாளர் ஓரங்குல வளவும் உடைத்தாய்த் திரிபுண்டரந் தரிக்கக் கடவர். இதற்கு வே றாகச் சொல்லும் விதியு முண்டு. அஃதாவது :—

நெற்றியிற் 'கடைப்புருவ வெல்லை நீளமும், மார்பி லும் புயங்களிலும் அவ்வாறங்குல நீளமும், மற்றைத் தான ஙகளில் ஒவ்வோ ரங்குல நீளமும் பொருந்தத் தரித்தல் வே ண்டு மென்பதாம். இவ்வெல்லையிற் கூடினுங் குறையினுங் குற்றமே. ஒன்றை யொன்று தீண்டினும், மிக அகன்று இருப்பினும, வளைந்திருப்பினும் இடை வெளி யில்லா விடி னும் குற்றமே. விதிக்கப்பட்ட அளவினின்றுங் குறைவுறு மாயின் ஆயுள் குன்றும். கூடுமாயின் தவங் கெடும். மூன்று குறிகளின் இடைவெளி ஒவ்வோ ரங்குல வளவினதாய் இருத்தல் வேண்டும்.

## உத்தூளன விதி.

பிராமணரான நால்வகை யாச்சிரமிகட்குஞ் சர்வாங்க உத்தூளனமும், அரசருக்கு முகம் நீங்க ஏனைய இடங்க

ளில் உத்தூளனஞ் செய்தலும், வைசியருக்கு நெற்றி மார்பு என்னு மிடங்களில் உத்தூளனஞ் செய்தலும், வேளாளர்க்கு நெற்றியில் மாத்திரம் உத்தூளனம் பண்ணுதலும் விதியாம். உத்தூளனம் பண்ணுங்கால் ஈசானாதி பஞ்சப்பிரம மந்திரத்தாலும், திரியாயுஷ மந்திரங்களாலுஞ் செய்க. நிலத்தில் விபூதி சிறிதுஞ் சிந்தலாகாது. இங்ஙன மன்றி,

உத்தூளனமாகத் தரிக்கு மிடத்துப் பிராமணர் தலை தொடங்கிக் காலளவும் நீருடனே யுத்தூளனம் பண்ணுக. அரசர் நாபிக்கு மேலே யப்படித் தரிக்கக்கடவர். வைசியர் பட்டமாகத் தரிக்கக்கடவர். அநுலோமர் வைசியரைப் போலவும், பிரதிலோமர் சூத்திரரைப் போலவுந் தரித்தல் வேண்டும். என்பது மோர் நூற் கொள்கை.

சந்நியாசி எஞ்ஞான்றும் வடக்குமுக நோக்கியே உத்தூளனஞ் செய்தல் வேண்டும் என்று "யதிரோத்தூளநே நைவஸ்நாயாந்நித்யமுதங்முக:॥ (யதிருத்தூளநே நைவஸ்நா யாந்நித்யமுதங்முக:) என்னும் வசனத்தாற் காமிக ஆகமங் கூறுகின்றது. சிரம் முதலிய ஆறு தானங்களிலும், ஏனைய இடங்களிலும், பஞ்சப்பிரம மந்திரங்களாலும் ஆறங்க மந்திரங்களாலுந் தரிக்க வேண்டு மென்னும் விதியுமுண்டு. மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு ஒவ்வோர் காலத்தும் நான்கு தரம் அல்லது ஐந்து, எட்டு, பதின்மூன்று தரமாவது உத்தூளனஞ் செய்தன் முறையாகும். இங்ஙனஞ் செய்வார் சிவபெருமானோ டிரண்டறக் கலத்தலாகிய அத்துவித முத்தியை யடைவர் என்க.

விட்டுணு சங்கிதை. (மொழிபெயர்ப்பு.)

தேகமதிற் றத்தமக்கு விதித்தவா றத்தலமே சிறந்த மன்னர்,
சாய்கர்வே ளாண்குலத்தர் யாரொவினுந் தூளனத்தை நாடுநோடும்,

வேகமின்றிப் பிரமத்தாற் றிரியயுடத் தாற்றரிக்கின் வினையை வென்று, பாவினருட் கொடிபடரும் பலனவளை யடிகுடியிற் படிவாரொன்றாம்.

## சந்திக் கிரியைகள்.

பூசுத்தி, சலசுத்தி, விபூதிசுத்தி, சரீரசுத்தி, மந்திர சுத்தி, ஆன்மசுத்தி, ஆசமனம், சங்கற்பம், மார்ச்சனம், சுருதியாசமனம், பிராணாயாமம், நிரீக்ஷணம், புரோக்ஷணம், அப்பியுக்ஷணம், தாடனம், திக்குபந்தனம், கரநியாசம், அங்க நியாசம், இருதய நியாசம், கலா நியாசம், பஞ்சப்பிரம நியாசம், புருடசூக்த நியாசம், பஞ்சாக்ஷர நியாசம், அவகுண்டனம், அர்க்கியதானம், சந்தியாங்க தருப்பணம், காயத்திரி முகம், காயத்திரி செபம், சூரியோப ஸ்தானம், காயத்திரி பிரத்தாபனம், மகா மந்திர செபம், மாதுருகா நியாசம் முதலிய கிரியைகள் விபூதி ருத்திராக்கந் தரிப பவர் அறிய வேண்டியனவாம்.

புதுச்சந்நிதிக் கந்தர் சதகம்.

சந்தியாவந்தனக் கிரியைகள்.

பூமிசல நீறங்க மாமந்த்ர சுத்திசிவ
போதவழி யான்ம சுத்தி
புரிமார்ச் சனங்கற்ப முந்நீர் குடித்தல்வளி
போகா தடைத்த லிவையோ
டாமுக்க ணந்தட்ட திக்குபந் தனநியச
மவகுண்ட னந்தருப்ப
ணம்மருக் கியதான மங்கதர்ப் பணமுசமு
மறையுமறை முறையி னீராக்
சாமித்தல் காயத்ரி செபமுபத் தானம்ப்ர
தாபனங் காட்டு மறையின்
கார்யமிவை முதலான சந்தியின் கிரியையாக்
காணுநன் னெறியி னுறைபு

சேமித்த மாஞானர் வாழியாழ்ப் பாணநகர்
சேர்புலோ லிப்பதி யினோர்
தேங்குகவ சந்நிதியி லோங்குமயில் கொண்டருளு
தேவநங் கந்த வேளே.

## கிரியா முத்திரைகள்.

சின்னந் தரித்தற்குச் செய்யப்படுங் கிரியைகளிற் பலவகை முத்திரைகள் கொள்ளப்படும். ஆகலின் முத்திரைகளின் பேதங்களை யறித லின்றியமையாத தாகும். அவை யாவன-அத்திர முத்திரை, மிருகா முத்திரை, கும்பமுத்திரை, சக்கர முத்திரை, தேனுமுத்திரை (சுரபிமுத்திரை) பதாகை முத்திரை (துவச முத்திரை) சோதனை முத்திரை சங்கார முத்திரை, பஞ்சமுகம், திரவியம், முகிளிகா, பதுமம், சசகர்ணம், சத்தி, பீசம், சாந்தி, ஆவாகனம், மனோரம்மியம், இலிங்கம், காயத்திரி, காலகண்டம், சூலம், நமஸ்கார முத்திரை, விசோடண முத்திரை, ஆச்சியாகுண முத்திரை, மகாசங்கார முத்திரை யென்பன. இவற்றை முக்கியமாகத் தரிப்பார் அறிதல் வேண்டும்.

## தரிக்கும் நியமம்.

* சமயி பிராதக்கால சந்தியொன்றிலேயே நீிற்குழைத்துத் தரிக்கக்கடவன். † புத்திரன் அதனோடு சாயங்கால சந்தியினும் நீிற்குழைத்து அணிக. ‡ சாதகனென்பான் அவ்விரண்டனோடு மத்தியான சந்தியினும் அங்ஙனஞ் செய்

* சமயி என்பவன் சமயதீக்ஷை பெற்றுச் சிவாகம விதிப்படி நித்தியகருமஞ் செய்பவன்.

† புத்திரன் அதனோடு விசேடதீக்ஷையும் பெற்றுத் தருப்பணம, சிவபூசை, அக்கினிகாரிய முதலியன செய்பவன்.

‡ சாதகனென்பவன் அவ்விரண்டனோடு நிருவாண தீக்ஷையும் பெற்று நித்தியம் நைமித்திகம், காமியம் என்னுங் கருமங்களைச் செய்து சாதனையினால் தன் மலமறுப்பவன். இம்மூவகையருஞ் சாமானியர் எனவும, விசேடர் எனவும இருவகைப்படுவர்.

யக் கடவன். * ஆசாரியர் அம்மூன்றனோடு அர்த்தராத்திரிச் சந்தியினும்நீர் சேர்த்து இடக்கடவர் என்று கூறுவாருமுளர். யாவரும இருவஸ்திரந் தரித்து நீராடி ஈரந் துவட்டி விபூதி தரிக்கக் கடவர். இல்வாழ்வான் திருநீறை மூன்று காலங்களிலும் நீர் கூட்டித் தரிக்கக் கடவன். பெண்களுந் துறவிகளும் நீர் கூட்டாது தரிக்கக் கடவர். வானப்பிரத்தரும் கன்னியருந் தீக்ஷை பெறாதவரும் உச்சிக்குமுன் நீர் கூட்டித் தரிக்க வென்று ஆதித்யபுராணங் கூறுகின்றது. ஈரவஸ்திரத்தையேனும ஒருவஸ்திரத்தையேனும் உடுத்துக்கொண்டும், கௌபீனந் தரியாமலும், நிருவாணமாக இருந்து கொண்டும் விபூதி தாரணஞ் செய்யலாகாது. அங்ஙனஞ் செய்யின் நிஷ்பலமாகும். தரிக்கும் இருவஸ்திரமும் சுத்தமுள்ளனவாய், வெண்ணிறத்தனவாய், உலர்ந்தனவா யிருக்கவேண்டும். நைட்டிகப் பிரமசாரியும் சந்நியாசியும யாசகராய் வேறு வஸ்திர மில்லா திருக்கின் ஒரு வஸ்திரத்தையே இருவஸ்திரமாகப் பாவனை செய்து தரிக்கக்கடவர். அதுவும் ஈரவஸ்திரமாயின் சூரிய குருர மந்திரத்தினாலே யுலர்ந்ததாக அபிமந்திரித்து, ஓம் சிவாயநம என்று சலத்தைப் புரோக்ஷித்து, ஓம் கவசாயநம: என்று தலையிற் போட்டு, மகாமுத்திரையுந் தேனுமுத்திரையுங் காட்டி, ஓம் அஸ்திராயபடு என்று தலையையும், ஓம் இருதயாயவௌஷடு என்று மற்றை யங்கங்களையுந் துவட்டக்கடவர். ரோகினாலே ஸ்நானம் பண்ண இயலாதவருந் தலை தொடங்கிக் கால்வரையும் சொல்லியபடி துவட்டுதலாகிய காபிலஸ்நானத்தை முடித்துக் கொண்டு தரிக்கக்கடவர். தரிக்கு மிடத்து நுரை, குமிழி, நுண்ணிய புழு என்னு மிவையுள்ள நீரும்,

* ஆசாரியராவார் அம்மூன்று தீக்ஷையோடு ஆசாரியாபிடேகமும பெற்றவர். அவரும கிரியாகுரு, ஞானகுரு என இருவகையர்.

வடித்தெடாத நீரும், இழிகுலத்தார் தீண்டிய நீரும், கலங்க னீரும், பாசி நீரும், உவர் நீரும், வெந்நீரும், பழமையாகிய நீரும், சொறி நீரும், கூவல் நீரும் ஆகாவாம்.

## சந்தியாவந்தன சங்கற்பம்.

முதலில், "சிவசிவ சம்போ ராக்ஞபா ப்ரவர்த்த மானஸ்யாத்ய ப்ரஹ்மணோ த்விதிய பரார்த்தே, ஸ்வேதவராஹகல்பே, வைவஸ்வத மந்வந்தரே, கலியுகே, ப்ரதமபாதே, ஜம்புத்வீபே, பாரதவர்ஷே, பாதகண்டே, மேரோர் தக்ஷிண திக்பாஹே, பாஸ்கரக்ஷேத்ரே, ஸமஸ்ததேவதா ப்ராம்மணஸ்ஸந்நிதௌ, அஸ்மின் வர்த்தமான விவகாரிக சாந்திரமானேந..ஸம்வத்ஸரே...அயநே...ருதௌ...மாஸே...பக்ஷே...திதௌ...வாஸரே...சிவநக்ஷத்ரே...சிவயோகே...சிவகரணே, ஏவங்குண விசேஷண விஜிஷ்டாயாம், சுபதிதௌ, ஸ்ரீபரமேஸ்வர முத்திச்ய, மமோபாத்த துரிதக்ஷயத்வாரா, ஸ்ரீபரமேஸ்வரப் பிரீதி யர்த்தம்...ஸந்தியா முபாசிஷ்யே." என்று சங்கற்பஞ் செய்க. அதன்பின்னர்,

## பூமி சுத்தி.

சுத்த சலங்கொண்டு தானிருக்கும் பூமியை ஓம் அஸ்திராயபடு என்று சுத்திசெய்து, ஆசனத்திலே கிழக்கு நோக்கியாயினும் வடக்கு நோக்கியாயினும் இருந்து கொண்டு, ஓம் கணபதயேநம: என்று முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினுலும் நெற்றியிலே மூன்றுதரங் குட்டி, ஓம் குருப்பியோ நம: என்று நமஸ்காரமுத்திரையினலே கும்பிடுக. சிலர், இங்ஙனமன்றி "உத்திஷ்டந்து பூதபிசாச்சா ஏதேபூமி பாரகா ஏதேஷாமவிரோதே நப்ரம்மகம் மசர்மாரபே' என்று நீரை யெடுத்து நிலத்திற் றெளித்துச் சுத்தஞ் செய்வர்.

## சலசுத்தி முதலியன.

அநுட்டான சலத்தை ஓம் **சிவாயநம** என்று நிரீக்ஷண முத்திரையினாலே * நிரீக்ஷணஞ் செய்து, **ஓம் அஸ்திராய படு** என்று நிமிர்த்திய பதாகை முத்திரையினாலே புரோக்ஷணஞ் செய்து, **ஓம் அஸ்திராயபடு** என்று சுட்டுவிரலை நீட்டிய கையினாலே தாடனமும், **ஓம் கவசாயவௌஷடு** என்று கவிழ்ந்த பதாகை முத்திரையினாலே அப்பியுக்ஷணமும், வலக்கைப் பெருவிரலொழிந்த விரல்களினால் இடவுள்ளங் கையிலே **ஓம் அஸ்திராயபடு** என்று மூன்றுதரந் தட்டுதலாகிய தாளத்திரயமுஞ் செய்து, **ஓம் அஸ்திராயபடு** என்று சோடிகை முத்திரையினாலே திக்குபந்தனமும், **ஓம் கவசாய வௌஷடு** என்று சுட்டு விரல் நீட்டிய கையினாலே அவகுண்டனமுஞ் செய்து, **ஓம் சிவாய வௌஷடு** என்று தேனுமுத்திரையுங் கொடுக்க வேண்டும்.

## அஸ்திர சந்தியோபாசனம்.

அதன் பின்னர், **ஓம் அஸ்திராயநம** என்று நிமிர்த்திய பதாகை முத்திரையினாலே சலத்துளியை மூன்றுதரஞ் சிரசின்மேல தெளித்து, **ஓம் அஸ்திராய சுவாகா** என்று மூன்றுதரந் தருப்பணஞ்செய்து, **ஓம் அஸ்திராயநம** என்று

---

* நிரீக்ஷணமாவது சூரியன், சந்திரன், அக்கினி யென்னு மூவரும் முறையே வலக்கண்ணும், இடக்கண்ணும நெற்றிக்கண்ணு மாவாராதலால் வலக்கண்ணினாலே அதனை யுலர்த்தினதாகவும், நெற்றிக்கண்ணினாலே தகித்ததாகவும், இடக்கண்ணினாலே அமுதங் கொண்டு நனைப்பதாகவும் பாவிப்பது. புரோக்ஷணமாவது அக்கனம் நிரீக்ஷணஞ் செய்யப்பட்டது சுத்தியாதற் பொருட்டுத் தெளிப்பதாம். தாளத்திரயமாவது ஒருவன் கல்லை யடிக்கும்போது அதனிடத்துப் பொறி தோன்றுமாறு போலச் சடமாகிய இந்தப் பதார்த்தத்தினிடத்துஞ் சித்துண்டாதற் பொருட்டுத் தட்டுவதாம். அப்பியுக்ஷணமாவது அந்தப் பதார்த்தத்தினிடத்துத் தோன்றிய சித்தினது பிரகாசமானது தன்னுடைய தானத்தைவிட்டு நீங்காமல் இருக்கும பொருட்டு மூடுவதாம்.

பத்துத்தரஞ் செபித்து, ஓம் அஸ்திராய சுவாகா என்று மீட்டும் ஒருதரம் தருப்பணஞ்செய்க.

## ஆ ச ம ன ம்.

அதன்பின் தருப்பையினாலே செய்யப்பட்ட பவித்திரத்தையேனும், பொன் வெள்ளி யென்னு மிவைகளாற் செய்யப்பட்ட பவித்திரத்தையேனும் அநாமிகை விரலிற்றரித்து, வலக்கையை விரித்துப் பெருவிரலையுஞ் சிறுவிரலையும் பிரித்துவிட்டுப் பெருவிரலடியிற் சார்ந்த உழுந்துமிழ்ந்து, ஆன்மதத்துவம் இருபத்துநான்கும், வித்தியாதத்துவம் ஏழும், சிவதத்துவம் ஐந்துமாகிய முப்பத்தாறு தத்துவங்களுஞ் சுத்தியாகும் பொருட்டுச் சலத்தினாலே ஓம் ஆத்துமதத்துவாய சுவதா, ஓம் வித்தியாதத்துவாய சுவதா, ஓம் சிவதத்துவாய சுவதா என்று பிரம தீர்த்தமாகிய அங்குட்டத்தின் (பெருவிரலின்) அடி அதாத்திலே படும்படி ஆசமனம் பண்ணி, ஓம் அஸ்திராயபடு என்று அதரங்களிரண்டனையும் வலக்கையின் பெருவிரலடி கொண்டு இடமாக இரண்டுதரமும், உள்ளங்கை கொண்டு கீழாக ஒருதரமுந் துடைத்துக் கைகழுவுக.

இங்ஙனமன்றிச் சிலர் ஓம் அச்சுதாயநம:, ஓம் அனந்தாயநம:, ஓம் கோவிந்தாயநம: எனவும், சிலர், ஓம் கேசவாயஸ்வாகா, ஓம் நாராயணஸ்வாகா, ஓம் மாதவாயஸ்வாகா எனவும் உச்சரித்து ஆசமனஞ் செயவர். இவை சிவாகமத்திற்கு மாறென்க. ஸ்மிருதி வழிச்செய்யப்படுவது ஸ்மிருதி யாசமனம் எனவும், சுருதி வழிச்செய்வது சுருதி யாசமனம் எனவும் சொல்லப்படும்.

## மார்ச்சனம்.

இது சரீரத்தின் புறச்சுத்தி சாதனமாயுள்ளது. கைகழுவிய பின்னர்ச் சமார்த்தர் முதலாயினோர், வலக்கரத்

தாற் றர்ப்பை கொண்டு நீரையெடுத்து "ஓம் ஆபோஹிஷ்டாமயோபுவ:" என்று தலையின்மீதும், "ஓம தானவூர்ஜ்ஜே ததாதனு" என்று காலினிடத்தும், "ஓம் மஹோரணயச் சக்ஷஸே" என்று தேகத்தின் கீழிடத்தும், "ஓம் யோவஸ்ய சிவதமோரச" என்று ஹ்ருதானத்தும், "ஓம் தஸ்ய பாஜயதேஹ ந" என்று பாதத்தினும், "ஓம் உஸ தீரிவபதா" என்று சிரமீதும் "ஓம் தஸ்மா அரங்கமாமவ" என்று பின்னருஞ் சிரமீதும், "ஓம் யஸ்யக்ஷயாய ஜிந்வத" என்று கீழ்த் தேசத்தும், "ஓம் ஆமோஜன யதாச்சந" என்று பாதமீதும் ஒரே தாரையாய்ச் சொரிந்து புல்லோடு நீரைக் கீழ்விடுத்துச் செய்வர். சிவாகம முறைப்படி செய்யவேண்டிய மார்ச்சன மெவ்வாறெனில், ஓம் இருதயாயவௌஷடு என்று பெருவிரலோடு கூடிய அணிவிரலினாலே முகம், வலமூக்கு, வலக்கண், இடக்கண், வலக்காது, இடக்காது, நாபி, மார்பு, வலப்புயம், இடப்புயம், சிரசு என்னும் இப்பன்னிரண் டிடங்களையுந் தொட்டு விடுதலாம்.

சிலர், ஓம் கேசவாயநம: என்று பெருவிர னுனியால் வலக்கபோலத்தையும், ஓம் நாராயணாயநம: என்று இடக்கபோலத்தையும், ஓம் மாதவாயநம: என்று இடக்கண்ணையும், ஓம் விஷ்ணுவேநம: என்று சுட்டுவிர னுனியால் வலமூக்கினடியையும், ஓம் மதுசூதனாயநம: என்று இடமூக்கினடியையும், ஓம் திரிவிக்ரமாயநம: என்று சிறுவிரனுனியால் வலக்காதினையும், ஓம் வாமனாயநம: என்று இடக்காதினையும், ஓம் ஸ்ரீதராயநம: என்று நடுவிரனுனியினால் வலப்புயத்தையும், ஓம் இருஷிகேசாயநம: என்று இடப்புயத்தையும், ஓம் பத்மநாபாயநம: என்று கையைக் குவித்து நெஞ்சினையும், ஓம் தாமோதராயநம: என்று கையை விரித்துச் சிரத்தினையும் முறையே தொடுவதுமுண்டு. இது சிவாகம விரோத

மாம். ஸ்மார்த்த நிலையினர் முக்கியமாய் இதை யனுசரிக்கின்றனர். அங்ஙன மாயினும இக்ரமங்கள் யாவும் பரம்பொருளாகிய சிவபெருமானுக்கே சிறப்பாவமைதல் "கேசவாதி நாம சிவபாத்துவ நிருபணத்தாற்" போதரலின் பொருந்துமென்றலு மொன்றாம்.

## திருநீற்றின் அளவு.

பிராமணர் முதலிய நான்கு வருணத்தாரும் விபூதி தரிக்கு மிடத்து, பிராமணர் ஒரு கழஞ்சு விபூதியும், க்ஷத்திரியர் ஒன்றரைக் கழஞ்சும், வைசியர் இரண்டு கழஞ்சும், வேளாளர் இரண்டரைக் கழஞ்சுங் கொள்ள வேண்டும். அவ்வவ் வருணத்துப் பெண்களும் இவ்வளவே கொள்ளக் கடவர். ஒரு கழஞ்சு என்பது பன்னிரண்டு பணவெடையுள்ளது.

## விபூதி சுத்தி.

அதன் பின்னர், விபூதியை வலக்கைப் பெருவிரல், நடுவிரல், அணிவிரல்களால் எடுத்து இடக்கையில் வைத்துக்கொண்டு, ஓம் அஸ்திராயபடு என்று விபூதியிலே சலத்தைத் தெளித்து, அவ்விபூதியில் ஒரு சிறுபாகத்தைப் பெருவிரல் அணிவிரல்களினாலே தொட்டு, ஓம் அஸ்திராய உம் படு என்று இராக்ஷதர் பொருட்டு நிருதி மூலையாகிய தென்மேற்குத் திசையிற் றெளித்து, ஓம் சிவாயநம என்று நிரீக்ஷணஞ் செய்து, ஓம் அஸ்திராயபடு என்று புரோக்ஷண தாடனங்கள் பண்ணி, ஓம் கவசாய வௌஷடு என்று அப்பியுக்ஷணமுஞ் செய்து, விபூதியை வலக்கையால் மூடிக்கொண்டு, ஓம் நிவிர்த்தி கலாயைநம:, ஓம் பிரதிஷ்டா கலாயைநம:, ஓம் வித்தியா கலாயைநம:, ஓம சாந்திகலாயைநம:, ஓம் சாந்தியாதீத கலாயைநம: என்னும் பஞ்சகலா மந்திரத்தையும், ஓம்

ஈசாநாயநம:, ஓம் தற்புருஷாயநம:, ஓம் அகோராயநம:, ஓம் வாமதேவாயநம:, ஓம்சத்தியோசாதாயநம:, ஓம் இருதயாயநம:, ஓம் சிரசேநம:, ஓம் சிகாயைநம:, ஓம் கவசாயநம:, ஓம் நேத்திரேப்பியோநம:, ஓம் அஸ்திராயநம: என்னுஞ் சங்கிதா மந்திரம் பதினொன்றனையும் உச்சரித்து அபிமந்திரித்து, ஓம் கவசாயவௌஷடு என்று அவகுண்டனமுஞ் செய்யக்கடவர்.

## திரிபுண்டர தாரணம்.

அங்ஙனஞ் செய்த பின்பு, வலக்கையின் பெருவிரல் அணிவிரல்களால் விபூதித் தூளியை எடுத்து, ஓம் அஸ்திராயபடு என்று தலை தொடங்கிக் காலளவும் பூசி, இடக்கையிலுள்ள விபூதியைப் பெருவிரலோடு கூடிய நடுவிரலினால் ஓம் இருதயாயநம: என்று நீர் விட்டு, ஓம் கவசாயவௌஷடு என்று குழைத்து, நடுவிரல் மூன்றினாலும் ஓம் ஈசாநாயநம என்று உச்சியில் மூன்று தரமும், ஓம் தற்புருஷாயநம என்று நெற்றியில் மூன்றுதரமும், ஓம் அகோராயநம என்று நெஞ்சினில் மூன்றுதரமும், ஓம் வாமதேவாயநம என்று நாபியில் ஒருதரமும், ஓம் சத்தியோசாதாயநம என்று முறையே வலமுழந்தாள், இடமுழந்தாள், வலப்புயம், இடப்புயம், வலமுழங்கை, இடமுழங்கை, வலமணிக்கட்டு, இடமணிக்கட்டு, வலவிலாப்புறம், இடவிலாப்புறம், முதுகு, கழுத்து என்னு மற்றை யிடங்களில் ஒவ்வொரு தரமுந் தரிக்கக் கடவர்.

சிலர், சுவத்திகாசனமாக இருந்து கொண்டு, ஆசமனஞ் செய்து, விபூதியைக் கையில் வைத்துக் கொண்டு,

ஓம் த்ரியம்பகம் யஜாமஹே சுகந்திம் புஷ்டிவர்த்தநம்
உர்வாருக மிவபந்தனன் மிர்த்யோர் மிர்க்ஷீயமாமிர்தாத்.

என்னு மந்திரத்தைச் சொல்லிச் சலம் விட்டுக் குழைத்து,

ஓம் சத்யோசாதம் ப் பத்யாமி ஸத்யோஜாதாயவை நமோநம:
பவேபவே நாதிபவே பவஸ்வமாம் பவோத் பவாயநம:
வாமதேவாய நமோ ஜேஷ்டாய நமஸ்ரேஷ்டாய நமோ
ருத்திராயநம:
காலாய நம: கலவிகரணாய நமோ பலவிகரணாயநமோ
பலாயநமோ பலப்ரமதனாயநமஸ் ஸர்வபூத தமனாயநமோ
மனோன்மனாயநம:
அகோரேப்யோத கோரேப்யோ கோரகோரதரேப்ய:
ஸர்வேப்ய:
ஸர்வசர்வேப்யோ நமஸ்தே அஸ்து ருத்ரரூபேப்ய:
தத்புருஷாய வித்மஹே மஹாதேவாய தீமஹீ தந்நோருத்ராய
பிரசோதயாத்
ஈசானஸ் ஸர்வவித்யானாம் ஈச்வரஸ் ஸர்வபூதானாம்
ப்ரம்ஹாதிபதி ப்ரஹ்மணோதிபதிரு ப்ரம்ஹாசிவோமே
அஸ்து ஸதாசிவோம்.
என்னு மந்திரங்களைச் சொல்லித் தரிப்பவரு முளர்.

இங்ஙனம் நடுவிரன் மூன்றனுந் தரிக்குந் திரிபுண்டரம் திருநீற்றுமுத்திரை யெனவும் பெயர் பெறும்.

## அநுலோம விலோம தாரணம்.

இதுவன்றிப் பெருவிரல், நடுவிரல், ஆழிவிரல் என்னும் மூவிரல்களாலும் அநுலோம விலோமமாக, அகாரமே பெருவிரல், உகாரமே நடுவிரல், மகாரமே ஆழிவிரல் என்ற பாவனையுடன், மூவெழுத்து, முக்குணம், மூவுலகம், மூவகையான்மா, மூன்று வேதம், மூவகை யக்கினி, மும்மூர்த்தி என்று முக்குறியையும் அநு சந்தானம் பண்ணித் தரிப்பதே விசேடமாம். அதுவே அநுலோம விலோம தாரணம் எனப்படும். தரிக்கின் மகாபாதகங்கள் சூரியனைக்கண்டபனி போல் நீங்கு மென்க. அதனை அநுலோமப் பிரதிலோமம் என்றுங் கூறுவர்.

உலோகாக்ஷிஸ்மிருதி.

[illegible]
[illegible]
[illegible]

## திரிசூல இடப முத்திரைகள்

அல்லது,

## திருவிலச்சினை.

சிவபெருமானது படையாகிய சூலவடிவாகவும், வாகனமாகிய இடப வடிவாகவும் விபூதி கொண்டு தரிப்பது திருவிலச்சினை யெனப்படும். திருநாவுக்கரசு நாயனார் சமண மதத்தினின்றுஞ் சைவ சித்தாந்த வுண்மை நிலையினுற்று, அரியதமிழ்வேதம் பாடியருளுங் காலத்து, திருத்தூங்கானை மாடச் சிவபரஞ் சுடரைநோக்கி, பெருமானே! பொய்ச்சமயப் படுகுழியில் வீழ்ந்த புன்மை யுடல்கொண்டு வாழேன். என்னுயிரைக் காப்பதற்குத் திருவுள முண்டேல் அக்குற்றங் கணீங்கத் தேவரீரது திருவிலச்சினையைப் பதித்தருளல் வேண்டு மென்று பிரார்த்தித்து,

(தேவாரம்-திருத்தூங்கானைமாடம்-க-க௦.)

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றிசெய்யு
மென்னா விகாப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல
மின்னா ருமூவிலைச் சூலமென் மேற்பொறி மேவுகொண்டற்
றுன்னார் கடந்தையுட் டூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே.

கடவுந் திகிரி கடவா தொழியக் கயிலையுற்றான்
படவுந் திருவிர லொன்றுவைத் தாய்பனி மால்வரைபோ
லிடபம் பொறித்தென்னை யேன்றுகொள் ளாயிருஞ் சோலைதிங்க
டடவுங் கடந்தையுட் டூங்கானை மாடத்தெந் தத்துவனே.

என்றவற்றை முதலு மிறுதியுமாக வுடைய தேவாரத் திருப்பதிகத்தை ஓதியருள, சிவபெருமான் அருள் கூர்ந்து, ஓர் பூதவழியாற் சூலக் குறியையும் இடபக் குறியையும் பொறித்தருளினர். அதற்கு மேற்கோள்.

### பெரிய புராணம்.

நீடுதிருத் தூங்கானை மாடத்து நிலவுகின்ற
வாடகமே ருச்சிலையா னருளாலோர் சிவபூதர்
மாடொருவ ரறியாமே வாகீசர் திருத்தோளிற்
சேடுயர்மூ விலைச்சூலஞ் சினவிடையி னுடன்பொறித்தார்.

அவைபோலச் செம்பு, வெள்ளிமுதலிய உலோகங்களினாலே திரிசூலஞ் செய்தும், இடபவுருப் பண்ணியும் அவற்றால் நெற்றி, தோள் முதலாய தானங்களில் விபூதி தரிப்பதுமுண்டு. அங்ஙனந் தரிப்பவர் சிவலோகத்திலே யொருகாலும் நீங்காது வாழ்ந்திருப்பார்கள். அன்றியும், அது பரசமய பாதகம், உடற் குற்றம் முதலிய பாவங்களை யெல்லாம் நீக்கி ஞான முத்திகளை யளிக்கும். இது கண்டே வைணவர்களும் சக்கர வடிவாகச் செய்யப்பட்ட இரும்பு கொண்டு சக்கரலாஞ்சனம் என்று சுட்டுக் கொள்வார்கள். விபூதி கிடையாக்கால் சந்தனத்தாற் றரித்தலுமுண்டு. இச்சூல முத்திரையைக் கண்டே வைணவர் மண்ணை ஊர்த்துவபுண்டரம் என்று இட்டுவந்தனர் எனத் தெரிகின்றது. இது பற்றியே யோர் புலவர் நாமத்தை யோசிக்குங்காற் சூலமுத்திரை யென்றார்.

வைரவக் கடவுள் இரத்த பிச்சை கொண்டு, தேவர் அகங்காரத்தை யடக்கச் சென்ற காலத்து, விஷ்ணுவின் நெற்றியிற் சூலத்தாற் குத்தினர் என்றும், அதனிடத்திலிருந்து ஆயிரம் வருடம் வரையும் இரத்தம் வடிந்தும் பிரம கபால

த்திற் பாதியும் நிறைந்தில தென்றும், திருமால் மூர்ச்சையாகி வீழ்ந்திட, இலக்குமி தேவியார் காரி யுருத்திரரைத் துதித்து எழுப்பு வித்தனர் என்றும், அதனால் அச்சூல முத்திரையைத் தம் நெற்றியில் விட்டுணு, விபூதியாவிட்டு வந்தாரென்றும் பொருள்பட, "சூலக் குறியல் லவோ நாமம் யாதெனச் சொல்லுவதே" என்றுங்கூறினர். மற்றைய அவசிய காலங்களிற் றரிப்பவரும், நோயாளரும் "சிவ சிவ" என்று நெற்றி முதலிய தானங்களிற் றரிக்கக்கடவர்.

தரிகுங் காலத்து நிலத்திலே சிந்தாவண்ணந் தரிக்க. எத்தனை யணுக்கள் பூமியில் விழுகின்றனவோ அத்தனை வருடம் இரௌரவ நரகத்தில் வருந்துவர். வாயைத் திறந்துகொண்டும், தலையை யசைத்துக் கொண்டும், பிறருடன் பேசிக் கொண்டும், பராமுகஞ் செய்து கொண்டும், சிரித்துக்கொண்டும், நடந்து கொண்டும், தலையைக் கவிழ்ந்து கொண்டும், கண்ணாடி பார்த்துக் கொண்டுந் தரித்தல் குற்றமாம். ஒரு விரலாலேனும் ஒரு கையாலேனும் அணியற்க. நிலத்திலே யொருகால் விபூதி சிந்துமாயின் அதனை யெடுத்துவிட்டு, அவ்விடத்தைச் சலத்தால் மெழுக வேண்டும். இங்ஙனந் தரித்த பின்னர்ச் செய்ய வேண்டியனவற்றை யெல்லாஞ் செய்து கொள்ளக் கடவர். அக்கினி யின்றி யாகம் நடவாததுபோல, விபூதியின்றிச் சிவார்ச்சனை முதலிய கிரியைகள் நடக்கா. விபூதி யிடாதவர் முகத்தைக் கண்டால், நல்லோர் அவரை விட்டகன்று பஞ்சாக்ஷர மந்திரம் நூறுருச் செபிக்கக்கடவர்.

## இலிங்க புராணம்.

அருமறை வேள்விக் கனலினீ றெடுத்துப் பிரணவத்தையமைய வோதி, யுரைபெறு பஞ்சப் பிரமத்தா லுசசி நெற்றி யுரக்குய்யர் தாள்கள், வரன்முறையே யினிதணிந்து பிரணவத்தா லுடனமுழு

தும் வயங்கமண்ணி, விரிதகில் வேறென்றணிந்து விளங்குமறை மந்திரங்கள் விளம்பவேண்டும்.

விபூதியைச் சாபால வுபநிடதத்திற் கூறப்பட்ட மந்திரங்களினால் உத்தூளனமாகத் தரித்துக் கொண்டு, பஞ்சப் பிரம முதலிய மந்திரங்களினற் றிரியக்கு திரிபுண்டரமாக ஐந்து தானங்களிற் றரிப்பதுமுண்டு. நால்வகை யாச்சிரமத் தாருள், பிரமசாரி மேதாவி முதலிய மந்திரங்களையும், சந்நியாசி பிரணவ மந்திரத்தையும் உச்சரித்து, ஓர்கால் திரிபுண்டரம் அணியினும் அணியலாம்.

சூதசங்கிதை.

மேதாவிமுதன்மனுக்களாற்பிரமசாரியுமெய்ப்பிரணவத்தா
லோதார்வமுறச்சந்நியாசியுமுப்புண்டரநன்குறுத்தல்வேண்டும்.

## பன்னிருமண்குறிப் பரிபவம்.

மண்ணினால் க0, கூ, அ, எ, சு, ரு, அங்குல அகலமுடையதாக, தீபம், மூங்கில் இலை, தாமரையரும்பு, மீன், ஆமை, சங்கு இவையிற்றைப் போன்ற வடிவுடையதாக நாமம் போட வேண்டுமென்று வைணவர் எழுதிவைத்திருக்கின்றனர். திருப்பாத வடிவாக இடவேண்டுமென்று கூறப்படவில்லை. கண்ணாடி பார்த்துக் கொண்டும், குச்சுக்கொண்டுந் தரிக்கும்படி எழுதப்பட்டிலது. அங்ஙன மிருப்பவும் இவர் செய்வதென்னோ? நாமம் போடுங்கால், ஓம்கேசவாயநம: என்று நெற்றியிலும், நாராயணாயநம: என்று வயிற்றிலும், மாதவாயநம:என்று மார்பினும், கோவிந்தாயநம: என்றுகழுத்திலும், விஷ்ணுவேநம: என்று வலப்பக்கத்து வயிற்றிலும், மதுசூதனாயநம: என்று வலப்புயத்தினும், திரிவிக்கிரமாயநம: என்று வலக்கழுத்தினும், வாமனாயநம: என்று இடப்பக்கத்து வயிற்றினும், ஸ்ரீதராயநம: என்று இடப்பு

யத்திலும், இருஷிகேசவாயநம: என்று இடக்கழுத்திலும், பத்மநாபாயநம: என்று முதுகு அடியிலும், தாமோதராய நம: என்று கழுத்தின் பின்னும் ஆகப் பன்னிரு நாமமுந் தீட்ட வேண்டு மென்று சொல்கின்றனர். இவையிற்றிற்கு வேதப் பிரமாண மில்லாமையானும், இவை ஒன்றற் கொன்று பொருந்தாமையானும், அர்ச்சாவதார நாராயண விக்கிரகங்கள் பலவற்றிற்கும் அங்ஙன மிடப்படாமையானும், அது தன்னொரு பொருள் கருதிக் கூறலாகிய குற்றத்தின் பாற்பட்ட பரிபவமேயென்க. இருசமயவிளக்கம் என்னுந் தூஷணச் சுவடி கூறுவன வெல்லாம் முரணு யொழியு மாற்றை இருசமய விளக்கச் சூறுவளியிற் காண்க.

### வைணவ வாயாப்பு.

சுடர்வேயிலை நத்தோடிழி சுறவாமையின் குறியா
வடர் மண்குறி * பத்மதந்தக லத்தேயிட விதியே
தொடியாடிகொண் டுறுகுச்சது கைக்கொண்டடி வடிவா
யிடின்மாலது குறியாரது பகிதம்பிது பதகம்.

நீடென்கலை யேனைக்கலை கெரிமஞ்சள்குங் குமமா
யாடுங்குறி நாலுட்பெரி தறையீரெது வுண்மை
நாடும்மகி சயனந்†திரு வடமாடிய ரங்கந்
தேடுங்குறுங் குடிமாயருக் கிலமட்குறி தெரியீர்.

### நாராயணமூர்த்தி

## திருநீற்றால் மாயை நீங்கிப் பிள்ளைபெற்றது.

முன்னோர் காலத்தில் நிலவுலகம் ஊழிவெள்ளத்தில் ஒடுங்க, அக்கொடிய பிரளய வெள்ளத்தின் மேல் சிவாஞ்ஞையால் விரிந்து வளர்ந்த ஆலமரத்தின் இலையொன்றிலே,

* பத்மதந்தலம்-பத்து முதல் ஐந்து அங்குலம் வரையுமுள்ள அகலம். ஆடி—கண்ணாடி. குச்ச—நூர். மாலது குறி யாருடையது என்க. அகிசயனம்—அனந்தசயனம் என்னுந்தலம். † திருவடமாடியது தன் கணவனுயிரைப் பெறற்கு என்று திருவாலவக்காப் புராணம் கூறிற்று.

ஸ்ரீமந் நாராயண மூர்த்தியானவர் யோக நித்திரை செய்தனர். முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் உலகத்தை முன்போல நிறுத்த நினைந்து, பிரளய வெள்ளந் தமது திருவடிப் பரட்டினிற்கும் அத்துணைப் பெருவடிவு எடுத்துச் சென்று, திருமால் பார்த்து வியக்கும்படி அவர்க்கெதிரில் நின்றருளினர். மாயனார் அறிவு மயங்கி "நீ யார்" என்று கேட்டனர். பெருமானார் "இவன் றன்னிடத்துள்ள மாயையினாலே மயங்கினன்" என்று திருவுளங் கொண்டு, பரிசுத்தமான திருவெண்ணீற்றை யவர்க்கு அருளி மாயையைப் போக்கினர். நீறுதரித்த வுடனே சீதரக்கடவுள் ஞானோதயமுடையராய் நான்குவேதங்களாலுந் துதித்தனர். சிவபிரான் திருநோக்கஞ் செய்து, திருமாலே! நீ எம்முடைய சத்திகள் நான்கனுள் ஆண் சத்தியாவை. முன்னர் அரிகர புத்திரனைப் பெற்ற சத்தி வடிவத்தை யெடுக்குதி. பிரமனைத் தோற்றுவித்துப் புவனங்களைப் படைப்பிக்க வேண்டு மென்று திருவாய் மலர்ந்தருள, திருமால் அவ்வடிவு கொண்டு பெருமானைத் தழுவ, அவரது ஊர்த்துவ சுவர்ண இரேதசு நாபியிற் றங்கியதனால், அங்குக் கமலமொன்று அலர்ந்தது. அதினின்றும் தந்தையார் ஆகிய சிவபெருமானைப் போலச் சுவர்ண நிறமுடையராய், ஐம்முகத்துடன் பிரமதேவர் தோன்றினர். திருமால் மகிழ்ந்து பின்னரும் விபூதியின் பெருமையைக் கொண்டாடினர்.

### உபதேச காண்டம்.

வெள்ளொ ளித்திரு நீற்றினா லாலிலை மேலோன்
கள்ள மாயைபோய்க் கண்ணுதற் காண்குறப் பெற்றான்
பிள்ளை யாமென மலரயற் பயந்தனன் பெரியோ
ருள்ள மோர்வது திருவெண்ணீ றல்லதொன் றுளதோ.

## விபூதியாற் பிரமர் மயக்க மகன்றது.

திரிபுரதகன நிமித்தம் உலகமாகிய தேரிலே, நான்கு வேதங்களாகிய குதிரை பூட்டி, பிரணவமாகிய முட்கோல் தாங்கிப் பிரமர் சாரதியாக நின்றார். பெருமானார் மேருமலையை வில்லாகக் கொண்டு, நாராயணரைப் பாணமாக்கி, அப்பாணத்தின் நுனியில் வடவையை வைத்து, அம்பின் இறகாக வாயுவை நிறுத்த, அதிற் கட்டிய மணிகளாகச் சரசுவதிநின்றனள். சாரதியாகிய பிரமர் தமது தேவியாகிய சரசுவதியைக்காணாது ஏங்கி, மனங்கலங்கி யிரங்கி மயக்கமுற்றனர். அதுகண்ட பெருமானார், தாமே சரசுவதி யுருவங் கொண்டு, திருவெண்ணீற்றை யவர்க்குத் தரித்து அவரது மயக்கை நீக்கி, பாண்டரங்கம் என்ற திருக்கூத்தை யாடியருளினர்.

சிலப்பதிகாரம் -கடலாடுகாதை.

தேர்மு னின்ற திசைமுகன் காணப்
பாரதி யாடிய வியன்பாண் டரங்கமும்.

விட்டுணு பாணமான விடயத்தைப்போலி வைணவர் சிலர் ஒத்துக்கொள்ளாது மலைவுபடுவர். பின்னர் வரும் பிரமாணங்களால் அது தாபிக்கப்பட்டு நிகமனமு் ஆதலால், அவர் மலை வொழியும். ஒழியவே, சிவபெருமானுக்குப் பாணமாய் நின்று அவரேவல் கேட்ட நாராயணர், அவரது திருவருட்குறிக் கேதுவாய விபூதியை யணிந்தார் என்றதனால் வருமிழுக் கென்னையோ?

ஷ்டி காதை ௩௬-௩௩

பாரதி யாடிய பாரதி யரங்கத்துத்
திரிபுர மெரியத் தேவர் வேண்ட
வெரிமுகப் பேரம் பேவல் கேட்ப
வுமையவ ளொருதிற னாக வோங்கிய
விமையவ னாடிய கொடுகொட்டி யாடலும்.

### திருமங்கையாழ்வார் செய்யுள்.

குழனிற வண்ணநின் கூறுகொண்ட
தழனிறவண்ணன் கண்ணார்நகரம்
விழநனி மலிசில்ல வினைசெய்தங்
கழனிற அம்பது ஆனவனே.

என்று நாலாயிரப் பிரபந்தத்திற் கூறப்பட்ட இச்செய்யுளொன்றினாலேயே அதுசித்தாந்தமாகும். ஆதலால், வேறு பிரமாணங் காட்டாதுவிட்டாம். காளமேகப் புலவர் முளையடித்தாற்போலச் சொல்லிய பாடலொன்றுந் தருகின்றாம்.

நாணென்றா னஞ்சிருக்கு நற்சாபங் கற்சாபம்
பாணந்தான் மண்டின்ற பாணமே - தாணுவே
சீராரூர் மேவுஞ் சிவனேநீ யெப்படியோ
நேரார் புரமெரித்த நேர்.

## விபூதியின் அற்புதச் செய்கை.

"*திருநீறிட்டார் கெட்டார் சிவனைமறந்தா ருய்ந்தார்"என்ற முதுமொழிப்படி விபூதியிட்டுக் கெட்டவர் யார்? ஒருவருமிலர். எல்லாரும் பயன் பெற்றவரே. ஆயினும் சுத்த வித்தைகளிற் கூறப்பட்டார் சிலரைக் காட்டுதும். திருநீற்றை யிகழ்ந்த வங்கதேச ராசனாகிய புயபலன் எனபவன் தன் அரசாட்சியையும் மனைவியையும் இழந்து ஐயமேற்றுப், பின் பிராமணோத்தமரால் திருநீறிடப் பெற்றுப் பகைவரையும் வென்று, மனைவியையும் அரசியலையும் பெற்றனன். காஸ்மீர தேசத்திலிருந்த சுதர்மன் என்னும் பிராமணனும், அவன் றம்பியும் பிரம விஷ்ணுக்களைக் கடிந்து பேசியதனால், அவர்கள் ஊமையாகவும் முடவனாகவும் சாபமிட, அதனை விபூதிகொண்டு ததீசிமுனிவர் போக்கி நற்கதியடைவித்தனர். திரிபுர மழிக்கு நிமித்தம் தேர்ச்சாரதியாக நின்ற பிரமன் சரசுவதி தேவியின் பிரிவை யாற்றாதவனாய்

---

* திருநீறு இட்டு ஆர் கெட்டார், சிவனை மறந்து ஆர் உய்ந்தார் எனக் கொள்க. இங்ஙனம் ஐயமிட்டார் கெட்டார் எனவருவது முணர்க.

இரங்கி வருந்த, எம்பரமன் பாரதி வடிவாய் நின்று பாண்டரங்கக் கூத்தாடி விபூதியை யவன் நெற்றியிலிட்டு மயக்கத்தைப் போக்கி யருளினர். சர்ப்பன், பஞ்சமேட்டி, அக்கினி என்னு மூன்றசுரர்கள் தேவர்களை யெல்லாங் கொல்ல, வீரபத்திரக் கடவுள் அவ்விடத்துச் சென்று விபூதியைத் தூவி யவர்களை யெழுப்பினர். வாமதேவ முனிவரைக் கொல்வான் பிடித்த பிரமராக்கத னொருவன், அவரது திருநீறு பரவப் பூசிய தேகபரிசத்தினால் நல்லறிவும் திவ்விய தேகமும் பெற்றான். பரதார கமனத்தினாற் றுர்மரண மடைந்து நரகத்தின் மூழ்கிய பிராமணன் தன் பிரேதவுடலில் விபூதி பட்டதனாற் சுவர்க்கத்தை யடைந்தனன். பின்னர்ச் சிவலோக முத்தியுங் கிடைக்கப் பெற்றனன். கௌணிய குலதீபமாய், தவ முதல்வராய், சமயகுரவராய் விளங்கிய திருஞானசம்பந்த மூர்த்திநாயனார், கூன் பாண்டியனது வெப்பு நோயைத் திருநீற்றினாற் றீர்த்தருளினர். முழுநீறு பூசிய முனிவர் எண்ணிறந்தோர் சிவசாயுச்சிய முத்தியை யடைந்தனர் என்று பெரியபுராணம், அகத்திய பக்தவிலாசம் முதலிய உண்மை நூல்கள் முழங்குகின்றன.

திருநீற்றால் நாராயணர் பிரமனைப் பெற்றதும்; மயக்கம் நீங்கியதும், அகலிகை மோகத்தாற் றூது சலிதப்பட்ட பாவத்தினின்றும் அகன்றதும், பாசுபதராய்ச் சாம்பனைப் பெற்றதும், முன்னர் உரைத்தாம். உமாதேவியாராலே சபிக்கப்பட்ட குருட்டுப் பாம்பு வடிவத்தைத் திருமாலொழித்ததும் இத்திருநீற்றினாலாம். மும்மூர்த்திகள் தங்கள் தொழிலைச் செய்வதும், முப்பத்து முக்கோடி தேவர்கள், உருத்திரர்கள், சிவகணர்கள், பதினெண் கணத்தவர்கள் பெருமையடைந்ததும் இதனாலேயாம். சந்தசாச்சுவம் என்னுந் தீர்த்தக் கரைக்கணிருந்த மங்கணசித்தன் என்னும் வேதியன் தத்

துவஞான முத்திகளை யடைந்தது மிதனாலேயாம். விபூதி ருத்திராக்கம் என்னும் படைகளால் மார்க்கண்டேயனார் யமனை வென்றனர். பராசரமுனிவர் மச்சகந்தி யென்பவளின் ஒரு யோசனைதூரம் வரைக்கும் நாறும் புலால் நாற்றத்தைப் போக்கியதும் விபூதியினாலேயாம். அவ்வளவு தூரம் பரிமளம் வீசும்படி செய்ததும் நீற்றினாலேயாம். அவளைச் சேர்தற்குப் பகற்காலத்தை யிரவாகச் செய்ததும் விபூதியே. அக்கூட்டத்தினால் உதித்த வியாசமுனிவர் வேதங்களையெல்லா முணர்ந்து வகுத்தற்கும் துணையாயது நீறேயன்றி, மற்றைய வைணவ மண், குங்குமம், மஞ்சள்களும், மாத்துவர்களின் சந்தனம், சாந்துப் பொட்டுக்களுமல்ல. இதற்கு மேற்கோள பாரதபுராணம் அன்றிப் பிறவருஞ் செய்யுளும் பிறவுமாம். விபூதி தரித்த பேற்றினாலே இம்மை மறுமைப்பயனை யடைந்தவர்களின் றொகையை யளவிட்டறிதல் யாவர்க்கு மரிதரிதேயாம். அதன் அற்புதங்களும் அத்தன்மையனவே யாகும்.

வில்லிபுத்தூரர் பாரதம்.

பரிதி தந்தமா நதிமருங் கொருபகற் பராசரன் மகப்பேறு, கருதி வந்துகன் டென்னையு மெனதுமெய்ச் சமழ்புலவையுமாற்றிச், * சுருதி வாய்மையின் யோசனைப் பரப்பெழு சுகந்தமு மெனக்கீந்து, வருதி நீயெனப் பனியினான் மறைதொரு வண்டுறைக் குறைசேர்ந்தான்.

## விபூதி தூஷண மறுப்பு.

சிலர் அந்தண சாதியிற் பிறந்துஞ் சிவசின்னமாகிய விபூதி ருத்திராக்கங்களை யிகழ்ந்து, அவைதிகமாகிய கோபி

---

* இதில சுருதி வாய்மை யென்றது விபூதியேயாம். அவவாறு வடமொழிப் பாரதத்தும்இருததலால், வேறொன்று கொள்ளல் பொருந்தா. வடமொழிப் பாரதம் விபூதியினாலே மறைத்தாரென்றதையே சுருதிவாய்மை என்று கூறினார். திராவிடவேதமும, வேதத்திலுள்ளது நீறு,, என்று முழங்குவதும் இதனை வலியுறுத்தும் என்க.

சந்தனம், சாந்துப் பொட்டிட்டும், வாயில் மண்ணிட்ட மாயனைப் பரம்பொருளாக மதித்து, நெற்றியில் ஊர்த்துவ புண்டரமாக மண்ணை யிட்டும், வேதாகம விரோதிகளாய், சிவநிந்தகராய், சிவனடியார் தூஷணராய், சிவசின்ன தூஷணராய் அதிபாதகத்திற் காளாகின்றனர். அந்தந்தோ! அவரறியாமைக் கென்செய்வோம். அவர்கள் சிவபெருமானை யிகழ்ந்து தக்கன் செய்த யாகத்திற் சேர்ந்து முன்னர்க் காலத்தில் விலாப் புடைக்க அவிப்பாகங்களை உண்ட பாவங் காரணமாகத் ததீசி மகாமுனிவரும் பிறரும் இட்ட சாபங்களினாற் பூமியிற் பிறந்த சிவதூஷண சிவசமய தூஷண சிவதாச தூஷண சிவசின்ன தூஷண சிவாகம தூஷண அதிபாதகராய்ப் பிறந்த பாஷண்டர் வமிசத்திற்றோன்றினவர்களாகலின், அவர்க்கிவை யியல்பன்றோ? அது நிற்க, இவ்வுண்மைகளை யெல்லாம் அறியாத கிறிஸ்தவர்கள் "மாட்டுச் சாம்பர் பாவத்தைப் போக்குமா" என்றும், "இலந்தைக் காய்போன்ற உருத்திராக்கக் காய்கள் மோக்ஷத்தைக் கொடுக்குமா" என்றும், உங்கள் ஞானிகளாகிய பட்டினத்து அடிகள் முதலாயினோரே "நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன" என்றின்னன போன்ற வாக்கியங்களால், நீறு உருத்திராக்கங்களாற் பிரயோசன மில்லையென்றுங் கூறி யிருக்கின்றனர் என்றும், நம்மவர்களை மருட்டித் திரிகின்றனர். அக்கிறிஸ்தவர்கள் தமது பைபிலிற் கூறப்பட்ட வாசகங்களை யெல்லாம் மறந்து இவ்வாறு குழறுதல் பொருந்துமா? ஆதலால் சைவசமயிகள் யாவரும் பின் வருவனவற்றைக் கேட்டு அவர் தூஷணங்களை நிராகரித்தல் முக்கிய கடமையாம். அக்கிறிஸ்தவர்களது பைபில் நீற்றை யணிய வேண்டும் எனவும், தேவனது முத்திரைக்

ளைத் தரிக்கவேண்டும் எனவும், அவற்றாற் பாவம் நீங்கப்படும் எனவுங் கூறுகின்றது. அவை வருமாறு :—

**எண்ணாகமம்—கசு - அதிகாரம், ரு - கூ வசனங்கள்.**

“கடாரியின் தோலும் மாமிசமும் இரத்தமுஞ் சாணியும் எரிக்கப்படவேண்டும். சுசியாயிருக்கிறவனொருவன் அந்தக் கடாரியின் சாம்பலைப் பாளயத்திற்குப் புறம்பே சுசியான ஒரு இடத்திலே கொட்டி வைக்கக்கடவன். அது இஸ்ரவேற் சந்ததியின் சபையார் நிமித்தஞ் சுசிசெய்யுஞ் சலத்தின்பொருட்டு வைக்கப்பட வேண்டும். அது பாவத்தைப் பரிகரிக்கும்” எனவும்,

**எபிரேயர்—கூ - அதி, கங - வசனங்கள்,**

“காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், கடாரியின் சாம்பலும் அசுசிப்பட்டவன் மேலே தெளிக்கப்பட்டுச் சரீர அசுசி நீக்கி யவனைச் சுத்திகரிக்கும்.”

**யாத்திராகமம்—கஉ அதி, உஉ, உங, வசனங்கள்.**

“இஸ்ரவேலர் எகிப்து தேசத்தி லிருந்த பொழுது யெகோவா விதித்தபடி ஆட்டு இரத்தத்தினாலே தங்கள் தங்கள் வாசல் நிலைக்கா லிரண்டிலும், நிலையின் மேல் விட்டத்திலும் அடையாளமிட்டு வைத்தார்களென்றும், அந்தத் தேவ வம்சத்தாரைக் கொல்லும்படி யெகோவாவாலனுப்பப்பட்ட தூதர் அவ்வடையாள முள்ள வீடுகளிற் போகாமல் அவ்வடையாளம் இல்லாத வீடுகளிற் போய் அங்குள்ள தலைப் பிள்ளைகளைக் கொன்றார்” எனவும்,

**லேவி—கூ அதி, ச வசனம்.**

“தேவனுடைய முத்திரையை நெற்றிகளிற் றரியாத மனுடர்களை மாத்திரமே வருத்தப்படுத்துகிறதற்கு அவைகளுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டது.” எனவுங் கூறப்பட்டுள.

இவற்ருனே, விபூதி சுத்தப்படுத்தும் பொருளாயும், பாவத்தைநீக்கும் பொருளாயும், நெற்றியிற் றரிக்கப்படும் பொருளாயும் விளங்குமென்பது பெறப்பட்டது. அவ்வாறிருக்கவும், கிறிஸ்தவர்கள் அநியாயமாகத் தூஷித்துத் திரிதல் பாவமேயன்ருே? சிவத்தின் அறிகுறியாக வுள்ள விபூதி ருத்திராக்கங்களைச் சைவர்கள் அணிதல் அறியாமையும் பயனின்மையுமாய் முடியுமெனின், கிறிஸ்தவர்கள் கோதுமை அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் முறையே இயேசுக் கிறிஸ்துவின் மாமிசமாகவும், இரத்தமாகவும், அல்லது அவைகளுக்கு அறிகுறியாகவும் பாவித்து உட்கொண்டு வருவது அறிவும் பயனுமாகுமா? இங்ஙனமே மத்தேயு உசு-ம் அதிகாரம், இருபத்தாரும் இருபத்தெட்டாம் வசனங்களில் "யேசு அப்பத்தை யெடுத்துத் துதிசெய்து, அதனைப் பிட்டுச் சீஷருக்குக் கொடுத்து, "நீங்கள் எடுத்துப் புசியுங்கள்; இதுவே என் சரீர மென்ருர்" எனவும், பின்பு பாத்திரத்தையும் எடுத்துக் கொடுத்து "நீங்கள் எல்லாரும் இதிற் பானம் பண்ணுங்கள். இதுவே புதிய உடன்படிக்கைக் கேற்ப, பாவ மன்னிப்புக் கென்று அநேகருக்காகச் சிந்தப்படுகின்ற என்னுடைய இரத்தமென்ருர்" எனவுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்படியே கிறிஸ்துவிஞலே அப்பமுந் திராட்ச ரசமும், மாமிசமாகவும், இரத்தமாகவும் விசேஷ மடைந்தனவென்று பைபிலிலேயே காணப்படுகின்றன. அவ்வாறே கிறிஸ்தவர்களும் அவையிரண்டனையும் ஒப்பி இராப்போசன மென்று பீடத்தின் மேல் வைத்து மாமிசமாகவும் இரத்தமாகவும் பாவித்து உட்கொள்கின்றனர். அங்ஙனமாய அவர்கள் சிவத்துவப் பேற்றிற்குந் திருவருட் பேற்றிற்கும் அறிகுறியாக நம்பெருமா

ஞரால் கொடுக்கப்பட்டு அணியப்பட்டு வருஞ் சிவசின்னங்களைத் தூஷித்தல் யாதாய் முடியும்.? சிலுவைக் குறியைக் கழுத்தில் தரித்திருப்பதும், வீடுகள், பிரதிமைகள், சிகரங்கள், சுடுகாடுகள் முதலியவற்றில் அதனை நாட்டுதலும் பயனுருமா? இவற்றைச் சிந்தித்து அடங்காது நிந்தித்தல், தாயைப் பழித்து மகள் குற்றத்துக் குள்ளாய தன்மை போலுமாம். இவைபோன்ற நியாயங்களை எல்லாம் எடுத்துக்காட்டி ஏசுமதம், காசுமதம் ஏசுமதம் ஆகும்படி சிவப்பிரகாச சுவாமிகள், ஏசுமத நிராகரணம் என்னு நூலாற் கண்டித்தது முணர்க.

பட்டினத்துப் பிள்ளையார் முதலாய சிவஞானிகள் சொல்லியவற்றிற்குச் சமாதானமாக, உண்மைப்பொருளைக் கூறுவாம். பட்டினத்து அடிகளார்க்கு விபூதி தரித்தல் பிரயோசன மில்லையென்பது கருத்தாயின், அவரே பின்னரும் "ஐயுந்தொடர்ந்து" என்னுஞ் செய்யுளில், "செய்யுந் திருவொற்றியூருடை யீர்திரு நீறுமிட்டுக்—கையுந் தொழப்பண்ணி யஞ்செழுத் தோதவுங் கற்பியுமே" எனவும், "ஊரீருமக்கோ ருபதேசங்கேளு முடம்படங்கப்-போரீர் சமணைக் கழுவேற்று நீற்றை" எனவும், "நாய்க்குண்டு, என்னுஞ் செய்யுளில், "மதியா மல்வரும் பேய்க்குண்டு நீறு" எனவும், "உரைக்கைக்கு நல்ல திருவெழுத் தைந்துண் டுரைப்படியே—செருக்கித் தரிக்கத் திருநீறு முண்டு" எனவும் கூறியருளியது என்னையோ? மற்றைய சிவஞானிகள் வாக்கியமும் இப்படியே இருக்கும். இப்படி யிரண்டையும் ஒருவர் தாமே திருவாய் மலர்ந்தருளினமையால், அவைகள் ஒன்றையொன்ற ழிக்கமாட்டாவாம். அவைகட்குச் சமாதான மிருக்கின்றது. அவ்வுண்மையைக் கேட்டு அறியாமல் எங்கேயாயினும் ஒரு

செய்யுளை யெடுத்துப் படித்து, இப்படிச் சொல்லியிருக்க நீங்கள் செய்வது தவறு தவறு என்று சொல்வது அறியாமையாம். மருந்துண்பவ னொருவன் வைத்திய சாத்திரத்தில் விதித்தவாறே அநுமானத்தோடு உண்ணுமையையும், அவபத்தியங்களைத் தள்ளிப் பத்தியங்களைக் கொள்ளாமைமையையும், வைத்திய சாத்திரம் வல்லானொருவன் கண்டிரங்கி, நீ உண்ணும் இம்மருந்தினுற் பயன் யாது என்றக்கால், அவற்கு அம்மருந்து உண்ணக் கூடாது என்பது கருத்தாகுமோ? அன்றே. அதுபோல மலபரிபாகம் வரும்படி கிரியைகளைச் செய்வோர் சிவசாத்திரத்தில் விதித்தவாறே அன்போடு செய்யாமையையும், கொலை முதலிய பாவங்களைத் தள்ளி இரக்கம் முதலிய புண்ணியங்களைக் கொள்ளாமையையும் சிவசாத்திரம் வல்லார் கண்டிரங்கி, நீர் செய்யும் இக்கிரியைகளாற் பயன்யாது என்றக்கால், அவர்க்கு அக்கிரியைகள் செய்யற்க வென்பது கருத்தாமோ? அன்றே. அங்ஙனமே விபூதி ருத்திராக்க தாரணஞ் செய்வோர் அன்புடன் செய்யாமை கண்டு, அவற்றுற் பிரயோசன மில்லையென்றுல் அவர்க்கு அவை தரித்தல் வேண்டா மென்பது கருத்தோ? இல்லை! இல்லை !!

கிறிஸ்தவர்களுட் பற்பலர் இக்காலத்தும் ஒவ்வோர் வருட மாசி மாதங்கடோறும் வருகின்ற (Ash Wednes-day) சாம்பரடிப் பெருநாள் என்ற தினத்திற் றிருநீறு தரிக்கின்றனர் என்பது யாவரு மறிந்த விடயமே. இதுவன்றிச் சைவ சமயிகள் உருத்திராக்கந் தரிப்பது போலச் சிலுவைக் குறியைத் தரித்து வருதலும் உண்மையே. அச்சிலுவைக் குறியை நோக்கு மிடத்து, சைவர்களுக் குரிய, திரிபுண்டரமும், (சிவபெருமானது) சூலக்குறி யென்னும் ஊர்

த்துவபுண்டரமுஞ் சேர்ந்த வடிவாக் காணப்படுகின்றது. இந்திய சமயிகளின் முன் மாதிரியைக் கண்டே அவர்கள் நெடுமையாகத் தரிக்குங் குறியையும், குறுக்காகத் தரிக்குங் குறியையும் சிலுவையாகக் கொண்டார்கள் என்பதிற் சந்தேகமில்லை. இங்ஙனம், அவைகளாற் பாவம் மன்னிக்கப்படும் என்று கொண்டொழுகும் அக்கிறிஸ்தவர்கள் விபூதி ருத்திராக்கங்களாகிய சிவசின்ன தாரணஞ் செய்தலாற் பிரயோசன மில்லை யென்பதும், இழிந்தன வென்பதும் அநியாயமேயாம். இங்ஙனந் தரிப்பவர் சரியான கிறிஸ்தவர் அல்லர் என்று சொல்லின், தரியாதவர்களையும், அப்படியே தரிக்கின்ற கிறிஸ்தவர்கள் சொல்கின்றனர். இப்படித் தங்களுக்குள்ளேயே அறியாமையும், மாறுபாடும், தூஷணங்களு மிருப்பவும், அவைகளை யெல்லாம் பரிகரிக்காமல் "தன்கண்ணுள்ள உத்திரத்தைப் பிடுங்காது பிறர் முதுகினுள்ள துரும்பை யெடுக்கப் போவார்" போலச் சிவசின்னங்களைத் தூஷித்தல் அடாதென் றறிவாராக. இவற்றை யறிந்து கிறிஸ்தவர்கள் தூஷிக்காது அடங்குவாராக. போலி வைணவர்களே! நீவிருந் தூஷித்தல் நுங்கடவுளாகிய நாரணற்கும், அவரது விபவ வியூக அந்தர்யாமித்துவ அர்ச்சாவதார நிலையராக நும்மவர்களாற் சொல்லப்படும் மூர்த்திகளுக்கும் நும்ஆழ்வார் ஆதிய அடியவர்க்கும் அப்பிரியம் என்று நீவிரும் அறிந்தடங்குவீராக.

## விபூதி விளையுந் திருத்தலங்கள்.

விபூதி தானாக விளையுந் திருத்தலங்களும் உள. இலங்கையிலே தென்கோடிக்க ணுள்ள திருப்புகழ் பெற்ற சுப்பிரமணிய தலமாய், ஏமகூடம் முதலிய திவ்விய நாமங்களைப் பெற்று, இன்றும் பற்பல தைவிக அற்புதங்கள் நிகழப் பெ

றும் கதிரை எனப் பெயரிய கதிர்காமம் என்னுந் திருத்தலத்தும், கோயமுத்தூரின் ஓர்சார்க்கணுள்ள மருதமலை என்னும் க்ஷேத்திரத்தும், திருக்கழுக்கைப் பதியினிடத்தும், திருநீற்றுமலை என்னும் தெய்விகத் தலத்தும், கங்கைக் கரையினும், திருவருணை, வில்வ கானனம் என்பவற்றினும், இன்னும் பலவிடங்களினும் விபூதி சுயமாக விளைகின்றது. அவ்விடங்களிற் றோன்றுவன மிகுந்த மகிமை யுடையனவாய், புத்தி, ஞானம், நோய் நீக்கம், பூதாதி கிருத்திரிம வுயிர்களின் பயநிவாரணம் முதலிய பயன்களை யின்றுங் கொடுத்துவரல் பிரத்தியக்ஷமே. கங்கைக் கரையில் விளையும் வெண்டிருநீற்றையே வைணவர் சுவேத மிருத்திகை (வெள்ளை மண்) என மாற்றி நாமம் போட்டனர்; போடுகின்றனர்.

இருசமயவிளக்கச் சூறவளி.

கங்கைக்கரை வில்கானன மருதைப்பதி கதிர்கா
மங்கைத்திரு நீற்றுமலை யண்ணாமலை மதில்சூழ்
சங்கைக்குறுங் குடியாமிவை தனிலேல்விளை நீற்றைச்
சங்கைக்கர மாலுந்தரித் தார்மண்ணென றகுமோ.

## விபூதி யபிஷேகம்.

விநாயகர், சிவபெருமான், உமாதேவியார், வைரவக்கடவுள், வீரபத்திரக் கடவுள், சுப்பிரமணியப் பெருமான் முதலிய சிவமூர்த்திகளுக்கு விபூதி யபிடேகஞ் செய்தல் விதியாகும். வைணவர்களால் தரிக்கப்படும் மண்ணால் அபிடேகஞ் செய்வது எவ்விடத்தும் இல்லை. இதனாலும் விபூதியினது மகிமை தெரியப்படும். அபிடேக திரவியங்கள் பலவற்றுள்ளும் பஞ்சகவ்வியங்களே முதலில் அபிடேகஞ் செய்து, பின்னர்ச் சர்க்கரை, பழச்சாறு, இளநீர்முதலியன ஆட்டி, இறுதியில் விபூதி யபிடேகமே செய்ய விதித்தன சிவாகம

ங்கள். அதனாலும் அதன் பரிசுத்தத்துவம் நன்கு விளங்கும். விபூதியபிடேகிக்குங்கால், ஹாம் இருதயாயநம: என்று பாத்திய ஆசமன அருக்கியங் கொடுத்து, பெருவிரல் ஆழி விரல்களால் திருநீற்றை யெடுத்து மந்திர நீருடன் சேர்த்து, ஓம் ஹௌம் தற்புருஷாயநம: என்று அபிடேகம் செய்யப்படும். இவ்வபிடேகம் செய்தவர், செய்வித்தவர், தரிசித்தவர் யாவரும், கீடம் வேட்டுவனால் அதனுருவடைந்து அதற்குரிய தொழில்களை அடைதல்போலத், திருவருளுருவினராய், சிவபெருமானுக்குரிய இன்பங்களைத் தாமுமடைந்து வாழ்வர் என்று உண்மை நூல்கள் கூறுகின்றன.

### அபிடேகமாலை.

*இருதயம் புருடங்கூறி யிறுதியி லியற்று நீற்றுப்*
*பெருமுழுக் கியற்றுவித்தோ ரியற்றினோர் காட்சிபெற்றோர்*
*கருவனை நீற்றுநீற்றுக் கருணைவார் பவளமேனி*
*மருவனா யவனையார்ந்து மருவுமித் தனையில் வாரார்.*

## விபூதி நமஸ்கார மந்திரம்.

அநுட்டான மண்டபத்துட் புகுந்து, ஓம் ஹ்ராம் பிருதுவியாத்மனேநம: நிவிர்த்தி கலாயைநம: என்னு மந்திரத்தினால் இடத்தைச் சுத்திசெய்து, திரியம்பகமென்னும் மந்திரத்தை யுச்சரித்துக் கொண்டு, கிழக்குமுக நோக்கிச் சுகாசனத்து இருந்து, பிரணவம், ஹௌம் என்னும் பீசம் இவற்றோடு கூடிய ஈசான மந்திரத்தை யுச்சரித்து, வலக்கரத்துப் பெருவிரல், நடுவிரல், ஆழிவிரல் என்னு மூன்றனுங் திருநீற்றை யெடுத்து, இடக்கையில் வைத்து, யகாராதி நகாராந்தமான பஞ்சாக்கரத்தைச் செபித்து விபூதிக்கு நமஸ்காரஞ் செய்யக்கடவர். செய்யுங் காலத்தில், மேல்வ

ரும் மந்திரத்தைச் செபிக்கும்படி அஞ்சுமான் என்னுஞ் சிவாகமங் கூறுகின்றது.

புவநாத்யஜ்ஜகத்ஸர்வம் த்ரிபுண்ட்ராத்ம ஸதாசிவ: ।
ஐச்வர்யப்ராப்திபீஜாய தஸ்மை ஸ்ரீபஸ்மநே நம: ॥

புவநாத்யஜ் ஜகத்சர்வம் த்ரிபுண்டராத்ம சதாசிவ:
ஐச்வர்யப் பிராப்தி பீசாய தஸ்மை ஸ்ரீபஸ்மநேநம:

## நியாசவகை.

நியாசம் என்பது கரநியாசம், சடங்கநியாசம், கலா நியாசம், இருதய நியாசம், புருடசூக்த நியாசம், பஞ்சப்பிரம நியாசம், பஞ்சாக்கர நியாசம், மாதுருகா நியாசம் என எண்வகைப்படும். அவற்றுள் கரநியாசம், இருதய நியாசம், புருடசூக்த நியாசம் என்னு மூன்றும் ஸ்மிருதிவழி நிற்பார் பெரும்பான்மை கொள்வர். ஏனையவை சிவாகமவழி நிற்பார்க்குரியன.

### கரநியாசமந்திரம்.

ஹும் சாம் சூரியாத்மனே - அங்குஷ்டாப்யாயநம:
„ சிம் சோமாத்மனே - தர்ச்சநியாப்யாயநம:
„ சும் நிரஞ்சநாத்மனே - மத்யமாப்யாயநம:
„ சைம் நிராபாசாத்மனே - அநாமிகாப்யாயநம:
„ சௌம் அவ்வியக்தாத்மனே - கனிட்டிகாப்யாயநம:
„ ஸ: அதநுசூக்ஷுமாத்மனே - கரதலகரபுருஷ்டாப்யாயநம:

ஈண்டுக் காட்டப்பட்ட மந்திரம் சிவாகமவழிச் சொல்லப்பட்ட மந்திரம். இன்னும் அது சிருட்டிநியாச மந்திரம், திதிநியாச மந்திரம், சங்கார நியாசமந்திரம், என மூவகை

ப்படும். ஸ்மிருதிக் கொள்கையாற் செய்யப்படுங் கரநியாச மந்திரமாவது :—

தத் சவிதுர் - அங்குஷ்டாப்யாம் நம:
வரேண்யம் - தர்ச்சநீப்யாம் நம:
பர்க்கோ தேவஸ்ய - மத்யமாப்யாம் நம:
தீமஹீ - அநாமிகாப்யாம் நம:
தியோயோந - கநிட்டிகாப்யாம் நம:

ப்ரசோதயாத் - கரதலகரப்ருஷ்டாப்யாம் நம:
என்பனவாம்.

### இருதய நியாச மந்திரம்.

தத்ஸவிதுர் - ப்ரம்ஹாத்மநே ஹிர்தயாய நம:
வரேண்யம் - விஷ்ணுவாத்மநே சிரசேசுவாகா.
பர்க்கோதேவஸ்ய - உருத்திராத்மநே சிகாயைவஷட்.
தீமஹீ-சக்தியாத்மநே சுரோத்ராய கவசாயஹும்.
தியோயோந-க்ஞாத்மனே நேத்ராப்யாம் வௌஷட்.
ப்ரசோதயாத் - சர்வாத்மநே அஸ்த்ராயபட்
பூர்புவஸ்வரோம் - இதி திக்பந்தஹ. என்று செய்வது.

### புருட சூக்த நியாசமாவது.

பதினாறு இருக்கினால் பதினாறு உறுப்புகளில் வைத்துப் பதினாறு உபசாரத்தோடுஞ் செய்யப்படுவது. புருட சூக்தமென்பது பெரியோராற் பூசிக்கப்பட்டதுஞ் சிறந்ததுமாயுள்ள இரகசிய மந்திரம். பிராணாயாமஞ் செய்து இருடியையும் சந்தசுவையும், தேவதையினையும் உச்சரித்து, பதினாறு மந்திரங்களையும், என்னுடம்பினும், தெய்வத்தினிடத்தும் நியாசஞ் செய்கின்றேன், என்று சங்கற்பித்து, ஒவ்வொரு மந்திரங்களாலும் ஒவ்வோரங்கங்களையும் நியாசஞ் செய்

வது. புருட சூக்தத்திற்கு நாராயணரே இருடி. விராட்புருடராகிய பரசிவப் பிரபுவே அதிதேவதை. அநுட்டுப்பு என்னுஞ் சந்தசுவிற் றொடங்கி, திருஷ்டுப்பு என்னுஞ் சந்தசுவான் முடிவுறும். நியாச உறுப்புக்களை மேற்காட்டுதும். பதினாறு உபசாரங்கள் ஆவன - † ஆவாகனம், தாபனம், பாத்தியம், அருக்கியம், ஆசமனம், ஸ்நானம், பரிவட்டம், உபவீதம், சந்தனம், புட்பம், தூபம், தீபம், நைவேத்தியம், நமஸ்காரம், பிரதக்கிணம், சயனம் என்பன.

### கலாநியாச மந்திரம்.

திரியாயுஷ்ம ஜமதக்நே: என்றது தொடங்கி, ஓம் உதர்ப்பவாயநமோ துவத்தியைநம: என்ற திறுதியாக வுள்ள மந்திரங்களால் நியாசஞ் செய்தல். விரிப்பிற் பெருகும்.

### அங்க நியாசமந்திரம்.

ஓம் ஹ்ரும் சர்வஞ்ஞ சத்திதா மநே இருதயாயநம: ஓம் ஹ்ரீம் திருப்த சத்திதாமநே சிரசேஸ்வாகா, ஓம் ஹ்ராம் அநாதிபோத சத்திதா மநே சிகாயைவஷட், ஓம் ஹ்ரைம் ஸ்வதந்திர சத்திதா மநே கவசாயஹும், ஓம் ஹ்ரௌம் அலுப்த சத்திதா மநே நேத்ரத் திரயாயவஷட், ஓம் ஹ்றம் அநந்த சத்திதா மநே அஸ்திராயபட் என்று ஆறங்கங்களையுந் தொடுதல். இது சிவாகம விதி.

**பஞ்சப்பிரம நியாசம் ஆவது**: சிரம், முகம், இருதயம், குய்யம், பாதம் என்னும் ஐந்திடத்தும் நியாசித்துச் செய்யப்படும், பிரணவ பீசங்களோடு கூடிய ஈசானாதி ஐந்து மந்திரங்களாம்.

---

† ஆவாகனம்—தெய்வத்தை யழைத்தல். தாபனம்—பீடமளித்து அமரச் செய்தல். பாத்தியம்—திருவடிக்கு நீருதவல். அருக்கியம்—கைக்கு நீருதவல். ஆசமனம—முக் குடி நீருதவல், முக சுத்தியின் பொருட்டு. ஸ்நானம்—அபிடேகம. பரிவட்டம—அணிவதற்கு ஆடை. உபவீதம்—பூணூல். பிரதக்கிணம்—வலம்வரல்.

பஞ்சாக்கர நியாசமந்திரம் ஆடை.-தலை நெற்றி, கழுத்து, நெஞ்சு, நாபி என்பவற்றில் முறையே யகாராதி நகாராந்தமான பஞ்சாக்கரங்களாம். இது சித்தாந்திகள் செய்தற்குரியது.

## அக்கிரிதி மந்திரம்.

அக்னிரிதிபஸ்ம - வாயுரிதிபஸ்ம - ஜலமிதிபஸ்ம—ஸ்தலமிதிபஸ்ம - வ்யோமேதிபஸ்ம - ஸர்வம்ஹவா இதம்பஸ்ம - மனஏதானி சக்ஷூம்ஷி பஸ்மானி ।

அக்கிரிதி பஸ்ம-வாயுரிதி பஸ்ம - ஜலமிதி பஸ்ம-ஸ்தலமிதி பஸ்ம-வ்யோமேதி பஸ்ம-ச்ர்வங்கம் வாளதம்பஸ்ம-மநாயதாநி சட்சுக்ம்ஷி பஸ்மாநி.

இவ்வேழு மந்திரங்களும் விபூதி தாரணத்திற்குச் சிறந்தன வென்று, அதர்வ சிரோபநிடதம், சாபால உபநிடதம், சூதசங்கிதை, இலிங்க புராணம், மற்சபுராணம் என்பனவும், சிவாகமங்களும் எடுத்துக் கூறும்.

## மாநஸ்தோகே மந்திரம்.

மாநஸ்தோகே தநயே-மாந ஆயுஷி-மாநோ கோஷு-மாநோ அச்வேஷு-ரீரிஷ:-வீரான்மாநோ ருத்ரபாமிதோ வதீ-ஹவிஷ்மந்தோ நமஸாவிதேம தே ॥

மாநஸ் தோகே தநயே-மாந ஆயுஷி-மாநோ கோஷு-மாநோ அஸ்வேஷு-ரீரிஷ:-வீராந்மாநோ ருத்ரபாமிதோவதீ-அவிஷ்மந்தோ நமசாவிதே மதே !!

இம்மந்திரங்களுந் திரிபுண்டரத்திற்குச் சிறந்தன வென்று சுவேதாச்சுவதரோபநிடதம், பிருகச்சாபாலம், போதாயன கற்ப சூத்திரம், வீராகமம், காமிகாகமம் முதலாயின விதந்து பேசின.

## திரியம்பக மந்திரம்.

த்ர்யம்பகம் யஜாமஹே ஸுகந்திம் புஷ்டிவர்த்தநம் - உர்வாருகமிவ பந்தநாந் ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத் ॥

த்ரயம்பகம் யசாமகே சுகந்திம் புஷ்டிவர்த்தகம், உர்வாருகமிவபந்தநாந் ம்ருத்யோர் மிருக்ஷியயா மாமிர்தாத்!

இவை காலாக்கினி ருத்திரோப நிடதம், சாபால உபநிடதம், பஸ்ம சாபால உபநிடதம் முதலியவற்றிலும், சிவாகம ஸ்மிருதிகளினும் கூறப்பட்டுள்ளன.

## திரியாயுஷ மந்திரம்.

இம்மந்திரங்கள் ஐந்தனையும், இருக்காதி வேதங்களும், சிந்தியம், விம்பம முதலிய சிவாகமங்களும், சாங்கியாயன குகியம், மத்தியந்தன குகியம் என்னும வேதசாரமான நூல்களும விபூதி தரித்தற்குச் சிறந்தன வென்று செப்புகின்றன. மந்திரம் வருமாறு:—

த்ர்யாயுஷம் ஜமதக்நே: - கஶ்யபஸ்ய த்ர்யாயுஷம் - அகஸ்த்யஸ்ய த்ர்யாயுஷம் - யத்தேவாநாம் த்ர்யாயுஷம் - தந்மே அஸ்து த்ர்யாயுஷம் ।

திரியாயுஷ்ம ஜமதக்நே: - கஸ்ய பஸ்ய திரியாயுஷம் - அகஸ்தியஸ்ய திரியாயுஷம - யதைவாநாம் திரியாயுஷம் - ந்மயயஸ்து திரியாயுஷம்.

## காயத்திரி மந்திரம்.

ஓம் பூர்புவஸ்ஸுவ: தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோந: ப்ரசோதயாத் ॥

ஓம் பூர்புவஸ் சுவ: தத்சவி தார்வரேணயம் பர்க்கோ தேவஸ்ய தீமகி தியோயோநப் பிரசோதயாத்.

### ஷடங்க மந்திரம்.

ஓம் ஹ்ரூம் இருதயாயநம: ஓம் ஹ்றீ [illegible], ஓம் ஹ்றூம் சிகாய வஷடு, ஓம் ஹ்றைம் கவசாயஹூம், ஓம் ஹ்றௌம் நேத்ராய வௌஷடு, ஓம் ஹ்றா: அஸ்திராயபடு என்பனவாம்.

### சிவாங்க மந்திரம்.

ஓம் ஹாம் ஹீம் ஹூம் ஹைம் ஹௌம் ஹ: என்பன.

### பஞ்சப்பிராசாத மந்திரம்.

ஹாம், அம், ஆம், ஹம், ஸ.

### மூலபஞ்சாக்ஷர மந்திரம்.

ஓம் நமசிவாய.

### தூலபஞ்சாக்ஷர மந்திரம்.

ஓம் ஹாம் ஹீம் ஹூம் நமசிவாய.

### சூக்கும பஞ்சாக்ஷர மந்திரம்.

ஓம் ஹீம் சிவாய :

### மாயாக்கிய பஞ்சாக்ஷர மந்திரம்.

ஓம் ஹீம் ஹூம் நமசிவாய.

### பிராசாத பஞ்சாக்ஷர மந்திரம்.

ஓம்ஹாம் ஹீம் ஹூம் ஹௌம் நமசிவாய.

### பஞ்சகலா மந்திரம்.

ஓம் நிவிர்த்தி கலாயை நம:, ஓம் பிரதிஷ்டா கலாயை நம:, ஓம் வித்தியா கலாயை நம:, ஓம் சாந்தி கலாயைநம ஓம் சாந்தியதீத கலாயை நம:.

## பஞ்சப்பிரம மந்திரம்.

ஓம் ஈசாநாயநம:, ஓம் தற்புருடாயநம: ஓம் அகோராய நம: ஓம் வாமதேவாயநம:, ஓம் சத்தியோசாதாயநம:.

## ஏகாதச சங்கிதா மந்திரம்.

பஞ்சப் பிரம மந்திரத்துடன், ஓம் இருதயாயநம:, ஓம் சிரசே நம: ஓம் சிகாயை நம:, ஓம் கவசாயநம:, ஓம் நேத்திரோப்பியோ நம:, ஓம் அஸ்திராயநம: என்னும் அங்கமந்திரம் ஆறுஞ் சேர்ந்த பதினொன்றுமாம்.

## அத்திர மந்திரங்கள்.

அத்திர மந்திரம் சிவாஸ்திரம், வியோம அஸ்திரம், பாசுபதாஸ்திரம், க்ஷுரிகாஸ்திரம், அகோராஸ்திரம் என ஐந்து வகைப்படும். அவை வருமாறு:— ஓம் அ: அநந்த சத்திதாமநே சோதிருபாய சிவாஸ்திராயபடு, ஓம் ஆம், ஈம் ஊம் வியோம வியாபிநே வியோமாஸ்திராயபடு, ஓம் ஸ்லிம் பஹூம் ஹூம்படு, சிற்சிகீம், சிற்சிகீம க்ஷூம் பாசத க்ஷுரிகாஸ்திராயபடு, ஓம் விஸ்புர கோர கோர தம தனு ருப சடசடபிரசட பிரசட கஹ கஹ வம வம காதாய காதாய ஹூம் பட் என்பன. இவற்றை யுச்சரித்து விபூதி தரிக்கின் எவ்வித சித்தி புத்திகளையு மடைவதோடு முத்தியையும் பெறலாம்.

இம் மந்திரங்களினதும், ஏனைய மந்திரங்களினதும், பீசமுதலிய முறை யிலக்கணங்களை யெல்லாம் மந்திரதேவதாப் பிரகாசிகை, சாரதா திலகம், மந்திர சகசிரோத்தம், அதர்வணசாரம் என்னு நூல்களினும், சற்குரவரிடத்தும் அறிந்து அநுட்டிக்கக்கடவர்.

## பதினாறு உறுப்பிற் றரிப்பதற்குக் காரணம்.

திருநீற்றைத் தலை, நெற்றி, நெஞ்சு, உந்தி, முழந்தாள்கள் இரண்டு, புயங்கள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, *விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து என்னும் பதினாறு இடங்களினுந் தரித்தற்குக் காரணம் என்னையெனிற் கழறுவாம். பதினாறு தானங்கள் தரிக்கு மிடம் எனவே, சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையின் ஞானம்; கிரியையிற் சரியை, கிரியையிற் கிரியை கிரியையில் யோகம், கிரியையின் ஞானம்; யோகத்திற் சரியை, யோகத்திற் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம்; ஞானத்திற் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்னும் பதினாறு தானங்களினும் ஒருவன் தரித்துச் சென்றால் மேலான ஐசுவரியம் (விபூதி) ஆகிய பேரானந்த முத்தி பெறுவான் என்பது குறிப்பாற் போதரும். சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி துரியம் என்னு நான்கும் நந்நான்காய்ப் பதினாறு ஆகலின் அவ்வவத்தைகளைக் கடக்கின் (விபூதியாம்) முத்தியாமென்பதொன்று.

† இதுவன்றி, பிராண வாயுவைப் பதினாறு மாத்திரை பூரித்து உகாரத் தியானஞ் செய்து, அறுபத்து நான்கு மாத்திரை கும்பித்து, அகார தியானஞ் செய்து, மகாரமூர்த்தி

* விலாப்புறம் இரண்டையும் நீக்கிக் காதுகளிரண்டினையும் கொள்வது முண்டு.

† புருட சூக்தத்திலுள்ள பதினாறு இருக்கு வேத மந்திரங்களையும் முறையே, இடக்கை, வலக்கை, இடக்கால, வலக்கால், இடமுழங்கால், வலமுழங்கால் இடமருங்கு, வலமருங்கு, நாபி, நெஞ்சு, கழுத்து, இடப்புயம், வலப்புயம், வாய், கண்கள். தலை என்னும உறுப்புக்களில்வைத்தும், சர்வ வியாபகராய சிவபெருமானிடத்து வைத்தும், பதினாறு உபசாரங்களோடு செய்யிற் சிவ சாயுச்சியம் அடைவான் என்னும் உண்மையுந் தெரியப்படும்.

யாகிய சிவபெருமானைத் தியானிக்கப் புகுங்கால் முற்சொல்லிய பதினாறு இடங்களினும் பிரத்தியாகாரஞ் செய்வது வழக்காகலின் அவ்வுண்மையையும், தாரணை செய்யுங் காலத்துக் குறித்த பதினாறு தானங்களினும் தேவதைகளைத் தரித்தல் யோகிகட்குரிமையால் அவ்வுண்மையையும் பெறவைத்த குறியும் என்ப.

இனி, தலை முதலாகக் கழுத்து ஈறாக வுள்ளன பத்துறுப்பாகவுங் கொள்ளப்படலால் தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவபோகம், சிவானந்தம் என்னும் பத்துக் காரியங்களையும் அடையின் விபூதியாம் என்பது குறிப்பு. குறித்த உறுப்புக்கள் ஒன்றோடொன்று பொருத்தப்பட்டன வாகலின், அவற்றிற் றிருநீறு தரிக்கின் உடம்பைச் சுத்தியாக்கு மென்பது சிலர் கருத்து.

பன்னிரண்டு தானங் கொள்வதனை யெண்ணுமிடத்து பன்னிரு முக்குறி முப்பத்தாறாகலின், ஆன்மதத்துவம், வித்தியா தத்துவம், சிவதத்துவம் என்னும் முப்பத்தாறு தத்துவங்களையும் நேதிகளைந்து தரிக்கின் முத்தி சித்தியாம் என்பது பெறப்படும். இதனைக் கிரியா விவரணம் என்னு நூல் விரித்துக் கூறும்.

ஞானோத்தரம்.

பாதநான் கவத்தையவைவொவ்வொன்றே நான்காகிப் பல்கலானு
நாதமா மென்னுறுப்பு ஞான்கைந்தா றத்தொகையினடத்தலானுஞ்
சாதகாரியம்பத்துந் தருவலினா லாறுறுந் தரித்தலானு
மேதமினீற் றணிதானம் பத்தொடிரண்டாறாக விலங்குமாலோ.

## முக்குறிகளின் சொருபலக்கணம்.

திருநீற்றினது முக்குறிகளின் சொருபங்களை யுணருமிடத்து, அவை மூன்றும், பதி பசு பாசம் என்னும் உண்

மைப் பொருளாகவும், அகரம் உகரம் மகரம் என்னும் வியட்டிப பிரணவங்களாகவும், பதி பரை ஆன்மா என்னுந் திரயாக்கர மந்திர சொரூபமாகவும், அருவம் அருவுருவம் உருவம் என்னு மூவடிவங்களாகவும், அவற்றினை யுடைய சிவன் சதாசிவன் மகேசன் என்னும் மூர்த்திகளாகவும், சத்தி சிவம் கந்தக்கடவுள் என்னு மூவருஞ் சேர்ந்த சோமாஸ்கந்த மூர்த்தமாகவும், பிரத்தியங்கம் சாங்கம் உபாங்கம் என்னும் மூவகை யருளுருப்பாகவும், அத்துவா மூர்த்தம், மந்திரமூர்த்தம் பஞ்சப்பிரமமூர்த்தம் என்பனவாகவும், விந்து மான் மோகினி என்னுஞ் சகோபாதான மாகவும், இலயம் போகம் அதிகாரம் என்னு மவத்தைகளாகவும், அவற்றிற்கு ஏதுவாகி ஆதாரமாய் விளங்கும் சத்தன் (இலயசிவன்), உத்தியுத்தன் (போகசிவன்) பிரவிருத்தன் (அதிகாரசிவன்) ஆகவும், சிருட்டி திதி சங்காரம்என்னு முத்தொழிலாகவும், இச்சை கிரியை ஞானம் என்னும் முச்சத்திகளாகவும், தந்திரகலை மந்திரகலை உபதேசகலை என்பனவாகவும், பிரத்தியக்ஷம் அநுமானம் ஆகமம் என்னு மூன்றளவைகளாகவும், குரு லிங்கம் சங்கமம் என்னுஞ் சாதனங்களாகவும், சூரிய சந்திர அக்கினிகள் ஆகிய திரிசுடராகவும், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னு மூவகை யுயிர்களாகவும், அவன் அவள் அது என்னு மூவகையுயிர்களாகவும், மணி மந்திர ஔடதங்களாகவும், போகம் போக்கியம், பிரேரகம் என்னும் தத்துவங்களாகவும், மந்திரம் பாவனை கிரியை என்பனவாகவும், சகுணபாவனை நிர்க்குண பாவனை அத்தியாச்சிரம பாவனை ஆகவும் உணரப்படும்.

திரிபுண்டரத்தை அந்தணர் உபவீதம், சிகை, வேதம் என்பனவாக மதித்துக் கொள்ள வேண்டும் என்று ஆக்கி

னேய புராணம் அறைகின்றது. "ஸஹஸ்ஜ்யோதிர்பவத்யேவ ஶிவாத்மகம் நஹிஸம்ஸய: (பஸ்மஜ்யோதிர் பவத்யேவ சிவாக்யம் நஹிஸம்சய:) என்ற சுலோகத்தினால் சிவரூபம் என்று ஈசான புராணம் சொல்கிறது. திரிபுண்டரத்துள் மேலாக விளங்குங் குறி சாமவேத சொரூபம் என்றும், நடுவிலுள்ள குறி யசுர் வேத சொரூபம் என்றும், அடியிலுள்ள குறி இருக்கு வேத சொரூபம் என்றும்,

உஈயக்ஷூ-வோ-ஸாமவேதாஜீயூஷு-ஈஜுஸூ:
க்ஷயஃவா-ஸூ-ஊ-ஷுவ ஸ்ராக்ஷாதஹமாதீ-ஸூ-ஸீயாய-ஷ ||

என்னும் வசனங்களால் பிருகச்சாபால உபநிடதம் பேசுகின்றது. அங்ஙனமே முத்தி, ஞானம், புத்தி என்னு மூன்றற்குங் காரணமான வடிவு என்று வேதங்கள் விளம்பாநிற்கும். விரசாக்கினி, ஔபாசன அக்கினி, பசாக்கினி என்று வாசிட்ட லிங்கபுராணத்திற் சொல்லப்பட்டது. காருகபத்தியம், ஆகவனீயம், தக்ஷிணாக்கினியம் என்னு மூன்றக்கினியினதும், மும்மூர்த்திகளினதும், சத்துவமுதலிய முக்குணங்களினதும், மூன்று வர்ணங்களினதும், மூவுலகத்தினதும் சொரூபமா மென்று "திரிபுண்ட்ரந் த்ரிசுராத்மகம் த்ரிவேத வஹ்நி த்ரிகுண த்ரிவர்ண த்ரிஜகந்மயம்" என்ற சுலோகத்தால் காளிகண்டம் கழறா நிற்கும்.

## விபூதி தத்துவம்.

விபூதி என்பது மேலான ஐசுவரியம் என்று பொருள் படுவதால் முத்தி என்பதே தத்துவமாம். ஏனைய மண், குங்குமம், மஞ்சள், கோபி சந்தனம் என்பவற்றிற்கு இதுபோன்ற பெயர் தானு மில்லை. இதனாலும் நீறே விசேஷித்தது. பசுவின் மலத்தை அக்கினி கொண்டு தகித்தலால் உண்டா

கியது திருநீறெனலால், அத்னுண்மையை யறியுமிடத்து ஞானமும் பயக்குமென்பது விளங்கும். எங்ஙனமெனில், பசு என்பதற்குப் பந்திக்கப்படுவது என்று பொருள். எனவேபசு என்பதனுல் ஆணவம் கன்மம் மாயை யென்னு மும்மலங்களாலும் பந்திக்கப்பட்ட ஆன்மா வென்பது குறிக்கப்படும். அதன் மலமாகிய ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் சிவஞானமாகிய அக்கினி கொண்டு தகித்தலால் உண்டாகுஞ் சிவத்துவப் பேற்றைத் தரிப்பவர் யாவரோ அவரோ முத்தியடைவார் என்னு முண்மையும் அறியப்படும். அன்றியும் நேராக வருகின்ற கங்கையைப் போல விளங்கும்படி வெண்ணிற முடைத்தாக நெற்றியினிடத்திற் றிரிபுண்டரமாக (முக்குறியாகத்) தரிக்கப்படும் ; விபூதியானது, காமம் வெகுளி மயக்கம் என்னு முக்குற்றங்களையும், சாத்துவிகம் இராதசம் தாமதம் என்னு முக்குணங்களையுங் கெடுத்து, ஞானவெற்றி யுண்டாக உயர்த்தப்பட்ட மூன்று கொடிகள் போலவும் விளங்காநிற்கும். இவையன்றி மூவகைப் பசுத்துவங்களையும், உலகவீடணை தனவீடணை புத்திரவீடணை என்னும் ஈடணைத் திரயங்களையும், பிராரத்துவம் சஞ்சிதம் ஆகாமியம் என்னும் மூவினைகளையும், தூல்தமம், தூலதரம், தூலம் என்பவற்றையும், நல்வினை தீவினை ஒன்றிலும் படாத வினை என்னு மூவினைகளையும், ஆண் பெண் அலி என்னு மூன்றனையும், ஆன்மதத்துவம், வித்தியாதத்துவம் சிவதத்துவம் என்னு மூவகைத் தத்துவங்களையும், ஆண் பெண் அலி என்னு முப்பால்களையும், ஆணவகாரியம் மாயாகாரியம் கருமமல காரியம் என்னு முக்காரியங்களையும், ஞாதுரு ஞானம் ஞேயம் என்னும் முப்பொருள்களையும், ஆதிதைவிகம் ஆதியாத்மிகம் ஆதி

பௌதிகம் என்னுந் துன்பங்களையும், பேதம் அபேதம் பேதாபேதம் என்னும் முக்கூறுகளையும், பொறி புலன் கரணம் என்னு மூன்றனையும், சந்தேகம் விபரீதம் மயக்கம் என்னும் மூன்று புத்திகளையும், தூலம் சூக்குமம் காரணம் என்னும் மூவுடம்புகளையும், சரியை கிரியை யோகம் என்னும் முச்சாதனங்களையும், மேல் கீழ் மத்தி என்னும் மூவுலகங்களையும், இறப்பு நிகழ்வு எதிர்வு என்னு முக்காலத்தையும், தன்மை முன்னிலை படர்க்கை யென்னு மூவிடச் சுட்டினையும், சகர்லக்கணை, அசகர்லக்கணை, சகதசகர்லக்கணை என்னு மூவகை யிலக்கணைகளையும், அஞ்ஞானம் சமுசயம் விபரீதம் என்னு முத்தி விக்கினத் திரயங்களையும் நாமகற்பனை விவகார கற்பிதம் உருவகற்பனை என்னு மூன்றனையும், பிரீதிவிடயம துவேஷ விஷயம் உபேக்ஷாவிடயம் என்னும் விடயத் திரயங்களையும், அவச்சின்னோபாதி பிரதி விம்போபாதி, அத்தியாசோபாதி என்னும் உபாதித்திரயங்களையும், சதாசாரம் திதாசாரம் கஞ்சாரம் என்னும் ஆசாரத் திரயங்களையும், சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி யென்னும் மூன்றவத்தைகளையும், பிரமலோகம் விஷ்ணு லோகம் உருத்திரலோகம் என்னும் முப்பதவிகளையும், காலம் தேசம் வஸ்து என்னும் முப்பரிச்சேதங்களையும், செய்தல் செய்வித்தல் உடன்படல் என்னும் பாவபுண்ணிய வழக்க மூன்றனையும், வாதம் பித்தம் சிலேத்துமம் என்னும் முப்பிணிகளையும், சுசாதிகம் விசாதிகம் சுகதம் என்னும் முப்பேதங்களையும், மனம் வாக்கு காயம் என்னுந் திரிகரணங்களையும், உத்தேசம் இலக்கணம் பரீக்ஷை என்னும் போதப்பிரகாரங்களையும், அம்மை இம்மை உம்மை என்னும் முப்பிறப்பினையும் நீக்கி நின்று, மேனிலையாய பெரும்பேற்றைத் தெரிவிக்குங் குறி ஆகவுந் தெளியப்படும்.

திருவாசகம்.

நீற்றுக்கொடிபோ னிமிர்ந்து காட்டியும்.

திருவிரிஞ்சைப் புராணம்.

உற்ற பேரென வருந்திரி பதகை போலொளிர்
நெற்றி மேலவ ரிடுந்திரி புண்டர நீறு
குற்ற மூன்றையுங் குணமொரு மூன்றையுங் குலைத்து
வெற்றி யாகவே யுயர்த்தமுப் பதாகைபோல் விளங்கும்.

திருப்போரூர்ச் சந்நிதிமுறை.

ஆதி பகவன் ஞானவடி
வழலிற் பூத்து நித்தியமா
யணிந்தோர் தமக்கு வசிகரமா
யருந்தி னோர்கட் காரமுதாய்
நீதி யறியும் பசுமலத்தை
நீக்கு மொருநற் குறிகாட்டி
நின்ற புகழ்வெண் டிருநீறே.

பட்டினத்துப்பிள்ளையார் புராணம்.

வினைவிருப் புடல்பால் காலம் விரியுல குயிரெ ணத்தம்
நினைவரு வழக்கம் பேதம் நிருபரிச் சேதம் போக
மினைவரு பிணிப சுத்வங் காணமுப் பிறப்புச் சாத
மெனவரு திரய மெல்லா மிறப்பது காட்டு நீறே.

---

## உருத்திராக்க விளக்கம்.

உருத்திராக்கம் என்பது சிவசின்னங்களுள் ஒன்று. உருத்திர + அக்கம் என்னுஞ் சொற்கள் உருத்திராக்கம எனத் தீர்க்க சந்தியாய்ப் புணர்ந்தன. உருத்திரன் என்னுஞ் சொல்லுக்கு வைணவமதத்தினர் உரோதனம் (அழுகையைச்) செய்பவன் எனப்பொருள் விரித்து மயங்குவர். "இன்னலங் கடலுட் பட்டோர் யாரையு மெடுக்கு மாற்றானன்னரும்பரம மூர்த்தியுருத்திரனெனும்பேர் பெற்றான்."

என்னுங் கந்தபுராணத் திருவிருத்தப்படி, பிறவித்துன்பம் என்னும் பெருங்கடலுள் அகப்பட்டுழலும் ஆன்மாக்களை யெல்லாந் திருவருள் என்னுந் தெப்பத்தினால் எடுத்து முத்திக்கரை சேர்ப்பவன் என்பதே உண்மையான பொருளாம்.

ஈண்டுச் சொல்லப்பட்ட உருத்திரர் ஏகாதச உருத்திரர், நூற்றெட்டுருத்திரர், புவன பதிகளான உருத்திரர், சாலோக, சாமீப, சாரூப முற்ற உருத்திரர் என்பாரு ளொருவருமல்லர். பிரம விட்டுணுக்களோடு குணதத்துவத்தில் இருந்து அழித்தற் றொழில் செய்யுங் குணருத்திரரு மன்று. ஏனெனில், அக் குணருத்திரர் பிருதிவிமுதற் பிரகிருதி புவனம் வரையும் சங்கரிப்பரன்றி யதற்கு மேற்பட்ட புவனங்கட்குச் சங்கார காரண ராகாமையானும், பசுவர்க்கத்திற் பிரளயாகலரிற் பக்குமுடையவர் ஸ்ரீகண்ட வுருத்திரர் என்று சைவாகமங் கூறலானும் அன்றென்க. எனவே யீண்டைய வுருத்திரர் சுத்தமாயா புவனாந்தம் வரையுஞ் சங்கரிக்கும் பிரவிருத்தன் என்னுந் திருநாமமுடைய மகாருத்திரர் என்று எண்ணுக. இவ்வுண்மை யறியா வைணவர் மூவரி லொருவனென்று மயங்கி நிற்பர்.

அக்கம் என்பதற்குக் கண் என்பது அருத்தம். எனவே உருத்திராக்கம் என்பதற்குச் சிவபெருமானது கண் எனப் பொருள் கொள்க. பிறப்பு இறப்பு இல்லாத பெருமானாரது திருமுகக் கண்களாய், பழமையனவாய், ஒழியாத பிறவித் துன்பங்களைப் போக்குவனவா யுள்ளன உருத்திராக்கங்களேயாம். பரமநாதனது திரிநேத்திரங்களி னின்றுந் தோன்றிச் சிறந்தனவாய் விளங்கலால் அக்கம் (கண்) எனவும் பெயர்பெற்றன. உவம வாகுபெயராய்க் கண்போன்றன வென்பதன்றிக் காரியத்தைக் காரணமாக உபசரித்த தென்னலு

மாம். ஒருவனை நாயகனாக வுடைய பதிவிரதைக்கு மஞ்சள் அணிவதும், மங்கிலியம் தரித்திருப்பதும் முறையாமாறு போல, சிவபெருமானைப் பரமபதியாகக்கொண்டு வழிபடுஞ் சைவசமயிகள் யாவருக்கும் பூசுவது வெண்ணீறும் பூண்பது கண்டிகையுமேயாம். திருநீறொன்றே முத்திப் பேற்றை யளிக்குமாயின், உருத்திராக்க மணி தரித்தல் அவசியமல்ல வே என்னின், உடம்பினின்றுந் தோன்றும் வியர்வையினா லும், விசேடித்த நீர் விளையாட்டினாலும், மழையினாலும், மனிதாது சரீரங்கள் நெருங்கி உராய்தலினாலும, தெய்வீ கம் அமைந்த விபூதியின் வடிவு மறையப்பெறும். மறைந் தால் கொடிய பூதங்களினாலும், பசாசுகளானும், இராக்கதர், அசுரர் முதலிய தீயவராலும், இராகு கேது முதலிய கிரக ங்களினாலும் வருந்துவார்கள். விளங்கா நின்ற சிறந்த உரு த்திராக்கமணி யொன்று தரிக்கின், கோரப் பற்களையுடைய பூத முதலியனவற்றால் வருந் துன்பங்கள் அணுகாவாம். ஆகலின் இரண்டும் அணியுமாறு விதிக்கப்பட்டன.

உபதேசகாண்டம்.

அலங்கு மாமணி யுருத்திர வக்கமொன் றணியின்
விலங்கெ யிற்றுவெம் பூதமே முதலிய மேவா
புலங்கொண் மாமணி புனைதரிற் போக்குறா ததனா
லிலங்கு மாமணி நீற்றொடும் புனைவதற் கிசையும்.

## உருத்திராக்க விசிட்டம்.

முத்துமணி, பவளமணி, பொன்மணி, மாணிக்கமணி, நீலமணி, தாமரைமணி, பளிங்குமணி, புத்திர தீபமணி, சங்குமணி முதலாய பலவகை மணிகளினும், சிவபெருமா னது கண்மணியாகிய உருத்திராக்க மணியே சிறந்தது. புத் திர தீபமென்பது ஓர்வகை இலந்தைக்காய். இதனைப் பத் திராட்சம் என்று வழங்குதலு முண்டு.

சைவசமயநெறி.

உண்டு மணிகள் பலவு மவற்றுள்ளுங்
கண்டி விசிட்டமெனக் காண்.

## உருத்திராக்க வரலாறு.

முற்காலத்திலே தாரகன் என்னும் அசுரன் எந்தையாகிய சந்தவேளாற் கொல்லப்பட்ட பின்பு, அவன் புத்திரர்களாகிய தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன் மாலியென்னு மூன்றசுரர்களும் வரபலத்தினுல் முறையே பொன்மதில், வெள்ளிமதில், இருப்புமதில் என்னு மூன்று நகரங்களைப் பெற்றுச்சிவபத்தி யுடையராய்ச் சிவபூசை யாதியன செய்தும், தேவர்கள் யாவருந் தமது தந்தையைக் கொல்லுவித்தாராகனின் பழிக்குப் பழிவாங்க நினைந்து வருத்துவாராயினர். அத்துன்பங்களை யெல்லாஞ் சகிக்காத விஷ்ணு, பிரமன் முதலிய தேவர்கள் யாவருஞ் சென்று, சிவபெருமானது திருச்சந்நிதானத்தை யடைந்து முறையிட்டுப் புலம்பினர். அதனைத் திருச்செவியாற் கேட்ட அளவிலே, பரமநாதனுகிய ஸ்ரீகண்டபரமசிவன், அடைக்கலம் புகுந்த தேவர்களை நீக்காது காத்தலும், தம்மீது அன்புடையராய்ப் பூசையாதியன செய்தொழுகும் அசுரரை யொறுக்காது காத்தலும் முறையாமாதலின் மௌனங் கொண்டவராய், தேவர்களின் பெருந்துன்பைத் தமது திருவுளத் தடைத்து இரக்கமுற்று, அவர் துன்பம் நீங்கு மெல்லையை நோக்கி, ஆயிரந் தேவவருட மளவுந் தமது மூன்று திருக்கண்களையும் மலர்த்திக் கொண்டிருப்ப, அவைகளி னின்றும் நீர் பொழிந்தன. சூரிய வடிவாகிய வலக்கண் பொழிந்த நீரிலே பன்னிரண்டு உருத்திராக்க மரமும், சந்திர ரூபமாகிய இடக்கண் பொழிந்த நீரிலே பதினுறு உருத்திராக்க மரமும், அக்கினி யுரு

வாகிய நெற்றிக்கண் பொழிந்த நீரிலே பத்து உருத்திராக்கமும் உதித்தன. இடக்கண்ணில் வெண்ணிற வுருத்திராக்ஷந் தோன்றிற்று. வலக்கண்ணி னின்று கபிலநிற உருத்திராக்கமும், அதினின்று செந்நிற உருத்திராக்கமும், அதினின்று பொன்னிற வுருத்திராக்கமுந் தோன்றின. நெற்றிக்கண்ணிற் பொழிந்த நீரினின்றும் கருநிற வுருத்திராக்கந் தோன்றிற்று. அவைகளுள் ஒவ்வொன்றையுஞ் சத்தி, விஷ்ணு, பிரமன், சத்தமாதர்கள், அட்டவித்தியேசுரர், திக்குப்பாலகர், ஏகாதசருத்திரர், வாசுதேவர் முதலிய பன்னிருவர், சதருத்திரர், அட்டவசுக்கள், அசுவினி தேவர்கள், துவாதசாதித்தர்கள், ஆதிசேடன், முனிவர் முதலிய கணங்கள் யாவரும் பிரீதியாகக் கேட்டுச் சிவபெருமான் ஆஞ்ஞைப்படி தரித்துக் கொண்டனர்.

## உருத்திராக்க உபநிடதங்கள்.

கண்டியின் பெருமை, நூற்றெட்டு உபநிடதங்களுள் திரிபுரதாபினி யுபநிடதம், திரிபுரோபநிடதம், சாபால உபநிடதம் முதலியவற்றில் ஆங்காங்குச் சிறப்பித்துச் சொல்லப்படினும், சிறப்பாக உரைக்கும் இரு உபநிடதங்கள் உள்ளன. அவை உருத்திராக்க சாபால உபநிடதம், அக்ஷமாலிகா உபநிடதம் என்பன. இவ்விரண்டும் உருத்திராக்கத்தையும் மாலையையும் பற்றியே உரைப்பன வன்றி வேறொன்றனையும் எடுத்து உரைக்காவாம். வைணவரால் அணியப்பட்டு, முக்கிய மென்று அவரால் கூறப்படும் துளசி மணியைப் பற்றி, வேதங்களி லாவது உபநிடதங்களி லாவது கூறப்பட்ட வாக்கியங்கள் ஒன்றேனு மின்று. இத்துணை மகிமையுடைய உருத்திராக்கமே முத்திசாதனம் என்பது பெறப்படும். துளசிமணி அவைதிக மென்பது கன்மே லெழுதிய எழுத்துப்போற் காணப்படு மென்க.

## உருத்திராக்க சாபால உபநிடதம்.

முன்னர்க் கூறப்பட்ட இரு உபநிடதங்களுள் ஒன்றாய உருத்திராக்க சாபால உபநிடதம் எண்பத் தெட்டாவது உபநிடதமாயுள்ளது. சாமவேத பாகமாய் விளங்குவது. புசுண்ட மகாமுனிவர்க்குக் காலாக்கினி ருத்திர பகவானாலே கூறி யருளப்பட்டது.

(ஓம்!! அதஹைநம் காலாக்நி ருத்திரம் புசுண்டப் பப்பிரச்சகதம் ருத்திராக்ஷோத்பத்திஸ்தத்தாரணாச் கிம்பல மிதி தநகோவாச பகவான் காலாக்நி ருத்திர:!! திரிபுர வதார்த்தமகம் நிமீலி தாக்ஷோபவம்) என்று தொடங்கிச் சிறப்பிக்கின்றது. இது அரிய உருத்திராக்கத்தின் தோற்றம், வகை நிறம், தரிசன பலம், உச்சாரண பலம், பரிசபலம், தாரண பலம், முகவகை, அவற்றி னுயர்வு, பாவ நிவாரணம் முதலாயினவற்றை எடுத்துரைப்பது. விபூதி யுபநிடதமாகிய பஸ்மசாபால உபநிடதத்தை எண்பத்தேழாவதாகவும், இவ்வுருத்திராக்ஷ சாபால உபநிடதத்தை எண்பத்தெட்டாவதாகவும் வைத்து, முக்தி கோபநிடதம் சிறப்பித்துப் பிரதிபாதித்தமையால், இவ்விரண்டுமே முக்திக்கு இன்றியமையாச் சாதன மென்பது பெறப்பட்டது. திருமண்ணாவது, குங்கும மஞ்சள்களாவது, துளசிமணியாவது, கோபிசந்தன மாவது இங்ஙனம் பேசப்படவில்லை.

## அக்ஷமாலிகா உபநிடதம்.

இது அறுபத் தேழாவது உபநிடதம் இருக்குவேத பாகமாயுள்ளது. பரமகம்ச பரிவிராசகோபநிடதத்திற்கு முன்னர் வைத்து வேதம் புகழ்ந்தமையால் தத்வஞான மடைந்த சந்நியாசிகளானும் இது வொன்றே தள்ளத்தகாத முத்திரை யென்பது போதரும். இது, புதுச் சந்நிதி யென்னுங்

திருக்கோயிலில் எஞ்ஞான்றும் நீங்காதெழுந்தருளும் குக்கடவுளைப் பணிந்து கேட்ட பிரமற்கு, அவரால் உபதேசிக்கப்பட்டது உருத்திராக்க மாலையின் வகைகளையும், மாலையை யணிந்தார் பலன்களையும், மாலைசெய்யும் விதிகளையும் பிரதிட்டை விதிகளையும், அதற்குரிய மந்திரங்களையும், வேறு விதிகளையும் எடுத்து விளக்காநிற்கும். அகர முதல் க்ஷகர மிறுதியாகவுள்ள எழுத்துக்கள் முதலில் வரும் மந்திரங்களோடு உருத்திராக்ஷ பூசையையுங் கூறுகின்றது.

'ஓம்!! அதப்பிரசாபதிர்க்குகம் பப்பிரச்ச |
போப்பிரஹ்மந் நக்ஷமாலா பேதவிதிம்ப்ரூஹீதி
சாகிம் லக்ஷணசதி பேதா அஸ்யாம் காநி சூத்ராணி

என்று தொடங்கிச் சிறப்பித்துப் பேசுகின்றது. இங்ஙனம் நான்கு வேதங்களாலும் வேதாந்தங்களாலும், சிவாகம சித்தாந்தங்களானும் விசேடித்தெனவெடுத்துப் பேசப்பட்ட உருத்திராக்கத்தை மெய்யன்புடன் தரிப்பவர் யாவரேயாயினும் அவர் சிவனேயாவர்.

## உருத்திராக்க மகிமை.

உருத்திராக்கந் தரிப்போர் எக்குலத்தவர் ஆயினுஞ் சீவன் முத்தரே யாவர். இழிந்த நாய் தரிக்சப் பெறினும் அது மேலாங்கதியைப் பெறும். கங்கை, யமுனை, நருமதை, சிந்து, சோணநதி, துங்கபத்திரை, காவிரி, தாமிரபர்ணி முதலிய தெய்வநதிகளினும் புண்ணிய நதிகளினும் மூழ்குதல், பரிமேதம், சோடசியம், வாசபேயம், அக்கினிட்டோமம் முதலிய யாகங்கள் செய்தல், பஞ்சாக்கினி மத்தியினின்று அருந்தவம் புரிதல், தலயாத்திரை செய்தல், மூர்த்திதரிசன சேவை செய்தல், முப்பானிரண்டு அறமியற்றல், துலாபுருட முதலிய தானங்களியற்றல் என்னு மிவை

முதலியவற்றால் வரும் பயன்களை யெளிதினீவது இவ்வுருத்திராக்கமேயாம். இதனைத் தரிக்காமற் செய்யப்படும் ஓதல், ஈதல், வேட்டல், சிவபூசை, நீராடல், சந்தியாவந்தனம், பிதிரர் கிரியை, தருப்பணம், விவாகம், கிருகப்பிரவேசம், கருப்பாதானம் முதலிய சோடசக்கிரியைகள் எவையும் பிரயோசனத்தைக் கொடுக்காவாம். இதனை யணிகின்றவரிடத்துச் சிவபெருமான் என்றுஞ் சாந்நித்தியரா யிருப்பர். அவர் தங்கிடமும் முத்தித் தலமாகும். அவரைத் தரிசித்தவருந் தேவர் ஆவார் என்று சிவாகமங்கள் செப்புகின்றன. வேதங்களை யெல்லாம் நன்கறிந்த பிராமணன் ஆயினும், விபூதியுடன் இவ்வுருத்திராக்கத்தையுந் தரியாது விடுவனேல், அவன் நாய்க்கடுவான் எனப்படுவான். (நாய்க்கடுவான் என்பான், சண்டாளன் பார்ப்பன மகளோடு கூடிய வழிப் பிறந்தவன்) அவன் எவ்வித யாகங்களைச் செய்யினும் அவற்றாற் பலன் அடையான் என்று உபநிடதமாகிய வேதாந்தங் கோஷிக்கின்றது.

## கண்டிகைமணி விழுங்குதல்.

உருத்திராக்கம் தன்பெயரை உச்சரிப்பினும், தன்னைத் தரிசிக்கினும், பரிசிக்கினும், தரிக்கினும் பெரிய பயன்களை யளிப்பதன்றி, உண்ணினும் பேரின்பளிக்கும் என்று வேதாகமங்கள்கூறும். இறக்குங் காலத்தில் ஒருவன் ஒருருத்திராக்கத்தை விழுங்கி யிறப்பனேல், அவன் பிறவிகடோறு மீட்டிய பெரும்பவங்கள் தொலையப் பெற்றுப் பரிசுத்தனாய், உருத்திர லோகத்தை யடைந்து ஆங்குள்ள இன்பங்களை யநுபவித்து, பின்னர்ச் சிவசாயுச்சியத்தை யடைவன். அது,

காய மொருவும்போ தோர்கண் டியைவிழுங்கி
மாயுநர்தா மாய மனத்தின்றி—யேய்வ

ருருத்திரலோ கத்தி னுதிப்பினுமீங் கேயா
சரித்தமலன் ருளேயடை வார்.

என்ற செய்யுளாற் றெரிகின்றது. மணியை விழுங்குதல் கூடாதாயின், இறக்குங் காலத்தில் கண்டியைக் கழுத்திற் றரித்து இறக்கினும் அந்தப் பெரும்பேறு கிடைக்கு மென்பது திண்ணம். நூற்றெட்டு மணிமாலையை மார்பிற் றரித்து நிருமலராகிய சிவபெருமானது திருவடிகளைச் சிந்தித்து நடப்பவர், ஒவ்வோர் அடிக்கும் ஒவ்வோர் அசுவமேத யாகபலத்தை யடைவர்.

## உருத்திராக்கம் தோன்றிய காலம்.

உருத்திராக்கம் அநாதியே யுள்ளதாயினும், வெளிப்பட்ட தன்மையால் அதன் றோற்றக் காலத்தை யாராயின் திரிபுரசங்காரம் நடந்த காலமேயாம். அது,
(திரிபுர வதார்த்த மகம் நிமீலிதாக்ஷோபவம் ஸ்தேப்யோ ஜலபிந்தவோ பூமௌ பதிதாஸ்தே ருத்ராக்ஷா ஜாதாஸ் ஸர்வாநுக்ரஹார்த்தாய தேஷாம்) என்ற உருத்திராக்ஷ சாபால உபநிடதத்தாற் றெரிகின்றது.

திரிபுர சங்காரகாலம் இராவணன், இரணியன், சூரபன்மன், வாணன், அந்தகாசுரன் சலந்தராசுரன் முதலினோர் காலத்திற்கு முற்பட்டதேயாம். சலந்தராசுர வதத்திற்கு முற்பட்டகால மென்பதனுல் துளசிமணித் தோற்றத்திற்கும் எத்தனையோ கற்பகாலம் முன்னராகத் தோன்றிற்றென்று தெரிகின்றது. வேதம் அநாதியாயிருப்பதொன்ருனுல் அதிற் சொல்லப்பட்ட கண்மணியும் அநாதியே. துளசிமணி வேத உபநிடதங்களிற் கூறப்படாமையால், இடையில் வந்ததென்பது உண்மையாம். திரிபுரசங்கார காலத்திலே தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன் மாலி என்

னு மூவரும் எரியிற்பட்டழியாது உய்ந்து, திருக்கயிலையில் வாயிற் காவலராய் நின்றதன் பின்பு, எண்ணில்லாத இந்திரர்களும், எத்தனையோ பிரமர்களும், பலகோடி விட்டுணுக்களும் இறந்தனர் என்று வேதம் பிரதிபாதிக்கின்றமையால் அக்காலத்தை யளவிட லெவர்க்கு மரியதே.

**திருவாசகம் - திருத்தோணோக்கம்.**

*எண்ணுடை மூவ ரிராக்கதர்க ளெரிபிழைத்துக்*
*கண்ணுத லெந்தை கடைத்தலைமு னின்றதற்பி*
*னெண்ணிலி யிந்திர ரெத்தனையோ பிரமர்களு*
*மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் டோணோக்கம்.*

## உருத்திராக்க தானம்.

சிவனடியரா யுள்ளார்க்கு உருத்திராக்க மாலையை யாவது, மணியை யாவது தானஞ் செய்தல் சொல்ல வொண்ணாப் பரம புண்ணியம் ஆகும். சுத்த வித்தைகளிலே சொல்லப்பட்ட துலாபுருட தானம், இரணிய கருப்பதானம் பிரமாண்ட தானம், இரணிய கற்பகதானம், அட்டோத்தர சகத்திர கோதானம், இரணிய விடபதானம், இரணிய வசுவதானம், இரணிய கன்னிகா தானம், இரணிய துவாரபாலக தானம், சொர்ண ரத தானம், பஞ்சலாங்கல தானம், சுவர்ண பூமி தானம், கற்பகலதா தானம், இரணிய சத்தசாகர தானம், இரத்தின தேனு தானம், பொற்கும்ப தானம், சுவர்ண கணபதி தானம், விட்டுணு விம்ப தானம், திலபதும தானம், திலபருவத தானம், திலதேனு தானம், இலக்குமி தானம், அன்னதானம், சுவர்ண தானம், வித்தியா தானம், சிவிகா தானம், கவிகா தானம், பாதரக்ஷாதி முதலிய தானங்கள் எவற்றினும் இது மிக விசேட முடையது. இத்தானத்திற்கு ஒப்பாகவாவது உயர்வாகவாவது வேறோர் தான முளதென நினைத்தலும் மகாபாவம். தானஞ் செய்வார்

அன்புடனே செய்க. மதுமாமிச பக்ஷணமுடையார், சிவ தீக்ஷையில்லார், தூர்த்தர் முதலிய அசற்பாத்திரர்க்குத் தானஞ் செய்தலாகா. சற்பாத்திர முடையார்க்குத் தானஞ் செய்தவர் இருவினையி னின்றும் நீங்கிச் சிவசாலோக்கிய முத்தியை யடைந்து, அங்கிருந்தவாறே பிரதம மகாப்பிரளய காலம் வந்துழிச் சிவபெருமானோடு இரண்டறக் கலத்தலாகிய சிவசாயுச்சிய முத்தியை யடைவர்.

## பெருந்திரட்டு.

துலைப்புருட முதலாகச் சுத்தவித்தை
 விளக்குபல தூய தானக்
கிலையிதன்ற னிலேசமென வெண்ணியரு
 ணடியவர்க்கிங் கியன்ற கண்டி
யலைவின்றிப் பத்தியுடன் கொடுப்பரே
 லவர்முத்திக் கருக ரிந்த
மலைவகற்றுந் தானமொரு பாத்திரர்க்கே
 செய்வதென மறைகள் பேசும்.

## உருத்திராக்க சோதனை.

உருத்திராக்கங்களை வாங்குமிடத்து அவை முகங்கள், வரைகள் தேய்தலில்லாதன வாகவும், முகமுதலியன விளக்க முள்ளன வாகவும், செய்கை யுருத்திராக்க மல்லாதன வாகவும், இளமை, பிஞ்சு முதலிய பருவங்களில்லாதனவாகவும், நல்லிலக்கண முள்ளன வாகவும் ஆராய்ந்து கொள்ளல்வேண்டும். உயர்வுடைய பக்கமே முகமும், அது இல்லாத பக்கமே அடியுமாம். முகங்களை யிரேகையால் அறிக. சிலர் முகங்களை யுண்டாக்கியுங் குறைத்துஞ் செய்து வைத்திருப்பது முண்டு. உருத்திராக்கங்க ளெல்லாவற்றினுஞ் சிறந்தது ஒரு முகமணி. அது கிடைப்பது அருமையினு மருமையே. ஒருவர்க்கு அது கிடைக்குமாயின் அவர்

வணங்கா முடியராய் அரசாண்டு சிவகதியை யடைவர். அவருக்கு நோய், வறுமை, பயம், துன்பமுதலியன வில்லை. அங்ஙனமாய ஒரு முக உருத்திராக்க மணியென்று சிலர் முகத்தையழித்தும், செய்கையிற்செய்தும் காட்டுவது வழக்கம். அவற்றை யறியாமையால் ஓர் முகமணி யென்று பலர் நம்பிவாங்கிப் பரிபவப்படுவது முண்டு. ஆதலால் தகுந்த உருத்திராக்கத்தை உரைத்துப் பார்க்கின் மேலான பொன்மாற்று இருக்கும். ஒரு முகமணி சோதனை பார்க்கின், ஓரிலக்கம், பதினாயிரம், ஆயிரம், நூறு என்னும் எண்ணவாய உருத்திராக்கங்களுள் ஓர் தொகைமணிகளை, ஒருமுகமணியைக் கீழே வைத்து மேலே குவிக்கின், அது அவற்றையெல்லாந் துருவிச் சென்று மேலே நிற்கும். இங்ஙனஞ் சோதித்துக்கொள்க.

## உருத்திராக்கத்தின் பெயர்களுங் காரணமும்.

உருத்திராக்கத்தை அக்கம், கண்டி, கண்டிகை, கண்மணியெனச்சொல்வர். மந்திரவாதியின் கண்கள் விடத்தை நீக்குதல் போலவும், மீன்கள் முட்டையிட்டுத் திரும்பித் தங்கண்களாற் பார்த்த மாத்திரத்தில் முட்டைகள் எல்லாம் மீனுருவமடைதல் போலவும், சிவபெருமான் தமது திருக்கண்களின் நோக்குதலாகிய சட்சு தீக்ஷையினால் ஆன்மாக்களின் மலங்களை நீக்கித் திருவருளுருவாக்கித் தம்முடன் இரண்டற்று நிற்கும் அத்துவித முத்திப் பேற்றைக் கொடுத்தருளுவர். அதுபோலத் தன்னை யணிந்த அன்பரின் மும்மலங்களையும் நீக்கித் திருவருட் பேற்றைக் கொடுத்துச் சிவபெருமானது கண்போல விளங்கலின் அக்கம் எனப் பெயர் பெற்றது. குற்றங்களையுந் துன்பங்களையும் கண்டிப்பதனால் கண்டி, கண்டிகையெனப் பெயர் பெற்றது. சிவ

பெருமானது திருக்கண்களினின்றும் பொழிந்த முத்துப் போன்ற நீர்வடிவாய் சிற்றலின் கண்மணி யெனப் பெயர் வாய்ந்தது. கண்ணாகிய மணியென இருபெய ரொட்டுப் பண்புத் தொகையாகக் கொள்வதுமுண்டு. எண்சாணுடம் பிற்குஞ் சிரசே பிரதானம். அதனினும் "சர்வாங்கம் நய னம் பிரதானம்" என்றபடி கண்ணே சிறந்தது. அதனினுங்க ண்ணுள் இருக்கும் மணியே சிறந்தது. ஆதலால் உவமவா குபெயராய்க் கண்மணியைப் போன்றது என்றலுமாம்.

### தேவிகாலோத்தரம்.

பரசிவன்கண் மலர்போலப் பரித்தவரைப் பவமாற்றி
யருளுருவிற் செயலானக் கமுஞ்மாசொ டாரரங்கை
யொருவுறக்கண் டித்தலினற் கண்டிகண்டி கையெவற்றும்
பெருமைமிக லான்மணியென் றொருவேதம் பேசிற்றால்.

### உருத்திராக்க விசிட்டம்.

உருத்திரன்கண் ணீரி லுதித்தலினா குமபே
ருருத்திராக் கமென் றுணர்.

### உருத்திராக்க வருணம்.

வெண்மைநிற உருத்திராக்கம் அந்தணசாதி எனவும், பொன்னிற மணியும் செந்நிற மணியும் க்ஷத்திரியசாதி என வும், வெண்மையுஞ் செந்நிறமுங் கலந்துள்ள மணி வை சிய சாதி யென்வும், கருநிற மணி சூத்திர சாதி யெ னவுங் காண்க.

### பேரூர்ப்புராணம்.

வெண்மை யுந்திகழ் பொன்மையும் பொன்மைவெண் மையுஞ்சேர்
வண்மை யுங்கரு மையுமென வகுத்தரா னிறத்து
முண்மை யக்கமா மணிகளவ் வுரைத்தன முறையே
தண்மை யந்தணர் முதலிய நால்வர்க்குஞ் சாரும்.

## நான்கு வருணத்தாருக்கு முரியமணி.

வெண்ணிற மணி பிராமணருக்கும், கருமை சேர்ந்த பொன்னிற மணியாகிய கபிலநிறமணியும், செந்நிறமணியும் க்ஷத்திரியருக்கும், பொன்னிறமணி வைசியருக்கும், கருநிறமணி சூத்திரருக்குந் தரித்தற் குரியனவாம். வெண்ணிறமணி கிடையாவிடின் பிராமணர் செந்நிற மணி தரிக்கக் கடவர். அதுவுங் கிடையாதேல் பொன்னிற மணியும், அதுவு மரிதேற் கருநிறமணியுந் தரிக்கலாம்.

### உருத்திராக்க விசிட்டம்.

அரிதாகில் வெண்மைதா னந்தணர்க்குச் செம்மை
யுரிமை யெனவே யுணர்க—வரிதாகிற்
செம்மையும் பொன்மைதருந் தேடவரி தேலதவு
நன்மை கருமையென நாடு.

## உருத்திராக்கப் பதிகம்.

திருவருணெறித் தமிழ்முறை யாகிய திராவிடவேதத்திலே, விபூதி, பஞ்சாக்கரம், உருத்திராக்கம் என்னும் சிவசாதனங்கள் மூன்றனுள், பூசுவதும், பேசுவதும் ஆகிய விபூதியையுந் திருவைந் தெழுத்தையும் புகழ்ந்து, முறையே திருநீற்றுப் பதிகம் எனவும், நமச்சிவாயப் பதிகம் எனவும் திருவாய் மலர்ந்தருளிய பெருந்தகையாளர், பூண்பதாகிய உருத்திராக்கத்தைப் புகழ்ந்து உருத்திராக்கப் பதிகம் என்று அருளாது விடுவாரா? விடார். விபூதியையும் பஞ்சாக்ஷரத்தையும் பஸ்மசாபால உபநிடதமும் மந்திரோபநிடதமும் கூறுவதுபோல, உருத்திராக்கத்தையும் உருத்திராக்க சாபால உபநிடதமும், அக்ஷமாலிகா உபநிடதமும் சிறப்பித்துப் பேசுவதனால் விடமாட்டார் என்க. திருவருள் வழிநின்ற மூவர் முதலிகளும் ஓதியருளிய தேவாரத் திருப்

பதிகங்கள் ஓரிலக்கத்து மூவாயிரம் பதிகங்களெனவும், அவற்றுள், எகூஎ திருப்பதிகங்கள் மாத்திர மிருக்க, மற்றையவையெல்லாம் இறந்துபட்டனவெனவும் திருமுறைகண்டபுராணத்தாற் றெரியவரலால், இவ்வுருத்திராக்கப் பதிகமும் அவற்றுட்பட்டு ஒளித்தது என்க. ஆதலால் உருத்திராக்க கவசமொன்று தருகின்றாம்.

## ஸ்ரீருத்திராக்க கவசம்.

பரமணி யுரோமங் காக்க பரத்துவஞ் சிரத்தைக் காக்க
திரமணி நுதலைக் காக்க சிவமணி புருவங் காக்க
வரமணி செவிகள் காக்க வருமக்க மக்கங் காக்க
புரமணி நாசி காக்க புருடார்த்தங் கபோலங் காக்க. (க)

வெண்மணி பற்கள் காக்க கண்டிகை யுதடு வேட்க
எண்மணி தால்பு ரக்க விரக்கைநன் முகத்தை நோக்க
வண்மணி வாயைங் காக்க வருநந்தி பிடரோ காக்க
தண்மணி களத்தைக் காக்க சவிமணி புயங்கள் காக்க. (உ)

முளரிநல் யோனி நன்கு முதுகினைக் காக்க மார்ப
மளவில் சத்தியை யளிக்க வருங்குயஞ் சாரங் காக்க
வளர்மணிக் கட்டு மூன்று மணியது காக்க வங்கை
யளவில்சீர்க் கண்டி காக்க வங்கை கிர்பாலு காக்க. (ங)

வயிறுருத் திரம ளிக்க வரைமறை யுண்மை காக்க
பெயருந்தி சைவங் காக்க பெருவிலாச் சத்துக் காக்க
வயர்வுடை யிடையைத் தேவ வருண்மணி காக்க கோச
முயர்வரு வித்தை காக்க வொருகுதந் திருமை காக்க. (ச)

பீசத்தை புருத்ர பீசம் பேணுக தொடைக டேவ
வாசத்த தளிக்க சித்தி யருமுழங் கால்க ணைக்கால்
தேசத்த பிரம ரூபஞ் சிறந்திடக் காக்க கால்கைத்
தேயத்த வுகிர்கள் வேத மேத்திடு தெய்வங் காக்க. (ரு)

புறவடி சாத னர்தா னுள்ளடி புரக்க நாளங்
குறுகுதி யெண்ணி ரண்டா முருவத்த தளிக்க கோபந்
துறுவிலை பீதி நோய்துன் பிவையெலாம் போக்கித் தூய
பெறுபயன் யாவு மீந்து பெருமணி காக்க வென்றும். (சு)

இதனை, நாடோறும் அநுட்டானம் முடித்த பின்னர் மெய்யன்புடன் ஓதி உருத்திராக்க தாரணஞ் செய்வரேல் நோய், பயம், துன்பம் இருவினை யென்னு மிவையெல் லாஞ் சூரியனைக்கண்ட பனிப்படலம்போ னீங்கும். உலக வசியமும், அழகும், திடசரீரமும், தீர்க்காயுளும், சத்துரு சயமும், புத்திராதி நற்பேறும், சிவஞான விருத்தியும் உண் டாகும். உயிருக்கும் உடலுக்கும், பொருளுக்கும் வேறு காப்பு வேண்டாம். இதுவொன்றே அம்மூன்றனையும் கண் ணுக்கு இமைபோலவும், வாய்க்கு உதடுகள் போலவும், உடம்பினுக்குக் கவசம் போலவும் நின்று காக்கு மென்பது திண்ணம்! திண்ணம் !!

## உருத்திராக்க வகை.

வெண்ணிறமணி, கபிலநிறமணி, செந்நிறமணி, பொ ன்னிறமணி, கருநிற மணியென உருத்திராக்கம் ஐந்து வகைப்படும். அவை யொவ்வொன்றும் ஒருமுகமணி முத ற் பதினாறு முகமணியெனப் பதினாறு விதப்படலால் எண் பது வகைப்படும்.

## உருத்திராக்க அளவு.

வெவ்வேறு தானங்களிற் றரிக்கப்படும் உருத்திராக்க மாலைகளுக்கு எண்ணளவு, எல்லையளவு என இருவகையளவு ண்டு. அவற்றுள், எண்ணளவாவது—இன்ன தானங்களுக்கு இத்தனை யெண்ணுள்ள மணிகள் தரிக்கவேண்டு மென்ப தாம். அது வருமாறு:—குடுமியிலே ஒருமணியும், தலையி

லே முப்பத்தாறு மணியும், காதுகளிலே ஒவ்வொருமணி அல்லது அவ்வாறு மணியும், கழுத்திலே முப்பத்திரண்டு மணியும், புயங்களில் தனித்தனி பதினாறுமணியும், கைகளிலே தனித்தனி பன்னிரண்டு மணியும், மார்பிலே நூற்றெட்டு மணியுங் கொண்ட மாலை தரித்தலாம். எல்லையளவாவது இன்ன தானத்திற் றரிக்கும் மாலை யிவ்வளவினதாயிருக்க வேண்டு மென்பது. அது வருமாறு:—கையிற் றரிக்கும் மாலை கைப்பெருமையினதாகவும், சிரமாலை சிரத்தினளவாகவும், மார்பிற் றரிக்கப்படும் மாலை பிடர் முதல் நாபி வரையினதாகவும, அல்லது மார்பு அளவினதாகவுஞ் செய்யப்படுதலாம்.

## உருத்திராக்க சொரூபலக்கணம்.

உருத்திராக்கத்தின் மூலம் பிரமதேவரும், நாளம் விட்டுணு மூர்த்தியும், முகம் உருத்திர மூர்த்தியும், கேசரங்கள் சகலதேவதைகளும், உருமுழுவதும் திருவருட் சத்திரூபமுமாம் என்று ஆகமங்கள் கூறுகின்றன. உருத்திராக்க மாலையின் சூத்திரம் பிரமரூபம் எனவும், அதன் வலப்பக்கம் ஸ்ரீகண்டப்பெருமா னுருவென்றும், இடப்பக்கம் விட்டுணு வடிவென்றும், முகம் சரசுவதி யுருவென்றும், புச்சம் காயத்திரி ரூபமெனவும், கேசரம் சாவித்திரி வடிவென்றும், கிரந்தி (முடிச்சு) பிரகிருதி யுருவென்றும் அதர்வணவேத பாகமாகிய அக்ஷமாலிகா உபநிஷத்திற் சொல்லப்பட்டது.

## பார்த்திவ ருத்திராக்கமணி.

பிருதிவி சம்பந்தமான மண், மரம், கல் முதலியவற்றான் ஆக்கப்பட்ட உருத்திராக்கம் பார்த்திவ உருத்திராக்கம் எனப்படும். வெண்ணிற முதலியன வாய்ந்த உருத்திராக்கமணிகள் கிடையாவேல், மண்ணாலாயினும் மரத்தால்

ஆயினும், தருந்த கற்களால் ஆயினும், உருத்திராக்கம்போல முகமும் வரைகளும் அடிகளுங் குறையாமற் செய்து தரிப்பரேல், அவர் மூவேழ் குலத்தோடும் சிவகதி யடைவரென்று நூல்கள் கூறுகின்றன. அங்ஙனமாயின், உண்மையான சிறந்த கண்டிகையை யணிவார் பலத்தை யாவரோ கூறவல்லவர் "கண்டியரி தாகின்மண் ணாலே பணிக்கண்டி - கொண்டணிவார் மூவேழ் குலத்தோடும் - பண்டைவினை, வீட்டிவிண் ணுள்வ ரெனின்வியன் கண்டிக்குக் - காட்டிடுவாரார்பலத்தைக் கண்டு" என்றார் மறைஞானசம்பந்தரும்.

## ஆக்கினேயமணி அல்லது பொற் கண்டிகை.

அக்கினி சம்பந்தமுள்ளது ஆக்கினேயம். அங்கியின் கூறாய பொன்னால் உருத்திராக்க மணிபோற் செய்தணிவதே ஆக்கினேயக் கண்டிகையாம். சிவபெருமான் அக்கினி வடிவரும், அக்கினிக்கதிபரும், அக்கினிக் கண்ணரும், அக்கினி தாரணரும், அக்கினிமேனின் றுடுவோரும், அக்கினி பூதேசரும் ஆகலால், அக்கினியின் கூறாய பொன்னாற்செய்த கண்டிகையும் அவரடியார்க்குத் தக்கதாம். அநேகர் பொன்னினாலே கண்டிகை செய்து தரிப்பது இக்காலத்து முண்டு. பொன் பிருதிவியின் கூறாகாது தேயுவின் கூறுதல் வாதாராச்சியம், நியாயசாரோயம், நீலகண்டீயப் பிரகாசிகை முதலிய தருக்க நூல்களானறிக. மாதவப் பெருந்தகைச் சிவஞானயோகிகள் கருத்து மிதுவே. வைணவர்க்குள்ளும் அநேகர் பொற்கண்டிகை தரித்துவரல் பாரம்பரியமாக விருக்கின்றது. அங்ஙனம் தரித்த வைணவக் குழுவினருட் பலர் இவ்வுண்மை யறியாது இலந்தைக்காய் என உருத்திராக்கத்தை யிகழ்த லெவ்வறிவு கொண்டோ.?

## தரிக்கும் உறுப்புக்களும் முக எண்களும்.

உருத்திராக்கமணி அணிவோர் இந்நியமத்தின்படி தரிப்பாராயின் பெரும்பயனைப் பெறுவர். சிகைக்கு ஒருமுகமணி ஒன்றும், தலைக்கு இருமுகமணி பதின்மூன்றும், சிரோணூர்த்துவத்திற்குப் பதினொருமுகமணி முப்பத்தாறும், செவிகளுக்கு ஐந்து, ஏழு, பத்து முகமணிகளில் யாதாவது ஒவ்வொன்றும், கழுத்திற்கு எட்டுமுகமணி முப்பத்திரண்டும், வயிற்றிற்கு நான்கு முகமணி ஐம்பதும், ஒவ்வோர் புயங்களுக்கும் பதின்மூன்று முகமணி பதினாறும், இருமணிக்கட்டுகளுள் ஒவ்வொன்றற்கும் ஒன்பது முகமணி பன்னிரண்டும், எக்கிய உபவீதத்திற்குப் பதினான்கு முகமணி நூற்றெட்டும், மார்பினுக்கு எந்த முகமணிகளாயினும் ஐம்பத்துநான்கும், அந்தந்த மந்திர பூர்வமாகத் தரிக்கக்கடவர்.

அக்க தீபிகை.

குடுமி யொன்றென் றணிசிரத்திற்
குலவு மிரண்டிற் பன்மூன்று
தொடுமே லதனிற் பன்னொன்றிற்
சொலுமா றூறு செவிகடமக்
கடுமைந் தேழ்பத் † தவையொன்றெண்
ணதிலெண் ணான்கே களமுதரக்
கிடு ‡ வீரீரைம் பதுவாகிற்
கீரா றென்பான் மணிமணியே.
* நூலிற் கீரேழ் நூற்றெட்டு
நனிமார் பிற்கெம் முகமேனுந்

---

† அவை ஒன்று—அவற்றுள் ஒன்று. எண் அதில்—எட்டு முகமணியில். ‡ ஈரீர் ஐம்பது—நான்கு முகமணியில் ஐம்பது. ஒன்பான் மணி—ஒன்பது முகமணி.

* நூல்—உபவீதம். தருநீர் அக்கம்—தந்த நீரினின்றுந் தோன்றிய உருத்திராக்கம். ஏ—அணியுந் தன்மை பிறவே,

தாலத் தரியீ ரம்பானு
நகமர் திரமோ டன்புடனே
வேலன் ருனத முழுமுதலான்
விண்ணோர் பெருமான் றிரிபுரமுஞ்
சால் வெரித்தான் றன்னக்கந்
தருநீ ரக்கந் தரிநீரே.

## சந்தி தாரணம்.

உருத்திராக்க மாலையை எக்காலத்துந் தரிக்க வியலாதவர் காலை, உச்சி, மாலை என்னுஞ் சந்தியா காலங்களிலாவது தரிக்கவேண்டும். பட்டு வத்திரத்தினால் மணிமாலையைச் சுற்றிப் பெட்டகத்துள்ளே வைத்திருந்து, சுத்த வுடம்பினராய்ச் சந்தியா காலங்களில் தரிப்பராயின், சிவபெருமான் பிரசன்னராய் வேண்டிய இம்மை மறுமைப் பயன்களையெல்லா மீந்து, இறுதியிற் றந்திருவடிப் பேரின்பத்தையும் அளிப்பர்.

## உருத்திராக்க உபவீதம்.

துவிசத்துவத்திற்காக உபவீதந் தரித்தல் விதியே. அவ்வுபவீதம் பருத்தி நூலாற் பெரும்பாலார் செய்து தரிக்கின்றனர். சிலர் வெள்ளி, பொன் இவற்றிற் செய்து தரிப்பது முண்டு. இவையெல்லாம் பிரமஞானத்தை (சிவஞானத்தை) எளிதிற் கொடுக்க மாட்டாவாம். அதுபற்றியே தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்த திருமூலநாயனாரும் "நாலுஞ் சிகையு நுவலிற் பிரமமோ - நூலது கார்ப்பாச நுண்சிகை கேசமாம்" என்று திருமந்திரத்திற் கூறி மறுத்தனர். எளிதில் அத்துவித ஞானமாகிய திருவருண் ஞானத்தை யளிப்ப தெதுவெனில், உருத்திராக்க உபவீதமாம். அது நூற்றெட்டு மணிகள் கோவை செய்து, பிராசாத மந்திர

கூறித் தரிக்கப்படு மென்று வேதாகமங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது.

## ஆயிரமணிந்தவர் அரனெனப்படுவர்.

உச்சி, கழுத்து எனச் சொல்லப்பட்ட தானங்களெல்லாவற்றினுஞ் சேர்த்து ஆயிரம் என்னுங் கணக்காக உருத்திராக்கமணி அணிந்தவர் யாவராயினும் அவரைச் சிவந்த சடைமுடியையுடைய பரமசிவன் என்று, விஷ்ணு பிரமன் இந்திரன் முதலிய தேவர்களும், மற்றைய கணத்தவர்களும் வணங்குவர் என்று வேதாகமங்கள் முழங்குமே யாயின் அவரை மனிதரென்று கூறல் பாவமே யாம்.

**பிரமோத்தர காண்டம்.**

ஆய மாமணி யாயிரம் புனைந்திடி லவரை
மாய ஞான்முகன் புரந்தரன் வானவர் முதலோர்
பாயு மால்விடைப் பரனெனப் பணிகுவ ரென்றுந்
தூய மாமணி யிலேந்தவர் மனிதரோ சொல்வீர்.

## தரியாமையால் வருங்குற்றம்.

உருத்திராக்கத்தைத் தரிப்பதற்குக் கூசுகின்றவர் மக்களுட் பதரெனப்படுவர். அக்கீழ் மக்களைச் சுத்த சாட்குண்ய பதியாகிய சிவபெருமான் வெறுத்துப் பார்த்தற்குக் கூசுவர். அவர் செய்யும் சிவபூசை, சிவமந்திர செபம், சிவாலயசேவை முதலிய புண்ணியங்களெல்லாம்நிஷ்பலமாகும்.

**சைவ சமயநெறி.**

பூணாதே கண்டியினைக் கூசியிடும் புல்லியரைக்
காணாதே காணு மரன்.

## தரிக்குங் காலங்கள்.

சிவமந்திர செபம், சந்தியாவந்தனம், சிவபூசை, சிவத்தியானம், சிவாலய தரிசனம், சிவபுராண படனம், தேவார

திருவாசக பாராயணம், அவைகேட்டல், தீர்த்தமாடல், விரதமநுட்டித்தல், சிராத்தஞ்செய்தல் முதலிய இவைசெய்யுங் காலங்களில் ஆவசியமாகத் தரித்துக் கொள்ளல் வேண்டும்.

## தரிக்கலாகாத காலங்கள்.

சயனிக்குங் காலத்தும், மலசலமோசனத்தும், புணர்ச்சியினும், நோயினும், சனனசௌசம், மரணசௌசம் என்னுமிக்காலங்களிலும் உருத்திராக்க தாரணஞ்செய்தல் ஆகாவாம். ஆயினும் சிகையினும், காதுகளினும், உபவீதத்தினும் எப்போதுந் தரித்துக் கொள்ளலாம். உருத்திராக்கந் தரித்துக்கொண்டு மாமிசபோசனம், மதுபானம், வியபிசார முதலிய பாவங்களைச் செய்தவர்களும், ஆசாரமில்லாது நடப்பவர்களுந் தப்பாது நரகத்தில் விழுந்து வருந்துவர்.

## உருத்திராக்க தாரணமுறை.

எவ்வெத் தானங்களுக்கு எவ்வெவ்வளவு சொல்லப்பட்டதோ அவ்வவ்வளவு தரிக்க. முகம் முகத்தைப் பொருந்தவும், அடி அடியைப் பொருந்தவும் இடையிடையே பொன்னாயினும், வெள்ளியாயினும், தாமிரமாயினும், முத்தாலும், பவளமாயினும், பளிங்காயினும் இட்டு, வெண்பட்டிலேனும் பருத்தியிலேனும் இருபத்தேழு இழையினாலாக்கிய கயிற்றிற் கோத்து, நுனியிரண்டையும் ஒன்றாகக் கூட்டி. யதிலே நாயகமணியை ஏறிட்டுக் கோத்து முடிசெய்து தரிக்க. பொன் வெள்ளி தாமிர முதலிய இவற்றையிடாதாநாகபாசம், பிரமக்கிரந்தி, சாவித்திரி என்பவைகளுள் இயன்ற முடிச்சை யிடுதலுமாம்.

## தரிக்குந் தானங்கள்.

குடுமி, தலை, காதுகள், கழுத்து, மார்பு, புயங்கள், கைகள் என்னும் எட்டுமாம். ஸ்நானஞ் செய்யுங் காலத்திற்

உருத்திராக்கந் தரித்தல் வேண்டும். ஏனெனில் உருத்திராக்க மணியிற் பட்டு வடியுஞ் சலம், கங்கா சலத்துக்குச் சமமாகும் என்று சிவாகமங்கள் முழங்கு மாகலால்.

## உருத்திராக்க பூசை.

உருத்திராக்கத்தைச் சிவலிங்கப் பெருமானாக நினைத்து அபிடேகங்கள் செய்து, புட்ப மாலைகள் சாத்திப் பூசை புரியக்கடவர். உருத்திராக்கத்தைப் பட்டு வஸ்திரத்திலிட்டு ஓம், கிறாம், சுறும், உறம், ஜ்ஞாம், றுஹும், ப்ராம், றாம், றாமாபிஸ், கிறம், ஈம், மம், க்ஷாம், க்ஷம், சிக்ஷாரவும், வம், நம: என்னும் மந்திரத்தால் அபிமந்திரித்து,

"ருத்திராக்ஷ விருக்ஷ பீசாயாம் பூதசம்பூத யேதவே! நேத்ரத்திரயாய ருத்திராய நமோலோக ஹிதார்மநே!! என்னும் மந்திரத்தால் வந்தித்து, அபிடேக முதலியன செய்து பின்னர் எடுத்துத் தரிக்க வேண்டும்.

## உருத்திராக்க தாரண மந்திரம்.

கண்டிகைமாலை தரிக்குங் காலத்து, தலை, நெற்றி, கழுத்து, இருதயம் நாபி, என்னும் ஐந்து தானங்களிலும் முறையே யகாராதி நகார அந்தமான பஞ்சாக்ஷர நியாசஞ் செய்து, ஓம் ஸ்ரீம் சதாசிவாயநம:—ஓம் வன்னி சூரியசோமாதிபதாய நம:—ஷட்திரிஞ்சத் தத்வாத் மகாய பரசிவாயநம:—ஓம் சோமாயை நம:—ஓம் சோமாயநம:—திரியம்பகாத்மநே நம:—ஸ்ரீ கண்டாயநம:—ஓம் ஸ்ரீகண்டாதிமூர்த்தி யாத்மகாய நம:—ஸ்ரீ சர்வஞ்ஞாய நம:—ஓம் சுகாசனாதி சோடசமூர்த்தி யாத்மகாய ஸ்ரீகண்டாய நம:—ஓம் ஸ்ரீம் சோம கலாத்மகாய ஸ்ரீசோமநாதாயநம:—ஓம் துவாத சாதித்தியா யாதிஷ்டாய ஸ்ரீமகாதேவாய நம:—ஓம் கேச

வாதத தியாதிபாய உமாபதயே நம:—ஓம் சதருத்திர வித்ச்வராத்மகாய ஸ்ரீவிச்வேச்வராய நம:—ஓம் சதுஷ்ஷஷ்டி கலாபேத உமாயுக்தாய ஓம் ஹ்ரீம் சனனஸ்தான பூதையே சர்வாத்மனே சர்வகால ரூபாய உமாபதயே நம: என்னு மந்திரங்களைச் சொல்லித் தரித்தல் வேண்டும்.

## தரிக்கும் நியமமும் மந்திரமும்.

உருத்திராக்க மணியைக் குடுமியிலுந் தலையிலும் ஈசானமா மந்திரஞ் சொல்லியும், காதுகளிரண்டினும் தற்புருட மந்திரத்தினாலும், கழுத்தில் அகோர மந்திரத்தினாலும், மார்பில் வியோம வியாபினி மந்திரத்தினாலும், புயங்களிலும் கைகளிலும் பிராசாத மந்திரத்தினாலுந் தரிக்க வேண்டும். உருத்திராக்கமாலையை யன்புடன் றரிசிப்பவர்க்கு இலக்ஷமடங்கு பலமுண்டாம். பரிசித்தவருக்குக் கோடிமடங்கு பலமுண்டாம். சரீரத்தில் தரிப்பவருக்கு ஆயிரகோடி மடங்கு பலமுண்டாம். கையிற்கொண்டு செபித்தவருக்கு அநந்த மடங்கு பலமுண்டாகும். ஆறுமுகமணி வலப் புயத்தினும், ஒன்பது முகமணி இடப்புயத்தினும், பதினொரு முகமணி சிகையினும், பன்னிரண்டு முகமணி காதுகளினும், பதினான்கு முகமணி சிரத்தினுந் தரிப்பது உத்தமம்.

## உருத்திராக்க தாரணபிரீதி.

ஒருமுக மணி தரிக்கிற் சிவனுக்கும், இருமுக மணி தரிக்கிற் சிவசத்திக்கும், மூன்றுமுக மணி தரிக்கின் மும்மூர்த்திகளுக்கும், நான்குமுக மணிதரிக்கிற் பிரமனுக்கும், ஐந்துமுக மணி தரிக்கிற் சதாசிவ மூர்த்திக்கும், ஆறுமுக மணி தரிக்கின் அசுரரைத் தடிந்த ஆறுமுகப் பெருமானுக்கும், ஏழுமுக மணி யணியின் சத்த மாதர்களுக்கும், எட்டு

முக மணி தரிக்கின் அட்டவித்தியேசுரர்க்கும், ஒன்பது முக மணி தரிக்கிற் கங்கை முதலிய நவதீர்த்தங்களுக்கும், பத்துமுக மணி தரிக்கின் பத்துத் திக்குப் பாலகர்களுக்கும், பதினொருமுக மணி தரிக்கின் பதினோ ருருத்திரர்களுக்கும், பன்னிரண்டுமுக மணி தரிக்கின் விட்டுணு மூர்த்தியாகிய வாசுதேவர் முதலிய பன்னிருவர்களுக்கும், பதின்மூன்றுமுக மணி தரிக்கின் சதருத்திரர்களுக்கும், பதினான்குமுக மணியணியின் அசுவினி தேவதைகளுக்கும், அட்டவசுக்களுக்கும், பதினைந்துமுக மணிதரிக்கிற் சந்திரன் வருணன் முதலிய தேவர்களுக்கும், பதினாறுமுக மணி தரிக்கின் முப்பத்து முக்கோடி தேவர்கள், பிரமா, விஷ்ணு, சிவபெருமான் யாவர்க்கும் பிரீதியாம் என்றறிக.

## உருத்திராக்க அதிதேவதைகள்.

ஒரு முக மணிக்கு அதிதேவதை தற்பரசிவன்; இருமுக மணிக்கு அதிதேவதை ஸ்ரீகண்ட பரமசிவன்; மூன்றுமுக மணிக்கு அக்கினிதேவன்; நான்குமுக மணிக்குப் பிரமதேவன்; ஐந்துமுக மணிக்கு அதிதேவதை காலாக்கினி ருத்திரர்; ஆறுமுக மணிக்கு அதிதேவதை எம்பெருமா

மும்மூர்த்திகள் - பிரமன், விட்டுணு, உருத்திரன். சத்த மாதர்களாவார் - பிரமாணி, நாராயணி, மகேசுவரி, கௌமாரி, வாராகி உருத்திராணி, இந்திராணி என்பவர்களாம். அட்டவித்தியேசுரர் ஆவார் - அநந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டி என்னுமிவர்களாம். நவதீர்த்தங்களாவன - கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, சிந்து, காவேரி, கோதாவரி, சோணாநதி, துங்கபத்திரை என்பனவாம். பத்துத் திக்குப் பாலகர் - இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், பிரமன், விஷ்ணு என்பவர்களாம். பிரமன் பூமிக்கும், விஷ்ணு ஆகாயத்திற்கும் பாலகர். பதினோருருத்திரர் - மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், கபாலி, சௌமியன் என்பவர். முப்பத்து முக்கோடி தேவர் - ஆதித்தர் பன்னிருவர், அச்சுவினிகள் இருவர், ஈசர் பதினொருவர், வசுக்கள் எண்மர். கோடி என்பது முடிவு எனப் பொருள்படும்.

ராய சுப்பிரமணியக் கடவுளாம். ஏழுமுக மணிக்கு ஆதிசேடன்; எட்டுமுக மணிக்கு அதிதேவதை முன்னவராய விநாயகக் கடவுளாம். ஒன்பதுமுக மணிக்கு வைரவ மூர்த்தியாகும். பத்துமுக மணிக்கு விட்டுணுவும், பதினொருமுக மணிக்குப் பதினொருருத்திரரும், பன்னிரண்டு முகமணிக்குப் பன்னிரண்டாதித்தரும், பதின்மூன்று முகமணிக்குக் குமாரக் கடவுளும், பதினான்கு முகமணிக்குச் சிவமும் சத்தியும், பதினைந்து முகமணிக்குச் சதாசிவ நாயனாரும், பதினாறு முகமணிக்கு அனந்தேசுரரும் தேவதைகளாம்.

## அவற்றின் பலன்.

ஒருமுகமணி தரிக்கிற் பிரம கத்தியைப் போக்கும். இருமுகமணி தரிக்கிற் கோகத்தியை நீக்கும். மூன்றுமுக மணி யணிந்தவர் ஸ்திரீகத்தி நீங்கப் பெறுவர். நான்கு முகமணி யணிந்தவர் நரகத்தி தொலையப் பெறுவர். ஐந்துமுகமணி யணிந்தாற் புணரத் தகாதவர்களைப் புணர்ந்ததனால் வரும் பாவமும், புசிக்கற் பாலன வல்லாதவற்றைப் புசித்ததனால் வரும் பாவமும போம். ஆறுமுகமணி தரிக்கின் அது பிரமகத்தி முதலிய மகாபாதகங்களை யெல்லாம் நாசமாக்கும். ஏழுமுகமணி தரிக்கின் கோகத்தியையும் பொற்களவையும் போக்கும். எட்டுமுக மணி யணிந்தாற் குருபன்னியைப் புணர்ந்த பாவமும், பொற்களவும், துலாபுருடதானம், இரணிய கருப்பதானம், திலபதும தானம், சொன்ன பூமிதானம், சொன்னதேனு தானம், இலக்குமி தானம், திலதேனுதானம், சகத்திர கோதானம், இரணிய வசுவதானம், இரணிய கன்னிகாதானம், சொன்ன கசமுதலிய தானங்களை வாங்கிய பாவமும், பிறர் அன்னத்தைக் கவர்ந்துண்ட பாவமும் நீங்கும். ஒன்பது முகமணி தரிக்

கின் ஆயிரம் பிராணகத்தியும், நூறுபிரமகத்தியும், பூதம், பிசாசம், சர்ப்ப முதலியவற்ற லாகும் விக்கினங்களும் நீங்கும். அணிமாமுதலிய சித்திகளும் முத்தியு முண்டாம். பத்துமுக மணி தரிக்கின், அது நாள் கோள் பேய் பூதம் பிரமராக்கதம் முதலியவற்று லுண்டாகுந் தீங்குக ளெல்லாவற்றையும் போக்கும். பதினொரு முகமணி தரித்தால் அது ஆயிரம் அசுவமேத பலத்தையும், நூறு வாசபேய பலத்தையும், இலக்ஷங் கோமேத பலத்தையுங் கொடுக்கும். பன்னிரண்டு முகமணி தரிக்கின் அது கோமேத பலத்தையும், அசுவமேத பலத்தையும்; சுவர்ணதான பலத்தையுங் கொடுக்கும். பதின்மூன்று முகமணி தரிக்கின் அது சர்வாபீட்டத்தையுஞ் சர்வ சித்தியையுங் கொடுக்கும்; பிதாவையும், மாதாவையும், சகோதரரையும், புத்திரரையும், கருவையுங் கொன்ற பாவத்தையும் போக்கும். பதினான்கு முகமணி தரித்தால் தேவர் முனிவர் முதலாயினோ ரெல்லாரையும் வசப்படுத்திச் சிவ பதத்தைக் கொடுக்கும். பதினைந்து முக மணி தரிக்கின் சகல பாவங்களையும் நீருக்கும். இந்திரன், பிரமன், விஷ்ணு முதலினோது பதவிகளினுள்ள போக வின்பங்களையும் வசமாக்கும். பதினாறு முகமணி தரிக்கின் சிவசாயுச்சிய வாழ்வை யளிக்கும். இவற்றுள் பதினான்கு, பதினைந்து, பதினாறு முக மணிகள் கிடைப்பதருமை யருமை.

### சித்தாந்த சிகாமணி.

வேதி யர்க்கனை யத்தனுக் கொண்மக விணுக்குத்
தீதி ழைத்தவன் கள்ளுணணி செய்ந்நன்றி செற்றோன்
போத நற்குரு தற்பான் பொன்கொளி யென்னும்
பாத கத்தினி னீங்குவன் பரன்மணி தரிப்பின்.

## செபமாலை யிலக்கணம்.

உருத்திராக்கத்தைத் தரிப்பதே யன்றி, சிவமந்திரம், தேவி விநாயகர் வைரவர் வீரபத்திரர் கந்தர் என்னு மிவர்களின் மந்திரங்களையுஞ் செபித்தற்கு, மாலையாகக்கொள்ளுதலும் விசேடமாம். ஸ்ரீபஞ்சாக்கராதி செபிப்பதற்கு விரலினும் விரலிறை யெண்மடங்கதிகமாம். அதனினும் சங்குமணிமாலை பத்து மடங்கு அதிகம். அதனினும் புத்திர தீபமணிமாலை நூறு மடங்கு அதிகம். அதினும் பவளமணிமாலை ஆயிர மடங்கதிகம். அதனினும் படிக மணிமாலை பதினாயிர மடங்கதிகம். அதனினும் முத்துமாலை இலக்ஷ மடங்கு அதிகம். அதனினுந் தாமரைமணிமாலை பத்திலக்ஷமடங்கு அதிகம். அதனினும் பொன்மணிமாலை கோடி மடங்கதிகம். அதனினுந் தருப்பைப் பவித்திர முடிச்சுமாலை பத்துக்கோடி மடங்கு விசேடித்தது. அதனினும் அக்ஷரமணிமாலை நூறுகோடி மடங்கு அதிகம். அதனினும் மாணிக்கமாலை ஆயிரகோடி மடங்கு உயர்ந்தது. மரகதமணிமாலை விந்தமடங்கதிகம். அதனினும் பாதரசமணி கற்பமடங்கு அதிகம். அதனினும் உருத்திராக்கமாலை யநந்தமடங்கு அதிகம். ஆகலால் உருத்திராக்கமணி மாலையையே செபமாலையாகக் கொள்க. "கண்டிகாம் தாலுநாபத்வா" என்ற சுலோகத்தாற் காமிக ஆகமம் விதந்துரைத்த செபமாலைக்கு, இரண்டு மூன்று, பன்னிரண்டு, பதின்மூன்று முகமணிகள் ஆகாவாம். க0அ, ருச, உஎ என்னும் அளவினவாய மணிகளாற்செய்க. மோட்சத்தை விரும்பினவன் இம்மூவகைமாலைகளுள் ஒன்றூற் செபிக்க. முத்தியை விரும்பினவன் (உரு) மணிகொண்ட மாலையினாற் செபிக்க. செபமாலையை நாயகமணியில்லாமலுஞ் செய்தலுண்டு. அதனாலே பாவமுமில்லை; பலனும் அதிகம் இல்லை. செபிக்கும்போது செபமாலை அங்கியா

கண்ணுக்குப் புலப்படிற் செபங்கள் பிரயோசனப்படா. ஆகலால் அதனைப் பிறர்காணாவண்ணம் பரிவட்டத்தினால் மூடிக் கொண்டு செபிக்கக்கடவர். செபிக்கும்போது செபமாலையின் மணிகள் ஒன்றோடொன்று ஓசையுறிற்பாவமுண்டாம். அதனை நடுவிரல் மூன்றிலும் வைத்துப் பெருவிரலினாலே தள்ளிச் செபிக்க. முத்திகாமி செபமாலையை மேனோக்கித் தள்ளியும், போககாமி கீழ் நோக்கித் தள்ளியுஞ் செபிக்க. நாயக மணியைக் கடந்து செபிக்கிற் பாவஞ் சேரும்.

செபமாலைக்குமணி கொள்ளுமிடத்து எல்லாம் ஒரே விதமான முகங்களை யுடையனவாகக் கொள்ளுதலே தகுதி. பலவித முகமணிகளையுங் கலந்து செய்யிற் குற்றமாகும்.

செபமாலை கொள்வோர் அளவு, நாடி, திக்கு ஆசனம், பிரதிட்டை முதலியனவற்றை யறிதல் முக்கிய மாதலாற் கூறுவாம்.

## செபமணி யளவு.

நெல்லிப் பழம்போன்ற மணி உத்தமம். இலந்தைக் கனிபோன்ற அளவினையுடையமணிமத்திமம். கடலைப் பிரமாண முள்ள மணி கனிட்டமாகும். அதிபெரியவும், அதிசிறியவும், பின்ன முள்ளவும், இலகுவா யிருப்பவும், விரணம், கண்டம், ஜீரணம் முலிய குற்றங்க ளில்லாதனவும், திடம், வட்டம், பொன்மய முதலிய நன்மை வாய்ந்தவுமான மணிகளையே கொள்ளல் வேண்டும்.

### உருத்திராக்க விசிட்டம்.

உத்தமமே யாமலகத் தின்கனிக்கொப் பானகண்டி -
மத்திமமா கும்மிலந்தை வண்கனிக்கொப் - பித்தலத்து,
ணீசஞ் சணவித் தினையென்ன வேநினைக - பாசவிதம்பா
ற்ற நினைப்பார்.

## செபநாடி.

உருத்திராக்க மணிமாலை கொண்டு செபிப்போர் முத்தியை விரும்பிச் செய்யுங்கால், பிங்கலை நாடி நிகழுங் காலத்திற் செபிக்கக்கடவர். புத்தியை விரும்பினோர் இடைநாடியாகிய சந்திரநாடி நிகழுங் காலத்திற் செபிப்பாராக. புத்தி முத்தி என்னும் இரண்டனையும் விரும்பினோர் பிங்கலை, இடை என்னும் இருநாடிகளும் ஒத்து நிற்குஞ் சுழுமுனை யாகிய பிரமநாடி நடக்குங் காலத்திற் செய்க. பிங்கலை நாடியாவது பிராணவாயு வலமூக்கிற் சஞ்சரிக்குங் காலம். இடைநாடியாவது அவ்வாயு இடமூக்கில் நிகழ்ந்து நிற்குங் காலமாம். சுழுமுனையாவது அவ்விரண்டிற்கும் நடுவே நிற்குங் காலம்.

## திக்கின் பலன்.

உருத்திராக்க மணி கொண்டு செபிக்குங் காலத்து, கிழக்குத் திக்கு நோக்கிச் செபிக்கின் உலகவசிய முண்டாம். தென்கிழக்கு ஆயின் வியாதி யுண்டாம். தெற்கெனில் அபிசார விருத்தி. தென்மேற்கு ஆனால் துவேஷ முண்டாகும். மேற்கு நோக்கிச் செய்தால் தனலாபம் உண்டு. வடமேற்கு ஆனால் ஆகருடணம் மேன்மேல் வளரும். வடக்கு முகமாயிருப்பின் சாந்தி விளையும். வடகிழக்கு முகமாக விருந்து செபிக்கின் சிவசாயுச்சிய முத்தி சித்தியாம்.

## செப ஆசனங்களும் பலமும்.

யோகாசனங்கள் ஆகிய சித்தாசனம் முதல் அர்த்தாசனம் இறுதியாக வுள்ள எண்பத்து நான்கினுட் சிறந்த பத்திராசனம், முத்தாசனம், மயூர ஆசனம், சித்தாசனம், பதுமாசனம், சுவத்திகாசனம், வீராசனம், கோமுக ஆசனம்

சுகாசனம் என்பன, செபஞ் செய்தற்காவது, விபூதி உருத்திராக்க தாரணஞ் செய்தற்காவது உத்தமோத்தமமாகும் அவற்ருல் எண்ணிய காரிய மெளிதி னெய்தும். இவையன்றிக் கிருஷ்ணுசனம் ஞான விருத்தியையும், புலித்தோல் ஆசனம் முத்தி இலக்குமீகரம் என்பவற்றையும், வஸ்திர ஆசனம் வியாதி நிவிர்த்தியையும், கம்பள ஆசனம் சௌக்கியத்தையும், சித்திரக் கம்பள ஆசனம் அறம் பொருளாதியவற்றையும் தரும். வேணு ஆசனம் தரித்திரத்தையும், பாடாண ஆசனம் (கல் ஆசனம்) வியாதியையும், பூமி யாசனம் துக்கத்தையும் மந்திர நிர்ப்பலத்தையும், தாருகாசனம் கேட்டினையும் வியாதிகளையும், திரணுசனம் புகழ் நசிவையும், பல்லவ ஆசனம் சித்த விப்பிரமத்தையும், கறுப்பு வத்திர ஆசனம் அபிசாரக் கிரியைகளையும் உண்டாக்குமென்று மதங்க ஆகமமும் உரைக்கின்றது.

### உருத்திராக்க விசிட்டம்.

கருமானுரிஞான விர்த்தியினைக் காட்டும்
வரிவேங்கைத்-தோன்முத்தி வாய்க்கு - முரமுடைய
கம்பளந் துன்பங் களையு மிழைக்கலிங்கம்
வெம்புமுட னோயினைவீட் டும்.

மரப்பலகை யாக்கும் வறுமையினை வன்கல்
வருத்தும் பிணியால் வடிவை - யுரத்தநிலந்
துன்பந் தருமிவற்றை யெல்லாந் துறந்துறைக
வன்புடன்முன் சொன்னுதனத்து.

### ஆகமத் திரட்டு.

சித்தமரி ருண லேனஞ் சுகமீன் கூர்மந்
திரிசூலங் குக்குடமே கருட நாகம்
பத்திரஞ்சௌ வியாசமிபங் கடகம் யோனி
பதுமம்பதா சனங்கனிட்டஞ் சிலைபல்லாடை

யத்தமுடன் வீரமுற்கம் வாசமாகி
யறையென்பா ணென்கெற்ற ளதிகமென்ப
மெத்தநிக பலந்தருமா லக்கவட மணைந்தோர்
மேற்கொளீஇச் செபிக்கின்வரு பலனுரைக்கு மேவா.

## செபமாலைப் பிரதிட்டை.

முற்சொல்லிய இலக்கணப்படி கோவை செய்த செபமாலையை, பரமசிவனைப் பூசை பண்ணுவதுபோற் பூசை செய்து கொள்ளக் கடவர். பிரதிட்டை செய்த மாலைகொண்டு செபிக்கினன்றிப் பெரும்பய னெய்தாரெனச் சிவாகமங்கள் செப்பாநிற்கும். அப்பிரதிட்டையைக் கூறுவாம். உருத்திராக்கமாலையைச் சுத்தமுள்ள மண்டபத்திலே பீடமொன்றனில் எழுந்தருளச் செய்து, ஓம் சத்தியோசாதாயநம என்று எண்ணெய்க் காப்பு முதலியவற்றால் அபிடேகஞ் செய்து, ஓம் வாமதேவாயநம என்று குச்சுப் புலனுச்சாத்தி ஓம் இருதயாயநம என்று கந்த புட்பங்கள் சாத்தி, ஓம் அகோராயநம என்று தூப தீபங் கொடுத்து, ஓம் தற்புருஷாயநம என்று திருவொற்றாடை சாத்துக. அதன்பின் ஒவ்வோர் மணியையுந் தொட்டு ஓம் ஈசானாயநம என்று, நூறு நூறுருவிற் குறையாமல் அபிமந்திரித்து, நாயக மணியைத் தொட்டு ஈசானதி பஞ்சப் பிரம மந்திரங்களினாலே நூறு உருக்குறையாமற் செபித்துப் பூசை செய்து கொள்ளக் கடவர்

## செபமாலை வகையும் பலமும்.

இங்ஙனங் கொள்ளப்பட்ட செபமாலை யில்லாவிடின் புத்திரதீபமாலை, சங்குமணிமாலை, பவளமணிமாலை, முத்துமணி மாலை, படிக மணிமாலை, தாமரை மணிமாலை, பொன்மணிமாலை, தருப்பை முடிச்சு மாலை யென்னு மிவைகளி

னொன்று கொண்டு செபிக்கக் கடவர். இவைகளுங் கிடையாதவிடத்து விரலினாலேனும், விரல் இரேகையினாலேனுஞ் செபிக்க. விரலாற் செபித்தலினும இரேகையாற் செபித்தலின் வரும் பலம் எட்டு மடங்கு அதிகம்; அதனினும் புத்திரதீப மாலையாற் செபிக்கின் பத்து மடங்கும், சங்குமணிமாலையால் வரும் பலம் நூறு மடங்கு அதிகமும், பவளமாலையால் வரும் பலம் ஆயிரமடங்கு அதிகமும், படிகமாலையால வரும்பலம் பதினாயிர மடங்கு அதிகமும், முத்துமாலையால் வரும் பலம் இலக்கம் பங்கு அதிகமும், தாமரைமணி மாலையால் வரும் பலம் அதனினும் பத்திலக்கம் பங்கு அதிகமும், பொன் மணி மாலையால் வரும் பலம் கோடிமடங்கு அதிகமும், தருப்பை முடிச்சால் வரும் பலம் கோடாகோடி மடங்கு அதிகமுமாம். உருத்திராக்க மாலை கொண்டு செபித்தலால் வரும் பலத்திற்கோ ஓரளவின்று. அது அநந்த மடங்கு அதிகமென்க. இவ்வாறு சைவபுராணத்திற் சொல்லப்பட்டது.

## விரலிறைகளாற் செபிக்குமுறை.

விரலிறை கொள்ளுமிடத்து வலக்கையை உத்தரீயத்தால் மூடிச் செபிக்கவும். பிராதக் காலையில் நாபிக்கு நேராகவும், உச்சிக் காலத்தில் மார்பிற்கு நேராகவுங் கையை வைத்துக் கொண்டு செபிக்கக் கடவர். விரல் இறைகளுள் அணிவிரலின் நடுவிறையைப் பெருவிரல் கொண்டு முதலிற் றொட்டு, பின் மூன்று மிறையையும், நடுவிரலின் மூன்றுமிறை இரண்டாமிறை அடியிறையையும், அணிவிரலின் அடியிறை, சிறுவிரலின் அடியிறை, இரண்டாம் மூன்று மிறைகளையும், அதன்பின், அணிவிரல் நுனி, நடுவிரல்நுனி, சுட்டுவிரல் நுனிகளையும், அதன் பின்னர்ச் சுட்டு

விரலின் மூன்றும் இரண்டாம் இறைகளையும், அடியிறை யையுந் தொட்டு முறையே யெண்ணி முடிக்கவும்.

## உருத்திராக்க மாலையின் பயன்.

உருத்திராக்கத்தைச் செபமாலையாகக் கொண்ட விடத்து நூற்றெட்டு அல்லது, முப்பது கொண்ட மாலையாற் செபிக்கின் குற்ற மற்ற ஐசுவரியமும், இருபத்தேழு உள்ளவற்றாற் செபிக்கின் அழியாத பதவிச் செல்வமும், இருபத்தைந்து கொண்டவற்றாற் செபிக்கின் சிவசாயுச்சிய முத்தியும், ஐந்து மணி கொண்டதனாற் செபிக்கின் போகமும், ஆறுமணி சாந்தியும், இருபத்தாறிற் செபிக்கின் செல்வவிருத்தியும், இருபத்தெட்டுள்ளதனாற் செபிக்கின் புஷ்டியும், முப்பத்திரண் டுடையதனால் வெற்றியும், ஐம்பதினாற் காமிய கருமப் பிராத்தியும், நூற்றைந்துமணி கொண்டதனாற் போக மோட்சங்களுஞ் சித்திக்கும். பதினைந்து கொண்ட மாலையாற் செபிக்கின் அபிசார முண்டாம்.

வாயுசங்கிதை.

நன்கா முப்பதினிற் செபிக்கினவையில் பொருளுண் டாமொருமூ
வொன்பான் மணியிற் செபிக்கி லுருதுயர்ந்த செல்வ முண்டாமால்.

இருபத் தைந்து மணியி னாற்செபிக்கின் முத்தி யெய்துமா
லரிய மணிகள் பதினைந் தாற்செபிக்கி லாபி சாரந்தான்.

உருத்திராக்க விசிட்டம்.

முத்திக்கை யைந்தினன் முற்றுஞ் செபமாலை
புத்திக்கு நூற்றெட்டா கும்புகலி - னத்தமுமாம்.

## செபிக்கும்வகையால் வரும்பலம்.

உருத்திராக்க மாலைகொண்டு செபிப்போர், மேருமணி யென்னும் நாயக மணியை யெண்ணிற் சேர்க்காமற் செபிக்கக்கடவர். செபிக்கும் போது துறவறத்தார் செபமாலை

யை மேலாகவும், இல்லறத்தார் கீழாகவுந் தள்ளக்கடவர். தள்ளுமிடத்துப் பெருவிரலாற் றள்ளின் அடைதற் கரிய முத்திப் பேறுண்டாம். சுட்டு விரலாற் றள்ளின் சத்துரு வெற்றி யுண்டாம். நடுவிரலாற் றள்ளின் திரவிய விருத்தி யுண்டாம், அணிவிரலாற் றள்ளினுல் வியாதி நீக்கமும், சிறுவிரலாயிற் சகல நன்மையு முண்டாம். மானத செபத்திற்கு மாலையை மேலேற்றியும், உபாஞ்சு வாசகம் என்பவற்றிற்கு மாலையைக் கீழிறக்கியுந் தள்ளுக. முன்னேய மானத செபத்திற்குப் பெருவிரல் அணிவிரல்களாலேனும், உபாஞ்சினுக்குப் பெருவிரல் நடுவிரல்களாலேனும், வாசக செபத்திற்குப் பெருவிரலாலேனும், சுட்டு விரலாலேனுந் தள்ளக்கடவர்.

## செபிக்குந் தானங்கள்.

உருத்திராக்க மாலையைக் கையிலேந்திக் கொண்டு வீட்டினிருந்து செபிக்கின் ஒருமடங்கு பலமும், பசுங் கோட்டத்தி லிருந்து செபிக்கின் நூறு மடங்கு பலமும், நந்தனவனம், ஆரணியம் என்னு மிவைகளில் இருந்து செபிக்கின் ஆயிரமடங்கு பலமும், மலையிலிருந்து செபிக்கிற் பதினுயிர மடங்கு பலமும், கடற்கரை நதிக்கரைகளி னிருந்து செபிக்கின் இலக்க மடங்கு பலமும், விநாயகர் ஆலயம், சிவாலயம், தேவி குகாலயங்களிலே இருந்து செபிக்கிற் கோடி மடங்கு பலமும், அந்தக் கடவுளரின் றிருமுன்னர் இருந்து செபிக்கின் அனந்த மடங்கு பலமு முண்டாம். சூரியன், சந்திரன், அக்கினி, குரு, தீபம், நதி, பிராமணர், பசுக்கூட்டம என்பவற்றிற்கு முன்னர் எதிர்முகமாக இருந்து செபிக்கக் கடவர். கிழக்கு நோக்கிச் செபிக்கின் விரும்பிய பொருள்கள் யாவுந் தமது அருகில் வரப்பெறுவர், தெ

ற்கு நோக்கிச் செபிக்கின் அபிசார முடையராவர். மேற்கு நோக்கிச் செபித்தோர் இட்டசித்தி யடைவர். வடக்கு நோக்கிச் செபிப்போர் வியாதிகள் நீங்கப் பெறுவர்.

## செபிக்கக்கூடாத தானங்கள்.

காற்றெருக் கூடு மிடத்தினும். படுக்கையிலும், நடந்து கொண்டும், நின்று கொண்டும், இருளினும், அசுத்த பூமியினும், வாகனத்தின் மேலும் இருந்து கொண்டு செபிக்கக் கூடாது. செபிக்கு மிடத்து அங்கி தரித்திருத்தல், தலையில் வஸ்திரமணிந் திருத்தல், குடுமியை விரித்து விடல், கௌபீனம், பவித்திரம் என்னு மிவை யணியாமை, வார்த்தையாடல், கழுத்திற் புடைவை சுற்றி யிருத்தல், ஆசார மில்லாமை, கோபம், பெருநகை புரிதல், தும்மல், சோம்பல், காறியுமிழ்தல், சண்டாளரைப் பார்த்தல் என்னு மிவைகள் ஆகாவாம். இவைகளுள் ஒன்று நேர்ந்தால் மும்முறை யாசமனம் புரிந்து, அங்க நியாசஞ் செய்து செபிக்கக் கடவர்.

## உருத்திராக்கங்களுட் பூசைக்குச் சிறந்தன.

உருத்திராக்கத்தைச் சிவலிங்கப் பெருமானாக நினைத்துப் பூசிக்க. அவற்றுள்ளும் பூசைக்குச் சிறந்தனவாகக் கூறப்பட்டனவ்முள. அவை வருமாறு:—

ஒருமுக முள்ளமணி, ஐந்துமுக மணி, பதினொரு திருமுக மணி, அருள் பொருந்திய பதினான்குமுக மணி என்னு மிம்மணிகளே பூசித்தற்கு மிகச் சிறந்தவைகளாம். இவைகளுள் ஒன்றை நாடோறும் அருச்சித்து வழிபடுவோர் மேலான செல்வ மென்னும் பெரும்பேற்றை யடைவார்கள் என்று வேத சிவாகமங்கள் விளம்புகின்றன.

## உருத்திராக்க முண்டாகுந் தானங்கள்.

ஒருமுகமணி முதற் பதினாறு முகமணி வரையுமுள்ள பெருமணிகள், இந்தியாவில் நேபாளம் என்னுந் தேசத்தில் விளைகின்றன. கௌரிசங்கம், சாலக்கிராமம் முதலியனவும் அங்கேயே தோன்றுகின்றன. இமயமலைக்கு அணித்தாய், கங்கை முதலிய புண்ணிய நதிகள் பொருந்தியதாய், சரவணவாவி, பதுமை, மானசரசு என்னுந் திவ்விய தீர்த்தங்களையுஞ் சார்ந்துள்ளது அத்தலமே. ஆதலால் சாலவனம் என்னும் புண்ணிய க்ஷேத்திரம் அதுவே யென்ப. ஆங்குள்ள பாரம்பரிய அரசர் ஆங்கில அரசிற்குட்படாது சுவதந்திரமா யாளும் வன்மை யுடையர். அது இவ்வுருத்திராக்கப் பலன் என்பது நன்கு விளங்குகின்றது. ஒருமுக மணி முதற் பதினாறு முகமணி வரையுமுள்ள வெண்ணிற மணி முதலாய எண்பது வகை யுருத்திராக்கங்கள் யாவும் அவ்வரசர் பூசாமண்டபத்தில் இருக்கின்றன. அவற்றை நாடோறும் பூசித்தே தாம் உணவை யுண்பர். உருத்திராக்க தானம் அடியார்களுக்கு அவ்வரசரால் முறையே செய்யப்படுகின்றது. செபமணிகள் சிங்கப்பூர் என்ற தலத்தில் விளைகின்றன. இவ்விருவகை மணிகளும் காசி க்ஷேத்திரத்திலே கொண்டுவரப்பட்டுத் தூளி முதலிய இட்டுச் சுத்தப்படுத்தப் படுகின்றன.

## கண்டிகைச் சுத்தி.

உருத்திராக்க மணியாவது, மாலை யாவது கையினின்றுந் தவறிக் கீழே விழுமாயின், எடுத்துக் கண்களிலே யொற்றிக் கொண்டு, சுத்தோதகத்தால் அபிடேகஞ் செய்து, மலர்கொண்டு அருச்சித்து, காயத்திரி மந்திரம் நூற்றெட்

டுச் செபிக்கின் அக்குற்றம் நீங்கும். செபமாலைக் கயிறு அறுமாயின் அவ்வாறே யருச்சித்துக் கோவை செய்து, அகோர மந்திரத்தை நூறுநாஞ் செபிக்க. அவற்றைத் தாழ்ந்த சாதியார், பொய்யர், வியபிசாரஞ் செய்வோர், மதுமாமிச பக்ஷண முடையோர், சிவதீக்ஷை பெறாதார் என்னு மிவர் தீண்டுவாராயின் பஞ்சகௌவியத்தால் விதிப் படி யபிடேகஞ் செய்து தரிக்க. வீட்டுக்கு விலக்காயிருக் கும் பெண்களும், அந்நியருந் தீண்டுவாராயின் மனநொந்து, அவற்றை விடுத்து வேறுகொண்டு தரிக்க.

## அக்க தீபிகை.

அக்கமதா விழின்விழியி னொற்றிநீ டாட்டிமல ருச்சித் தேத்தி
னக்கனவன் காயத்ரி நூற்றெட்டு நவின்றணிக பாச் நாசத்
தக்கனைத்தே யவ்வாற்றி னகோரநூ றுரைத்தணிக வற்பர் திய
ரொக்கிடினே யைந்தாட்ட பூத்தவளந் தியர்தொடின்வே றொன்றே
கொள்க.

## செபம் செய்யும் மந்திர முறை.

செபஞ் செய்யுங் காலத்தில் இரேசக பூரக கும்பகத் தை அகாரம், உகாரம், மகார மென்னு மந்திரங்களாற் செய்து, தண்ணீர் நிறைந்த குடம்போல அசைவற்று இருந்து, உருத்திராக்ஷ தாரணத்துடன் செப மாலையைக் கையிற் கொண்டு, முற்கூறிய முறைப்படி மந்திரங்களை அவற்றி னியல்புடன் செபிக்க வேண்டும். இறுதியில் பட்கா ரத்தை யுச்சரிக்கிற சம்பந்தத்தால் அவ்வப்போது முடிச்சுக ளைப் பாவித்து, உச்சரிக்கும் கிரமமறிந்து செய்க. வத்திரத் தாலே செபமாலையை மறைக்க. ஏனெனில் ஞானாசாரியன் பார்த்தாலும் செபம் சேதப்பட்டு நிஷ்பலமாகும். மந்திர மல்லாத மற்றொரு சொல்லைச் சொல்லற்க. பஞ்சாக்கர

செபம் செய்யுங் காலத்தில் அந்தணர் முதலிய மூன்று குலத்தாரும் ஓம் என்னும் பிரணவங்கூட்டிச் செபிக்க. நாலாவது குலத்தராய வேளாளர் அப்பிரணவ மில்லாமலே செய்யக்கடவர்.

மேளாமந்திர செபத்தில் ஒவ்வோர் மந்திரங்களிலுங் குருவையும் ஐம்பது அக்ஷரங்களையும் உச்சரித்துக் கொண்டு, செபத்தின் முத லிடை கடைகளிலும் மாதிருகாக்ஷரத்தோடு செபித்தல் முறையாகும். மேளாமந்திரம் மாலாமந்திரம் எனவும் பெயர் பெறும். இது விருத்தாப்பியத்தில் அதிக பலத்தைத் தரும். ஏனைய மந்திரங்கள் யௌவன காலத்து அதிக பலததை யளிக்கும். பூத முதலிய மந்திரங்கள் இளமையிற் குறைந்த பலனை யளிக்கும். பஞ்சாக்ஷரம், குக சடாக்ஷரம் எக்காலத்தும் பலனளிக்கும். ஸ்வாகா, நம:, சேஷ பதங்கள் இம்மூன்றும் ஸ்திரீ பும்ச நபுஞ்சக லிங்கங்களாம். வசியம், உச்சாடனம், விடம் என்னும் பிரயோகங்களிற் புருட தெய்வங்களும், வியாதி நீக்கத்தில் ஸ்திரீ தெய்வங்களும், ஏனைய காரியங்களில் நபுஞ்சக தெய்வங்களும் கொள்ளப்படற் குரியன சத்துரு பீசங்களை யுடைய மந்திரம் நாசத்தைச் செய்யும். செப அளவு சொல்லப்படாத மந்திரங்களைச் செபிக்கும் அளவு, எட்டு இலக்கமாகச் சொல்லப்படும். சகல மந்திரங்களுக்கும் உதய காலமே மிகச் சிறந்தது. மாதிருகா மந்திரம், ஐம்பது உருத்திர பேதங்களோடும், அத்துணை உருத்திரி பேதங்களோடும் விளங்கா நிற்கும்.

## அசபா மந்திர செபம்.

அசபா காயத்திரி, மந்திரங்களுள் விசேடித்தது. அது ஹம்சம், ஸோஹம் என்னும் இருவகைத்தாய் விளங்கும்.

அசபா காயத்திரி எனினும், அசபை எனினும், சிவமந்திரம் எனினும், அங்குச மந்திரம் எனினும் பொருந்தும். இது முதலிற் சிவபெருமானிடத்தி னின்று நந்திதேவரும், அவரிடத்தினின்றும் பிரமதேவரும் அவரிடத்தினின்று சுக்கிரனும், அவன்வயி னின்றும் கயமுனிவரும், அவருழை வியாழப் புத்தேளும், அவருழை நின்று முனிவரும் பெற்றுப் பூமியிற் பரந்தது. இதனை யன்புடன் செபிக்கின் இறந்தவர் துயிலினின்றும் எழுவார்போல் எழுந்திருப்பர். அன்றி நினைந்த வெலாங் கைகூடும். முத்தியுஞ் சித்திக்கும். இதற்கு அதிதேவதை சிவபெருமானே. தேவதை, விநாயகக்கடவுளாகிய பரமாங்குசனே. பீசம்-ஹம். சத்தி-சுவாகா என்பதாம். கீலகம்-ஸோகம் ஆகும். கரநியாசஞ் செய்து, உரிய பல்லவத்தால் அங்கநியாசம் செய்து, அருணோதயகாலத்திற் செபிக்கத் தொடங்கி, அத்தமயனத்திற்குள் இருபதினாயிரத்து அறுநூறுஉருச செபிக்க. கணபதிக்கு சுOO, பிரமற்கும் விட்டுணுவுக்கும் அவ்வளவு, உமாபதிக்கு சுOOO, சீவான்மாவிற்கு கOOO, பரமான்மாவிற்கு கOOO, ஞானசாரியனுக்கு கOOO ஆக, "அசபாகாயத்திரி மந்திர செபம நிவேதியாமி" என்று செபிக்க. இதனை மௌனமாகவே யிருந்து செபிக்க. "உன்னும ஓன்னு முரைமந்திரம்" என்று வில்லிபுத்தூரர் பாரதமுங் கூறுவது காண்க.

## நிர்மல பஞ்சாக்ஷர செபம்.

எல்லா மந்திரங்களிலும் மிகச் சிறந்தது ஸ்ரீபஞ்சாக்ஷரமே. அதற்கு ஒப்பானதும் உயர்வானதுமான மந்திரங்கள் ஒன்று மில்லை. இப்பஞ்சாக்ஷரம் பலவகையாதலே இந்நூல் உகூ-ம் உ௩-ம்பக்கங்களிற் காண்க. அந்தப் பஞ்சாக்ஷரங்கள் எல்லாவற்றிலும் மேலது நிர்மலபஞ்சாக்கரம். அது, நிர்மல

சாக்கிர பஞ்சாக்கரம், நிர்மல சொப்பன பஞ்சாக்கரம், நிர்மலசுழுத்தி பஞ்சாக்கரம், நிர்மல துரிய பஞ்சாக்கரம், நிர்மல துரியாதீத பஞ்சாக்கரம் என ஐவகைப்படும். அவற்றின் வகையை யெல்லாஞ் சித்தாந்த சாதனம் என்னுநூலிற் காட்டி யுள்ளாம். ஆங்குக் கண்டுணர்க. இவை மற்றைக்காலங்களைப் பார்க்கினும் அர்த்தராத்திரியிற் செபிக்கின் மிகுந்த பலனை யளிக்கும். இவற்றை யநுட்டித்துச் செபித்தவர் சர்வசித்திகளையும் பெற்றுச் சிவஞானம் அடைந்து திருவருளுருவினராய் அத்துவித முத்தியை யடைவார்.

## உருத்திராக்கத்தாற் பயனடைந்தவர்.

உருத்திராக்க தாரணத்தானும், தரிசனத்தினுலும், பரிசத்தானும், இகபர சாதனங்களை யடைந்த வுயிர்த்தொகைகளோ அளவில்லனவாம். அவை தொகையை வரையறுக்க நினைப்பது இதுகாறும் இறந்தாரை யிவ்வளவினர் என்று எண்ணுவது போலும். ஆயினும் முக்கியமான சிலரது சரிதத்தைக் காட்டுவாம். நந்தி யென்னுந் தேசத்திலே யுள்ள சிவதலத்திலிருந்த நந்தை யென்னுந் தேவதாசியால் வளர்க்கப்பட்ட சேவலும், குரங்கும் உருத்திராக்கம் அணியப் பெற்றமையால் உயிர் துறந்தவுடன் முறையே காஸ்மீர தேசத்து அரசனை பத்திரசேனன் மனைவியிடத்திற் சுதன்மா என்னும் பெயரை யுடைய புத்திரனுகவும், அவன் மந்திரி மனைவி வயிற்றில் தாரகன் என்னும் பெயரை யுடைய புத்திரனுகவும் பிறந்து, உலகு தனிபுரந்து சிவசாயுச்சிய முத்தியை யடைந்தன. அணிவித்தமையால நந்தையும் அந்தக்கதி யடைந்தாள். புட்கர தேசத்து அரசனுகிய சௌமியன் என்பவன் அணிந்து சத்துருபயம் நீங்கப்பெற்ருன். அவன் மனைவியாகிய வசுமதி என்பவள் தரித்து விசேட அழகும்

சற்புத்திரப்பேறும், சிவபெருமான் றிருவருளும் பெற்றாள். காலஞானி என்னும் அரசி தன்னாயகனை கமலாக்கனென்னும் அரசன் றன்னைப்போல உருத்திராக்கந் தரியாமையால் அவனொடுகூடச் சம்மதிக்காது, விஷ்ணுவால் அதன் பெருமையை யுபதேசிப்பித்துத் தரிப்பித்து வாழ்ந்து முத்தி யடைந்தனள். பூச்சக்கர மென்னும் நகரத்திருந்த சுப்பிரதீபர் என்னும் பிராமணர் தங்குலத்தோடு முத்தியடைந்தனர். ஒரு பூனை யுருத்திராக்க தாரணஞ் செய்து காணப்பட்டமையால் இந்திரனும் வணங்கித் தன் ஐந்தருவு ளொன்றைக் கொடுத்து அனுப்பினான். மகாபாதகங்களைப் புரிந்த சுமித்திரன் என்னும் வேதியன் சிவலோக மடைந்தான். மாகர நாட்டிலே யிருந்த சாந்திகன் என்பவன் இதனை யணிந்தமையால், காளி தேவியாற் பலியாக வுண்ணப்படாது வரங்கள்பெற்று அரசாண்டு முத்தியை யடைந்தான். இவ்வாறு அநேகருளர். அவைகளை யெல்லாம் உண்மை நூலகள் வாயிலாக அறியக்கடவர்.

## இலிங்க தாரணம்.

சைவ சமயிகளாய், ஓராகம விதிப்படி தீக்ஷை பெற்ற ஒழுக்கினருட் சிலர் சிவநேத்திரமாய கண்மணியை விடுத்து இலிங்க தாரணஞ் செய்து வருகின்றனர். அங்ஙனந் தரிப்பது குற்ற மன்று. ஆயினும் அதனால் வரும் பலம் அற்பமென்றதனாலோ சுத்த வித்தைகளு ளொன்றாய சூதசங்கிதையும் "மெய்த்திரூஞ் சிவாகமத்து மேவுதீக்கையர்சிலரோ ரிதிலிங்க தாரணஞ்செய் வாரதுவுங்கூடாது" என வெறுத்துக் கூறிற்று. அன்றியுஞ் சிவஞானப் பெருஞ் செல்வராய், சைவ சித்தாந்த பரமாசாரியர்களுள் ஒருவர் ஆய திருநாவுக்கரசு நாயனாரும், "எவரேனுந் தாமாக விலாடத்திட்ட

திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி - யுவராதே யவரவரைக் கண்டபோது வுகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி - யிவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி யிரண்டாட்டா தொழிந்தீசன் றிறமே பேணிக் - கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே" என விபூதி ருத்திராக்கங்களையே சிவசின்னங்களெனவும், அவற்றை யணிந்தவரே மேலானவ ரெனவுந் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றனர். அன்றி, இலிங்க தாரணத்தை விதந்தாரலர். இவற்றை யெல்லா முணர்ந்து அக்கத்தையே தரித்து உய்யக்கடவர்.

## பரமத மறுப்பு.

சிவசின்னங்கள் என்னும் விபூதி ருத்திராக்கங்கள் அணிவதனல் யாதோர் பிரயோசனமு மில்லை யென்று கிறிஸ்தவர்களும், திருநீற்றை அணிதலும், உருத்திராக்கந் தரித்தலும் உறுதிப் பயனைக் கொடுக்கா வென்றும, அவைகள் நாராயண மூர்த்திக்கு உகந்தன வல்ல வென்றும், திருமண் கொண்டு ஊர்த்துவ புண்டர மிடுதலும், துளசி மணி தரித்தலுமே வேத சம்மதமும், உறுதிப்பயனைக் கொடுப்பதுவும், சீநாதனுக்கு உகந்ததுவுமா யுள்ளதுவென்றும், அவனாலும் அவனடியாரா லுந் தரிக்கப் படுவன மண் துளசிகளே யென்றும், வைணவர்களுட் பெரும்பாலாருங் கூறித்திரிகின்றனர். அவற்றிற்கு வேதாகம உபநிடத புராணாதி பிரமாணங் காட்டுவரேல், யாமொப்புவதற்குத தடையின்று. அங்ஙனம ஒரு நூலகளிலாவது ஒரிடத்திலாவது கூறப்படாதிருக்கவும், யாம் அவர்கட்கும் எமக்கும் பொதுவான வேதங்கள் உபநிடதங்களி னின்றும், அவர்கட்கே சிறப்பு நூல்களாயுள்ள இராமாயணம், பாரதம், நாலாயிரப் பிரபந்தங்

களினின்றும், விஷ்ணுவும் அவரடியாரும் விபூதி ருத்திராக்க தாரணரே யன்றி, மண்ணையுந் துளசி மணியையுந் தரித்தவர், அல்லது தரிப்பவர் அல்லர் எனக்காட்டி நிலைநிறுத்தும்போது, அதனை யொப்பித் தாமுந் தம்மைச் சார்ந்தாரும் விபூதி ருத்திராக்ஷங்களைத் தரித்து உய்தலும், உய்வித்தலும் முக்கிய கடமையேயாம. இராமாயணப் பிரமாணம், வேதோப நிடத புராண மிருதியாதி பிரமாணஙகள் முன்னர்க் காட்டியுள்ளாம். மற்றையவுமறையுங் காட்டுவாம்.

மஹாபாரதம் - சாந்திபருவம்.

*ஆயுஷ் காமோத வராஜந் பூதி காமோதவா நரஃ*
*நித்யம வைதாரயேத் பஸ்ம மோக்ஷ காமீச வைத்விஜஃ*

"தர்மன் முதலிய பாண்டவர்களே! ஆயுள் விருத்தியை விரும்புகின்றவனும், செல்வத்தை யிச்சிக்கின்றவனும், மோக்ஷத்தை யடைய அவாவுகின்றவனும், நாடோறும் பசுமத்தையே (திருநீற்றையே) தரித்தல் வேண்டும்." என்னுஞ் சுலோகத்தின்படி விபூதிதாரணம் பெறப்படுகின்றது. மண் தாரணம் சொல்லப்பட இல்லை.

அங்ஙனமே, தருமன் முதலிய பஞ்சபாண்டவர்களுஞ் சிவசின்ன தாரணராய்ச் சிவபூசை செய்தனர் என்பதும், வீமன் சிவபூசையில் விசேஷித்தவன் என்பதும், கண்ணபிரானைத் தேர்ச் சாரதியாகவும், மைத்துனனாகவும் பெற்ற இந்திர குமாரனாய அருச்சுனன் பசுபதியை நோக்கித் தவஞ் செய்தான் என்பதும், அவ்வர்ச்சுனன் "பூசை யிலாதா னுண்டி புழுப்பிணம் புலையன் கட்டம்" என்னுஞ் சிவாகம வாக்கியத்தை மேற்கொண்டு, சிவபூசை செய்தன்றி யுணவு கொள்ளாப் பெருந்தகையினன் என்பதும், கண்ண

மூர்த்தி யானவர் தம்மைச் "சிவனைப் போலப் பாவித்துப் பூசை செய்க" என்று வற்புறுத்திய போது அங்ஙனம் ஒருவாறு ஒப்பிச் செய்தா னென்பதும், சிவபூசைக்கு விபூதி யபிடேகஞ் செய்தலும், விபூதி ருத்திராக்கந் தரித்தலும் இன்றியமையாதனவாய் இருத்தலின், விஷ்ணுவுக்கும் அங்ஙனஞ் செய்தான் என்பதும், அவனது குமாரருள் ஒருவனாய், கண்ணபிரான் றங்கையாய சுபத்திரை வயிற்றிற் பிறந்தவனாயுள்ள அபிமன் என்பவனும யுத்தகளத்திலே தன்னுயிர் நீங்குங் கதியில அகப்பட்டும், பகைவர்களால் வளைத்திடப்பட்ட கொன்றைமாலை, சிவபெருமான் றரித்தருளிய மாலை போன்ற தொன்றென்று அதனைக் கடக்காது நின்று, பொருத பேரன்புடையவன் என்பதும் மகாபாரதத்தாற் பெறப்படுத லானும்,இராமர் சிவபத்தித்தசரதற்கு மகனாகவும், சிவபக்தனான இராவணனுக்குப் பிறந்து, சனகனால் வளர்க்கப்பட்ட சீதாதேவியின் கணவனாகவும் காணப்படலாலும், உடையவர் குருவான யாதவப்பிரகாசர் சிவபூசை செய்தாரென்றும், இராமாநுஜரது சகோதரரான கோவிந்தபட்டர் சிவலிங்கப் பிரதிட்டை செய்தார் என்றும், (பிரதிட்டை செய்வார் சிவசின்னங்களை யணிந்தன்றிச் செய்தல் கூடாது.) உடையவர்க்குப் பின்னிருந்த பராசரபட்டர் துவாதசி விரதத்தன்று சிவபுராணங்களு ளொன்றாய வராகபுராணம் வாசித்துப் பிரசங்கித்தா ரென்றும், பெருமாள் அதற்கு மகிழ்ந்து பரிவட்டமும் மேல் வீடுங் கொடுத்தா ரொன்றும், திருமங்கை யாழ்வாரது தந்தையான நீலர், சிவபத்த ரென்றும், உடையவர் மனைவியார் சாணத்தால் மெழுகிச் சுத்தப் படுத்தினாரென்றும் குருபரம்பரை என்னும் வைணவநூல் கூறலானும், நாராயணரும் அவரைச் சார்ந்தாருஞ் சிவசின்னதாரணர் என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல அறியப்படும்.

அதர்வண வேதம்—சரபோப நிடதத்திலே,

"யோவாய பாதார்ச்சித விஷ்ணுர்நேத்ரஸ் தஸ்மைத தௌசக்ரமதீ வஹிருஷ்ட: தஸ்மைருத்ராய நமோ அஸ்து" என்று பிரதிபாதிக்கப்பட்டவாறு, நாராயணமூர்த்தி தமது கண்ணை மலராக வைத்துப் பூசித்துச் சுதரிசன சக்கரத்தைச் சிவபெருமானிடத்தி னின்றும் பெற்றார் என்று வெள்ளிடை மலைபோற் றெள்ளிதின் விளங்கலானும், வேதங் கூறிய அதனை, திருவாசகத்தும், "சலமுடைய சலந்தரன்ற னுடறடிந்த நலலாழி-நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடி-நலமுடைய நாரணன்ற னயனமிடந் தரனடிக்கீ-மலராக விடவாழி யருளினன்காண் சாழலோ." எனச் சிறப்பித்துக் கூறலானும், வைணவரது சிறப்புநூலாய நாலாயிரப் பிரபந்தத்தும் ஆன்றோரான நம்மாழ்வார் * "செக்கர் வானச் சடையோன் சேவடிக்கீ ழக்நாளின் - மெய்க்கணிட்டுச் சக்கரநீ பெற்றவிளை யாட்டேபோல்" என்று அநுவதித்து. உரைத்தாராகலானும,

சிவபூசை செய்வார் விபூதி ருத்திராக்கந் தரித்துச் செய்தல் விதியாகலானும், அவ்வாறே விட்டுணுவுந்தரித்தது பெறப்படுதலானும், அதனைப் பசுகரண நீங்கிச் சிவகரணம் பெற்று, திருவருணெறி நின்று அறிவாற் சிவனென்னும் அருள்வள்ளலாரான திருநாவுக்கரசு நாயனாரும் தமிழ் வேதமாகிய **தேவாரத்திலே,**

*நீற்றினை நிறையப்பூசி நித்தலா யிரம்பூக் கொண்டு*
*ஏற்றுழி யொருநாளொன்று குறையக்கண் ணிறையவிட்ட*
*வாற்றலுக் காழிநல்கி யவன்கொணர்ந் திழிச்சுங்கோயில்*
*வீற்றிருந் தளிப்பர்வீழி மிழலையுள் விகிர்தனாரே.*

---

* இது திருக் குருகூர் வாய்மொழி' இக்காலத்துப் பிரதிகளில் இல்லாமல் பிரசுரித்திருக்கிறார்கள். மூலப் பிரதிகள் பலவற்றில் இருக்கின்றன, அநேக வைஷ்ணவரும் தங்களோடு பார்த்தனர். அப்பிரதிகளையும் இப்போதுள்ள பிரதிகளையும் நோக்கின், வைணவர் தமக்கு விரோதமான வாய்மொழிகளையும், பாசுரங்களையும் எடுத்து விட்டனர். இவ்வாறே இராமாயணம் பாரதம் என்னும் நூல்களையும் மாற்றியும் நீக்கியும் புகுத்தியும் பதிப்பித்தமை பெரு மதித்ததே.

என்ற திருவீழிமிழலைத் திருப்பதிகத்து ஓதியருளினமை யாலும், விட்டுணு மூர்த்தி விபூதியை யுண்டார் என்று பிருகச்சாபால உபநிடதம் ஆறாவது பிராஹ்மணத்து "மகா விபூதிதமித்" என்றற் றொடக்கத்தன கூறுவதனாலும்,

பிரமாண்ட புராணத்திலே,

சுசுபே ஸததம் விஷ்ணுர் பஸ்மதிக் தத நூலக:
த்ரிபுண்ட ராங்கித சர்வாங்கோ ஜடாமகுட மண்டித:
எனவும்,

காளிகா கண்டத்திலே,

நாராயணஸ் தபஸ்தே ஜடமுண்டச மேகவி
பஸ்மோத் தூளித ஸர்வாஙகஸ் திரிபுண்டராங்கித
மஸ்தக:! ருத்ராக்ஷ மாலோ பரணோ ருத்ர ஜப்ய
பராயண:! எனவும் பேசப்பட்டதனாலும்,

இருக்கு வேதத்திலே,

"விஷ்ணுர்வை வாராகம் ரூபமாஸ்தாய பூமின்
விதாரயன்" என வருவதிற் பெறப்படுவதனாலும்,

அதர்வண வேதம் - ராமரகசியோப நிடதத்திலே,

"ராமந் த்ரிணேத்ரக் சோமார்த்த தாரிணம் சூலிநம்பரம்
பஸ்மோத் தூளித சர்வாங்கம் கபர்த்திந முபாஸ்மகே

எனக் கூறப்பட்டதனாலும், அரிவம்சம் என்னு நூலி னும் அவ்வாறு உரைக்கப்பட்டதனாலும் ஸ்ரீமந் நாராயண மூர்த்தி விபூதி ருத்திராக்கங்கள் என்னுஞ் சிவசின்னங்களை யணிந்தார் என்பது அங்கை நெல்லிக்கனியே.

நாராயணாவதாரர் ஆகிய தத்தாத்திரேயரும் விபூதியை யணிந்தார் என்று,

அதர்வண வேதம் - சாண்டில்லியோப நிஷத்தில்,

தத்தாத்ரேயம் சிவம்சாந்த மிந்த்ர நீல நிபப்ரபம் |
ஆத்மா யாரதந்தேவ மவதூதந் திகம்பரம் |
பஸ்மோத் தூளித சர்வாங்கம் சடாசூடதரம்விபம் ||

என்றதனால் கூறப்பட்டிருக்கிறது. ஸ்ரீராமபிரான், வாமனர், பரசுராமர், கண்ணபிரான் முதலாயினோர் சிவசின்ன தாரணஞ் செய்தார் என்பதை முன்னரே, கரு, கசு பக்கங்களில் விளக்கியுள்ளோம். சிவாகமம், புராணம் முதலிய பிரமாணங்கள் அளவில வாகலிற் காட்டாது விட்டேம்.

இது நிற்க, மயர்வற மதிநல மருளப் பெற்ற பிரபன்னசன கூடஸ்தர் என்றும், மாறன் பணித்த மறைக்கு ஆறங்கங் கூறப் பிறந்த வீறுடைய வடையார் சியமென்றும், வைணவர்களாற் புகழ்ந்து உரைக்கப்படும் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பேயாழ்வார் என்னும் அவர்கள் கூற்றுக்களையு மெடுத்துக் காட்டுகின்றோம். அவைகளை யெல்லாம் ஒப்பாது விடமாட்டாரென நம்புகின்றேம். அவை வருமாறு:

நாலாயிரப் பிரபந்தத்துள்,

தாழ்சடையு நீண்முடியு மொண்மழுவுஞ் சக்கரமுஞ்
சூழரவும் பொன்னாணுந் தோன்றுமாற் - சூழுந்
திரண்டருவி பாயுந் திருமலைமே லெந்தைக்
கிரண்டுருவு மொன்றா யிசைந்து.

என்று பேயாழ்வார் அருளிச்செய்த மூன்றாந் திருவந்தாதி, கசு-ம் செய்யுளின்படியும்,

பெரிய திருமொழி, க பத்து, க மொழி, க செய்யுள்.

"அக்கும்புலியினதளுமுடையாரவரொருவர்
பக்கம் நிற்க நின்ற பண்பரூர் போலும்."

ஷை எ-கo, ௱-செய்யுள்.

"வாசவார்குழலாண்மலைமங்கைதன்பங்கனைப்
பங்கில்வைத்துகந்தான்றன்னை"

எனப் பெரியாழ்வார் கூறிய செய்யுளின்படியும்,

ஷை சு, க, ௱-செய்யுள்.

"குழனிறவண்ணனின் கூறுகொண்ட தழனிறவண்ணன்"
என்ற திருமங்கையாழ்வார் செய்யுளினபடியும்,

முதல் திருவந்தாதி (எச)

எ ற்றான்புள் ளூர்ந்தா னெயிலெரித்தான் மார்பிடந்தான்
நீற்றா னிழன்மணி வண்ணத்தான்—கூற்றொருபான்
மங்கையான் பூமகளான் வார்சடையா னீண்முடியான்
கங்கையா னீள்கழலான் காப்பு.

ஷை (கூஉ செய்யுள்.)

பொன்றிகழு மேனிப் புரிசடையெம் புண்ணியனும்
நின்றுலகந் தாய நெடுமாலும்—என்றும்
இரு வரங்கத் தாற்றிரிவ ரேனு மொருவ
னொருவனங்கத் தென்று முளன்.

ஷை (ருசெய்யுள்.)

அரனு ரணனும மான்விடைபுள் ளூர்தி
யுரைநூன் மறையுறையுங் கோயில்—வரைநீர்
கரும மழிப்பளிப்புக் கையது வேனேமி
யுருவமெரி கார்மேனி யொன்று.

எனவருஞ் செய்யுள்களானும், சிவபெருமானும் விஷ்ணுமூர்த்தியும் ஒவ்வோர் பாதித் திருமேனியை யுடையராய்ச்சேர்ந்து, ஒருவடிவராய் இருக்கின்றனர் என்பது பெறப் படுமென்க.

## அரி, அரனது தேவியென்பது.

*பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப்*
*பிரமனைத்தன் னுந்தியிலே தோற்றுவித்து.*

எனத் திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பெரிய திருமொழி, கூ பத்து, நான்காந் திருவாய் மொழியில், கூ ம்செய்யுட்படி, வலப்பாகத் திருமேனி மகேசுரராகவும், இடப்பாகத் திருமேனி நாராயண மூர்த்தியாகவும் இருக்கின்றனர் எனத் தெரிதலாலும், அவ்வடிவிற்குச் சங்கரநாராயணர் என்று பெயர்வழங்கலாலும் அறிக. எமது சிவாகமங்களும் அவ்வடிவை அரியத்தர், கேசவார்த்தர் என்று கூறுகிற்கும். பெருமாள் இடப்பாலும், இறைவனாகிய சிவபெருமான் வலப்பாலும்இருக்கும்அவ்வுண்மை சங்கரநாராயணர் கோயில் என்ற க்ஷேத்திரத்திலுங் கண்டு தெளிக.

வலப்பாகம் ஆண்பாலும் இடப்பாகம் பெண்பாலு மென்றுகொள்ளும் வழக்கின்படியும், விவாக காலத்தில் வலப் பக்கத்தில் ஆணும், இடப்பக்கத்திற் பெண்ணும் இருக்கும் முறையினாலும், ஆணுக்கு வலப்பக்க உறுப்புக்கள் துடித்தலும், பெண்களுக்கு இடப்பக்கத்து உறுப்புக்கள் துடித்தலும் நல்லதென்று துடிநூல் கூறுதலாலும், சிவபெருமான் ஆண்டன்மையை யுடைய சத்திமான் என்பதும், நாராயண மூர்த்தி "நால்வகைப்பட நண்ணிய சத்தியுண் - மாலு மொன் றுதலின் மற்றது காட்டுவான்" என்னுங் கந்தபுராணக் கருத்தின்படி, பெண்தன்மையை யுடைய நால்வகைச் சத்திகளுள் ஒன்றாய சத்திவடிவர் என்பதும் பெறப்படும்.

திருமால் அதற்கேற்ப, சிவபெருமான் தாருகவனத்திற் சென்ற காலத்தும் மோகினி யென்னும் பெண்ணுருக்கொண்டு சென்றார் என்றும், அமிர்தங் கடைந்த காலத்தும்

பெண் உருவங்கொண்டு அசுரரைமயக்கி, சிவபெருமானது திருக்கோலத்தைக் கண்டு அவருடன் சேர்ந்து மாகாளர் என்னும் அரிகர புத்திரரைப்பெற்றார் என்றும், முன் ஏக - பக்கத்திற் கூறியபடி., சிவபெருமானைச் சேர்ந்து பிரமதேவரை யீன்றாரென்றும், வேதாகம புராண பரமேதிகாசங்கள் முழங்குகின்றன. ஆகலால் திருமால் அரனது தேவியே.

அன்றியும் துயிலுங் காலத்து ஆடவர் இடக்கையைக் கீழ்வைத்தும, பெண்கள் வலக்கையைக் கீழ்வைத்துந் துயிலல் வேண்டும் என்ற முறைப்படி, எமது சிவசத்திகளுள் ஒருவராய நாராயணரும், வலக்கையைக் கீழ்வைத்துச் சயனிக்கின்றாரென்று "மின்னிலங்கு தொடிவலய வியன்வலக்கை கீழ்கொடுத்துத் - தென்னிலங்கைத் திசைநோக்கித் திருநயனந் துயில்வோய்கேள்." என வைணவர் உடைய சிறப்பு நூல்களினுஞ் சொல்லப்பட்டிருத்தலாலும், இறைவன் பெருமான் என்று அழைக்கப்பட, மால் பெருமாள் என்று அழைக்கப்படுதலாலும, ஆண் விகுதி ஆள் விகுதியாகத்திரித்து வழங்கப்படுங் காரணம் நுண்ணுணர்வார்க்குப் புலப்படும் ஆகலாலும், பெண்கள் திலக வடிவாக ஆவது, பட்டமாக ஆவது, தீபத்திற்குச் சமமானவடிவாக ஆவது, அர்த்தசந்திர வடிவாக ஆவது இடக்கடவர் என்று,

காமிக ஆகமம் - ஸ்நானவிதிப் படலத்தில்,

ஸ்த்ரீணாம் து திலகம் வாபி பட்டாகாரமதாபிவா।
அத தீப ஸமாகாரமர்த்தசந்த்ரம் லலாமகம்॥

ஸ்திரீணாந்து திலகம் வாபி பட்டாகார மதாபிவா!
அத தீப ஸமாகார மர்த்தசந்த்ரம் லலாமகம்.!!

என்ற சுலோகத்தாற் கூறப்பட்டபடி, நாராயணப் பெருமாளுக்கும் பெண்களிடும் சாந்துப்பொட்டு, கஸ்தூரிப்பொட்டு, தங்கப்பொட்டுகளும் ஒவ்வோர் காலத்து இட்டு வருத

லாலும், அது சில தலங்களிலுள்ள அர்ச்சாவதார மூர்த்திகளுக்குங் காணப்படலானும், அவ்வாறே தென்கலையாசாரியர் என்று வைணவர் கொண்டாடும் பட்டரும், பெருமாளுக்குக் கஸ்தூரி புண்டரமே விசேடித்த தென்று, "கஸ்தூரி கலிதோர்த்துவ புண்டரதிலகம்" என்று கூறியதன்றி, திருமண்புண்டரங் கூறாமையாலும், அங்ஙனமே வடகலையாசாரியர் என்னும் வேதாந்ததேசிகர் என்பாரும்" "காந்தம் வக்திரம் கனகதிலகாலங்கிருதம் ரங்கபர்த்து" என்றுரைத்து விளக்கியதனாலும், அதில், ரங்கபர்த்து" என்பதற்கு எறும்பிச்சீயர், புட்குழிச்சீயர் என்னும் வைணவாசாரியர்கள் அரங்கநாதனுக்குப் பர்த்தாவாகிய (கணவனான)சிவன் என்று வியாக்கியானம் விரித்தலாலும், தீப வடிவாகவும் அர்த்தசந்திரனுருவாகவும் விபூதி கொண்டு பெண்களிடுவது போலவே நாராயணற்கும் இடப்பட்டு வந்ததென்க. அவ்வாறேயவரடியாரும் இட்டுவந்தார்களென்றும், உடையவர் என்பார் சைவசித்தாந்த தாபன வேந்தரோருன சோழமகாராஜாவின் சமஸ்தான வித்துவானாகிய மகாபண்டித சிரோமணி, பிரம ஸ்ரீமத் - வாகீச பாதசேகர சிவாசாரியசுவாமிகளுடன் வாதித்தற்குப் பயந்து மேலைத்தேச மோடிவேடர் குடிசைக்குட் புகுந்து பன்னிருவருட மொளித்திருந்து சூனியம் பண்ண, அவர் சீடராகிய கூரத்தாழ்வார் தாமே உடையவரெனப் பொய்கூறி வேடங்காட்டி வாதித்துத் தோல்வியடைந்ததனால், தாம் உடையவரல்லர் என்றுகூற, சோழமன்னன் இவன் பொய்யும் பிதற்றும் பாசாங்கு முள்ளவன்; ஆதலால் கண்ணைப் பிடுங்குக வென்று கட்டளையிட்டதனாற் பிடுங்கப்பட்டதென்றும், அது கேட்ட உடையவர் வருந்தி, சோழனில்லாத காலத்தில் விபூதிகொ

ண்டு இடுவதை மாற்றி வெள்ளைமண் வைத்து, ஸ்ரீதேவி என்று குங்குமமும்வைப்பித்து அதுமுதல்வழக்கத்திற்குக் கொண்டுவந்தாரென்றும், அவ்வாறே விஷ்ணு விம்பங்கள் பலவற்றிற்கும் நாமத்தை யிட்டு வைத்தாரென்றும் பெறப் படுதலாலும், பெருமாள் சிவத்தின் மாயாசத்தி யெனப்படு வார். இதுபற்றியே திருநெறித் தமிழ்வேதமும் "அரியலாற் றேவி யில்லை யையனை யாற ஞர்க்கே" என்று முழங்கிற்று.

அற்றேல், புருடோத்தமன் என்னு நாமம் அவர்க்கி ருத்தலால், புருடர்களுட் சிறந்தவன் என்ற பொருண்மைக் கும் மாறுகின்றதே யெனின், அவ்வாறன்று. புருஷனுக்கு (நாயகனுக்கு) உத்தமன் எனவும், மனுடர்களுக்குட் சிறந்த வன் எனவும் பொருள்கூறப்படலால்மாறன்றென்க. புருடத த்துவமாய் நிற்கும் இறைவனுக்கு, மாயாகாரியமாகிய உல கையாக்குதற்கு இம்மாயா சத்தியாகிய பெருமாள் மாயை யாக நின்று சிறத்தலால்புருடோத்தமன் எனப்படுமென்க. "ஈண்டு ஒருபக்கத்திற் சிவனிருக்கின்றார் என்றது, நாராயண ப்பெருமாள் இடத்தினின்றும் சிவனும் பிரமனும் தோன்ற லால் அதுவே" யென்பார் போலும். சிவ்பெருமானிடத்தி ன்றும் பிரமவிண்டுகள் தோன்றுவரன்றிச் சிவன் தோன்று ரென்க. இன்னும் நாலாயிரப்பிரபந்தச் செய்யுள்களு மிடங் கொடாமையானும், சிவனுக்கு ஒருகூறு கொடுத்தானென் றதன்றிப் பிரமற்குக் கொடுத்தது பேசப்படாமையாலும், தாழ்சடையு நீண்முடியும்" என இருவுருவின் றன்மைகூறி யதன்றி, மூவுருவின்றன்மை பேசப்படாமையானும், அது பொருந்தா தெனமறுக்க. இன்னன நியாயங்களாலும், பிர மாணங்களாலும், அநுபவத்தாலும் நாராயணப் பெருமாள் சிவனது சத்தியொன்றாயும், இடப்பாதியிற்சேர்ந்த தேவி

யாயும் இருக்கின்றார் என்பது துணியப்பட்டு, விபூதி தரித்தமையும் மண்தரியாமையும் வெள்ளிடை மலைபோற் றெள்ளிதின் விளங்கப்படும்.

## பிறர் தம்மத மேற்கொண்டு கலைவு.

நம்மாழ்வார் திருவாய்மொழியில்,

கரிய மேனிமிசை வெளிய நீறு சிறிதேயிடும்
பெரிய கோலத் தடங்கண்ணன் விண்ணோர் பெருமான்றன்னை
யுரிய சொல்லா லிசைமாலைக ளேத்தி யுள்ளப் பெற்றேற்
கரிய துண்டோ வெனக்கின்று தொட்டு மினி யென்றுமே.

எனவரும் நான்காம் பத்து ஐந்தாவது திருவாய்மொழியில், ஏழாஞ் செய்யுட்படியும்,

தவளக் கடாக்களிறட்ட பிரான் றிருநாமத்தாற்
றவளப்பொடி கொண்டு நீரிட்டிடுமின் றணியுமே.

என்ற ௸ ச, கூ, ரு, செய்யுளின்படியும்,

பூவை வீயாமேனிக்குப் பூசுஞ் சாந்தென் னெஞ்சமே.

என்னும் ச பத்து, ரு வது வாய்மொழி க செய்யுளின்படியும்,

பூசுஞ் சாந்தென் னெஞ்சமேபுனையுங்கண்ணியெனதுடைய

என்ற ௸ வாய்மொழி, உ செய்யுளின்படியும்,

கொந்தலர்ந்த நறுந்துழாய் சாந்தம் தூபம்.

என்னும் பெரிய திருமொழி. உ, பத்து, கo, வது, உ செய்யுளின் படியும்,

முதலாயிரத்தில்,

"காப்பிட வாராய்" எனவும், "அக்குவட மூடேச்த." எனவும் வருஞ் செய்யுள்களின் படியும்,

நாராயணமூர்த்தி சிவசின்னங்களுள் ஒன்றாய திருநீற்றைத் தமது கரிய திருமேனிக்கண் நன்றாகப் பிரகாசிக்கும்படி அன்புடன் தரித்திருக்கின்றனர் என்பதும்,

ஷை திருவாய்மொழியில்,

உடையார்ந்த வாடையன் கண்டிகைய னுடைநாணினன்
புடையார்பொன் னூலினன் பொன்முடியன் மற்றும் பல்கலன.

எனவரும் மூன்றாம் பத்தில், ஏழாந் திருவாய்மொழியில் நான்காஞ் செய்யுட்படியும்,

ஷை நான்காம் பத்தில்,

ஏறிய பித்தினோ டெல்லா வுலகு கண்ணன் படைப் பென்னு
நீறு செவ்வே யிடக்காணி னெடுமா லடியா ரென்றோடு
நாறு துழாய் மலர் காணி னாரணன் கண்ணி யீதென்னுந்
தேறியுந் தேறாது மாயோன் றிறத்தின ளேயித் திருவே.

எனவரும் நான்காந் திருவாய்மொழியில், ஏழாஞ் செய்யுட்படியும்,

தணியும் பொழுதில்லை நீரணங் காடுதி ரன்னைமீர்
பிணியு மொழிகின்ற தில்லை பெருகு மிதுவல்லான்
மணியி லணிநிற மாயன் றமரணி நீறு கொண்டு
வணிய முயலின்மற் றில்லைகண் டீரிவ் வணங்குக்கே.

என்னும் ஷை பத்து சு வது மொழி கூ செய்யுட்படியும், அக்கடவுள் கண்டிகையையும் (உருத்திராக்க மாலையையும்) தரித்திருக்கின்றனர் என்பதும், ஆழ்வார் முதலிய அடியார்களுந் தரித்தன விபூதி ருத்திராக்கங்களே என்பதுஞ் சித்தாந்தமாம்.

## விபரீதார்த்த திரஸ்கார தண்டனம்.

ஈண்டுக்காட்டப்பட்ட செய்யுட்களிலுள்ள நீறு, சாந்து, காப்பு, பொடி, கண்டிகைஅக்கவடம், என்னுஞ்சொற்கள் விபூதி உருத்திராக்கங்கள்எனவே பொருள்படும். அவ்வாறே "கரிய

மேனிமிசைஎன்ற செய்யுளில் வரும் நீறு என்பதற்கு அங்க ராகம்என்றுஆறுயிரப்படிக்காரர்,பன்னீராயிரப்படிக்காரர், ஆகிய வைணவவியாக்கியானிகள்உரைசெய்திருக்கின்றனர், அங்கராகம் என்றால், மெய்முழுதும் பூசப்படும் பொருள். ஆகவே அது திருநீறேயன்றி வேறொன்று மன்று.இப்போதுள்ள போலிவைணவர் சாந்து, அஞ்சனச் சூரணம், கர்ப்பூரப்பொடி, திருமண் என்னும் நாமக்குறிகள் என்று அர்த்தம் பண்ணுவது விபரீதார்த்தமாகிய அபார்த்தகமாம்.

ஏனெனில், அவைகளுக்கு "நீறு" என்றபெயர் வழக்கிலாவது செய்யுள்களிலாவது வழங்கப் படாமையானும், அவை யொவ்வோரிடத்திற் றரிக்கப்படுவன வன்றி, திருநீறுபோல, உடல் முழுதும் உத்தூளனமாகத் தரிக்கப்படுவன அல்ல ஆகலானும் பொருந்தாவாம்.

நீறு என்பது விபூதிக்கே யிடுகுறியாக இருத்தலானும் நியாயசாரேயம், வாதராச்சியம், நீலகண்டீயம், அன்னம்பட்டீயம்முதலிய தருக்க நூல்களின்படி, "சக்திக் கிரகம் வியாகரணோவமான" என்னுஞ் சுலோகத்தாற் பெறப்படும் எண்வகைப் பொருளாற்றல்கட்கும் பொருளாய், நிகமனப்படுவது விபூதியே யாகலானும், அங்கராகம் என்பதும் திருநீற்றுக்கே யாதலன்றிப் பிறவற்றிற்குச் சேறலன்மையானும், வைணவர்விரிக்கும் பொருள் அபார்த்தம் என்னும் தர்க்கதோஷமும், தன்னொன்ரு பொருள் கருதிக் கூறல் என்னுங் குற்றமுமா மென்க.

அங்கராகம் என்பது திருநீற்றுக்கே யாதல்பின்வருஞ் செய்யுளானும் பெறப்படும்.

பொங்கரா வெயின்மணிப் பூணும் பேணுநீற்
றங்கராகமு மவந்தணியு மேனியாய்.

என்று, கண்ணபிரானும் அர்ச்சுனனுந் திருக்கயிலை சென்று மும்மூர்த்திகட்கும் முதலான சிவபெருமானைத் துதித்தார்கள் என வில்லிபுத்தூரர்பாரதம் பதின்மூன்றும் போர்ச் சருக்கத்து உ0அ - செய்யுளிற் கூறப்பட்டது. இச்செய்யுளிற் கண்ணபிரானே தம்முடைய திருவாக்கினால் நீற்றை அங்கராகம் என்று கூறித் துதித்தனர் என்று "புரகைபாலெரி புராரிதன்முன - நரனொடுநாரண னனுகியன்பினோற்-சரண பங்கயமுறத் தாழ்ந்து பன்முறை - கரனுற முகிழ்த்திது கழறன்மேயினார்" என்றால் வேறுபிரமாணம யாந்தேடுவது அவசியமன்றாம். "நீற்று அங்காரகம்" என்னுந் தொடர் நீறாகிய அங்காரகம்எனப்பண்புத்தொகையாகக்கொள்ளப்படும். இதனாலும் ஆறாயிரப்படிக்காரர், பன்னீராயிரப்படிக்காரர், நீறு என்பதற்கு விபூதி யென்றே பொருள் செய்தன ரென்பதும், ஆழ்வார்கள் கருத்து மதுவே யென்பதுஞ் சித்தாந்த மாதலறிக.

வெளியநீறு என்பதனை, வெளியம் நீறு எனப் பிரித்து அஞ்சனப் பொடி எனக் கொள்ளின் பொருளாற்ற லின்றி, சலம் என்னும் தர்க்கதோஷமும் உறும். என்னை? வெளியம், என்பதற்கு அஞ்சனம் என்னும் பொருள் கோடற் காதாரமின்மையின். "கரி அம்மேனி மிசை வெளிய" என்றலுமாகாது. வெளிய என்பதற்குத் தாவ என்ற லாகாமையின்.

"நீறு செவ்வே யிடக்காணில்" என்ற செய்யுளில் உள்ள நீறு என்ற பதத்திற்கு ஆறாயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்துநாலாயிரப்படி ஈடு முப்பத்தாறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, ஜீயர் என்னும் இவர்கள் யாவரும் விபூதி யென்றே யர்த்தம் பண்ணியதன்றி வேறு அர்த்தங்கொண்டார் அல்லர். திருமண்ணை யாவது, மஞ்சளை யாவது குங்குமங்களையாவது, சாந்துப் பொட்டு, அஞ்சனப் பொடி, கர்ப்பூரத் தூள் என்பவற்றை யாவது காட்டினாரல்லர். திருநீறென்று

காட்டி, அத்திருநீறு பிரமகத்தியாதிப ாவங்களை யெல்லாம் போக்குவது என்றும் விதந்து பேசியிருக்கின்றார். பேசி னதுமன்றி "மத்யம்பீத்வா" என்ற சாதாதபஸ்மிருதிச் சுலோ கத்தையுங் காட்டியிருக்கின்றனர். சகலபாவங்களையும் போ க்குமென்று, அவர் காட்டிய சுலோகத்தானே பெறப்படும் போது, யாவரானும் நித்தியாங்கமாகக் கொண்டு அணித ற்குரியதே. மாயனும் அவனடியவரும் அத்துணை மகிமை செறிந்த திருநீற்றை வெறுப்பாரா? வெறுக்கார்.

அல்லி, கொட்டி, நெய்தல் முதலாயின சேற்றிலும் சலத் திலும்தோன்றுவதாயினும், தாமரை யொன்றற்கே பங்கயம், சலசம், கஞ்சம், கமலம்முதலிய பெயர்கள் சிறப்பாக (உரிய நாமம்ஆக) அமைதல்போலக் கண்டத்திற் றரிக்கப்படும் பல அணிகளுள்ளும் சிறப்புடைய உருத்திராக்க மணிமாலைக்கே கண்டிகை என்னும் பெயர் வழக்கமையும். பாவங்களையெல் லாம் கண்டிப்பது என்ற பொருட்சிறப்பு மிருத்தல் காண்க. துளசி மணிமாலை வேதத்திற் கூறப்படாமையானும், பொன் னாற் கண்டிகைசெய்து தரிப்பது வழக்கா யிக்காலத்துமுண் மையா யிருத்தலானும் வேறுகொள்ள இடமின்றே. போலி வைணவர் என்செய்வார் பாவம்! பாவம்!! எமது நாராயணப் பெருமாள் பிருந்தை யிறந்தசாம்பரிற் புரண்டார். அதுநீக்க உமாதேவியார் துளசியுண்டாக்க அதனையணிந்து தம்மையல் தீர்ந்தார் என்று புராணங்கள் கூறுவதும், தாம் அதனையொ ப்பிப் பிருந்தாவனம் என்று கொண்டாடுவதும் இருக்க, சிவபெருமானால் அருளப்பட்ட கண்டிகையைத் தரித்தார் என்பதுதானா குறைவை யுண்டாக்கும். தசரத இராமனைப் பதுமநாபன் என்று ஆங்காங்கு நாலாயிரப் பிரபந்தத்தில் ஆழ்வார்கள் கூறினமையால், அவ்விராமர் சிவனடியாரான

அகத்தியர், பரத்துவாசர், வசிட்டர் முதலாயினோர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினமை குறைவை விளக்காதா? ''குழனிற வண்ணநின் கூறுகொண்ட- தழனிற வண்ணன் நண்ணூர் நகரம் - விழாவணி மலிசிலை வளைவுசெய்தங் - கழனிற அம்பது ஆனவனே''

எனப் பெரிய திருமொழி ஆறும்பத்து க வதுமொழி ௩ செய்யுளில், திருமங்கையாழ்வார் சிவனுக்கு விஷ்ணு அம்பாய்நின்றார்'' என்றது, விஷ்ணுவின் பரத்துவத்திற்குக் குறைவாகாதா? சிவனால் முடியாததினால் விஷ்ணு அம்பாய் நின்றார் எனில், அவ்வம்பைத் தொடுத்துச் சிவனெரித்திலரோ. அம்பாகநின்ற திருமாலும், அவ்வம்பின் இறகாக நின்ற வாயுதேவனும், நுனியிற் கூர்மையாக வைக்கப்பட்ட அக்கினிதேவனும், மற்றையோரும் எம்மைக்கொண்டன்றோவிவன் றிரிபுரத்தை யெரிக்கத் தொடங்கினன் என்று நினைத்து இறுமாந்த காலத்தில் அதனைப்பரமன் திருவுளத்தெண்ணியதனால் தோன்றிய சிரிப்பாகிய அக்கினியாலன்றோ எரித்தான். ஆதலால் பாணமாய் நின்றது பரத்துவமாகாது. அன்றியும் விஷ்ணுவே அம்பாகி எரித்தார் ஆனால் ''எயிலெரித்தான், திரிபுரஞ் செற்றவனும், திரிபுரமூன் றெரித்தானும்'' என்று ஆழ்வார்கள் சிவனைக் கூறமாட்டார். பசுவின் கோமயத்தா லுண்டாகுந் திருநீறு கூடாதேல் பசுவின் பொருளாகிய தயிர், நெய், பால் இவற்றையுண்டதும், பசுக்களை மேய்த்ததும் பேரிழிவன்றோ? அவற்றை யெல்லாம் நாலாயிரப் பிரபந்தத்தில் ஆழ்வார்கள் ஆங்காங்குக் கூறியிருக்கின்றனரே. அவற்றிற்கெல்லாம் என செய்வர்?

பசுவின் சாந்தச் சாம்பல், பிணச்சாம்பலெனின் முன் கண்ணனுண்டவையும் பிணத்தயிர், பிணநெய், பிணப்

பால் என்று ஆகி, பிணங்களாகிய பசுக்களைக் காத்து, பிண க்குலமாகிய இடைக்குலத்திற் பிறந்தார் என்றன்றோ சொல்ல வரும். இவைகளைக் கண்ட மாத்திரையே சேட்டமாத் திரையே தூஷண மென்பார் வெள்ளறிவிற்கு யாமென் சொல்வோம். அவர் உண்மையுணர்ந்தாரல்லர் என விடுக்க.

. திருமண் பதிகமாவது, விஷ்ணு திருமண் அணிந்தார் என்றுவது, அல்லது ஆழ்வார்களால் பிரபந்தத்துச் சொல் லப்பட்ட பரமசிவன், உருத்திரர், காரிருத்திரர், ஏகாதச ருத்திரர், விநாயகர், சுப்பிரமணியர் என்னும் இவர்கள் தாமும் திருமண், துழாய்மணி என்பவற்றை யணிந்திருக் கின்றார் என்றுவது, நாலாயிரப் பிரபந்தத்திற் கூறப்பட்டிருக் கின்றதா? இல்லையே. சிவனும் மற்றையருஞ் விஷ்ணுவின் அடியவரென்றால், அவர் புண்டரத்தை யன்றோ இடுவர். நாலாயிரப் பிரபந்தம் சிவபெருமானைப் புகழ்ந்த காலத்து, "நீற்று னிழன்மணி வண்ணத்தான் எனவும், ஆயிரந்தோள்- மன்னு கரதலங்கண் மட்டித்து மாதிரங்கண் - மின்னியெரி வீச மேலெடுத்த சூழ்கழற்கால்-பொன்னுலக மேழுங்கட ந்தும்பர்மேல் சிலும்ப-மன்னு குலவரையு மாருதமுந்தார கையும் - தன்னி னுடனே சுழலச் சுழன்றுடும்-கொன்ன விலும் மூவிலைவேற் கூத்தன் பொடியாடி" எனவும், "தேவ ர்க்கெல்லா மூத்தநம்பி முக்கண்ணம்பி" எனவும், எம்பெரு மானும்பாரூ மரனே எனவும், காரிருத்திரனைப் புகழ்ந்தகா லத்து "வெந்தா ரென்புஞ் சுடுநீறு மெய்யிற் பூசிக்கையகத் தோர்-சந்தார்தலைக்கொண்டுலகேழுந்திரியும்பெரியோன்" எனவும், விபூதியணிந்தார் என்று புகழ்ந்ததே யன்றி, திரு மண், துழாய்மணி பூண்டுளானெனச் செப்பவில்லையே. நா லாயிரப்பிரபந்தம் கேசவார்த்தரா யிருக்கிற சிவன், மும்மூ

ர்த்திகளுள் ஒருவரான ருத்திரர், காரிருத்திரர் என மூவரை யோதுதல்காண்க. இஃதறியார் எல்லாஞ் சிவனென மயங்கி யிடர்ப்படுப.

ஆறுயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்து நாலாயிரப் படி, திருவிதிப்பிள்ளைசெய்த முப்பத்தாறுயிரப்படி, ஜீயர் அரும்பதப்படி என்னும் இந்த வியாக்கியானங்களின் அர்த் தங்கள் பிரமாணங்களுக்கு ஒத்தன வல்லவென்றும், மாறுப ட்டன வென்றும் வைணவரது ஆசாரியர்களுள் ஒருவராயு தூப்பில்பிள்ளை என்பவர் அவைகளைக் கண்டித்து ஓர் வியா க்கியானஞ் செய்தார் என்றும், அவ்வியாக்கியானத்தில் இந்த நீறு, காப்பு, சாந்து, கண்டிகை, பொடி, அக்கவடம் என்பவற்றிற்கு, சாந்துப்பொட்டு, திருமண், மஞ்சள், குங் குமம், அஞ்சனப்பொடி, கர்ப்பூரத்தூள் என்பன வேதத் திற் கூறப்படாமையால் அவை வேதபாகிய மென்றும், விபூ தி ருத்திராக்ஷமே கொள்ளத் தக்க பொருளா மென்றும், பிறவுமமைய அவர் ஒருரைசெய்து பிரவர்த்தித்த காலத்து, பெரியவாச்சாம்பிள்ளை என்னும் ஆசாரியார், குடி முடிந்ததே யென்று அதனைப் பெரிது மிரந்து வாங்கிக்கழித்தார் என் றும், வைணவரது குருபரம்பரை என்ற நூலால் தெரிகின் றது. மாதவாசாரியர் ஆகிய நஞ்சீயர் அவர்களும் செய்த ஒன்பதினுயிரப்படியைக் கண்ணுற்றால் ஆங்கும் இவ்விபூதி ருத்திராக்கங்களே உரைக்கப்பட் டிருக்கின்றன. அதனாற் றான் வெளிப்படுத்தாது ஒளித்து வைத்திருக் கின்றனர். இன்னன காரணத்தால் வைணவ வியாக்கியானங்கள் முழு வதுஞ் சரியுடையன வெனக் கொள்ளற் கிடமில்லை.

திருமண், வடகலைமண், தென்கலைமண், குங்குமம், மஞ்சள் என்னும் இவற்றுள் எதனைத் தரிப்பது? வைணவர்

தம்முளேதாம் ஒருவரையொருவர் குறைகூறி,ஒவ்வொன்ற னையும் அவைதிகமென்று சொல்லி வாதிடலால் திருமண் இடையில் வந்ததென்க. அதுவும் உடையவர் காலத்தில் ஏற்படுத்தப்பட்டு, அவர்வழிவந்த ஆட்கொண்டி, அம்மங்கி, கூரத்தாழ்வார், கிடாம்பி யாச்சான், மாடைபூசியாழ்வான், தூப்பில்பிள்ளை, சிறியாழ்வான், செய்யுண்டாழ்வான், உக் கலாழ்வான், பிள்ளையாழ்வான், மிளகாழ்வான், ஈயுண்ணி யாழ்வான், சிறியாண்டான், ஈயுப்பிள்ளையாண்டான், கந் தாடையண்ணன், எச்சான் ஈச்சம்பாடியாச்சான், மழூவூர் நம்பி, சொட்டைநம்பி, மூடும்பைநம்பி, சட்டைப்பள்ளிச் சீயர், புட்குழிச்சீயர், அம்மங்கியம்மாள், மூடும்பையம்மாள், பருத்திக்கொல்லையம்மாள், உக்கலம்மாள், சொட்டையம் மாள், பட்டினிப்பெருமாள், எம்மார், காராஞ்சி, குமாண் டூர்ப்பிள்ளை, பிள்ளையுறங்கா வல்லிதாசர், வண்டர், சென் டர், தெக்காழ்வான், நடுவிலாழ்வான், கோடியிலண்ணர், கொல்லக்காவல் தாசர், அத்துழாயம்மன், பிள்ளைப் பிள்ளை யாழ்வான், கந்தாடைத் தோழப்பர், ஈயுண்ணிமாதவப்பெ ருமாள், பெரியவாச்சாம் பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள் ளை, நம்பிள்ளை, கிழையகத் தாழ்வார், மேலையகத்தாழ்வார், அப்பாவண்ணன், ஆய்ச்சி, சடகோபக்கொற்றி, கோமடத் தாழ்வான், வெள்ளறைச் சீயர், காசநம்பி, நடாதூராழ் வான், கோங்கிலாச்சான், சொக்கத்தூராழ்வான், சொட் டைப்பூசிச் செண்டலங்காரர், உறுப்புட்டூராச்சாம்பிள்ளை, ஆசூரிப்பெருமாள், எறும்பியிலப்பை, வேடலப்பை என் னுமிவர் முதலாயுள்ள பின்னோர்களால் வழக்கஞ்செய்யப் பட்டு வந்ததேயன்றி வேதாகமோபநிடத மிருதிபுராணேதி காசாதி நூல்களில் ஒன்றிலேனும் திருமண், கறுப்புப்பொ

ட்டு, அஞ்சனப்பொடி, கர்ப்பூர முதலியன சொல்லப்படவில்லை. இதனையறியார் சிலர் இதனை விபரீதார்த்தம் என்று வாயில்வந்தபடி யெழுதித் தூஷணச்சுவடி ஒன்றுவிட்டார். அத்திரஸ்காரச்சுவடி எழுத்தெழுத்தாக் கண்டிக்கப்பட்டதை நீறுஎன்னுஞ்சொல்லுக்கிட்ட வைரக்குப்பாயம், கண்டிகையணர்த்த கானனகுடாரி, வைணவ வாயாப்பு என்னு நந்நூல்களிற்காண்க. இவ்விடயங்கள் வாதத்தில் எம்மாற் சித்தாந்தஞ் செய்யப்பட்டன. திருமண் தாரணத்துள்ளும் சிவப்புச்சூரணம் சிரேட்டம் என்றும், மஞ்சட்சூர்ணம் சிரேட்டம் என்றும், வடகலைநாமம் விசேடமென்றும், தென்கலைநாமம் உயர்ந்ததென்றும், வைணவர்களே பிரமாதமான சண்டைகள் செய்தனரே; செய்கின்றனரே. அவற்றுள் இதுதான் உயர்ந்ததென்று இன்னுந் தீர்மானித்து ஒருவழிப்பட்டாரல்லர். விபூதியில் இவ்வகைப் பேதங்களில்லையே. நால்வகை நாமத்துள் எந்த நாமமுண்மையையோ? ஒவ்வோர் பகுதி வைணவர் மற்றை நாமங்களைப் பொய் என்கின்றனர். ஆதலால் எல்லாம் பொய்யே. "உத்ருதாஜி வராஹேண க்ருஷ்ணேந சதபாகுந" என்னுமந்திரம் மண்போடு மந்திரமன்று, மண்பூசிக் குளித்தற்கு உரிய மந்திரமே.

இன்னன நியாயங்களானே, உடையவர்க்கு முன்னர் இருந்த ஆழ்வார்கள் செய்த நாலாயிரப் பிரபந்தங்களில் வரும் நீறு, கண்டிகை, பொடி, காப்பு, அக்கவடம், சாந்தம் முதலிய சொற்களுக்கு எவ்வாற்றானும் பொருட்பொருத்தமாகக் கொள்ளப்படுவது விபூதி ருத்திராக்கங்களே யென்றும், அவையே சுருதிப் பிரமாணங்கள் உணர்த்த கருத்துஎன்றும், மற்றையன வெல்லாம் மாறென்றும், அதனால் எமது காத்தற் கடவுளாகிய நாராயணப் பெருமானும்

அவரடியார்களும் அணிவன திருநீறுங் கண்டிகையு மென்றும் சித்தாந்த மாதல் அறிக.

## விபூதி ருத்திராக்க விவாதம்.

திருமண், துளசிமணி தாரணங்களே வாசுதேவனுக்கும், அவனடியார்க்கும் உள்ளன வென்றும், விபூதிருத்திராக்கங்கள் பிரமகத்தி முதலிய பாதகங்களைச் செய்தாரும், இராக்கதர் அசுரர்களும் தரிப்பன வென்றும், ஆதலால் பிராயச்சித்தாங்க மாகும் என்றும், குரூர வைணவராகிய திக்விஜயம் எம்பாவையங்கார் என்பவர் அதர்வசிகா விலாசம் என்ற நூலொன்றை யெழுதிவிட்ட காலத்து, மைசூர் என்னும் மகிஷபுரக்கணிருந்த வீரபத்திர ஆராத்திய சுவாமிகள் அவற்றை யெல்லாங் கண்டித்து, சித்திரக் குறியாகிய ஊர்த்துவபுண்டரம் உடையவரால் ஏற்படுத்தப் பட்டதென்றும், அவைதிகமும் நவீனமுமாகுமென்றும், சிவசின்னங்களே வைதிகம் என்றும், அவை நித்தியாங்கம் ஆகு மென்றும் பிரமாணங்களுடன் "அதர்வ சிகாவிலாச நிரசனம் என்ற சிறந்த நூலொன்று எழுதி, வாதிக்கவந்த ஐயங்காரையும் வென்றனர். ஐயங்கார் தம்முடைய விருதுகள் முதலாயினவற்றை யெல்லாம் சுவாமிகள் திருவடிகளில் தத்தஞ்செய்து அவர்க்கு அடிமையாயினர் என்று, சங்கரபட்டர் அவர்களாற் செய்யப்பட்ட சகல வேதசிகாமணி என்னு நூல் முழங்குகின்றது. காஞ்சிபுரத் தாத்தாச்சாரி என்னும் வேறோர் வைணவர், நாராயணரே பரப்பிரமம் என்றும், திருமண், துளசிமணி, தப்த முத்திரை என்னு மிவற்றைத் தரித்தலே பரமபத சாதனம் என்றும், வீண்புரளி செய்த காலத்தில், ஆயிர நூல்கள் செய்த அப்பதீக்ஷித சுவாமிகள் மறுக்க வெழுந்தனர். தாத்தாச்சாரி என்பவர் "சிவன் விட்முண்டதனாற் பரப்பிரமம்" எனின் நீயுமுண்ணுதி என்று பாலுடன் நஞ்சங்கலந்து கொடுக்க,

தீக்ஷிதசுவாமிகள் அதனைப் பருகி, அதனாற் சிறிதும் வாதனையின்றி "சிவதத்துவ விவேகம்" என்னும் நூல்செய்து சாதித்தனர். அதனை மறுக்க முடியாத ஆசாரி விழிந்து, வைணவ முத்திரைகளே முத்திசாதனம், விபூதி கண்டிகைகள் பிராயசித்தாங்கம் என்பதைத் தாபிப்பேமென்று அரசனிடங்கூற, அரசன் இருவரையும் அழைத்து, மத்தியஸ்தராக வியாசபட்டர், பராசரபட்டர் என்னும் மத்துவ ஆசாரியர்களை நியோகித்து வாதிப்பித்தனன். அப்பதீக்ஷித சுவாமிகள் வேதாகம உபப்பிருங்கண சுருதிகளால் தாத்தாச்சாரி கூற்றுக்களையெல்லாம், பரியநுயோச்சியாநுபேக்ஷணம், அபார்த்தகம், புனருக்தி, பிரதிஞ்ஞா விரோதம், பிரதிஞ்ஞானி, அப்பிரசித்தோபயம், அப்பிரசித்த சம்பந்தம், ஆகம விரோதம் முதலிய குற்றங்களிற் படுத்தி, சிவசின்ன வெற்றிக் கொடியை நாட்டி நின்றார். தாத்தாச்சாரியார் "விழுந்தவன் மீசையில் மண்படவில்லை" யென்றாற் போல வகையறியாது, குதர்க்கத்திற்கு ஆரம்பித்தார். மத்தியஸ்தரா யிருந்த பட்டர் இருவரும் தீக்ஷித சுவாமிகளைத் தண்டாகாரமாக வீழ்ந்து வணங்கி, சுவாமிகளால் தாத்தாச்சாரியர் அபஜெயப்பட்டார். பாஞ்சராத்திரம் பாழாயிற்று. அம்மதக் குறிகளுள், ஊர்த்துவ புண்டர இரேகைகள் ஆகிய கொம்பர்கள் மனுடர் நெற்றியைவிட்டு மலைச்சிகரங்களிலோடிச்சென்று உற்றன. மண்கள், தூளியாய்ப் பறந்து அந்தரத்தில் வெண்முகிலாய் நின்றது. தப்த முத்திரைகள் ஆகிய சங்கு சக்கரக்குறிச்சூடுகள், எருத்து மாடுகளைப் பற்றின. ஸ்ரீசூர்ணம் என்னும் குங்குமப்பொடி மாதர்களின் குசமண்டலத்தையடைந்தது. அரித்திரா சூர்ணம் என்னும் மஞ்சட்பொடி கறிவகைகளுடன்போய்க் கூடிற்று. துளசிமணியுந் தேடுவாரின்றி வனமணியாயிற்று" என்றுபுகழ்ந்து சைவசித்தாந்திகளாய் நின்றனர்.

அப்பதீக்ஷித சுவாமிகள் அக்காலத்தி லியற்றிய கிரந்தங்கள் வைதிகாசாரநிர்ணயம், பரமததிமிரபானு, சிவகர்ணாமிர்தம், தப்தமுத்திர வித்திராவணம், மிர்த்துதாரண விப்பிரலம்பம், சிவசின்னோத்கர்ஷம், வனமாலிகா தண்டனம், பாஷண்டமத சபேடிகை, பிரம தருக்கஸ்தவம், சிவபுராண தாமசத்வ நிராகரணம், சர்வார்த்த சாரசங்கிரகம், பரிபாஷா மஞ்சரி, அரதத்தமான்மியம் முதலாயினவாம். கூரத்தாழ்வார் வழிப்பிறந்த நடுவிற் றிருவீதிப்பட்டர் திருமண் சாதனங் கூறியகாலத்து, சோழராசன் வான்மீகி யிராமாயணத்துள்ள "சுவர்ணவர்ணஜடாபாரம்" என்ற சுலோகத்தால் நீறன்றோ இராமர் தரித்தது என்ற கேட்டகாலத்து, நடுவில் வீதிப்பட்டர் விழித்தனர் என்று குருபரம்பரை கூறிற்று.

## விபூதி பஞ்சகம்.

இச் சிறந்தநூல், திருநந்திதேவரது அவதாரமென்று சிவரகசியகண்டத்திற் கூறப்பட்ட அரதத்த மகாயோகீந்திரரால் செய்தருளப்பட்டது. தந்தையாகிய மதுசூதனாசாரியரும், மற்றைய வைணவர்களும் சேர்ந்து திருமண் தாரணமும், சங்குசக்கரக் குறிச்சூடும்செய்ய வந்தபோது, அரதத்தயோகிகள் அவற்றைத் தடுத்து, விபூதியின் பிரபாவங்களையெல்லாந் தொகுத்துக் கூறி, நாராயணரின் மனைவியான மண்ணை நாமணியேம். ஏனத்தி னுச்சிட்டத்தையெடுக்கேம் என்று,

யசுர்வேதம் காலாக்கினி ருத்திரோப நிடதத்திலே,

*ஸத்யோஜாதாதி பஞ்சப் பிரஹ்ம மந்த்ரைர் பரிக்ருஹ்ய |*
*அக்நிரிதிபஸ்ம வாயுரிதிபஸ்ம வியோமேதிபஸ்ம ஜலமிதிபஸ்ம||*
*ஸ்தலமிதிபஸ்ம இத்யநேநாபி மந்திர்ய|*
*மாநஸ்தோகஇதிசமுத்ருத்ய||*

என்றற் றொடக்கத்தவாகக் கூறப்பட்ட மந்திரங்களை யுச்சரித்து, பஸ்ம ஸ்நானஞ் செய்து இப்பஞ்சகத்தையும் அருளிச்செய்தார் என்க.

## விபூதி, உறுப்புக்களிற் றரிக்குங் காரணம்.

இதனைப் பற்றி, கூஉ-ம் பக்கத்திற் கூறினே மாயினும், வழிமொழிதலாக வேறுகாரணமும் உளவென்று காட்ட வந்தாம். பிராமணர் முதலிய நான்கு வருணத்தாரும் திரிபுண்டரமாகத் தரிக்குந் தானங்கள், ரு, அ, கசு, கூஉ என்பனவாம்.

நெற்றி, கைகள் இரண்டு, மார்பு, உந்தி என்னும் ஐந்து உறுப்புக்களினுந் தரித்தல் சிவபெருமான், மகேசுரர், உருத்திரர், கிருட்டிணர், பிரமர் என்னும் ஐந்து தேவதைகளின் பிரீதி சித்திப்பதற்கெனச் சொல்லபபடடது.

தலை, நெற்றி, செவிகள், கைகள், நாபி, பின்பக்கம என்னும் எட்டினுந் தரித்தல், அவ்வுறுப்புக்கள் பிரமனுக்கும் சத்தரிஷிகளுக்கும் பிரீதி யுள்ளனவாகலின் என்க.

முன்னர்க் கூறப்பட்டன வன்றி, பதினாறு உறுப்புக்களுக்குக் காரணம் வேறு முண்டு. என்னெனில் அவ்வுறுப்புக்கள், முறையே சதாசிவன், மகேசுரன், உருத்திரன், விட்டுணு, பிரமன், அக்கினி என்னும் மூர்த்திகளும் ஜிஷ்டை இரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்ரமதனி, சர்வபூத தமனி, நாதன், சத்தியன் என்னும் அசுவினி தேவதைகளும் ஆகிய பதினாறு தேவதைகட்கும் பிரீதி உண்டாகலின் என்க. அது "சிவ வஹ்யாதி மூர்த்தீநரம்" எனவரும் ஸ்நானவிதிப் படல சுலோகத்தா னறிக.

சிரம், நெற்றி, இருசெவிகள், இருநாசிகள், முகம், கண்டம், புயங்கள், கரங்கள், முழங்கைகள், மணிக்கட்டுகள் மார்பு, நாபி, குறி, குதம், தொடைகள், முழங்கால்கள், கணைக்கால், பிருட்டோன்னதங்கள், பாதங்கள் என்னும் முப்பத்திரண்டு சந்திகளினும், வித்தியேசுரர் எண்மருக்கும், திசைப்பாலர் எண்மருக்கும், அட்ட வசுக்களுக்கும், அட்ட மூர்த்திகளுக்கும் பிரீதியா யிருத்தலால் தரிக்கப்படும். இதனைக் காமிக ஆகம பூருவபாகத்து கூ-வது படலத்தில், எஉ-ம் சுலோகத்தா லறிக.

## உருத்திராக்க பஞ்சகம்.

இதுவும் முன்னர்க் கூறிய அரதத்தாசாரிய சுவாமிகளால் விபூதி பஞ்சகம் செய்த காலத்திற் செய்யப்பட்டது. தந்தையார் ஆகிய மதுசூதனுசாரி முதலாயினோர் துளசி மணியைத் தரிப்பான் கொண்டு வந்தபோது, சுவாமிகள் தடுத்து, உருத்திராக்கத்தின் பெருமைகள் எல்லாம் விளங்கும்படி தோத்திரம் பண்ணிய சிறந்த நூலாம். இது "லக்ஷந்து தர்சநாத் புண்யம்கோடிஸ் தத்தாரணுத்பவேத் தஸ்யகோடி சதம் புண்யம் லபதே தாரணுந்ர:! லக்ஷகோடி சகஸ்ராணி லக்ஷகோடி சதாநிச" எனவரூஉஞ் சாம்வேதபாக மகாவாக்கியங்களைக் காட்டி உருத்திராக்க மகிமையைக் கூறி அதனைத் தரித்து, அன்புடன் போற்றியது என்க.

## விட்டுணுமூர்த்திக்கு.

## வித்தியா கர்த்தரும் விபூதி கண்டிகை யிட்டார்.

ஒரு விஷயத்தில இருவர் பிணக்குற்ற காலத்தில், அவ்விருமதத்தவர்க ளல்லாத வேற்றுமதத்தராய், அபிமானமுமில்லாதவராயுள்ள ஒருவர் எது கொள்கின்றனரோ அதுவே உண்மையானதாகும். விஷ்ணுவுக்கு விபூதி ருத்திரா

க்கதாரணமே யுள்ளது என்று யாம் வாதித்த காலத்தில், இல்லை யில்லை யென்று வீண்வாய்ப்பறை யடித்தவர் யாமீண்டுக் காட்டிய சுருதிப் பிரமாணங்கட் கெல்லாம் என்ன சொல்வர். அன்றியும் ஆங்கில அரசினரால் நியமிக்கப்பட்டு, மதாபிமான மின்றி யிரண்டற்கும் பொது நிலையராக விளங்குஞ் சென்னை வித்தியா கர்த்தரான மாஸ்டன் துரை பி-ஏ அவர்கள், தாம் வித்தியாசாலைக்காக இயற்றி விதித் திருக்கும் (Indian History) இந்திய சரித்திரம் என்ற ஆங்கில மொழிப் புத்தகத்திலும், ஆறாம் வாசக புத்தகம் என்ற தமிழ்மொழி நூலினும், இராமர் இலக்குமணர் சீதை யென்னு மிம்மூவருக்கும் வேதாக மேதிகாசங்கள் கூறுவதுபோல விபூதித் திரிபுண்டரமும், உருத்திராக்கமுந் தரித்தபடி படம் இட்டிருக்கின்றனர். அதனாற் சீதாராமபிரான் சிவ சின்னதாரண ரென்பது அவர் கொள்கையுமாகும். மஞ்சள், சிவப்பு, வெள்ளை யென்னும் திருமண் தாரணமிடக் காணோம். அதனால் திருமண் நவீனக்குறி யென்றாயிற்று. அப்புத்தகங்களைப் பார்ப்பவர்க்கு அவை நன்கு விளங்கும். வித்தியாகர்த்தர் அபிமானத்தினால் இடுவாரா? இடமாட்டார். அநேக நூல்களை யாராய்ந்து இராமசுவாமியும், அவர் தம்பி இலக்குமணரும், இராவணன் மகளாகிய சீதாபிராட்டியும் சைவதருமம் உடையவர் என்றே தெளிந்து செய்திருக்கின்றனர். இவ்வாறே பூனாவிலுள்ள திசையெலாந் தெரிந்த சித்திரவேலையில் வல்ல இரவிவர்மா அவர்களும் இராமர் முதலினோர் ஓடம் ஏறிச்செல்லும் அப்படத்திற்கு விபூதி ருத்திராக்க தாரணத்துடன் வெளியிட்டதை யாவருங் கண்டுளர். வித்தியா கர்த்தர் அவர்கள், கங்கையைக்குறித்த ஆறாம்வாசக புத்தகத்திலே, சிவபெருமான் தேவி யென்னு மிருவருடைய திருவுருவப் படங்களு மிட்டுள்ளார்

அவைகளுக்கும் விபூதியே யன்றி மண்புண்டர மிட்டாரல்லர். ஒருகால் இராமர்க்கு விபூதி கண்டிகையுண்டு; வாசுதேவர்க் கில்லையெனில், இராமர் விட்டுணுவின் ஐவகை நிலையுள் ஒன்றின் வகையரென்றும், தசாவதாரத்துள் ஓரவதாரமென்றும், சப்தகாதை, தத்துவத்திரயம் என்னும் வைணவ நூல்கள சாற்றுகின்றனவே. வாசுதேவனே இராமன்; இராமனே வாசுதேவன், என்று வான்மீகி இராமாயணமும், நாலாயிரப்பிரபந்தமுங்கூறித் துதிப்பதென்னே? நாராயணோபநிடதம், இராமதாபினி முதலியவும் அவ்வாறே கூறுகின்றன. அதனால் அங்ஙனங் கூறுதல முரணு மென்க. இவ்வேதுவானும் சீதாராமன் சிவசின்ன தாரணரே.





## மாணிக்கப் பண்டாரம் வாசுதேவரே.

வாசுதேவர் பரசிவத்திற்குச் சிறந்த அடியவராய், அவரை இடைவிடாது உபாசிக்கின்றனர். அதனாற் சிவபெருமான் அவரது இருதயத்தை விட்டு நீங்காதவராய் அங்கே

யே குடிகொண் டிருக்கின்றார். சிதரக்கடவுளின் றியான உபாசனையைத் தற்பரனார் தந்திருவுளத்து ஏற்று, அவர் வேண்டியவா றருளினிற்றலின் இருவரும் வேறுகாராயினர். அது பற்றியே,

சிவாய விஷ்ணு ரூபாய சிவரூபாய விஷ்ணவே
சிவஸ்ய ஹிருதயம் விஷ்ணுர் விஷ்ணோச்ச ஹிருதயம் சிவ:
யதாந்தரம் நபேதாஸ் யுச் சிவகேசவ யோஸ்ததா
பாசபந்தஸ்ததாஜீவ: பாசமுக்தஸ் ததா சிவ:

என்று யசுர்வேத பாகமாகிய ஸ்கந்தோபநிடதஞ் சாற்றிற்று. இவ்வாறே வைணவரும் காயத்திரி பிரஸ்தாபனமூ செய்யுங் காலத்தில் உச்சரித்துச் செய்தல் வேண்டும். இது வன்றி வேறுகதி கிடையாது. இங்ஙனம் சிவநாமத்தையுச்சரித்துச் செய்யும் வைணவர் சிவவேடம், சிவாலயம, சிவசப்தம் என்னு மிவற்றைக் காணுதலுங் கேட்டலும் ஆகாது என்னல்நியாயமின்மையும் மகாபாதகமுமாம். மேற்போந்த வசனங்களால் திருமால் சிவபெருமானை யிடைவிடாது உபாசிக்கின்ற பண்டாரம் என்றுவர். பண்டாரம் என்பது அரும்பொருளாகிய முத்திச் செல்வத்தை யன்றி, அருபொருணிறைந்த பொக்கிஷ மெனவும் பொருள் கூறலாம். முத்தியாகிய பண்டாரத்தைக் கொடுப்பவர் சிவனார் என்று, "மூலபண் டாரம் வழங்குமென் றுன்வந்து முந்துமினே" என்று திருவருணெறித் தமிழ்வேதமுங் கூறிற்று. அரும்பொருணிறைந்த பொக்கிஷம் என்றால், மேலான ஐசுவரியம் நிறைந்ததென்க. பொருள்களெல்லாவற்றினும் மேலான பொருள் எவையெனின் விபூதியும் கண்மணியுமே. ஏனெனில், அவற்றின் பெயர்களே மேலான, (விபூதி) ஐசுவரியம் எனவும், மணிகளெல்லாவற்றினுஞ் சிறந்தது எனவும் பொ

ருள்படுதலானும் என்று அறிக. அரும்பொருளாகிய விபூதியையும் கண்மணியையு முடைய கோலமே (பொக்ஷம்) பண்டாரம்ஆகும். சிவனடியார்யுள்ளார் அவ்விரண்டனையும் தாங்கி வழிபடுங் கோலமுடைய ராகலின் பண்டாரம் எனப்படுவர். இவ்வழக்குப் பெயர் சைவரொருவர்க் கன்றியே னைய மதத்தாருக்குக் கிடையாது. வைணவருக்குத் தாதர் என்று வழங்கப்படுகின்றது.

அப் பண்டாரக் கோலங்கள் பக்குவ முறைபற்றிச் சைவப் பண்டாரங்கள் எனவும், வீரசைவப் பண்டாரங்களெனவும் இருவகைப்படுவர். சைவப் பண்டாரங்கள் விபூதிருத்திராக்க தாரணத்துடன், விபூதிப்பை,திருமுறை, உருத்திராக்கமாலை,யோகதண்டம் முதலியன ஏந்திநிற்பர். வீரசைவப்பண்டாரங்கள் சிவசின்னங்களை யணிவதுடன், சங்கும் சேமக் கலமுந் தங்கையில் தாங்கிநிற்பர். அது போலவே நாராயணப்பெருமாளும் சங்குஞ் சேமக்கலமுமாகிய பாஞ்சசன்னியமென்னும் சங்கினை ஒருகையினும்,சுதரிசனம் என்னுஞ் சேமக்கலத்தை (காவற் படைக்கலத்தை) ஒருகரத்துந்தரித்துச் சிவசின்னப் பொலிவுடன் றியானிக்கின்றபடியால் பண்டாரம் என்று பெயர் பெற்றார். "செங்காலிற் கருங்காலன் சிரமுருள வுதைத்தனையே - சங்காழி முகுந்தனுக்குச் சங்காழி கொடுத்தனையே." என்று திருவருணைக் கலம்பகத்தும், காஞ்சிப் புராணத்தும், சரபோப நிடதத்தும் கூறியபடி சிவபெருமானே இப்பண்டாரக் கோலத்தை விட்டுணுவிற்கு அளித்தார் என்பது நன்றாகத் தெரிகின்றது.

**திருமங்கை யாழ்வார் திருநெடுந்தாண்டகம். உசு.**

"ஒருகையிற் சங்கொருகை மற்றாழி யேந்தி
யுலகுண்ட பெருவாய ரிங்கே வந்தென்."

என்றதனுற்காண்க. ஏது திருட்டாக்தங்களாற் பண்டாரம் என்பதன்றி,"திருமால் பண்டாரம்" என்று யாமொப்புக் கொள்ளும் நமது மேற்கோள் யாதேனு முண்டா? என்று வைணவர் வினுவின், ஆம் என்கின்றேம். அது வருமாறு.

நாலாயிரப் பிரபந்தத்திலே,

"மாணிக்குறளுருவாய மாயனை யென்மனத்துள்ளே
பேணிக்கொணர்ந்து புகுதவைத்தேன் பிறிதின்றி
மாணிக்கப் பண்டாரங் கண்டீர்."

என்று, திருமங்கையாழ்வார் கூறிய செய்யுளாம் இஃதொன்றே அதனை வலியுறுத்துமென்க. வைணவர் ஆகிய ஆழ்வாரோ விட்டுணுவைப் பண்டாரம் என்றபோது சிவசின்னதாரணத்திற்கு ஐயமுமுளதேயோ? மாணிக்கத்தையுடையபண்டாரம்எனின், மாணிக்கத்தை மாத்திரம் உடையது பண்டாரம் எனப்படாது. மாணிக்கம் ஒன்றே யரும் பொருளு மாகாது. இந்த நியாயங்களால் மாணிக்கம் ஆகிய பண்டாரம் எனவும், அதுபோலும் அருமையை யுடைய பண்டாரம் எனவும், அவர் பெருமொழியானே சித்தித்தது. இதனாலும் மாயவனுர் சிவசின்ன தாரணரே.

## வைணவர் தோல்வி யடைந்தமை.

முன்னுள்ள வைணவாசாரியர்கள் பலர், நாராயணரோ பரப்பிரமம்,, எனவும், திருமண் துளசிமணி தாரணங்களே விஷ்ணுவுக்கும் அவரடியார்க்கும் உள்ளன எனவும், இன்னும் பற்பல மேற்கோள் கொண்டும் வாதித்து அபசய மடைந்தனர். அவருட் சிலர் விடயத்தை மாத்திரங் காட்டுகின்றும். வரவரமுனிவர் என்னும் ஆளவந்தார்(யமுனைத் துறைவர்) என்பார் அக்கபாத சிவாசாரியார் அவர்களுடன் வாதித்து

அபசயமடைந்தார். இராமநுசர் என்னும் உடையவர், சோழராசாவின் வாதத்திற்குப் பயந்து வெள்ளைப் புடைவையுடுத்து மேலைத்தேசமோடிச் சென்று வேடர் குடிசைக்குள் ஒளித்துப் பன்னிருவருடம் பதுங்கினர். உடையவரது சீடருள் பவித்திராழ்வார் என்னும் கூரத்தாழ்வார் என்பவர், சோழராசனின் சமஸ்தான பண்டித சிரோமணியாகிய பிரமஸ்ரீ வாகீச பாதசேகர சிவாசாரிய சுவாமிகளுடன் வாதித்துத் தோற்றுக் கண் குருடாயினர். பராசரபட்டர் என்னும் வைணவாசாரியார், வீரசுந்தரப் பிரமராயன் என்னும் அரசரோடுடன் தருக்கி, து, தமது மேற்கோள் நூல்களாகிய அஷ்ட சுலோகி, பிரணவ விவரணம், கிரியாதீபம், குணரத்தின கோசம், தத்துவத் திரயம் என்னும் நூல்களுடன் தம்பிரதிஞ்ஞையும் கண்டிக்கப்பட்டபோது கோட்டியூர்க்கு ஒளித்தோடினர் என்று வைணவர் எழுதிய குருபரம்பரையாலுந் தெரிகின்றது. அங்ஙனமே பிள்ளைப் பிள்ளை யாழ்வான் என்னும் வைணவரும் தோற்றோடியகதை அக்குருபரம்பரையிற் காணப்படுகின்றது.

கஞ்சனூரிலே யிருந்த மதுசூதனாசாரி என்னும்வைணவரும், ஏனைய பல்லாயிரம் வைணவரும், அரதத்தாசாரிய சுவாமிகளுக்குச் சுதரிசனாசாரி என்று பெயரிட்டுத் தமது பாஷண்டக் கிரியைகளைச் செய்யத் தொடங்கும்போது அவரவற்றை மறுத்து, வேதசிவாகமங்களே முக்கிய பிரமாணமாம். சிவபெருமானொருவரே பரமபதி. விபூதி ருத்திராக்கங்களே வைதிக முத்தி சாதனம் என்றும், நான் அரனுக்குத் தத்தமாய் விட்டேன் என்றும் கூறி, மாறுபட்ட வைணவர் தொடுத்த கடாக்களுக்கெல்லாம் விடைவிடுத்து அக்கினியிற் காய்ச்சிய இருப்புப் படிகளிலேறி நின்று அவ்வுண்மையைவிளக்கியருளி, அரதத்த சகச்சிரம் என்னுங் கிர

ந்த மொன்றியற்றி நிலை நிறுத்தினர் என்று அரதத்தமான்மி யம் கூறுகின்றது.

சதுர் வேதசாரம், ஆபத்தம்ப சூத்திரபாடியம், சைவாகம பூஷணம், ஞானரத்தினாகரம், பத்தாதிக்கிய சிகாமணி, சிவாதிக்கிய சிகாமணி, அரியர தாரதம்மியம், நீலகண்டபாஷிய சமர்த்தனம், விபூதி பஞ்சகம் முதலாகிய நூல்களை யருளிச் செய்தவரும் அவரே.

தஞ்சாவூரிலே சரபோசி மகாராஜாவின் ஆசாரியராயிருந்த சிவாக்கிர யோகிகளுடன் மணவாள மாமுனி என்னும் வைணவர் வாதித்து அபசயப்பட்டார். கொப்பூரில் இருந்த பிப்பபாச்சையர் என்னுஞ் சைவருடன் அழகிய மணவாள நயினார், பிள்ளைப் பிள்ளை யாழ்வான் என்னும் வைணவர் வாதித்து நிக்கிரகிக்கப் பட்டனர். ஸ்ரீமத் அப்பதீக்ஷிதசுவாமிகளுடன், தாத்தாசாரி என்னும வைணவர்வாதித்து வாயடங்கினர். காசிப் பதியிலே வசித்த மஞ்சிதேவர் என்பவருடன் ஈயுண்ணி யாழ்வான், மிளகாழ்வான் என்பவர் வாதித்துத் தோல்வித் தானமெய்தினர் என்று வசவ புராணம் உரைக்கின்றது. கிருஷ்ணமிசிரர் என்னும் சைவகுருவுடன் நஞ்சீயர் என்பவர் வாதித்துத் தோற்றனர்.

குகனடியே யன்றி வேறொன்று முன்னு அருணகிரிநாத சுவாமிகளுடன் வில்லி புத்தூரார் என்னும் வைணவர் வாதித்துத் தோல்வித்தான முற்றூர். காளமேகப் புலவருடன் திருமலைராயன் பட்டினத்து வைணவர் வாதித்து வலிமை யிழந்தீர்.

சிவப்பிரகாச சுவாமிகளுடன் வேதாந்ததேசிகர் என்னும் வைணவர்சாரியார் வாதித்து வாயடங்கினர். இந்நூற்றுண்

டினும் இராமநாதபுரச் சோமசுந்தரப்புலவர், யாழ்ப்பாணம் கூழங்கைத் தம்பிரான் சுவாமிகள், சரவணமுத்துப்புலவர், ஆறுமுகநாவலப் பெருமான், மகாவித்வான் திரிசிரபுரம் - மீனாட்சிசுந்தரப்பிள்ளை, சென்னையம்பதி வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகர் முதலிய பல சைவசித்தாந்த மஹோத்தாரணருடன் பல சபைகளினும் வாதித்துப் பரிபவப்பட்ட வைணவர் பலரே. எவ்வாறு தோற்றாலும் "மூர்க்கனும் முதலையுங் கொண்டது விடா என்றாற் போலச் சிவ தூஷண சிவ சின்ன தூஷணங்களைச் சிலபோலி வைணவர் செய்து வரல் கலிகாலப் புதுமையே.

## நாராயண வல்லியும் விபூதி நவின்றது.

சங்கராசாரியர் மாண்டூக்கியத்திற் கௌடபாத காரிகையைச் சேர்த்தாற்போல, உடையவர்க்கு முன்னிருந்த அரங்கராமாநுஜர் என்னும் வைணவாசாரியர், தைத்திரீயோபநிடத பாடியத்திலே சீக்ஷாவல்லி, ஆனந்தவல்லி, பிருகுவல்லியின் பின்னர், நாராயணவல்லி என்று ஓர் வல்லியைச் சேர்த்து வியாக்கியானஞ் செய்தார். இராமாநுஜரும் அதனைச் சிரேஷ்டமாக ஒப்பி விருத்தி வியாக்கியானஞ் செய்துளார். வைணவர் வேத முடியென்று கொள்ளும் அந் நாராயணவல்லியில், நாராயண தியானத்தை நிறைவேற்றும்படி முதலில்,

"புருஷஸ்ய வித்ம ஸகஸ்ராக்ஷஸ்ய மஹாதேவஸ்ய தீமஹி!
தந்நோருத்ரப் பிரசோதயாத்!! என்று சிவபெருமானையும், பின்னர்,

" தத்புருஷாய வித்மஹே மஹாதேவாய தீமஹி!
தந்நோ ருத்ரப் பிரசோதயாத்!!, என்று ஸ்ரீகண்ட ருத்திரமூர்த்தியையும், பின்னர்,

"தத்புருஷாய வித்மகே வக்ரதுண்டாயதீமகி!
தந்நோ தந்திः பிரசோதயாத்!! என்று யானைமுக விநாயகக் கடவுளையும், பின்னர்,

"காத்யாயனாய வித்மஹே கந்யக் குமாரிதீமகி!
. தந்நோ துர்க்கிः பிரசோதயாத்!! என்று சிவசத்திகளுள் ஒன்றாய துர்க்காதேவியையும், தியானிக்கும் மந்திரங் கூறுவதனாலும்,

"அசக்ராந்தே ரதக்ராந்தே" எனவரூஉம் மந்திரத்தால் மண். பூசிக் குளிப்பதற்குச் சொல்லப்படலானும், குளித்தவுடன் விபூதி தரித்து நாராயண தியானஞ் செய்யவேண்டுமென்பது "கந்தத் துவாராம் துராதர்ஷாம் நித்யபுருஷ்டாம் கரீஷிணீம்" எனச் சொலலப்பட்டதனாலும், "யஸ்ய வேகம் கத்யக்நி கோத்ர" என்று விபூதி பேசப்பட்டமையானும், "சர்வோ வைருத்ர தஸ்மை ருத்ராய நமோ அஸ்து" என்றற் றொடக்கத்த மந்திர அநுவாகங்கள் கூறினமையாலும்,

"சத்யோசாதம் ப்ரபத்யாமி" எனத் தொடங்கி, "ஈசானஸ் சர்வவித்யானும், ஈசானஸ் சர்வபூதானும பிரஹ்மணோதிபதி ப்ரஹ்மா சிவோமே அஸ்து சதாசிவோம்" என்ற இறுதியான விபூதிதாரண மந்திரங்களைக் கூறியதனாலும், விஷ்ணுவுக்கும், அவரடியார்க்கும் சிவசின்ன தாரணம் உரியதென்றறிக.

ஆறிரு தடந்தோள் வாழ்க வறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வே
ளேறிய மஞ்ஞை வாழ்க யானைதன் னணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீ ரடியா ரெல்லாம்.



## உருத்திராக்க சம்ஸ்காரம்.

உருத்திராக்கங்களை நியம மின்றித் தரித்தல் எத்துணைப் பலக்குறைவோ, அதுபோலச் சம்ஸ்கார மில்லாது தரிப்பதும் அத்துணைப் பலக்குறைவை யுண்டாக்கும். ஆகலால் முக்கியமான அவ்விதியைச் சகலாகம சங்கிரகம் கூறியவாறு தெரிப்பாம். சிவதீட்சாங்கமாய் வேள்விச்சாலை வகுத்து, வேதி நடுவிலே எட்டு மரக்கால் நெல்லும், நான்கு மரக்கால் அரிசியும், இரண்டு மரக்கால் எள்ளும் பரப்பி, அவற்றிற்குமேல் கஅ - இதழ்ப் பதுமமண்டலமிட்டு, வேதியின் கீழிலாவது மேற்புறத்திலாவது சிவாகம விதிப்படி நாற்கோண குண்டஞ் செய்து, கலசங்களும் துவாரங்களும் தாபித்து, அர்ச்சனை பண்ணுவித்தல் வேண்டும். பதும கர்ணிகையில் பஞ்சப்பிரம மந்திரங்களாலும் பூசித்து, உருத்திராக்கங்கள் எல்லாவற்றையும், மாலைகளையும் பதும மண்டல நடுவில் வைத்து விதிப்படி பூசித்து, சிவாக்கினி முகங் கற்பித்து, நேத்திர நியாசஞ் செய்து, அந்நேத்திரத்திற்கும் மணிகளுக்கும் நாடி சந்தானம் பண்ணி, க000, ரு00 க0அ, நேத்திராகுதிகளுள் ஒன்றியற்றி, உருத்திராக்கங்களைச் சிவாக்கினிக் கண்ணினின்றும் உண்டானவைகளாகப் பாவித்து, பூர்ணாகுதி, நைவேத்தியம், தூப தீப முதலிய பதினாறு உபசாரங்களுஞ் செய்து வணங்கி, குருமுகமாக உருத்திராக்கங்களைத் தரித்தல் முறையாகும்.

## அதனைக் குருவினிடம் பெறும்விதி.

இங்ஙனஞ் சம்ஸ்காரஞ் செய்யப்பட்ட உருத்திராக்கங்களை ஆசாரியன் கொடுக்குங் காலத்தில், சாந்தகுணமும்

வணக்கமுதலாய நல்லொழுக்கமுமுள்ள சீடனை, மேற்கூறப்பட்ட யாகசாலையின் மேற்புறத்தில் வருவித்து, தான்மான்றோல் முதலிய ஆசனங்களிற் பிரணவவட்டமிட்டு, வடக்கு நோக்கி யிருந்து, சீடனை மண்டலத்திற்கு வெளியே கிழக்கு நோக்கி நிற்கச் செய்வானாக. சீடன் ஆசாரியனைப் பிராசாத மந்திர ரூபியாகத் தியானித்து வணங்கி, சிவனாகப் பாவித்து, "ஏ பரமேச்சுரனே! மும்மல வாதனைகளையும் ஒழித்து அடியேனைக் கருணையுடன் பாதுகாத்தருள்க." எனப் பிரார்த்தித்து, தலைக்குமேற் பன்னிரண்டங்குல உயரம் அஞ்சலித்து நிற்கக்கடவன். ஆசாரியன் ஆசிகூறி யருளி, அவனது நெற்றியில் விபூதி தாரணஞ் செய்து, அவன் வலக்கையைப் பற்றி மும்முறை யாகசாலையை வலம் வந்து, உருத்திராக்கங்களுக்கு நீராஞ்சன மியற்றி, சீடற்கு நீறளித்து, வேதி நடுவி லிருக்கும் உருத்திராக்கங்களை யெடுக்கும்போது, பாச நிவர்த்தியின் நிமித்தம் "சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்தத்துவ பரமபதியாஞ் சங்கரனே! தேவரீரது கடாக்ஷ ரூபமாகிய உருத்திராக்கங்களைச் சீடற்குத் தரிப்பிக்கிறேன்." என்று உத்தரவு பெற வேண்டும்.

அதன் பின்னர்ப் பிரணவ மண்டல மிட்ட கூர்மாசனத்திற் கிழக்கு முகமாக விருந்து, சீடன் வடக்கு முகமாக நிற்க, ஈசானத்தாற் சிகையிலும், தற்புருடத்தாற் றலையிலும், அகோரத்தாற் காதுகளிலும், வாமதேவத்தாற் கழுத்திலும், சத்தியோ சாதத்தால் மார்பிலும் மாலையைத் தரிப்பித்து, அத்திரத்தாற் கைம்மாலையையும், வியோம வியோபியால் உபவீதத்தையும் தரிப்பித்து, அவனைப் பிராசாத மந்திரத்தால் அபிமந்திரித்து, பஞ்சப் பிரமத்தாற் செப

மாலையை அபிமந்திரித்து, மந்திர விசிட்டமாகிய பிராசாத மந்திரத்தை யுபதேசித்து மாலையை யவன் வலக்கையிற் கொடுத்து அநுக்கிரகம் புரிதல் வேண்டும்.

## உருத்திராக்க மாலாதாரணம்.

பிரமசாரி ஒரு மாலையும், கிருகத்தன் மூன்றும், ஆசாரியன் ஐந்து மாலையும் உருத்திராக்கத்தாற் செய்து தரித்தல் விதி. வெண்பட்டுநூல், பருத்திநூல், தாமரைநூல், வெள்ளெருக்கு நூல் என்பவற்றுள் ஒன்றால் இருபத்தேழிழைக் கயிறு செய்து, அதில், † நாகபாசம், பிரம முடிச்சு, சாவித்திரி, விஷ்ணுக் கிரந்தி என்பவற்றுள் ஓர் முடிச்சு இட்டுத் தரிக்க.

## நாயகமணி யிலக்கணம்.

மேற் கூறிய அளவின வன்றி, உழுந்து முதல் எலுமிச்சம்பழம் வரையுமுள்ள அளவின வாய உருத்திராக்கமாலைகளின் நடுவே நாயகமணி தரித்தல் வேண்டும். இணை யுருத்திராக்கங்கள்போல் தோற்றமும், இரண்டும் ஒன்று சேர்ந்ததன்மையும் ஆக இருத்தல் வேண்டும். அதனைத் தங்கத்தினாலாவது, இரத்தினங்களினாலாவது கட்டுக. கட்டுங்

---

† நாகபாச முடிச்சாவது - கயிற்றின் இருநுனியையும் எடுத்து நாலங்குல வளவிற் றனித்தனியாய் வலமாகவும் இடமாகவும் இருமுடிச்சு இட்டு, அந்த நுனியைப் பாம்பினது படம்போல முடிச்சில் அகப்படும்படி முடிவதாம். பிரம முடிச்சாவது - நுனிகளிரண்டையும் மூன்றங்குல மெடுத்து அவ்விரண்டையும் ஒன்றாய்ச் சேர்த்துப் பிரதட்சிணக் கிரமமாய்ச் சுற்றி, அந்நுனி வெளியில் தெரியாதபடி முடிவது. சாவித்திரி யாவது இருநுனிகளையும் வலமாகவும இடமாகவும் நுனிவெளியில் தெரியாதபடி ஒரே முடிச்சுப்போல முடிவது. விட்டுணுக் கிரந்தி யாவது - பிரம முடிச்சுப்போலிட்டு நுனிகள் உழுந்துப் பிரமாணம புச்ச வடிவாய் வெளியிற் தெரிய முடிவது.

காலத்து இடப வடிவாகவும், அல்லது கௌரி சங்கரர் வடிவாவும், பரமேச்சுர ரூபமாகவும் செய்க.

## உருத்திராக்க தாரண வுண்மை.

உருத்திராக்கங்களைப் பதினாறு தானங்களிற் றரித்தல் சூக்கும சிவாங்கங்களைத் தரித்தற்கு அடையாள மாகும். ஒன்பது உறுப்புக்களிற் றரிக்க விதித்தது, அந்தச் சூக்குமாங்கமாகிய வாமை, சியேட்டை, இரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதனி, சர்வபூத தமனி, மனோன்மனி என்னுஞ் சிற்சத்தி சொரூபங்களைத் தரித்தற்கு அறிகுறியாம். ஆறு தானங்களில் அணிவது ஆறங்க பாவனையைக் குறித்ததாம். ஓரிடத்திற் றாரணஞ் செய்வது வித்தியாதேக வடிவ பாவனா ஞானத்தை யடைவித்தற்கு ஏற்படுத்திய தென்க. இவற்றுள் பாவனா ஞானப் பிராப்தி நிமித்தம் செபமாலையும், ஒன்பது சத்திகளின்பொருட்டுச் சிரம், காது இரண்டு, சிகை, கழுத்து, மார்பு என்பவற்றின் மாலைகளும், மூன்று உபவீத மாலைகளுங் கொள்ளப்படும். புயங்கள், முழங்கைகள், மணிக்கட்டுகள் என்னு மாறுறுப்புச் சடங்க பாவனைக்காம் என்று சகலாகமசங்கிரகம் என்னு நூல் கூறிற்று.

## பஞ்சாங்க பூஷணத்துட் சிறந்தன சிவசின்னங்களே.

சைவசித்தாந்த பாரங்கதர் யாவரும் பஞ்சாங்க பூஷணம்தரித்தல் வேண்டும். அவையாவன - உட்டிணீடம் (உஷ்ணீஷம்) உத்தரீயம், உபவீதம், விபூதி, உருத்திராக்கம் என்பன. எல்லா ஆபரணங்களுள்ளும் இவ்வைந்துஞ் சிற

ந்தன. (உஷ்ணீஷம்=தலைக்கட்டு.) இவற்றுள்ளும் விபூதி ருத்திராக்கங்களே சிறந்தன. மற்றைய பூஷணங்களை விட்டாலும் இவ்விரண்டனையும் விடுதல் கேட்டை விளைக்கும். இதனை "ஏதல்லக்ஷண சம்யுக்தோ யுக்தபஞ்சாங்க பூஷணை:| த்ருதோஷ்ணீ ஷோத்தரீயஞ்ச பஸ்மருத்ராக்ஷதாரக:|| எனவரூஉம் அஞ்சுமான் ஆகமச் சுலோகங்களாலறிக.

## தீக்ஷாங்கம் சிவசின்னங்களே.

பிரதிட்டை உற்சவம், ஸ்நபனம், சம்புரோக்ஷணம், பிராயச்சித்தம், அபிடேகம் முதலிய பரார்த்த ஆன்மார்த்தக் கிரியைகளுக்கும், விவாகம், பும்சவனம், உபநயனம் முதலிய கிரியைகளுக்கும் அங்கமாவன வன்றி, ஞானவதி, கிரியாவதி, வியதை, பரிசம், வாசகம், சட்சு, மானசிகம் என்னுஞ் சிவதீக்ஷைகளுக்கும் முக்கிய அங்கங்களாக அணிவன பஸ்ம ருத்திராக்கங்களே.

## விபூதியின் பெயர்விசேடம்.

முன்னர் கூறப்பட்ட காரணங்களன்றி, விபூதிக்கு வேறுகாரணத்தானும் பெயர்ப் பாகுபாடுண்டு. சிவபெருமானது ஐம்முகங்களினின்றுந் தோன்றிய ஐவகைப் பசுக்களுள், சத்தியோ சாதமுகத்திற் றோன்றிய கபிலவருணமுடைய நந்தையினிடத் துண்டாயதற்கு விபூதி என்றும், வாமதேவ முகத்தினின்று முதித்த வெண்ணிற முடைய பத்திரை யென்னும் பசுவினுண்டாயதற்குப் பசிதம் என்றும், அகோர முகத்தினின்று முற்பவித்த கருநிறச் சுரபியிடத்துப் பிறந்ததற்குப் பஸ்மம் (பற்பம்) என்றும், தற்புருடத்திற் றோன்றிய புகைநிறச் சுசீலையின் இடத்தில் உண்டா

யதற்கு க்ஷாரம் (சாரம்) என்றும், ஈசானமுகத்திற் பிறந்த சிவப்புநிறச் சுமனை யிடத்தில் விளைந்ததற்கு இரக்ஷை(இ ரக்கை) என்றும் சொல்லப்பட்டன. அது, "சதயோசா தாத் விபூதிசச வாமாத் பசிதமேவச| அகோராத் பஸ்மஸம் ஸாதத் புருஷாத் க்ஷாரநாமச,, எனவரூஉம் வீராகம சுலோ கங்களானுணர்க.

## விபூதி சம்ஸ்காரவிதி.

ஆன்மாக்களாகிய பசுக்கள் ஆணவம், கன்மம், மாயை, வைந்தவம், திரோதம் என்னும் ஐவகை மலங்களானும் கட்டப்பட்டிருத்தலான் அவற்றை யொழித்தற்கு ஐவகைச் சம்ஸ்காரங்கள் சொல்லப்பட்டன. அவை தூலம், சூக்கு மம், அதிசூக்குமம், காரணம், மகாகாரணம் என்பனவாம். தூலசம்ஸ்காரம் - விபூதி தாரணமாகும். சூக்குமம் - உருத்தி ராக்க தாரணமாம். அதிசூக்குமம்-யஞ்ஞோபவீதம் என்க. காரணம் - சிவதீக்கையும, மகாகாரணம் - சிவபூசையுமாம். இவற்றுள் தூலசம்ஸ்காரம் என்னும் விபூதி சம்ஸ்காரமாவது - விபூதி சிவவடிவாகலால் அதனைத் தரிப்பாருந் தந்தேகத் தைச் சிவரூபமாகக் கற்பனை செய்துகொள்க. ஞானவடி வும், ஈசான முதலிய ஐம்முகமும், ஒன்பது சரீரமும், பத் துத் திருக்கரங்களும், நிவிர்த்தி முதலிய ஐந்து சிரமும், அத்திர முதலிய உறுப்புக்களும் ஆகச் சிவபெருமானங்கம் முப்பத்தெட்டு ஆதலால், தமது தேகத்தும், சிகை, தலை, நெற்றி,கபோலங்கள், காதுகள், அவற்றின் றுவாரங்கள்,புரு வங்கள், கண்கள், மூக்கு, அதனிருதுவாரங்கள், அவற்றின் பக்கங்கள், நெஞ்சு, உதடுகள், தோள்களின் மூலம், மோவா ய், தோள்களினடு, மணிக்கட்டுகள், நெஞ்சு, குய்யம், முழ ங்கைகள், முழங்கைக் கணுக்கள், கழுத்து, அதன் பக்கங்

கள், பிற்புறம், விலாப்புறங்கள், என்னும் முப்பத்தெட்டுத் தானங்களினும் விதிப்படி தரிப்பதாம். அதனை "சிவஞ் ஞானி சரீரந்து சிவதேகத்வ கல்பகே" எனத்தொடங்கி, "ஸ்தாநமஷ் டௌதத: திரிம்சத் பூதிதாரண யோக்கிய கம்; எனமுடிந்த விம்பாகமச் சுலோகங்களாற் காண்க.

## விபூதி விசேடார்த்தம்.

விபூதி என்னும் பதத்திற்கு, வி = மேலான, பூதி = ஐசுவரியம் எனப்பொருள் கொள்வதன்றி, விநாயகன் என்றாற் போலத், தனக்கு மேலான ஐசுவரியமில்லாதது எனவும் விரிப்பர். இவையன்றி, வீ=சிவபெருமான்; பூ-பாவனை. தி-அடைதல் எனக்கொண்டு சிவத்துவபாவனையை விளக்கும் இயல்புடையது என்று விசேடப் பொருள்கூறின ஆகமங்கள். அவ்வுண்மையை "வேர்ப்பாவநம்ய தோக்கியேஷாதிக் நோதீதி விபூதிஹி-தஸ்மாத் சிவாத்மகத்வம்சவிபூதே: கீர்த்யுதேசதா | என்னும் வாதுளாகம வாக்கியங்கள் தெரித்தன.

## திரிபுண்டர அதிதேவதைகள்.

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களையும் உணர்கின்ற ஞானியென்பதனையும் விளக்குகிற முக்குறிகளின் அதிதேவதைகளையுஞ் சொல்வாம்.

### விபூதி முக்குறிகளுள்

| | நடுக்குறி. | பக்கக்குறிகள். |
|---|---|---|
| க. | சிகை-அநாகதசிவம். | வாகீசுவரி, மனோன்மணி. |
| உ. | சிரம்-ஈசானர். | இச்சியா, கிரியை. |
| ௩. | நெற்றி-தற்புருடர். | உரோதினை, மூசிகா. |
| ச. | மார்பு-அகோரர். | வியாபினி, வர்த்திவகாரிணி, |
| ரு. | உந்தி-வாமதேவர். | அநந்தை, வியோமரூபை. |
| சு-எ. | முழந்தாள்கள்-சத்தியோசாதர். | அநாதை, அநாச்ரிதை. |

| நடுக்குறி. | | பக்கக்குறிகள். |
|---|---|---|
| அ-கூ. | தோள்மூலம்-ஆதிசத்தி. | வாமை, சேட்டை. |
| கO-கக. | தோள்கள்-இச்சாசத்தி. | இரௌத்திரி, காளி. |
| கஉ-கரு. | மணிக்கட்டுகள்-கிரியா சத்தி. | கலவிகரணி, பலவிகரணி. |
| கச-கரு. | முழங்கைகள்-ஞானசத்தி. | பலப்பிரமதனி, சர்வபூததமனி |
| கசு-கஎ. | புருவங்கள்-வலம்-அங்குட்ட புவனேசர். | இடம்- புவனேசர். |
| கஅ-ககூ. | கண்கள்-ஈசர். | இரகபிங்கேட்சனர். |
| உO-உக. | மூக்கு-உற்பவர். | பவர். |
| உஉ-உங. | மூக்கின்றுவாரம்-மகா தேவர். | மகாதேசனி. |
| உச-உரு. | உதடுகள்-மேல்-சிகே தனர். | கீழ்- ஏகவீரர். |
| உசு-உஎ. | காதுகள்-பஞ்சாந்தகர். | சூரர். |
| உஅ-உகூ. | ஷை துவாரங்கள்-சம் வர்த்தகர். | சோதி. |
| ஙO-ஙக. | கபோலங்கள்-சண்டர். | கிராதேசர். |
| ஙஉ. | மோவாய்-ஏகசிவர். | |
| ஙங-ஙச. | கழுத்து-அநந்தர். | அசர், உமாபதி. |
| ஙரு-ஙசு. | பிருட்டம்-பிரசண்டர். | உக்கிரர், உருத்திரர். |
| ஙஎ-ஙஅ. | விலாப்புறங்கள்-ஸ்ரீகடண்ட ருத்திரர். | பார்வதி. |

வலப் பக்கம் முதலாகத் தரிக்கவேண்டும். நாசி, செவிகளின் துளைகள், உதடுகள் என்னும் ஆறு நீக்கி முப்பத்திரண்டு தானங்களில் மகாசைவர் தரிக்க. அது ஙஉ கலாசத்தி பாவனைக்காகும். அநுசைவர்க்கு உரு, அந்திய சைவர்க்கு கசு, அவாந்தர பிரவர சைவர் என்பவர்களுக்கு சு, ஏனைய சைவர்க்கு ஒன்றுமாகத் தானங்கள் கூறப்பட்டன.

அடுத்த பக்கத்தை கஅங எனத் திருத்திக் கொள்க.

# முடிப்புரை.

——(:*:)——

ஈண்டுக் கூறியவற்றானே சைவபூஷணங்களாகிய விபூதி ருத்திராக்கங்களின் மகிமைகளும், விதிகளும், மந்திரங்களும், கிரியைகளும், அருட்செயல்களும், தத்துவங்களும், பிற இலக்கணங்களும், பரபக்க மறுப்புஞ் சித்தாந்தமும் ஆகிய இன்றியமையா விடயங்களெல்லாமும், ஒருவாறு எம்மறிவிற் கேற்பச் சுருதி, யுத்தி, அநுபவங்கட்கியைய வுரைத்தேம். இதன்கண் அடங்காத விடயங்களுளவேல் ஆசிரியமுகத்தானும், நூல்வாயிலானு முணர்ந்து கொள்க. அவையும் சிவகுகப் பெருமான் றிருவருளால் இன்னுமோர் பதிப்பிட வருங்கால் வெளிப்படுத்தப்படும். பூவுலகினும் பொலிவுற்று விளங்குஞ் சிவசின்னங்கள் வாழ்க. தேவ தேவன் சிவபெருமான் றன் றிருவருள் வாழ்க. சிவசின்னங்களை யணியும் சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த அன்பர் கூட்டங்களும் நனிவாழ்க. மெய்கண்ட சந்தான சித்தாந்தங்கள் மேன்மேலும் மிளிர்ந்து வாழ்க.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

**சைவ பூஷண சந்திரிகை**

முற்றிற்று.

மெய்கண்ட தேவன் மொய்கழல் சரணே.

# இந்நூலாசிரியரால் இயற்றிப் பதிப்பிக்கப்பட்ட நூல்கள்.

| | ரூபா. | அணா. | பை. |
|---|---|---|---|
| தமிழ்ப் போகராதி ... ... | ௩ | ௮ | 0 |
| கூர்மமகாபுராண விருத்தியுரை ௭-சஞ்சிகை | ௧ | ௧௨ | 0 |
| சிவராத்திரி புராண விருத்தியுரை... | ௨ | ௮ | 0 |
| பட்டினத்துப்பிள்ளையார் புராணவுரை (௩. சஞ்சிகை) | 0 | ௧௨ | 0 |
| திருவருணைக் கலம்பக விருத்தியுரை. | ௧ | 0 | 0 |
| சிவக்ஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம். | 0 | ௬ | 0 |
| ஏகாதசி புராணம் (அரும்பத வுரையுடன்) | 0 | ௪ | 0 |
| சைவபூஷண சந்திரிகை. | 0 | ௬ | 0 |
| கதிர்காமக் கலம்பகம் | 0 | ௧ | ௬ |
| கதிர்காமத் திருப்புகழ். | 0 | ௧ | 0 |
| கந்தபுராண சாரம். | 0 | ௬ | 0 |
| கந்தர் நவமணிமாலை. சுப்பிரமணிய அட்டகம். ... | 0 | ௧ | 0 |

## இனிப் பதிப்பிக்கப்படும் நூல்கள்.

சுப்பிரமணிய பராக்கிரமம்.
புதுச்சந்நிதிக் கந்தர் பிள்ளைத்தமிழ்.
சிவயோகதீபிகை.
சித்தாந்த சாதனம்.
குமார தரிசனம்.
தகராலய ரகசிய விருத்தியுரை.
வைணவ வாயாப்பு.
துவிதமத கண்டன மறுப்பு.
தமிழ்வேத நிந்தை மறுப்பு.
இருசமய விளக்கச் சூறாவளி.

இவை சென்னைப் புரசை வேளாள வீதி 79 - வது இலக்க வீட்டில் இருக்கும் நூலாசிரியருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளக.

சுவடிகள் பாதுகாப்பு மய்யம் அரியநூல்

தமிழ்த் தாய் 67 - வெளியீடு

நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் இயற்றிய

# சைவ பூஷண சந்திரிகை



Pub No : 839
ISBN : 978-93-85165-50-4
சைவ பூஷண சந்திரிகை
140.00